


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நிலாக்கால நினைவுகள்... ★ முத்துலட்சுமி ராகவன்



# முத்துலட்சுமி ராகவன்

# நிலாக்கால நினைவுகள்...


லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நிலாக்கால நினைவுகள்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
நிலாக்கால நினைவுகள்...

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

நிலாக்கால நினைவுகள்

1

பச்சைப் பசேலென்ற நெல் வயலின் ஊடே பாலமிட்டது போல வரப்பு... வரப்பின் இருபுறமும் சுழித்தோடும் வாய்க்கால் நீர்... நெல் வயல் நாற்றங்கால் பருவத்தில் இருந்ததால் நீர்நிலையில் பயிர்கள் நிற்பது போல் காட்சியளிக்க அந்த நெல் வயலின் ஊடே பரந்து விரிந்திருக்கும் மிகப்பெரிய தென்னந்தோப்பு... வெயில் ஊடுருவ முடியாமல் தன் அனைத்து கைகளையும் விரித்து ஆதவனின் கதிர்கள் தோப்புக்குள் வருவதை தடுத்துக் கொண்டிருக்கும் தென்னங் கீற்றுகளையுடைய தென்னை மரங்கள்..

தென்னந்தோப்பை ஒட்டிய மாந்தோப்பில் கிளைக்குக் கிளை தாவும் குருவிகள். மைனாக்கள்... கிளிகள். மாந்தோப்பில் கிடக்கும் சருகுகளின் மேல் விழுந்து கிடக்கும் தித்திப்பு நிறைந்த மாங்காய்கள். மரங்களில் இலைகளே இல்லையோ என்பது போல் இலைகளை மறைத்துத் தொங்கும் மாங்கனிகள்.

அதற்கு அப்புறத்தில் கொய்யா மரங்களின் தோப்பு. இங்கும் பறவைகள் கூட்டம். சருகுகளின் மேல் விழுந்து கிடக்கும் காய்கள்.. இலைகளை மறைக்கும் கொய்யாக்கனிகள்.

இவற்றையெல்லாம் பார்வையிட்டபடி வயலின் ஊடே இருந்த வரப்பில் நடந்து வந்து கொண்டிருந்தான் பாலமுருகன். மாநிறத்துடன், உயரமாய், திரண்ட புஜங்களுடன், அகன்ற மார்புடன், நீண்ட கை கால்களுடன் இருந்தான்... வெள்ளை வேட்டியில்... அடங்க மறுத்த சிகை அலட்சியமாய் காற்றில் அலைபாய வயலின் இருபுறமும் தண்ணீர் ஒழுங்காகப் பாய்கின்றதா என்று பார்வையிட்டவனை நாற்று நட்டுக் கொண்டிருந்த இளம் பெண்கள் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள் ..

காலை நேரம் என்பதால் வெறும் பனியனுடன் தோளில் துண்டுடன் வயல் தோப்புகளைப் பார்த்துவிட்டு, தோட்டத்து பம்பு செட்டில் குளித்து விட்டுப் போக வந்திருந்தவனின் ஆண்மை ததும்பும் வாட்ட சாட்டமான தோற்றத்தை அள்ளிப் பருகுவது போல் பார்த்துக் கொண்டு, தங்களுக்குள் அவனது கவர்ச்சியான தோற்றத்தைப் பற்றிக் கிசுகிசுத்துச் சிரித்துக் கொண்டு இருந்தார்கள் அந்தக் கிராமத்துச் சிட்டுக்கள்.. வயதில் அவர்களைவிட மூத்த பெண்மணிகள் அவர்களை அதட்டினார்கள்.

"ஏ புள்ள சிகப்பாயி.. ராக்கம்மா கிட்ட என்னத்தை பேசிச் சிரிக்கிறவ...? நீயும் வேலை செய்ய மாட்டே... கூட இருக்கிறவளையும் வேலை செய்ய விடமாட்டேன்னு கங்கணம் கட்டிக்கிட்டு வந்தியாக்கும்...? பேசாம வேலைய பாருங்கடி. சின்னச் சிறுக்கிகள்ங்கிறது சரியாத்தான் இருக்கு..."

அந்த இளம் பெண்களின் பார்வையின் போக்கில் என்ன பேசியிருப்பார்கள் என்பதை மிகச் சரியாக யூகித்து விட்ட அந்த முதிர்ந்த பெண்மணி மறைமுகமாய் கண்டித்தாள். ஆனால் அந்தப் பெண்களோ அதை லட்சியமே பண்ணாமல் சிரித்தார்கள். அதட்டிய பெண் மணிக்கு கோபம் வந்து விட்டது.

"ஏண்டி... இது நாத்து நடுற வயலா...? இல்ல கூத்து நடக்கிற மேடையா..? அலையாதேங்கடி. எதுக்குடி இப்ப இந்த சிரிப்பாணி சிரிக்கறிங்க. சிரிச்சவ சீரைக் கெடுத்தான்னு ஆயிடப் போகுது ஒங்க பொழைப்பு... வந்தமா.. வேலையைப் பாத்தமான்னு இருக்கணும்."

இப்போதும் அந்தப் பெண்களின் சிரிப்பு அடங்கவில்லை. சிகப்பாயி என்று அழைக்கப்பட்ட கருத்த நிற இளம் பெண் சிரித்துக் கொண்டே பதில் சொன்னாள்.

"ஏன் பெரியத்தா இம்புட்டு கோவப்படுறீக... நாங்களும் வந்தமா... பாத்தோமான்னுதானே இருக்கறோம்."

இப்போது மற்ற பெண்களும் அவளுடன் சேர்ந்து சிரித்தார்கள். அவர்கள் பார்வை போன திக்கில் பம்பு

செட்டில் காட்டாற்று அருவியாய் வெள்ளை நிறத்தில் ஆர்ப்பரித்துக் கொட்டிய மோட்டார் தண்ணியில் தலையைக் கொடுத்துக் குளித்துக் கொண்டிருந்தான் பாலமுருகன்.

அவர்கள் பார்வை... போன திக்கில் தானும் பார்த்த முதிய பெண்மணி... அந்த இளைஞனின் வனப்பைக் கண்டு அதிசயித்தாள்.

'இவன் ஒருத்தன்... இவளுக சும்மாவே அவன் சுண்டியிழுத்தது போல பின்னாடியே அலைவாளுக.. இபப் இவளுக முன்னாடி இப்படிக் குளியல் போட்டா.. எவ ஒழுங்காய் வேலை செய்யப்போறா..'

இருந்தாலும் கடமையைச் செய்தாக வேண்டுமே... எனவே,

""ஏய்ய்... கண்ணை கண்ட பக்கம் அலைய விடாம நாத்தைப் பாத்து நடுங்கடி" என்று வெடுவெடுத்தாள்.

"அது எப்படி பெரியாத்தா.. முன்னாலே இலையைப் போட்டு பலகாரத்தை அள்ளி வெச்சுட்டு.. பார்க்கக் கூடக் கூடாதுன்னா என்னா நியாயம்..?" சிகப்பாயி வாதாடினாள்.. கூட இருந்த பெண்கள் கும்மாளமாய் சிரித்தனர்.

"எதுக்குடி ஆத்தா... இப்ப இப்படி கூடிக் கும்மியடிக்கிறீங்க. அவ கேட்கிறது அவ்வளவு இனிக்குதாக்கும்.." முதிய பெண்மணி கடிந்து கொண்டிருக்கையில்,

"என்ன நியாயம் வேண்டுமாம் சிகப்பாயிக்கு" என்ற குரல் கேட்டு அவர்கள் திரும்பிப் பார்த்தனர்.

குளித்து முடித்து ஈரத்தலையுடனும் வேட்டி பனியனுடனும் .. துண்டை எடுத்து முகம் துடைத்தபடி வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பாலமுருகன் கேட்டான்.

"அது ஒன்னுமில்லங்கய்யா... இதுக கூறு கெட்ட கழுதைக. நேரம் காலம் தெரியாம என்னத்தையாவது பேசிச் சிரிக்குதுக. நீங்க போங்கய்யா.. நான் பார்த்துக்கிறேன்..." அவள் பணிவுடன் கூறிக் கொண்டிருக்கையில் சிகப்பாயி இடைமறித்தாள்.

"நல்லா இருக்கே உன் நியாயம்? ஏன் பெரியாத்தா.. ஐயாவே எனக்கு நியாயம் சொல்லத் தயாராய் இருக்காரு.. நீ ஏன் குறுக்காலே வர்ற..?. போவியா.."

"ஏண்டி கூறு கெட்டவளே.. இதுதான் சாக்குன்னு வேலையை விட்டுட்டு வெட்டி நியாயம் பேச வந்துட்டியாக்கும்.. வேலையைப் பாருங்கடி விவரம் கெட்ட கழுதைகளா..."

"ஏன் அத்தை அந்தப் புள்ளைகளை கடிஞ்சு பேசுறீங்க.. ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காதுன்னு சொல்லுவாக.. இதுக பேசிச் சிரிச்சு அலுப்பில்லாமல் வேலை செய்துட்டுப் போகட்டுமே... பாவம் சின்னஞ்சிறுசுக. அதுகளைப் போய் விரட்டிக்கிட்டு."

இரக்கத்துடன் கூறியபடி துண்டை எடுத்துத் தோளில் போர்த்திக் கொண்டான் பாலமுருகன். அவனை ஏக்கத்துடன் பார்த்தபடி,

"ம்ம்.. உங்களுக்கு எங்க தவிப்பு புரியுது.. இந்த பெரியாத்தாவுக்குத்தான் ஒரு மண்ணும் புரிய மாட்டேங்ககுது" என்றாள் சிகப்பாயி.

"வயசில் பெரியவங்க காரணமில்லாமல் எதையும் சொல்ல மாட்டாங்கம்மா.. இப்பவே ஏறு வெயில் வந்திருச்சு. வெயில் ஏறுவதற்குள் வேலையை முடிக்க வைக்கணும்னு அவங்க சொல்லியிருப்பாங்க..."

"இருக்கட்டும் ஐயா. என் ஆத்தாமையைக் கேட்டுட்டு நீங்களே ஒரு நியாயத்தைச் சொல்லிட்டுப் போங்கய்யா."

"என்ன..? சொல்லு.."

"பந்தியிலேதான் உட்கார முடியல.. இலையில இருக்கிறதை.. பார்த்தாக் கூடத் தப்பா...?"

சிகப்பாயி சிரிக்காமல் கேட்க உடனிருந்த இளம் பெண்கள் சிரித்தார்கள்.. அவள் வில்லங்கமாகக் கேள்வி கேட்கிறாள் என்பது பாலமுருகனுக்கு பிடிபட்டு விட்டது. அவன் நடந்தபடி ...

"உன்னாலேயே பந்தியில் உட்கார முடியாமல் ஆகிப் போச்சு... அதுக்கப்புறமும் ஏன் அடுத்தவங்களுக்கு பரிமாறினதை நீ பார்க்கணும்? அதனால் அது தப்புத்தான்..." என்று கூறினான்.

அவன் சென்ற திக்கைப் பார்த்துப் பெருமையாய் சிரித்த அந்தப் 'பெரியாத்தா'.

"யாருடி அது.. நம்ம விசவநாத ஐயா பெத்த குலக்கொழுந்து ஆச்சே... உன் விகடத்தையெல்லாம் நீ வேறு ஆளுகிட்ட பேசனும்டி. அது ஒரு நொடியில் உன் வித்தாரக் கள்ளித்தனத்தை கண்டு பிடிச்சு சொல்லுச்சே ஒரு பதிலு... உன் வாய் அடங்கிப் போச்சில்ல" என்று கெக்களித்தாள்..

"ம்ம்" என்று ஏக்கப் பெருமூச்சு விட்ட சிகப்பாயி...

"ஏன் பெரியாத்தா.. நாங்க என்ன அவரு சொத்திலயா பங்கு கேட்கிறோம் ?சும்மா ரெண்டு வார்த்தை பகடி தானே பேசச் சொல்றோம். அதுக்கும் கூட இம்புட்டுக்கிராக்கி பண்ணிக்கிறாரே" என்று அலுத்துக் கொண்டாள்.

"பகடி பேசுற வேலையை எல்லாம் மத்த மைனருக கிட்ட வைச்சுக்க தாயி... அது நீதி சொல்ற பரம்பரை... பத்துப் பேருக்கு பஞ்சாயத்தில் தீர்ப்பு சொல்கிற பரம்பரையில் பிறந்தவுக. களை எடுக்கிறவளைப் பார்த்து கண்ணடிக்கிற பரம்பரையில்லை. அதனால் நீ வாயை மூடிக்கிட்டு வந்த வேலையைப் பாரு... ஆத்தா.."

"இனிமே என்னத்தை சோலியப் பார்க்கிறது. ஆத்தில தண்ணி அலை மோதிப் போனாலும் அள்ளிக் குடிக்கத்தான் குடுப்பினை இல்லாமப் போச்சே" நொடித்துக் கொண்டாள் சிகப்பாயி.

"ஓடுகிற தண்ணிக்கு ஊரே சொந்தம் கொண்டாடலாம். கிணத்துத் தண்ணியை ஒருத்தர்தான் சொந்தம் கொண்டாட முடியும். பண்ணையாரய்யா மகன் கிணத்துத் தண்ணிடி கழுதே. ஆத்துத் தண்ணியில்ல... யாரு வேணும்னாலும் மோந்து குளிக்க..."

"கிணத்துத் தண்ணிக்கு சொந்தம் கொண்டாட எவ பிறந்திருக்காளோ... " என்று ஏக்கமாய் பெருமூச்சு விட்ட சிகப்பாயி.

"ஏன் பெரியத்தா... பட்டணத்தில் இருக்கிற ஐயாவோட தாய் மாமன் மகளைத்தான் கட்டிக்குவாருன்னு ஊருக்குள்ள ஒரு பேச்சு இருக்குதே... அது உண்மையா?" என்று கேட்டாள்.

"உடந்தைப் பட்டவ அந்தப் பட்டணத்துக்காரிதான்.. ஆனா... சிவகாமி அம்மாவோட அண்ணன் பட்டணதில் பெரிய பொழைப்பு பொழைச்சுக்கிட்டு இருக்கிறாராமில்ல... அவரு பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாராமில்ல..."

"அடி ஆத்தி... இதென்னடி பெரிய கதையாய் இருக்கு. இந்த ஊருக்கே பெரிய பண்ணையாரு நம்ம அய்யா ..அவுக மகனுக்கு பொண்ணு கொடுக்க அவுகளுக்கு கசக்குதா? இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்ல? ஏன் பெரியாத்தா... காடுகரை, தோட்டம் துரவு, தோப்பு, செங்கல் காளவாசல், கரும்பு மில்லுன்னு இந்த பெரியகுளம் தாலுகாவிலேயே பெயர் வாங்கின மனுசர் நம்ம ஐயா... கங்கு கரையில்லாத சொத்து... இத்தனைக்கும் வாரிசு நம்ம சின்னய்யாவும் அவரோட தங்கச்சி கோதாவரியும்தான். இவங்களுக்கே பொண்ணு தர மாட்டேண்ணு சொல்றாகளே... அவுக என்ன அவ்வளவு பெரிய ஆளுகளா?"

"அடியே சிகப்பாயி... ஊராளும் ராசாவுக்கும் , நாட்டையே ஆளும் சக்கரவர்த்திக்கும் வித்தியாசம் இருக்கில்லடி. நம்ம ஐயா நம்ம ஊருக்குப் பெரிய மனுசன். அந்த ஆளுக்கு ஒத்தை பொண்ணு. வெளி நாட்டில் படிச்சுட்டு வந்து தஸ்ஸு புஸ்ஸுன்னு இங்கிலீஷில் பேசிக்கிட்டு அலையுது..."

"இதென்ன பெரியாத்தா... நம்ம சின்னய்யாவும் காலேசு போயி படிச்சவர்தானே... அவரு என்ன படிக்காத கூதரையா...?"

"நம்ம சின்னய்யா காலெசு போயி என்ன படிச்சாரு..? விவசாயம் பத்தி படிச்சுட்டு வந்தாரு... அந்தப் பொண்ணு என்னமோ ஒரு பொட்டியாமே... அது என்ன பொட்டின்னு

பேரு வாய்க்குள்ளே நுழைய மாட்டேங்குதே..." பெரியாத்தா என்று அழைக்கப்பட்ட மருதாயி தவித்துக் கொண்டிருக்கையில் கூட நாற்று நட்டுக் கொண்டிருந்த இன்னொரு பெண்.

"கம்ப்யூட்டர் பொட்டி பெரியாத்தா..." என்று எடுத்துக் கொடுத்தாள்.

"அட ஆமாம்டி... அந்தக் கருமம் பிடிச்ச பொட்டிதான். ஆமா.. உனக்கு எப்படி ஆத்தா அதும்பேரு தெரிஞ்சுச்சு..." மருதாயி வியப்பாய் வினவ.

"அவ என்ன நம்மளை மாதிரி கூதரையா...? ஆறா...ம் கிளாஸ் வரைக்கும் பள்ளிக்கூடம் போயி படிச்சவளாக்கும். அதுதான் நாட்டு நடப்பைப் படிச்சு சொல்றா.." என்று ராக்காயி கூறினாள்.

ஆறாம்கிளாஸ் வரை பெரிய படிப்புப் படித்த அந்தப்பெண் பெருமையாய் எல்லோரையும் பார்த்துக் கொண்டாள்.

"அதைவிடு பெரியாத்தா.. நீ சொன்ன கதையை முழுசாச் சொல்லு. பாதியில் சங்கதியை நிறுத்தினியானா... என் மண்டை வெடிச்சே சிதறிப் போகும்..." சிகப்பாயி தூண்டினாள்.

"எங்கே விட்டேன்...?"

"அதுதான் அந்த கருமம் பிடிச்ச பொட்டியில் விட்ட."

"ஆங்... அந்தக் கருமம் பிடிச்ச பொட்டியைப் பத்தி படிச்சுட்டு வந்திருக்கிறாளாம்... அவளோட அப்பன்... அதுதான் நம்ம சின்னய்யாவோட தாய்மாமன்... அந்தப் பொட்டியை வைச்சுத்தான் பெரிய தொழிலு பண்ணுகிறாராம். அதனால பட்டணத்துப் பொண்ணுக்கு.. பட்டிக்காடு சரிப்பட்டு வராதுன்னு ஒரே பேச்சில் சொல்லிப் புட்டாராம்."

"அந்தாளு சொன்னா.. பொண்ண விட்டுக் கொடுத்திர்றதா? நம்ம சின்னய்யா ஒரே கட்டாக் கட்டித் தூக்கிட்டு வந்து தாலிகட்ட வேண்டியதுதானே" ராக்காயி நடவை முடித்து நிமிர்ந்தவளாய் கூறினாள்.

"நம்ம சின்னய்யா பிடிக்காதவளின் நிழலக் கூடத் திரும்பிப் பார்க்காத மனுஷனாச்சே. அவளப் போயி தூக்கிட்டு வந்து தாலி கட்டணும்னு அவருக்கு என்ன தலையெழுத்தா..." சிவப்பாயி வாய்க்கால் நீரில் இறங்கி கை கால்களை சுத்தம் பண்ணிக் கொள்ள ஆரம்பிக்க மற்றவர்களும் அதைப் பின்பற்றினார்கள்.

அவர்கள் அன்று அலுப்பில்லாமல் வேலை செய்ய வழி வகுத்த அவர்களது பேச்சின் கதாநாயகன் பாலமுருகன்.. அவனது வீட்டிற்குள் அப்போது நுழைந்து கொண்டிருந்தான்.

2

பெரிய தூண்களுடன்... அகன்ற திண்ணையுடன் இருக்கும் கிராமத்துப் பாணியில் அமைந்த மாளிகை போன்ற வீடு அது. வீட்டின் முன்னால் சிமிண்டில் அமைந்த பெரிய நிலா முற்றம். அந்த முற்றத்தில் சிறு வயதில் விளையாடிய இனிய பொழுதுகள் பாலமுருகனின் நெஞ்சினில் எழுந்தன.

அப்போதெல்லாம் அவனுடைய தாய்மாமா ஜெயராமன் இப்போது உள்ள உயர்ந்த  பணவசதியுடன் இல்லை. சென்னையில் அம்பத்தூரில் தொழிற் பேட்டையில் ஒரு சிறு தொழிற்சாலை நடத்திக் கொண்டு இருந்தார். கும்பக்கரையின் அருகில் உள்ள தாழையூத்துதான் அவர் பிறந்த ஊர். கும்பக்கரையில் பண்ணையார் வீட்டில் விசுவநாதனுக்கு அவரது தங்கை சிவகாமியை மணம் முடித்துக் கொடுத்தபோது பெருமையில் அவருக்கு தலைகால் தெரியவில்லை. ஆனந்தத்தில் ஆகாயத்திற்கும் பூமிக்குமாய் குதித்தார்.

"என்ன ஜெயராமா... நான் கேள்விப்பட்டது நிசம்தானா.. கும்பக்கரை பண்ணையார் மகனுக்கு ஒன் தங்கச்சிய பொண்ணு கேட்கிறாகளாமில்ல .. ஊருக்குள பேசிக்கிறாகளே..."

"நிஜம்தான் தாத்தா."

"இது என்னடா அதிசயமா இருக்கு.? சாதாரண விவசாயி மகன் நீ... உன் தங்கச்சிய பரம்பரைப் பண்ணையார் வீட்டில் எப்படிடா பொண்ணு கேட்டாங்க? நான் கேள்விப்படாத சங்கதியில்ல இது."

"என்ன தாத்தா அப்படிச் சொல்லிட்டிங்க... என் தங்கச்சிக்கு என்ன குறை? அவ அழகைப் பார்த்து ஆசைப்பட்டு பண்ணையார் மகன் அவரோட பெத்தவங்ககிட்ட சொன்னாராம். அவங்களும் மகன் ஆசைப்பட்ட பெண்ணையே கட்டி வச்சிடலாமுன்னு முடிவு பண்ணி பெண் பார்க்க வந்தாங்க. அவங்களுக்கு என் தங்கச்சியை பிடிச்சுப் போச்சு. பேசி முடிச்சுட்டுப் போய்ட்டாங்க. வார தை மாச முதல் முகூர்த்தத்தில் கல்யாணம்... இதைப் போய் பெரிசாப் பேசறீங்களே..."

"அவங்க பணத்தில் பெரியவங்க அப்பா."

"நாங்க படிப்பில் பெரியவங்க தாத்தா. என் தங்கச்சி எம்.எஸ்ஸி. படிச்சவ. நான் கம்ப்யூட்டர் என்ஜினியர்."

"படிப்பால் பணத்தை வாங்கலாம்.. பரம்பரைப் பெருமையை வாங்க முடியுமாடா?"

ஒருவேளை இந்தக் கேள்விகள்தான் ஜெயராமனை வெறி பிடித்தாற்போல் உழைக்க வைத்ததோ... என்று அடிக்கடி சிவகாமி பெருமூச்சுடன் கூறுவாள்.

தாய் தகப்பனில்லாத பிள்ளைகள் ..அண்ணனுக்கு தங்கையும்... தங்கைக்கு அண்ணனும்தான் ஆதரவு. ஆனால் என்றுமே ஜெயராமன் பாசமலர் அண்ணனைப் போல் அளவுக்கு மீறிய பாசத்தைக் காட்டியதில்லை என்றும் சிவகாமி சொல்வாள்.

"பாலா.. பெரிய இடத்தில் என்னைக் கேட்டு வந்ததில்... என்னை இந்த வீட்டில் கல்யாணம் பண்ணிக் கொடுத்ததை உங்க மாமா பெருமையாத்தான் நினைச்சாரு. அதையும் தாண்டி நம்மை விடப் பெரிய ஆளாய் வந்து காட்டனும்ங்கிற வெறி அவர் மனதில் எப்படி வந்ததுன்னுதான் எனக்குத்

தெரியலைடா... தாய் தகப்பனில்லாத எனக்கு தாய்க்குத் தாயா , தகப்பனுக்குத் தகப்பனா என் அண்ணன் இருந்தாருதான். ஆனால் என்னைக்கு எனக்குக் கல்யாணம் நடந்ததோ அன்றைக்கே அவரு என்னை விட்டு மனசால் பிரிஞ்சுட்டாரு... அப்புறம் ஒரு நாள் ஊரை விட்டுப் போகனும்கிற முடிவுக்கும் வந்திட்டாரு..."

சுற்றியிருக்கும் மனிதர்களின் நாக்குகள் எல்லாமே நீண்டிருக்கின்றன. அவை ஏன் அடுத்த மனிதரின் அந்தரங்கத்தைத் தொட்டுப் பேசி அவர்களது வாழ்க்கையோடு விளையாடுகின்றன என்பது பிடிபடாத ஜெயராமன்... மற்றவர்களின் நாவினால் பலமுறை சூடுபட்டார்.

"உனக்கென்னப்பா... பிடிச்சாலும் பிடிச்சே... புளியாங்கொம்பாய் பிடிச்சுட்டே.. கும்பக்கரை பண்ணையாரோட மச்சினன்.. உன் வாழ்க்கை அவரை அண்டிப் பிழைச்சு ஓஹோன்னு வரப் போகுது..."

பெருமையில் மிதந்த ஜெயராமனை சிறுமைப்படுத்தின இந்த வாய் மொழிகள். வானத்திற்கும் பூமிக்கும் குதித்தவர்... பூமியில் கால் பதித்து அசையாமல் நின்று யோசித்தார்.

"கட்டின பெண்டாட்டியால் யோகம்.. பெற்ற பிள்ளையால் யோகம்ன்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா ஓங்கதையே வேற ஜெயராமா... கூடப் பிறந்தவளாலே யோகம் வந்த ஆளை இப்பத்தான் பார்க்கிறேன்."

ஜெயராமன் அடிக்கடி சென்னைக்குப் போகத் துவங்கினார். அங்கே ஒரு தொழிற்சாலையில் கம்ப்யூட்டர் ஆபரேட்டராக வேலையில் சேர்ந்தார். அவரது நண்பர்கள் எல்லாம் தடுத்தனர்.

"கம்ப்யூட்டர் என்ஜினியருக்கு படித்து விட்டு வெறும் ஆபரேட்டராய் போகனுமா ராம்? வெயிட் பண்ணு. குட் ஆப்பர்சூனிட்டி ஒன்று கண்டிப்பாய் வரும்."

"அது வரும் வரை வாழ்க்கை நடத்த வழி வேண்டாமா?"

"ஏன்... உனக்கு ஊரில் விவசாயம் இருக்கிறதே..."

"இருக்கிறதுதான்... ஆனால் ஊரில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை."

சென்னைக்கு வேலைக்குச் சென்றவர் அந்தத் தொழிற்சாலையையே வாங்க நேர்ந்தது. சந்தர்ப்ப சூழ்நிலையால்...தொழிற்சாலை நஷ்டத்தில் ஓடுகிறது என்று அதன் உரிமையாளர் விற்க முனைந்து கொண்டிருந்தார். ஜெயராமனுக்கு திருமணம் செய்து வைக்க எண்ணி அப்போது பெண் தேட ஆரம்பித்து இருந்தாள் சிவகாமி.

"எனக்கு கல்யாணத்தில் இப்போது இன்ட்ரெஸ்ட் இல்லை சிவகாமி..."

"ஏன் அண்ணா...? எனக்குப் பாலா பிறந்து இரண்டு வருடங்கள் ஆகி விட்டது. நீ இன்னும் தனியாகவே இருந்தால் என் மனசுக்குக் கஷ்டமாக இருக்காதா? எனக்கென்று உன்னை விட்டால் பிறந்த வீட்டுச் சொந்தம்ன்னு சொல்லிக்க யார் இருக்கிறாங்க சொல்லு."

பாசத்துடன் அண்ணனின் முகம் பார்ப்பாள் தங்கை... அங்கு அவள் காட்டிய பாசத்திற்கான பிரதிபலிப்பு சிறிதுகூட இருக்காது. இருந்தாலும் தமையனை விட்டுக் கொடுக்காமல் பெண் தேடி ஒரு இடத்தை முடிவுபண்ணி விட்டாள் அவள்.

"அண்ணா.. நாளைக்கு நாம் செங்குளத்திற்கு பெண் பார்க்கப் போகிறோம்... ரெடியாய் வந்துவிடு."

"யாருக்குப் பெண் பார்க்கப் போகிறாய்?"

"ஏன் உனக்குத்தான். அவருடைய சித்தப்பாவின் வகையறாவில் ஒரு பெண் இருக்கிறாள். படிப்பு கம்மிதான். ஆனால் சொத்து அதிகம். இவருடைய மச்சினன் என்பதே எங்களுக்குப் போதும்ன்னு சொல்லிட்டாங்களாம்... மத்த எல்லாத்தையும் இவரே பேசி முடிச்சிட்டார். நீ வந்து தாலி கட்ட வேண்டியதுதான் பாக்கி."

"ஓஹோ.." புருவங்கள் முடிச்சிட பதில் கூறிய ஜெயராமன் மறுநாள் மாலையும் கழுத்துமாக ஒரு பெண்ணோடு வந்து நின்றார்.

"என்ன அண்ணா.. இப்படிப் பண்ணிட்டே.. உனக்காக அவர் பெண் பார்த்துப் பேசி முடித்து வைத்திருக்கிறார். அவர் வார்த்தையை நம்பி பெண்ணைப் பெற்றவங்க ஊரையே விருந்துக்கு அழைச்சுட்டு உட்கார்ந்திருக்காங்க, அவர் பெருமையைக் குறைக்கிறது போல இப்படி ஒரு காரியத்தைப் பண்ணிட்டியே..." சிவகாமி புலம்பிய போது சிரித்தபடி கூறினாராம் ஜெயராமன்.

"அப்படி என்னம்மா... நான் செய்யக்கூடாத தவறைச் செய்து விட்டேன் ? என் மனதுக்குப் பிடித்தவளைக் கல்யாணம் பண்ணியிருக்கிறேன். இதில் என்னம்மா தவறு இருக்கிறது? என் வாழ்க்கையை நான் முடிவு பண்ணியிருக்கிறேன்.. இதில் நீ குற்றம் சொல்ல என்னம்மா இருக்கிறது? உன் கணவரை எனக்குப் பெண்தேடச் சொல்லி நான் கேட்கவில்லையே..."

"நான் கேட்டேனே அண்ணா..."

"நீ யாரம்மா எனக்காக முடிவு பண்ண..?."

ஜெயராமன் கூறிய இந்த வார்த்தைகளைக் கூறும் போது சிவகாமியின் கண்கள் நீரில் மிதக்கும்.

"அப்போதே.. நான் யாரென்று கேட்டுத் தள்ளி வைத்து விட்டார் என் அண்ணன். அது தெரியாத பேதையாக நான் இருந்து விட்டேன் பாலா. காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்ட உன் அப்பா... உன் மாமாவின் செயலை பெரிதாகவே எடுத்துக் கொள்ளவில்லை.'உன் அண்ணன் சொல்வது சரிதானே சிவகாமி. இது அவர் வாழ்க்கை.. அவரது மனதுக்குப் பிடித்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டுமே'ன்னு எளிதாகச் சொல்லி விட்டார். நானும் சமாதானமாகி உன் மாமாவையும் அத்தையையும் விருந்துக்கு அழைத்துச் சமைத்துப் போட்டேன்... அவர்கள் சென்னையில் தனிக்குடித்தனம் போனபோது போய் பால் காய்ச்சி வைத்து விட்டு வந்தேன்.

உனக்கு ஆறு வயதாக இருக்கும்போதுதான் உன் மாமனுக்கு வந்தனா பிறந்தாள்... அப்போதுதான் திடீரென்று என் அண்ணன் ஊரிலிருக்கிற வீடு, காடு கரையை விற்கப் போகிறார்ன்னு சேதி வந்தது .. அண்ணனிடம் கேட்டேன்."

சிவகாமி ஜெயராமனைத் தேடி சென்னையில் உள்ள அவரது வீட்டிற்குப் போனாள். ஜெயராமன் பழைய சிறு வீட்டில் இல்லாமல் நவீனமான புது வீட்டிற்கு மாறியிருந்தார். வசதி வாய்ப்புகள் கூடியிருந்தன என்பது புது கலர் டி.வி. ப்ரிஜ் போன்ற புதிய பல பொருள்களைப் பார்த்த போது புரிந்தது.

"என்னம்மா.. இப்படிப் பார்க்கிற?"

"வசதி கூடியிருக்கேன்னு பார்க்கிறேன்."

"ஏன்.. என்னிடம் வசதி கூடக் கூடாதா? உங்களை மாதிரி பரம்பரைப் பணக்காரங்க கிட்டத்தான் அது கூடனுமா?"

ஜெயராமன் சிரிக்காமல் கேட்டாராம். அதைச் சொன்ன சிவகாமி துடிப்புடன்,

"என் மனசுக்கு அப்பவே துணுக்குன்னுச்சு பாலா.. என்னடா... என் அண்ணன் என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு விட்டாரேன்னு மனசு கலங்கிட்டேன். ஆனா அப்பவும் உன் மாமா மனசில் எங்க மேல் இவ்வளவு பகையிருக்கும்ன்னு எனக்குத் தெரியலை பாலா.." என்றாள்.

சிவகாமி ஜெயராமனிடம் கண் கலங்கிப் பேசினாளாம்.

"ஏன் அண்ணா இப்படிப் பிரித்துப் பேசுகிறீங்க ? நீங்கள் வசதியாக இருந்தால் எனக்குப் பெருமைதானே. சந்தோசம்தானே. ஆனால் வசதியாக இருக்கிறவர் ஏன் குடும்பச் சொத்தை விற்க வேண்டும்? அதைத்தான் கேட்க வந்தேன்..."

"உன் பங்கு அம்மாவின் நகைகள் தானேம்மா. அதைப் போட்டு உனக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டேனே..."

"என்ன அண்ணா இது? நான் பங்கு கேட்கவா வந்திருக்கிறேன்?"

"உனக்குப் பங்கில்லைன்னு நீயே ஒத்துக் கொள்கிறாய். அப்புறம் ஏம்மா.. என் சொத்தைப் பற்றி நீ கேள்வி கேட்கிறாய்? நான் அதை விற்பேன்.. என்ன வேண்டுமானாலும் செய்வேன். எனக்கு அதற்கு முழு உரிமையும் உண்டு."

"அண்ணா.. நான் சொந்தத்திற்காக வந்திருக்கிறேன். நீ உரிமையைப் பற்றிப் பேசுகிறாய். சொத்தில் உரிமை பாராட்டும் நீ.. உன் சொந்தத் தங்கை. என் மேல் உரிமை பாராட்டக் கூடதா? நான் என்ன உன்னிடம் சீர் வரிசையைக் கேட்டா வந்திருக்கிறேன்?"

பாசத்தை யாசித்து ஓர் தங்கையாகத்தான் சிவகாமி அதைக் கேட்டிருக்கிறாள்... ஆனால் ஜெயராமனோ அதையும் குதர்க்கமாய் எடுத்துக் கொண்டாராம்.

"அதாவது உனக்கு சீர் வரிசை கொடுக்க வக்கில்லாதவன்னு என்னைக் குத்திக் காட்டுகிறாய்.. அப்படித்தானே..."

"அண்ணா.. அப்படியெல்லாமில்லை. கும்பக்கரை பண்ணையார் வீட்டிற்கு சீர் வேண்டுமென்றால் என்னை ஏன் மருமகளாய் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? அவர்களுக்கு சமதையாய் ஆயிரம் இடங்களைப் பார்த்திருப்பார்களே..."

"அதாவது... உன் புருஷன் வீட்டு அந்தஸ்திற்கு நான் சமமானவன் இல்லை. உன் குடும்பத்திற்கு என் குடும்பம் சமம் இல்லை. அப்படித்தானே?"

"அண்ணா.. நீ தப்புத் தப்பாய் புரிந்து கொண்டு பேசுகிறாய்..."

"இல்லை.. சரியாகத்தான் புரிந்து கொண்டு பேசுகிறேன். எது உன்னை இப்படிப் பேச வைக்கிறது? உன் குடும்பத்தின் பரம்பரைப் பெருமையை அள்ளி வீசுகிறாயே.. ஒரு நாள் உன் கணவனை விட நான் பெரிய ஆளாக வந்து

காட்டவில்லையென்றால் என் பெயரை மாற்றி வைத்துக் கொள்கிறேன்..."

அப்போதும் சிரித்துக் கொண்டே சிவகாமி சமாதானமாய் பேசினாளாம். ஆனால் அதையும் ஜெயராமன் குற்றமாய் எடுத்துக் கொண்டாராம்.

"பெயரை மாற்றி வைத்தாலும் அது அருமையாகத்தான் இருக்கும். ஜெயராமனை மாற்றி வைத்துக் கொண்டால் அது 'ராமஜெயம்' எவ்வளவு அருமையான பெயர் பார்த்தாயா?"

ஜெயராமனின் முகம் இருண்டு போனதாம். கண்கள் இடுங்க

"அப்போ.. உன்னாலே என் புருசனை ஜெயிக்க முடியாதுடா மடையா. வீணாய் கனவு காணாதே. உன்னால் உன் பெயரை மாற்றி வைத்துக் கொள்ளத்தான் முடியும்ன்னு சொல்லாமல் சொல்கிறாயா?"என்று சொன்னாராம் ..

இதைச் சொல்லும்போது சிவகாமியின் முகத்தில் துயரம் பொங்கியது.

"நான் என் அண்ணனை மட்டம் தட்ட நினைப்பேனா பாலா? இரண்டு கண்ணில் எது பெரிதென்று யார் சொல்ல முடியும்? இரண்டில் எந்த ஒன்றில் அடிபட்டாலும் வலியும் வேதனையும் எனக்குத்தானே. சண்டையே போடாதவரிடம் ஏன் சண்டைக்கு நிற்கிறாய் என்றுதான் நான் கேட்டேன். உன் அப்பா சொக்கத் தங்கம்டா. அவரிடம் ஏன் வீணாய் பகை பாராட்டுகிறீர்கள் என்றுதான் எடுத்துச் சொன்னேன். நான் சொன்னது எதுவும் உன் மாமன் காதுகளில் விழவில்லையே. செவிடன் காதில் ஏறாமலே போய் விட்டது..."

"நீங்கள் அப்பாவிடம் இதைப் பற்றிப் பேசினீர்களா அம்மா...?"

"இல்லை பாலா.. பேசவில்லை. அண்ணன் ஏதோ ஒரு மன வருத்தத்தில் இதைப் பேசுகிறார்ன்னுதான் நினைத்தேன். காலப் போக்கில் என் அண்ணன் சொன்ன வார்த்தைகளை

நான்தான் மறந்து விட்டேன். என் அண்ணன் மறக்கவில்லைடா... இப்போது யோசிக்கும் போது நான் எவ்வளவு பெரிய தவறைச் செய்து விட்டேன்னு எனக்குப் புரிகிறது. சொல்லியிருக்க வேண்டும்..." சிவகாமி மகனிடம் குமுறி அழுதாள்.

தாயின் துயரத்தை எண்ணி பாலாவின் மனதில் கோபம் மண்டியது.

3

மனிதனின் மனதில் வரும் உணர்வுகளை யாரால் வரையறுக்க முடிகின்றது. அதிலும் ஆண்களுக்கு ஒரு வகையான மன அலைகளையும் பெண்களுக்கு வேறு வகையான மன அலைகளையும் கொடுத்தது யார்? கடவுளா..? இல்லை நம் சமூக மரபியல் சிந்தனைகளின் தாக்கமா? ஒரே வயிற்றில் பிறந்த அண்ணன் தங்கை இருவரில் அண்ணன் தன் தங்கையைப் போட்டியாளராக நினைத்து விட்டதற்கு யார் காரணம்?

"காரணமே தெரியவில்லை பாலா.. என் அண்ணன் மனதிலிருந்த கோபத்திற்குக் காரணம் எதுன்னு என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் பூர்விக நிலத்தையும் வீட்டையும் விற்க அண்ணன் செய்த முடிவை மட்டும் என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. என் பிறந்த வீட்டின் வேர் அது. அதை ஒரேயடியாய் வெட்டி விட்டு என் அண்ணன் போக நினைத்தார்."

சிவகாமி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஜெயராமன் ஒரே நிலையில் நின்றாராம்.

"நான் வேலை பார்க்கும் பேக்டரியை விற்கப் போகிறார்கள். அதை நானும் இன்னும் சில நண்பர்களும் சேர்ந்து வாங்கப் போகிறோம். அதற்குப் பணம் தேவை."

"நான் அவரிடம் கேட்டு வாங்கித் தருகிறேன் அண்ணா."

"பிச்சை போடுகிறாயா?"

"ஐயோ அண்ணா.. இது உதவி.."

"பிச்சை என்ற வார்த்தையை நாகரிகமாய் சொல்கிறாய்..."

"சரி.. நீ நம் வீட்டையும் நிலத்தையும் எனக்கு விற்றுவிடு..."

"உனக்கு எதற்கு அந்தச் சொத்து?"

"உனக்கு எதற்கு இந்தக் கேள்வி..? நீ விற்கிறவன். நான் வாங்குகிறவள்.. மார்க்கெட் ரோட்டைச் சொல்லி பத்திரம் போட்டுக் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கிக்கொள்..."

அப்போது ஜெயராமன் தயங்கினாராம்.. அவரின் மனைவிதான் அவரை அதட்டி மிரட்டி சம்மதிக்க வைத்திருக்கிறாள். அந்த வகையில் ஜெயராமனின் மனைவி ஆண்டாள் கெட்டிக்காரி.

"நமக்குத் தேவை பணம். அதை அவள் கொடுக்கிறாள். விற்க ஏன் யோசிக்கிறீங்க ?"

"இல்லை ஆண்டாள்... இவளுக்கு போய் சொத்தை விற்பதா?"

"வேறு யார் வாங்கக் காத்திருக்கிறார்கள்? பொட்டைக்காடும் ஓட்டை வீடும்... சொத்தாம். காரியம் பெரிதா? வீரியம் பெரிதா?"

"என்ன சொல்ல வருகிறாய்?"

"உங்க தங்கை புருசன ஜெயிக்கனும்னா நாம் மாதச் சம்பளம் வாங்குகிறவர்களாக இருக்கக் கூடாது. ஏதாவது தொழில் தொடங்கி முதலாளியாக ஆனால்தான் உண்டு. அதற்கு இப்போது ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. வெட்டி ரோசம் பார்த்து கெட்டுப் போகாமல்.. இதை அவள் தலையில் கட்டிவிட்டு பணத்தை வாங்கப் பாருங்கள்."

சிவகாமி தன் தாய் தந்தையரின் பூர்வீக வீடும்.. நிலமும் மாற்றான் கைக்குப் போகாமல் காப்பாற்றிவிட்டாள். தாழையூத்தில் இருந்த அவளது பிறந்த வீட்டை இடித்துக் கட்டினாள். நிலத்தில் கிணறு வெட்டி பம்பு செட் மோட்டாரைப் போட்டாள்... அவளது தமையனிடம் அவள்

கொடுத்த பணத்தை இரண்டே வருட விளைச்சலில் எடுத்து கணவனிடம் கொடுத்து விட்டாள்.

விசுவநாதன் கடிந்து கொண்டாராம்.

"ஏண்டி.. நீயும் நானும் வேறு வேறா... கடனை அடைக்கறீயோ?"

"இல்லை அத்தான்.. இது அண்ணனின் சொத்து ..என்றைக்கு இருந்தாலும் அவர் வசம் கொடுத்து விடுவேன். அதனால் அவர் சார்பாய் அவருக்குக் கொடுத்த பணத்தைக் கொடுத்தேன்."

"உன் அண்ணன் இந்தச் சொத்தை வாங்கி என்ன செய்யப் போகிறார்.? அவருடைய பொண்ணுக்கு சீதனமாய் கொடுத்து நம்ம பாலமுருகனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் போகிறார்."

விசுவநாதன் சிரித்தாராம்.

"எதில் எனக்குச் சந்தேகம் இருந்ததோ இல்லையோ...வந்தனாவை உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கும் விசயத்தில் சந்தேமே வரவில்லை பாலா... உன் தாய்மாமன் மகளை உன்னை விட்டு வேறு ஒருவனுக்கு எப்படிக் கொடுக்க முடியும்ன்னுதான் நான் நினைச்சேன். அதனால்தான் உன் மனசில் என்னையறியாமல் அவள் மேல் ஆசையை உண்டு பண்ணி விட்டேன்.. என்னை மன்னித்து விடு பாலா."

சிவகாமி மகனிடம் கரம் குவித்து அழுதபோது பாலா பதறி விட்டான். தாயின் கரங்களைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"அம்மா.. வீணாய் கண் கலங்குறீங்க. இப்ப என்ன நடந்து விட்டது? பெண்ணைப் பெற்றவருக்கு எனக்குப் பெண் கொடுக்க இஷ்டமில்லை. உலகத்தில் அவள்தான் பெண்ணா? வேறு பெண்ணில்லையா? என்னவோ எனக்கு அநியாயம் செய்து விட்டது போல மன்னிப்புக் கேட்கிறீங்களே..."

"இல்லை பாலா... நான் தவறு செய்தவள்தான். என்றைக்கு உன் அப்பா என் கழுத்தில் தாலியைக் கட்டினாரோ... அன்றைக்கே பிறந்த வீட்டை நான் மறந்திருக்க வேண்டாமா? எப்போது உன் மாமன் உன் அப்பாவை ஜெயிப்பேன்னு என்னிடமே சபதம் போட்டாரோ... அப்போதே அவரை நான் தள்ளி வைத்திருக்க வேண்டாமா? நான் உன் அப்பாவுக்கு சரியான மனைவி இல்ல பாலா... உனக்கு நல்ல தாயாகவும் இல்லை."

சிவகாமி குமுறி அழுதாள்.

ஜெயராமன் சொத்தை விற்றுப் பணம் வாங்கிக் கொண்ட பின்பு அவரது வாழ்க்கைத் தரம் உயர ஆரம்பித்தது. ஊர் திருவிழாவுக்கு அவரை அழைத்தால் மறுக்காமல் வந்து ஒரு நாள் சிவகாமியின் வீட்டில் தங்கி விட்டுப் போவார். அந்த ஒரு நாளில் வந்தனாவின் தோற்றமும் செயல்களும் பாலமுருகனின் மனதில் ஆழப் பதிந்து விட்டிருந்தது. பௌர்ணமியின் போது தான் கும்பக்கரையில் திருவிழா வரும். அதனால் ஜெயராமனின் குடும்பத்தார் வரும் தினம் பௌர்ணமியாக இருக்கும்.

அந்த நாட்களில் மொட்டை மாடியில் இரு குடும்பத்தாரும் அமர்ந்து நிலா விருந்து சாப்பிடுவார்கள். யார் அதை ரசித்தார்களோ இல்லையோ... வந்தனா மிகவும் ரசிப்பாள்.

"ஹௌ நைஸ் டாடி... ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் சாப்பிடுவது போலவே இருக்கு..." என்பாள்.

"ஈஸிட்? இந்தப் பட்டிக்காடு வீட்டின் மொட்டை மாடியைப் போய் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுடன் கம்பேர் பண்ணுகிறாயே குட்டிம்மா. இதற்கும்... அதற்கும் ஏணி வைத்தாலும் எட்ட முடியுமா?" ஜெயராமன் அலட்சியத்துடன் பதில் சொல்வார்.

விசுவநாதனின் புருவங்கள் முடிச்சிடும். அவசரமாய் சிவகாமி பேச்சை மாற்றிச் சமாளிப்பாள். ஆண்டாள் நடப்பவற்றை ஏளனப் புன்னகையோடு ரசிப்பாள்.

மத்திய தர குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஆண்டாளுக்கு வைர மூக்குத்தியே கனவு என்கிறபோது.. வைர நகைகளை வாரிப் போட்டுக் கொண்டு கப்பல் போன்ற காரில் வந்து இறங்கும் நாத்தனாரைப் பார்த்தால் பொறாமை வருவது இயற்கைதானே. அதிலும் அவளும் தன்னைப் போன்ற குடும்பத்தில் பிறந்தவள்தான் என்பதை அறிந்தவுடன் பொறாமை பண்மடங்கு பெரிதாகும் தானே.

ஆனால் அவள் தூபம் போட அவசியமேயில்லாமல் ஜெயராமன் தங்கை குடும்பத்தின் மேல் போட்டியுணர்வுடன் கூடிய வன்மத்தைக் கொண்டிருந்தார். ஆண்டாள் செய்ததெல்லாம் அவரின் மனதிலிருந்த அக்கினியை குறைய விடாமல் பார்த்துக் கொண்டதுதான்.

"ஆனாலும் உங்க தங்கச்சிக்கு இவ்வளவு ஆணவம் கூடாதுங்க... வைர வளையல்களான்னு நான் சாதாரணமாத்தாங்க கேட்டேன் ..அதுக்கு கெத்தா முகத்த வைத்துக்கிட்டு ஆச்சரியப் பண்ணிடாதீங்க அண்ணின்னு கையை உருவிக்கிட்டுப் போறா, நமக்கு அந்த நகைகளைத் தொட்டுப் பார்க்கக் கூட தகுதியில்லையா?"

அந்த வருட லாபத்தில் மனைவிக்கு வைர நகைகளை பரிசளிப்பார் ஜெயராமன்.

"ஏங்க.. நம்ம வந்தனா அவங்க வீட்டுக் காரைத் தொட்டு ஏக்கமாய் பார்க்கிறாள்.. ஒரு வேளை நம்ம அப்பாவால் இப்படி ஒரு கார் வாங்கிக் கொடுக்க முடியுமான்னு நினைக்கிறாள் போல."

அடுத்த நாளே விசுவநாதனின் காரை விட அதிக விலையில் காரை வாங்கி வீட்டின் முன் நிறுத்துவார் ஜெயராமன்.

வருடா வருடம் ஜெயராமன் தங்கை வீட்டிற்கு வந்ததே... 'என்னைப் பார். என் வசதியைப் பார்' என்று தன் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வரும் பெருமையை பறை சாற்றத்தான்.

ஆண்டாளுக்கோ.. அவள் வாங்கி அணியும் வைர நகைகளின் அழகைக் கண்டு நாத்தனார் பொறாமைப் பட வேண்டும் என்ற ஆசை. ஜெயராமனால் மனைவியின் எல்லா ஆசைகளையும் நிறைவேற்ற முடிந்தது. ஆனால் தங்கையைப் பொறாமைப்பட வைக்க வேண்டும் என்ற மனைவியின் ஆசையை கடைசி வரை நிறைவேற்ற முடியவில்லை.

சிவகாமி பொறாமை என்னும் கீழ்மைக் குணம் இல்லாத நிறை குடமாக இருந்தாள்.

"சிவகாமி. உன் அண்ணன் ஜெய்ப்பூர் போயிருந்த போது அங்கே ஒரு புது டிசைன் நகையைப் பார்த்தராம். அப்படியே அதை போட்டோ எடுத்துக் கொண்டு வந்து விட்டார். அந்த வைர செட்தான் இது. எப்படி இருக்கிறது..."

நாத்தனாரின் விழிகளில் பொறாமையின் சாயலைத் தேடியவாறு கூறுவாள் ஆண்டாள். அவளோ ஆர்வமாய் அதைக் கேட்டுவிட்டு

"அண்ணனுக்கு நல்ல டேஸ்ட் அண்ணி. உங்களுக்கு இந்த நகை ரொம்ப பொருத்தமாகவும் அழகாகவும் இருக்கிறது" என்று பாராட்டுவாள்.

பெரியவர்களின் மனவோட்டம் அறியாத குழந்தைப் பருவத்தில் இருந்த வந்தனாவும் கோதாவரியும் வீட்டைச் சுற்றி ஓடி விளையாடுவார்கள். அவர்களை விட வயதில் பெரியவன் ஆன பாலமுருகன் தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பான் ..பாலமுருகனும் கோதாவரியும் ஆறு வயது வித்தியாசத்தில் முன்பின்னாகப் பிறந்தவர்கள். வந்தனாவும் கோதாவரியின் வயதுதான் ..வந்தனா பிறந்த பின்னால் சிவகாமிக்கு கோதாவரி பிறந்தாள்.

பத்து வயது வந்தனாவை பதினாறு வயது பால முருகன் மனதில் இனம் புரியாத உணர்வுடன் பார்க்க ஆரம்பித்தான். கிராமத்து கலாச்சாரம். 'இவள் உன் முறைப் பெண்' என்று தூண்டிவிட அவள் வரும் அந்த ஓர் நாளில் அவனது இதயத்தில் இதமான ஓர் சுகம் தோன்ற ஆரம்பித்தது.

முதல் முதலாய் வந்தனாவைத் தொட்டுத் தூக்கியது அவளது பத்தாவது வயதில்தான்.

தோப்பைச் சுற்றிப் பார்க்க வந்த வந்தனாவும் கோதாவரியும் கிணற்றின் அருகே நின்று பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். பேசியபடியே பின்னால் சென்ற வந்தனா கிணற்றில் விழுந்து விட்டாள். தங்கையும், வந்தனாவும் தோப்புப் பக்கம் செல்வதைக் கண்டு தொடர்ந்து வந்த பாலமுருகன்.

"அண்ணா..." என்று கோதாவரி அலறிய சத்தம் கேட்டதும் கிணற்றின் அருகே ஓடி எட்டிப் பார்த்தான்.

உள்ளே தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த வந்தனாவைப் பார்த்ததும் கிணற்றில் குதித்து விட்டான். பூங்கொடி போல் கிடந்தவளை தோளில் போட்டுக் கொண்டு கரையேறி அவளை மூர்ச்சை தெளிய வைத்தான்.

கண் விழித்துப் பார்த்து பயந்தவளின் பயத்தைப் போக்க.

"என்ன... என் மாமன் மகளே.. காற்றைச் சாப்பிட்டு உயிர் வாழ்கிறாயா? எப்படி இப்படிக் கனமேயில்லாமல் பூப்போல் இருக்கிறாய்?" என்று கேலி செய்ததும்...

அவள்.

"போங்க அத்தான்" என்று சிணுங்கியதும் இன்றும் பாலமுருகனின் நினைவில் நிற்கிறது.

அன்று கிணற்றில் தவறி விழுந்து விட்டதை வந்தனா வீட்டில் வந்து சொல்லவில்லை. கோதாவரி சொல்ல முயன்றபோது தடுத்து விட்டாள்.

"அவளோட அப்பா அம்மா அவளை இங்கே கூட்டி வர மாட்டேன்னு சொல்லி விடுவாங்களாம். அதனால் பயந்துக்கிட்டு வேண்டாம்ன்னு சொல்லி விட்டாள் அண்ணா..." என்று கோதாவரி சொன்னாள்.

'இந்த ஊருக்கு வர அவ்வளவு ஆசையா?'

அடுத்த வருடம் அவள் வந்தபோது பட்டம் தோட்டத்து மாமரத்தின் கிளையில் மாட்டி விட்டது. அதை எடுத்துக் கொடுத்தான் பாலமுருகன். அதற்கடுத்த வருடம்.. கோவில் குளத்தில் வந்தனா ஆசைப்பட்டுக் கேட்ட தாமரைப் பூவை குளத்தில் நீந்திப் போய் பறித்து வந்து கொடுத்தான். அவள் பருவம் எய்திய பெண்ணாய் ஆன பின்பு அத்தை மகனிடம் அவள் இயல்பாய் பேச தடை விதிக்கப்பட்டது. ஆனாலும் அவளது பதினாறாம் வயதில் அருவிக் கரையில்... இருபத்தி இரண்டு வயது அத்தை மகனின் மார்பில் முகம் புதைத்து நின்றாள்.

நெஞ்சில் தோன்றும் நினைவுகளில் அந்த நாளின் நினைவு வந்து விட்டால் பாலமுருகனின் இதயம் சிலிர்த்து விடும்.

முதல் பூ மலர்ந்த நாள் அது. முதல் தொடுகையில் மனம் சிலிர்த்த நாள் அது... முதல் நாள் என்றுமே மறக்க முடியாத நாள் தானே... நாம் முதன் முதலில் பள்ளி சென்ற நாள். நம் பிள்ளைகளை முதன் முதலில் பள்ளிக்கு அனுப்பிய நாள்... நம் மனதில் என்றும் உறைகின்றது இல்லையா. முதன் முதலாய் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் இரவு முதலிரவுதானே... அதை மறக்க முடியுமா? அதைப் போல் பாலமுருகன் முதன் முதலில் வந்தனாவைத் தொட்டுத் தழுவிய அந்த நாளை... எந்த நாளில் நினைத்தாலும் கிறங்கிப் போவான்.

## 4

வந்தனா தன் பதினாறாவது வயதில் ஊர் திருவிழாவிற்கு வந்திருந்தபோது கோதாவரியும் அவளும் சேர்ந்து வழக்கம் போல கிசுகிசுப்பாய் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். வளர்ந்த பெண்ணாய் கண்ணைக் கவர்ந்திழுக்கும் அழகியாய்... சென்னை நாகரிகத்தின் சாயல் படிந்தவளாய் தன் முன் சற்றியவளின் பின்னால் மனம் செல்ல பாலமுருகன் அவளையே சுற்றிச் சுற்றி வந்தான். எப்போதும் போல் அறியாமையுடன் நோக்காமல் இம்முறை

வந்தனாவின் வண்டுக் கண்களும் அவன் கண்களைச் சந்தித்து மீண்டன. கோதாவரியிடம் கேட்பது போல் பாலமுருகனை வம்புக்கு இழுத்தாள் அவள்.

"ஏன் கோதாவரி.. உன் அண்ணன் படிக்கிறேன்.. படிக்கிறேன்னு பீலா விடுகிறாரே.. என்ன படிக்கிறாராம்?"

"ஏன்.. அண்ணன் இங்கேதானே உட்கார்ந்து புத்தகத்தை தலைகீழாய் பிடித்துப் படித்துக் கொண்டிருப்பதாய் பாவ்லா காட்டிக் கொண்டிருக்கிறது.? நீயே நேரடியாய் அதுகிட்ட கேட்க வேண்டியது தானே.. "

கோதாவரி பதில் கொடுக்க அவசரமாய் புத்தகத்தை சரியாகப் பிடித்துக் கொண்டான் பாலமுருகன். அதைக் கண்டு 'களுக்' கென்று நகைத்தாள் வந்தனா. அவளது சிரிப்பை ஆசையுடன் பார்த்தபடி பொய்யாய் கோபம் காட்டிப் பேசினான் அவன்.

"என் மாமன் மகளுக்கு பல்லு சுளுக்கிக்கப் போகுது... எதைக்கண்டு இப்படிச் சிரிக்கிறாளாம். கேட்டுச் சொல்லு கோதாவரி."

"நீயும் ஆரம்பிச்சுட்டியா.. ஏன் அண்ணா... என்னைப் பார்த்தால் உங்கள் இரண்டு பேருக்கும் எப்படித் தோன்றுகிறது?"

"என் பாசமலர் தங்கைன்னுதான் தோன்றுகிறது."

"ஐஸ் வைக்க வேண்டாம். எதைக் கேட்க வேண்டுமானாலும் அவளிடம் நேரடியாய் கேள். என்னிடம் தூது விடாதே..."

"ஏன்... அண்ணனுக்காக நீ தூது செல்ல மாட்டாயா...?"

"கண்ணுக்கு எட்டாத தொலைவில் அவள் இருந்தால் நான் கட்டாயம் தூது செல்வேன். உன் கைக்கு எட்டும் தொலைவில்தானே அவள் இருக்கிறாள்? அப்புறம் நான் எதற்கு நடுவில்?"

"அதுவும் சரிதான். என் மாமன் மகளுக்கு என்ன சந்தேகம்? நான் என்ன படிக்கிறேன்னு சந்தேகமா? இல்லை.. நான் படிப்பதே உண்மையா இல்லை பொய்யா என்ற

சந்தேகமா?" வந்தனாவின் விழி பார்த்து நேரடியாய் கேட்டான் பாலமுருகன்.

"அத்தான்... ப்ளீஸ்... நான் அப்படியா கேட்டேன்?" வந்தனாவின் முகம் கலங்கிச் சிவந்தது.

அவளது கலக்கத்தைப் பொறுக்காதவனாய் அவன் கூறினான்.

"அடடா.. ஒரு வார்த்தை கேலியாய் சொல்லி விடக் கூடாதே.. உடனே கண் கலங்கி விடுவாயே. நீ சென்னையில் பிறந்த பெண் போலவே இல்லை. உனக்கு வந்தனான்னு பெயர் வைத்ததற்குப் பதில் 'தொட்டால் சிணுங்கி' ன்னு வைத்திருக்கனும். கேட்டுக்கோ தொட்டால் சிணுங்கி. நான் பி.எஸ்ஸி அக்ரி முடித்துட்டு எம்.எஸ்ஸி அக்ரி படித்துக் கொண்டிருக்கிறேன். போதுமா.. சரி.. நீ இப்போது பிளஸ் ஒன் படிக்கிறாய்.. அதற்கு மேலே என்ன படிக்க உத்தேசம்?"

வந்தனாவின் கண்கள் மின்னின.

'என்னையா தொட்டால் சிணுங்கியென்று சொன்னாய்?'

"அதுவா அத்தான் அது பெரிய திட்டம் வைத்திருக்கிறேனே..."

"என்ன திட்டம் வைத்திருக்கிறாய் தொட்டால் சிணுங்கி?"

"என் பெயர் வந்தனா."

"எனக்கு நீ தொட்டால் சிணுங்கிதான்..."

அவள் முறைத்தபடி பதில் சொன்னாள்.

"பெரிய திட்டம்தான் அத்தான். பிளஸ் ஒன் முடித்துவிட்டு பிளஸ் டூ படிக்கப் போகிறேனாக்கும்."

'ஹோ... ஹோ...' வென்று கோதாவரி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள். பாலமுருகன் கையிலிருந்த புத்தகத்தை கீழே போட்டுவிட்டு,

"உன்னை.." என்று சொல்லிக் கொண்டே துரத்தினான்.

அவன் கைகளில் பிடிபடாமல் மாடி வராண்டாவில் ஓடி மறைந்தவள் அன்று மாலையே துரத்தும் குரங்குகளிடமிருந்து தப்பிக்க அருவிக் கரையில் ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டாள்.

"கோதாவரி... பால்ஸ் பார்க்க போகலாமா?"

“ உன்னைக் கூப்பிட்டுக்கிட்டுப் போனா , வீட்டில யாரு திட்டு வாங்கறது ?..”

"உன் அண்ணனைத் துணைக்கு கூப்பிடு..."

"அதற்கு அதைவிட அதிகமாய் திட்டுவார்கள்."

"பின்னே என்னதான் செய்வது? எனக்கு பால்ஸ் பார்க்கனும்.."

"ஐடியா.. நான் கேட்டால்தான் எங்கள் வீட்டில் விட மாட்டார்கள். நீ சென்னையில் பிறந்து வளர்ந்தவள். நீ கேட்டால் விட்டு விடுவார்கள். ஆனால் என் அப்பாம்மாக்கிட்டக் கேட்காதே... உன் அப்பாம்மாவிடம் கேள்."

வந்தனா கேட்டதும் ஜெயராமன்.

"ஓ.கே... போய் வா..." என்று சொல்லி விட்டார்.

"என்ன அண்ணா... வயதுப் பெண்களை தனியாய் போகச் சொல்கிறீர்கள்.." என்று ஆட்சேபித்த சிவகாமியிடம்,

"நான் என் பெண்ணை வளர்க்கும் கல்ச்சரே வேறு. இதோ இருக்கும் அருவிக் கரைக்கு தனியாகப் போக அவள் பயந்தால் வெளிநாட்டிற்கு படிக்க எப்படித் தனியாகப் போவாள்? உன் கட்டுப் பெட்டித்தனத்தை உன் பிள்ளைகளோடு வைத்துக் கொள். வந்தனாவின் உலகம் வேறு. அவள் எனக்குப் பின்னால் என் கம்பெனியை நிர்வகிக்கப் போகிறவள். நான்கு சுவர்களுக்குள் அவளை அடக்கி வைக்க நான் விரும்பவில்லை.." என்று முகத்தில் அடித்தது போல் பதில் கூறி விட்டார் ஜெயராமன்.

அவர் சொன்னது போல் அவரது உலகம் வேறாகத்தான் மாறி விட்டிருந்தது. கம்ப்யூட்டர் படித்திருந்தவர் சரியான தருணத்தில் கம்ப்யூட்டர் நிறுவனமொன்றை ஆரம்பித்திருந்தார். அசுர வளர்ச்சியை சில ஆண்டுகளிலேயே அடைந்து விட்ட அந்த நிறுவனத்திலிருந்து பணம் கொட்டோ கொட்டென்று கொட்டியது. விசுவநாதனை விட ஒரு ரூபாயாவது அதிகம் வைத்திருக்கும் பணக்காரன் என்ற பெயர் வாங்கிவிட வேண்டும் என்று நினைத்திருந்தவர்... இன்று கோடிக் கணக்கில் அதிகம் வைத்திருக்கும் பணக்கரானாகி விட்டார். அந்த மமதையும்.. செல்வச் செருக்கும் அவரது பேச்சில் வெளிப்பட ஆரம்பித்தது.

சிவகாமி தமையனின் வார்த்தைகளைக் கேட்டதும் மௌனமாகி விட்டாள். வந்தனா, கோதாவரியுடன் கும்பக்கரையின் அருவிக் கரைக்குச் சென்றாள்.

உயரத்திலிருந்து கொட்டிய அருவியைக் கண்டதும்

"ஹைய்யோ..." என்று கன்னத்தில் கையை வைத்து ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தாள் வந்தனா.

"என்னவோ.. உன் உலகம் வேறு.. நீ வெளிநாட்டில் படிக்கப் பிறந்தவள்ன்னு உன் அப்பா கதை சொல்கிறார். நீ என்னடான்னா எங்கள் கிராமத்து அருவியைப் பார்த்து 'ஆ' ன்னு வாயைப் பிளக்கிறாயே..." ஒரு மாதிரியான குரலில் கூறினாள் கோதாவரி.

அவளது குரலின் பேதத்தைக் கவனித்த வந்தனா தோழியின் தோள் மீது கை போட்டு அணைத்தபடி அருவிக்கரையருகே நடந்து அங்கிருந்த பாறையின் மீது அமர்ந்தாள்.

"கோதாவரி.. எனக்கு வெளிநாட்டை விட இந்தக் கிராமத்தின் மீதுதான் மோகம் அதிகம். அப்பா ஆசைப் படுகிறார். அதனால் வெளிநாட்டிற்குப் போய் படிப்பேன். எனக்கென்று ஒரு மனம் இருக்குதில்லையா? அதன் ஆசைப்படி எங்கே போனாலும் இங்கேதான் திரும்பி வருவேன்."

அருவிக்கரையில் ஓங்கி வளர்ந்திருந்த மரக் கூட்டங்களின் இடையே ஆறு போல் ஓடிய அருவி நீரில் கால்களை விட்டு அளைந்தபடி வந்தனா கூறியதைக் கேட்ட கோதாவரி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

"என்னப்பா.. பலமான சிந்தனையில் இருக்கிறாயே?"

"ஒன்றுமில்லை. உன் அப்பா வரவர மாறிக் கொண்டே வருவது போல் இருக்கிறது. நீ இனிமேல் வருடத்திற்கு ஒரு முறை வரும் திருவிழாவிற்குக் கூட வரமுடியுமோ.. என்னவோ.. நிலைமை இப்படியிருக்க நீ வீணாய் கனவு காண்கிறாயோன்னு இருக்கு வந்தனா..."

கோதாவரி புத்திசாலி. விசுவநாதனின் மகள்... ஜெயராமனின் குணத்தை சிறு வயதிலேயே எடை போட்டு விட்டாள். ஆனால் வெள்ளை மனம் கொண்ட வந்தனா அதை மறுத்தாள்.

"இப்போது அருவிக்கரைக்கு நான் போகணும்னு கேட்டதும் என் அப்பா உடனே பர்மிசன் கொடுத்தாரா.. இல்லையா? அதே போல் நாளையும்... நான் என்ன கேட்டாலும் உடனே பர்மிசன் கொடுத்து விடுவார்.. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது கோதாவரி..."

வந்தனாவின் பேச்சை மறுத்துப் பேச கோதாவரி வாய் திறந்தபோது யாரோ ஒரு சிறு பெண்.

"கோதாவரி..." என்று அழைத்தபடி அங்கு வந்தாள்.

"ரமா... என்னடி அருவிக்குக் குளிக்க வந்தாயா..?"

"ஆமாம்.. இது யார்?"

"என் மாமா பெண் வந்தனா."

"உங்க ஊரில் திருவிழா நடக்கிறதே. என்னைக் கூப்பிட்டாயா?"

"மறந்தே போயிட்டேண்டி. கோவிச்சுக்காதே..."

"இதை மறந்தது போல் நாளைக்குப் பத்தாம் வகுப்பு ரிசல்ட் வரப் போகுது அதை மறந்து விடாதே..."

"நாளைக்கேவா... உனக்கு எப்படித் தெரியும்?"

கோதாவரி வந்தனாவை மறந்து ரமாவிடம் ஆர்வமாய் பேச ஆரம்பிக்க.. வந்தனா நீரோடும் பாதையில் நீர் ஓரமாகவே கால்களை நனைத்தபடி நடந்து கோதாவரியின் கண் பார்வையிலிருந்து மறையும் தூரத்திற்கு சென்று விட்டாள்.

திடீரென்று மரத்திலிருந்து நான்கைந்து குரங்குகள் குதித்து அவள் முன்னே நின்றன. பயந்து போன வந்தனா திரும்பிப் பார்த்தாள். கோதாவரி தென்படவில்லை. குரங்கு வேறு.

"உர்ர்ர்..." என்று அவளைப் பார்த்து உறும ஆரம்பித்தது.

"ச்சூ... கோ அவே" வந்தனா சும்மாயிருக்க மாட்டாமல் ஆங்கிலத்தில் அதட்டி வைத்தாள்.

அது ஆங்கிலம் பிடிக்காத குரங்கு போல... அவள் மேல் பாயத் தாவி வந்தது. அவ்வளவுதான்...

"வீல்..." என்று அலறிய வந்தனா.. கண் மண் தெரியாமல் ஓடி எதன் மீதோ மோதி நின்றாள்.

"ஏய்... தொட்டால் சிணுங்கி... ஏன் இப்படி ஓடி வருகிறாய்?" பாலமுருகன் வினவிக் கொண்டிருக்கும் போது குரங்கு அருகில் வந்து விட பயத்தில் மீண்டும்,

"வீல்..." என்று கத்திய வந்தனா பாலமுருகனை இறுகக் கட்டிப் பிடித்து அவன் மார்பில் கண்களை இறுக்கி மூடிக் கொண்டு பயத்துடன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

நம்ப முடியாத ஆனந்தப் பரவசத்துடன் அவளைச் சுற்றி வளைத்தன பாலமுருகனின் கைகள். அவளை ஆரத்தழுவி அவள் கூந்தலில் முகம் புதைத்து கிறங்கி நின்றான். பெண்ணைத் துரத்திய வீரக்குரங்கு ஆணைக் கண்டதும் வெற்றிகரமாய் பின் வாங்கியது.

'வாழ்க குரங்கு' என்று மனதிற்குள் வாழ்த்தியபடியே அவள் கூந்தலின் வாசம் பிடித்து அவள் உச்சந்தலையில் இதழ் பதித்தான் அவன்.

"அதோ... குரங்கு..." அவன் பொய்யாய் குரல் கொடுக்க... அவள் மீண்டும் அவன் கைகளுக்குள் தஞ்சம் புகுந்து கொண்டாள். மீண்டும் அவளைத் தழுவும் வாய்ப்புக் கிடைத்தவன் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் இம்முறை கன்னத்தில் முத்தம் கொடுக்க.. வந்தனாவின் உணர்வுகள் பொங்கி எழுந்தன. குரங்கை எண்ணி பயப்படாமல் சடாரென்று விலகி நின்று திரும்பிப் பார்த்தாள். குரங்கு இல்லை. அவனைப் பார்த்து முறைத்தாள்.

"பொய்தானே..."

"பொய்தான்.."

"ஏன் பொய் சொன்னீங்க ?"

"பாரதியார் பாடியது மெய்யா... பொய்யான்னு டெஸ்ட் பண்ண?"

"என்ன கப்ஸா விடுகிறீங்க ?."

"கப்ஸா இல்லைடி. என் மாமன் மகளே... பாரதியார் பாடியிருக்கார். கன்னத்தில் முத்தமிட்டால்.. உள்ளம்தான் கள்வெறி கொள்ளுதடின்னு... அதுதான் உன் கன்னத்தில் முத்தமிட பொய் சொன்னேன். அவர் சொன்னது மெய்தான்னு தெரிஞ்சுக்கிட்டேன்."

பாலமுருகனின் பார்வையில் மயக்கம் இருந்தது. வந்தனா முகம் சிவக்க அவளது கைவிரல்களைப் பார்க்க ஆரம்பித்தாள். அவளது வெட்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தவனின் முகம் கனிந்தது.

"வந்தனா..."

"ம்.."

"என்னைப் பார்."

"மாட்டேன்."

"ஏன்.. என் முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லையா?" அவன் வம்புக்கிழுக்கும் நோக்கத்துடன் கூற அதை உணராத சிறு பெண் வந்தனா.

"அத்தான்..." என்று சிணுங்கியவள் அவன் மார்பில் கை வைத்து தள்ளி விட்டுத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள். அவளது கை பிடித்து இழுத்து நிறுத்திய பாலமுருகன்.

"ஓடுவதிலேயே குறியாய் இரு.. வருவது வருசத்தில் ஒரு நாள். இதில் நின்றுதான் ஒரு வார்த்தை பேசினால் என்ன? குறைந்தா போய் விடுவாய்..." என்று கேட்டான்.

அவன் முகம் பார்க்க வெட்கத்துடன் தலை உயர்த்திய அவளின் பார்வை ஆயிரம் கதை பேசியது இன்றும் பாலமுருகனின் நினைவில் நிற்கிறது... நினைவுகள் ... நிலாக்கால நினைவுகள் ..!

# 5

அன்று இரவு பௌர்ணமி வெளிச்சத்தில் மெர்ட்டை மாடியில் அவர்கள் சந்தித்துக் கொண்டனர். மெல்லிய நறுமணம் கமழ வந்தனா சப்தமெழுப்பாமல் வந்து அவனருகில் நின்றாள்.

நிலா வெளிச்சத்தில் ஓர் பளிங்குச் சிலை போல் நின்றவளைப் பார்த்த பாலமுருகன் 'இவள்தான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்' என்று எண்ணிக் கொண்டான்.

"எதற்கு அத்தான் வரச் சொன்னீங்க ?"

"நான் ஒரு மணி நேரத்திற்கும் முன்னாலேயே உன்னை வரச் சொல்லி விட்டேன். நீ ஆடி அசைந்து திருவாரூர் தேர் போல வருகிறாய். ஏண்டி இவ்வளவு லேட்?"

"எல்லோரும் பார்க்க எப்படி வர முடியும்? தெரியாமல் வர வேண்டாமா?"

அவள் வெண்ணிற நைட்டியில் இருந்தாள். அவளிடமிருந்து இதமான பெர்ப்யூமின் நறுமணம் வந்து கொண்டிருந்தது.

"இப்படி உட்கார்."

அவன் மொட்டை மாடியிலிருந்த மரக்கட்டிலின் மேல் அமர்ந்து கொண்டான். அவள் அருகே அமர்ந்தாள்.

"வந்தனா..."

"ம்ம்ம்..."

"என்னைப் பிடித்திருக்கிறதா?"

அவள் தடுமாறினாள்..

"இது என்ன அத்தான் புதிதாய் கேட்கிறீங்க ?."

"இன்று நீ எனக்கு புதிதுதான்."

எதனால் என்று வந்தனா கேட்கவில்லை. அவன் இதழ் பட்ட இடம் அவன் கை தொட்ட இடம் இன்னும் சிலிர்க்கிறதே... அவள் பேச வார்த்தைகளின்றி மௌனித்தாள்.

"சொல்லுடி. என்னைப் பிடித்திருக்கிறதா?"

"உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா...?"

"பிடிக்காமலா. அருவிக் கரையில் முத்தம் கொடுத்தேன்...?"

அவன் அவள் தோள் மீது கரம் போட்டு அவளை அணைத்து அருகே இழுத்தான். அவள் உடல் நடுங்க விலகினாள்.

"ஏண்டி...?"

"யாராவது பார்த்துவிட்டால்.. தப்பாய் நினைக்க மாட்டார்களா?"

"நினைத்தால் நினைத்து விட்டுப் போகட்டும்."

"நான் கீழே போகிறேன்."

"அப்போ... என்னைப் பிடிக்கவில்லை அப்படித்தானே..."

அவன் கோபமாய் அவளிடமிருந்து விலகி எழ முயன்றான் அவள் தாள முடியாத தாபத்துடன்.

"அத்தான்.." என்று கரம் பற்றி நிறுத்தி அவன் தோளில் முகம் புதைத்தான்.

அந்த நிலவின் ஒளியில் நிலவை சாட்சியாக வைத்து அவன் அவளிடம் உரிமை எடுத்துக் கொண்டபோது அவள் விலகவுமில்லை... அவனைத் தடுக்கவுமில்லை. அந்த நிலாக்கால நினைவை எப்படி அவள் மறந்தாள்? அது முழுமையான உறவாக இல்லாமல் உலக நியாயம் கருதி ஓர் எல்லையோடு அவன் விலகிக் கொண்டதாலா?

கோதாவரி சந்தேகப்பட்டது போல் மறு வருடம் வந்தனா வரவில்லை. ஜெயராமன் தம்பதியினர் மட்டுமே வந்தார்கள். வந்தனாவிற்கு மேல்நிலைப்பள்ளி அரசுத் தேர்வு என்று காரணம் சொன்னார்கள். அதற்கடுத்த வருடம் அவர்கள் யாருமே வரவில்லை. வந்தனா வெளி நாட்டிற்கு கம்ப்யூட்டர் சம்பந்தமான படிப்பு படிக்கப் போய்விட்டதாகவும் ஜெயராமனுக்கு அதிக வேலையிருப்பதாகவும் கூறினார்கள்.

பாலமுருகன் ரகசிய வேதனை கொண்டான். எப்படி அவள் அவனை மறந்தாள்? இந்தியாவை விட்டுச் செல்லும்போது ஒரு வார்த்தை அவனிடம் சொல்லிவிட்டுச் செல்ல மனம் வரவில்லையா?

வந்தனா வராமலே வந்து போன கோவில் திருவிழாக்கள் அவனுக்கு ரசிக்கவில்லை. பௌர்ணமி இரவுகளில் அவன் தூங்குவதில்லை. அவன் படிப்பை முடித்துவிட்டு தந்தைக்கு உதவியாக விவசாயப் பொறுப்பையும்... தொழில் பொறுப்பையும் எடுத்துக் கொண்டான். செங்கல் சூளையோடு கரும்பு மில்லை ஆரம்பித்தான். தொழிலில் தன்னை மூழ்கடித்துக் கொண்டான். விவசாயத்தை விரிவு படுத்தினான். ஏக்கரா கணக்கில் தென்னந் தோப்பைக் கொண்டவன். நார் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பித்து கிராமத்து மக்களுக்கு வேலை கொடுத்தான்.

கோதாவரி பெரியகுளம் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தாள். அவளைப் பெண் கேட்டு வர ஆரம்பித்திருந்தனர். அவளோ இரண்டு வருட அவகாசம் கேட்டாள்.

"எதற்கும்மா டைம் கேட்கிற?" விசுவநாதன் வினவினார்.

"ஏன் அப்பா... நம் ஊரில் கல்யாணமான பெண்களின் கதைகளைத் தெரிந்து கொண்டே இப்படிக் கேள்வி கேட்கிறீங்களே... கல்யாணம்னு ஒன்று நடந்து அவர்கள் வீட்டிற்குப் போய் விட்டால் நம் வீட்டிற்கு நாளும் கிழமையில் தான் வர முடியும். அதுவும் நீங்கள் பார்த்து கல்யாணம் செய்து வைக்கும் மீசைக்கார மாப்பிள்ளையுடன் தான் வந்து போகனும். கொஞ்சநாள் நான்... என் வீடு.. என் அப்பா... என் அம்மா.. என் அண்ணான்னு சந்தோசமாய் இருந்துட்டு அப்புறமாய் கல்யாணம் செய்து கொள்கிறேனே" கோதாவரி கொஞ்சினாள்.

மகளின் வார்த்தையைக் கேட்டு மனம் உருகிப் போன விசுவநாதன் பெண் கேட்டு யார் வந்தாலும் வில்லன் கூட்டத்தைப் பார்ப்பது போல் பார்த்து கர்ஜிக்க ஆரம்பித்தார்.

"என் மகளுக்கு நான் இப்போதைக்கு கல்யாணம் பண்ணி வைப்பதாக இல்லை. நடையைக் கட்டுங்கள்."

விட்டால் அவர் மகளை வீட்டோடு நிறுத்தி விடுவார் என்ற பயம் எழ சிவகாமி கணவனை அதட்டல் போட்டாள்.

"ஏங்க... உங்க மகளுக்கு இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாமா.. இல்லை எப்போதுமே கல்யாணம் வேண்டாமா?"

"யாரு... இவ.. சுத்த விவரம் கெட்டவளாய் இருக்கிற..."

"நான்...? விவரம் கெட்டவ? நீங்க புத்திசாலி ?"

"பின்னே இல்லையா? என் மகள் சொன்னதைக் கேட்டுக்கிட்டுதானே இருந்த?. விடிய விடிய இராமாயணம் கேட்டுட்டு விடிஞ்ச பின்னால் சீதைக்கு ராமன் சித்தப்பன்ங்கிறயே..."

"முதலில் நீங்க பெத்த அப்பன் மாதிரி பேசுங்க. பெண் கேட்டு வருகிறவர்களிடம் இதமாய் பேசி... இப்படி இப்படி இப்படி..."

"எப்படி.. எப்படி... எப்படி..?"

"அதுதான் உங்கள் மகள் கதை சொன்னாளில்ல. அந்தக் கதையைச் சொல்லி.. இரண்டு வருடம் போகட்டும்ன்னு சொல்லுங்க. அதை விட்டுட்டு பி.எஸ். வீரப்பா மாதிரி முறைச்சக்கிட்டு. நம்பியார் போல கையைப் பிசைஞ்சுகிட்டு ஓ.ஏ.கே. தேவர் சிரிப்பை சிரிச்சுக்கிட்டு நிற்காதீங்க. பெண் கேட்டு வருகிறவர்களை விரட்டுவதிலேயே குறியாய் இருக்கிறீங்களே."

தாய் சொன்னதைக் கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் வந்த பாலமுருகன் வாய் விட்டுச் சிரித்தான்.

"ஏம்மா.. உங்க பாட்டி காலத்து வில்லன்கள் பெயராய்ச் சொல்லி அப்பாவை தொண்டுக் கிழவராக்குகிறீங்க ?"

"இந்தக் காலத்திலதான் வில்லன்களை எல்லாம் நல்லவன்கள் என்று சொல்லிக் கதாநாயகி கழுத்தை நீட்டி

விடுகிறாளேடா."

சிவகாமி அலுத்துக் கொள்ள விசுவநாதன் 'ஹா...ஹா' வென்று சிரித்து வைத்தார்.

'எப்படி அம்மா கரெக்டாய் அப்பாவின் சிரிப்பை ஓ.ஏ.கே. தேவரின் சிரிப்புன்னு கணித்தாங்க ?'

வியப்புடன் தங்கையிடம் சென்றான் பாலா. அவளோ மும்முரமாய் நாவல் படித்துக் கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த நாவலை பிடுங்கிக் கொண்டே அவள் அருகில் அமர்ந்தவன்,

"ஆமாம்... ஏன் இரண்டு வருடம் டைம் கேட்டே. பேசாமல் கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போவதுதானே. எனக்கும் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் மாப்பிள்ளையைப் பார்த்து, ‘ஆனந்தா.. என் கண்ணையே உன்னிடம் ஒப்படைக்கிறேன்... அதில் ஆனந்தக் கண்ணீர்தான் வரனும்...'ன்னு டயலாக் பேசணும்கிற ஆசை இருக்காதா?" என்று கேட்டான்.

"அம்மாகோண்டா இருந்தால் இப்படித்தான் ..அவங்களுக்குத் துணையாய் பழைய படமாய் பார்த்துத் தள்ள வேண்டியது... அப்புறம் அதிலிருந்து ஹைதர்அலி காலத்து டயலாக்கையெல்லாம் சொல்ல வேண்டியது" கோதாவரி மடியில் தலையணையை வைத்துக் கொண்டு அதில் கைகளை ஊன்றி முகம் புதைத்துக் கொண்டே கூறினாள்.

"ஹைதர் அலியின் காலம் வேறு... சிவாஜி கணேசனின் காலம் வேறு.. நீ இரண்டையும் ஒன்றாக்காதே... பேச்சை மாற்றாமல் என் கேள்விக்குப் பதில் சொல்..."

"எனக்கு வந்தனா உன் மனைவியாய் வருவாளா... மாட்டாளா என்கிற கேள்விக்கு விடை தெரியனும் . அதன் பின்னால் என் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்."

"கோதாவரி.. எதற்கும், எதற்கும் முடிச்சுப் போடுகிற?"

"காரணமாகத்தான் போடுகிறேன். அவள் கடைசி முறை நம் ஊர் திருவிழாவிற்கு வந்திருந்தபோது அருவிக்கரைக்கு நான்தான் அழைத்துப் போனேன். என் பிரண்டிடம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பிப் பார்த்தால் அவளைக் காணோம். நான் தேடி வந்து பார்த்தபோது... அவள்..." கோதாவரி மீதியைச் சொல்லாமல் தரையைப் பார்த்தாள்.

பாலமுருகனுக்கு புரிந்து விட்டது. அருவிக் கரையில் வந்தனாவை அவன் கட்டி அணைத்ததை கோதாவரி பார்த்து விட்டாள்.

சங்கடமான மௌனத்துடன் அவன் விட்டத்தைப் பார்த்தான்.

"அது மட்டுமில்லை அண்ணா.. அன்னைக்கு ராத்திரி திடீர்ன்னு வந்தனாவைக் காணோம். அவ எங்கே இருக்கான்னு பார்த்துக் கூப்பிட்டு வரச் சொல்லி என்னைத்தான் அனுப்பினாங்க . நான் தேடி வந்தேன். மொட்டை மாடியில் உங்க பேச்சுச் சத்தம் கேட்டது . நான் படியில் உட்கார்ந்துட்டேன். நீங்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்பதற்காக இல்லை அண்ணா... யாரேனும் என்னைப் போல மொட்டை மாடிக்கு அவளைத் தேடி வந்து விடக் கூடாது என்பதற்காக... நான் பயந்தது போலவே... வந்தனாவின் அப்பா வந்துட்டார்."

கோதாவரி ஜெயராமனை என்றுமே 'மாமா' என்று சொன்னதில்லை. பாலமுருகன் தான் வாய் நிறைய ‘மாமா' என்று அழைப்பான். தந்தை மேல் பாசம் கொண்டவளுக்கு தாய்மாமனின் சுய ரூபம் தெரியும்.

பாலமுருகன் சங்கடத்துடன் தங்கையைப் பார்க்க அவளோ

"பயப்படாதே அண்ணா.. நான் அவரிடம் வந்தனா பாத்ரூமில் இருப்பதாய் பொய் சொல்லி சமாளித்து அனுப்பி விட்டேன். வெகு நேரம் கழித்துத்தான் வந்தனா வந்தாள். என்னைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டாள். நான்தான் அவளை எதுவும் கேட்காமல் அழைத்துக் கொண்டு போய் விட்டேன். அதுவரை அவள் நம் அம்மாவின் அண்ணன் மகள்.. எனக்கு நல்ல தோழின்னு மட்டுமே நினைத்திருந்தேன். அன்றைய இரவில் நடந்ததை

அறிந்தபின்.. அவள் உன் மனைவி. என் அண்ணி என்கிற எண்ணம் என் மனதில் வந்து விட்டது... ஆனால் அண்ணா..! நான் பயந்தது போலவே... அதற்குப் பின் அவளை நம் கண்ணில் காட்டாமல் வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டார்கள். இன்று வரை அவளைப் பார்க்கவே முடியவில்லை. அதுதான் என் மனதைப் போட்டு அறுக்கிறது அண்ணா" என்று கூறினாள்.

தங்கையின் வார்த்தைகளைக் கேட்ட பாலமுருகன் துணுக்குற்றான்.

"பயந்தாயா...? எதற்காக பயந்தாய் கோதாவரி?"

"விசுவநாதனின் மகள்.. உன் தங்கை. நான் பயப்படக் கூடாதுதான். நீ... நீயாய் இருந்திருந்தால் நான் பயத்தை என்னைப் பார்த்துப் பயப்பட வைத்திருப்பேன்... ஆனால் நீதான் நீயாக இல்லையே அண்ணா... காதலித்து தொலைத்து விட்டாயே... அப்புறம் நான் பயப்படாமல் என்ன செய்வது?"

"காதலிப்பது தவறில்லை கோதாவரி."

"காதலிக்கிறவர்களைத்தான் காதலிக்க வேண்டும். ஜெயராமனின் மகளைப் போய் காதலித்திருக்கிறாயே..."

"அந்த ஜெயராமன் நம் தாய்மாமன்..."

"நம் தாயையே தங்கைன்னு அவர் நினைத்ததில்லை. அப்புறம் எப்படி நமக்கு தாய்மாமன் ஆவார் ?"

"உறவு... உறவுதானே கோதாவரி."

"எனக்கு வந்தனாவின் அப்பா உறவிற்கு மதிப்புக் கொடுப்பவர்ன்னு தோன்றவில்லை. என் நம்பிக்கையெல்லாம் வந்தனாவின் மீதுதான். அவள் அவளுடைய அப்பாவைப் போல இல்லை. அவள் உன்னை ஏமாற்றிவிடாமல் இருக்கனும் . அதுதான் என் கவலை ."

"ஏமாற்றுவதா.. ? என்னையா..? அவளா.?. நெவர்."

அன்று பாலமுருகன் தங்கையிடம் உறுதியாகக் கூறினான். அதை மெய்ப்பிப்பது போல் இருபது வயது வந்தனா... அந்த வருடம் அவர்களது ஊர் திருவிழாவிற்கு பெற்றோரோடு வருகை தந்தாள். வெளிநாட்டுப் படிப்பு தந்த கர்வம் அவளது விழிகளில் மின்னியதாய் பாலமுருகனுக்கு ஓர் எண்ணம் வந்தது. அதற்கேற்றாற் போல் ஜெயராமன்.

"வந்தனா... பாரினில் படிச்சுக்கிட்டு இருக்கிறா.. எங்களைப் பார்த்துவிட்டுப் போக வந்தாள். ஜஸ்ட் ஒரு விசிட் போய் விட்டு வந்து விடலாம்னு கம்பெல் பண்ணிக் கூட்டி வந்தாள்" என்று அலட்டிக் கொண்டார்.

அதைக் கூடப் பேசுவது தன் கௌரவத்திற்கு குறைச்சல் என்பது போல் ஆண்டாள் அலட்சியப் பார்வை பார்த்துக் கொண்டு நின்றாள். மூன்று வருடங்களில் கனவில் கூட நினைக்க முடியாத வளர்ச்சியை அடைந்து விட்ட மதர்ப்புடன் அவள் நாத்தனாரை தூசு போல் பாவித்து,

"இனியெல்லாம் இது மாதிரியான கிராமங்களுக்கு வருவதை நிறுத்த வேண்டும்.. ஒரே தூசியும்... மணலுமாய்... அப்பப்பா.. எனக்கு வேறு டஸ்ட் அலர்ஜி இருக்கிறது..." என்று கணவரைப் பார்த்துக் கூறினாள்.

"யு ஆர் கரெக்ட்... டீஸன்ட் லுக் பீப்பிள்ஸ்ஸைப் பார்த்து பழகி விட்டு... இங்கு வந்து டர்ட்டி பிளேஸில் டர்ட்டி டிரஸ் போட்டுக் கொண்டிருக்கும் பீப்புளுடன் மிங்கிள் ஆக முடியவில்லை. வந்தனா ஏதோ ஆசைப் பட்டாள்ன்னு போனால் போகிறது என்று இந்த வருடம் வந்து விட்டோம். இனிமேல் இந்த டைப் ஆப் வேஸ்ட் ஜர்னியை அவாய்ட் பண்ண வேண்டும்"

ஜெயராமன்... வேட்டியை தார் பாய்ச்சி கட்டிக் கொண்டு கலப்பையை தோளில் சாய்த்துக் கொண்டு சாலையில் சென்ற ஒரு விவசாயியைப் பார்த்துக் கொண்டே கூறினார்.

வந்தனாவோ அவள் அணிந்திருந்த ஜீன்ஜின் பாக்கெட்டில் அலட்சியமாய் கைவிட்டபடி பாலமுருகன் என்ற மனிதன் அங்கு நிற்காதது போல் பாவித்து வீட்டினுள் சென்று விட்டாள்.

வந்தனா கருநீலத்தில் ஜீன்ஸ் அணிந்து வெள்ளை நிறத்தில் குர்தா அணிந்திருந்தாள். வெட்டிவிடப்பட்ட முடியை விரித்து விட்டிருந்தாள். வாயில் சூயிங்கம் மென்று கொண்டிருந்தாள். கண்கள் ஓர் அலட்சியத்துடன் பார்த்தன.

கோதாவரி பாலமுருகனின் காதினில் கிசுகிசுத்தாள்.

"அண்ணா.. சுடிதாரில் அழகாய் பின்னல் போட்டு வந்த நம் வந்தனாவா இது...? அல்ட்ரா மாடர்ன் பெண்ணாய் மாறிட்டாளே. மிஸ்டர் ஜெயராமன் சும்மாவே அலட்டுவார். இப்ப அவர் காட்டில் பணமழை பெய்யுது. நம்ம ஊருக்குப் போற வர்ற விவசாயிகள் கிட்ட வம்பிழுக்கும் நோக்கத்தோடு பேசறதைப் போலவே இருக்கு ..அவங்க கோபப்பட்டு 'எங்க ஏரோட்டம் நின்னு போனால் உங்க காரோட்டம் நின்னு போகும்'ன்னு வீர வசனம் பேசாமல் அடங்க மாட்டாரு போலத் தோனுது... ம்ம்... இதில் உன் நிலாக்கால காதல் எப்படி நிலைக்கப் போகுதோ.. தெரியவில்லை போ."

பாலமுருகனோ கொதிப்பில் இருந்தான். யாரையோ பார்ப்பது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனால் கூடப் பரவாயில்லை... கல்லையும்... மண்ணையும் பார்ப்பது போல் ஓர் பார்வையை வந்தனா பார்த்து விட்டுச் சென்றதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு தங்கைக்கு பதில் சொல்லாமல் உள்ளே சென்று விட்டான்.

அன்று முழுவதும் வந்தனாவை அவனால் பார்க்க முடியவில்லை. கோதாவரியை அழைத்து விசாரிக்க அவனது சுயமரியாதை இடம் கொடுக்கவில்லை. வெறுத்துப் போய் செங்கல் காள வாசல் பக்கம் போய் விட்டான். அங்கே திருவிழா சமயம் என்பதால் வேலை நடக்கவில்லை. இருட்டும் தருவாயில் தென்னந்தோப்பின் வழி வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

காலடியில் சருகுகள்  மிதிபட நடந்து கொண்டிருந்தவனின் அருகாமையில் கொலுசு சப்தம் எழுப்ப அருகில் வந்தாள் கோதாவரி.தன் அண்ணனைப் பார்த்து

“ பயந்துட்டியாண்ணா ?” என்று கேட்டாள் ..

இப்போது நன்றாக இருட்டி வானில் நிலவு எழுந்து பவனி வர ஆரம்பித்திருந்தது. நிலவொளியில் பயமின்றி தோப்புப்குள் வந்து நின்று கொண்டிருக்கும் தங்கையைப் பார்த்தவன்,

"விசுவநாதனின் மகளுக்கு இருக்கும் தைரியம் போல் நூறு மடங்கு அவரது மகனுக்கு இருக்க வேண்டாமா? நீயே இந்த நிலாக்கால இரவில் தென்னந்தோப்புக்குள் 'ஜல் ஜல்'ன்னு ஜெகன் மோகினி போல் வரும்போது.. நான் பயப்படுவேனா?" என்று கேட்டான்.

"கடைசியில் உனக்காக நான் ஜெகன் மோகினி ரேஞ்சுக்கு இறங்கி வேலை செய்ய வேண்டியிருக்கிறது... என்ன செய்வது ? உன்னோடு பிறந்து... பாசம் வைத்து விட்டேனே.. நீ வேறு என்னைப் பாசமலர் சிவாஜி போல் பார்த்து வைக்கிறாய். போ.. போய் உன் மோகினி உனக்காக வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறாள். பேசிவிட்டு வா."

"என் மோகினியா..? யார்.. வந்தனாவா?"

"பின்னே.. எத்தனை மோகினியை உனக்குத் தெரியும்?"

"அவள் இங்கேயா வந்திருக்கிறாள்?"

"ஆமாம். வேறு என்ன செய்வது? வீட்டில் உன்னோடு பேச முடியாதாம். நைட்டே ஊருக்குக் கிளம்புகிறாள்... சொல்லிவிட்டுப் போக வந்திருக்கிறாள். இதற்கே எவ்வளவு டிராமா பண்ணிக் கோவிலுக்குப் போகிறோம் என்று சொல்லிவிட்டு வந்தோம் தெரியுமா?"

"நான் இங்கேயிருப்பேன்னு எப்படித் தெரியும்?"

"வேறு எங்கே இருக்கப் போகிறாய்? கரும்பு மில்.. செங்கல் சூளை இரண்டுக்குமே திருவிழாவிற்காக லீவ் விட்டிருக்கிறாய். மனசு சரியில்லாத ஆள்கள் எங்கு

போவார்கள்? தோப்புப் பக்கம்தான் சுற்றுவார்கள்... அந்த யூகத்தில்தான் உன் ஆளை இங்கே தள்ளிக் கொண்டு வந்தேன்."

"அடச்சீ.. தள்ளிக் கொண்டு வந்தேன்னா சொல்வது? தப்பு..."

"அதை நீ சொன்னால்தான் தப்பு.. நான் சொன்னால் தப்பேயில்லை. ஆமாம்.. நீயும் நானும் தான் இங்கேயே.. ஒரே வீட்டில்தானே இருக்கிறோம்.. நாமே பேசவா நான் இங்கே உன்னைத் தேடி வந்தேன்?உன் ஆள்கிட்டப் போய் டயத்தை வேஸ்ட் பண்ணாமல் பேசு அண்ணா."

"நீ எப்படிம்மா... தனியாய்.. இருட்டில் இருப்பே."

"அடடா.. பாசரசம் பிழிய நல்ல நேரம் பார்த்தாய் போ.. நான் அதோ இருக்கிற காரில் உட்கார்ந்து டோரையெல்லாம் குளோஸ் பண்ணிக்கிட்டு பாட்டுக் கேட்கப் போகிறேன். பாட்டுச் சத்தம் வெளியே கேட்கக் கூடாதுன்னு டோரை குளோஸ் பண்ணப் போகிறேன். உங்க பேச்சுச் சத்தம் எனக்குக் கேட்கக் கூடாது என்பதற்காக இல்லை..." என்றபடி காரை நோக்கிப் போன கோதாவரி காரில் ஏறி கதவை அடைத்துக் கொண்டாள்.

'உனக்குக் கேட்கும்படி பேச நான் என்ன முட்டாளா..' என்று நினைத்தபடி தங்கை பாதுகாப்பாய் காருக்குள் அமர்ந்து கொண்டதை உறுதிபடுத்திக் கொண்டு வந்தனா இருந்த திசையை நோக்கிச் சென்றான். அவளிடமிருந்து வெளிப்பட்ட நறுமணம் அவளிருக்கும் இடத்தை அவனுக்கு அடையாளம் காட்ட அருகில் சென்று நின்றான்.

நிலவொளியில் தென்னை மரத்தின் மேல் சாய்ந்து அவன் நின்று கொண்டிருந்த தோற்றம் அவனை அவள் பால் ஈர்த்தது. ஆனால்... பகலில் அவள் காட்டிய பாராமுகம் நினைவில் ஆட அவன் அவளருகே போய் நின்று கொண்டு தொண்டையைச் செறுமினான்.

"அத்தான்..."

அவள் ஆவலாய் திரும்பினாள். நிலா வெளிச்சத்தில் அவளது விழிகள் பளபளத்தது நன்கு தெரிந்தது.

பாலமுருகன் பதில் பேசாமல் நின்றான்.. அவனது மௌனத்தை லட்சியம் பண்ணாதவளாய் அவள் அவனருகே வந்து கைகளை அவன் கழுத்தில் மாலையாக்கி அவன் முகத்தோடு முகம் வைத்தாள். பாலா அவனது கரங்களை விலக்கப் போனான். அவள் பிடியோ உடும்புப் பிடியாய் இருந்தது.

"ஏன் அத்தான்?"

"நான் உன் அத்தான் என்பது இப்போதுதான் உனக்கு நினைவு வந்ததா?"

"மறந்தால்தானே நினைப்பதற்கு?"

"நீ பேசுவதைக் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் உன் பேச்சுக்கும்.. செயலுக்கும் வித்தியாசம் தெரிகிறதே..."

"சில நேரங்களில் அப்படித்தானே இருக்க வேண்டியிருக்கிறது."

"சில நேரங்களில் சில மனிதர்கள் இருப்பது போல் நீ இருக்கலாம். ஆனால் எப்போதும் நிறம் மாறாமல் இருக்கும் மனிதன் நான்... எனக்கு உன் நடிப்பைப் பிடிக்கவில்லை."

அவளது கரத்தை வலுக்கட்டாயமாய் விலக்கித் தள்ளினான். அவனது செயலில் அவனது கோபம் வெளிப் படையாய் தெரிந்தது.

வந்தனா தன் கரங்களை ஜீன்ஸிற்குள் நுழைத்துக் கொண்டு சலிப்புடன் ஷூ காலால் தரையில் கிடந்த தென்னங்கீற்றை தள்ளி விட்டாள்.

"என் நடிப்பைப் பிடிக்கவில்லையா. இல்லை என்னையே பிடிக்கவில்லையா?..” எரிச்சலுடன் கேட்டாள் வந்தனா.

"தெரியவில்லை..." உயிரற்ற குரலில் பதில் சொன்னான் பாலா.

"நீங்கள் என் பழைய அத்தானா?"

"நீ பழைய வந்தனாவாக இல்லாதபோது... நான் மட்டும் எப்படி பழைய அத்தானாக இருப்பேன்?"

"உடையும் பழக்க வழக்கங்களும் மாறினால் மனதும் மாறி விடுமா அத்தான்? இது நான் போட்டுக் கொண்டிருக்கும் வேஷம்."

"அதைத்தான் சொல்கிறேன். வேஷம் எது. நிஜம் எது என்று குழம்பித் தவிக்க என்னால் முடியாது."

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"என் பழைய வந்தனா வேண்டும். என் பார்வையைக் கூடத் தாங்க மாட்டாதவளாய் தலைகுனியும் அந்த வந்தனாதான் வேண்டும். நீ கிளம்பு... நேரமாகி விட்டது."

"அத்தான்... இதற்காகவா இந்த இருட்டு வேளையில் உங்களைப் பார்க்க ஓடிவந்தேன்..?."

"இது தேவையே இல்லையே வந்தனா. நீ ரைட்ராயலாய் என் வீட்டிலேயே என்னுடன் பேசியிருக்கலாமே..."

"மூன்று வருடங்களுக்கு முன்னாலும் நாம்... ரகசியமாய் சந்தித்து இருக்கிறோம்... மறந்து விட்டதா அத்தான்?"

பாலமுருகனுக்கு கண்கள் சிவந்தன. தினமும் ராத்தூக்கத்தைத் தின்ற அந்த ராத்திரியின் நினைவை அவ்வளவு எளிதில் மறக்க முடியுமா?

"நீயே மறக்காத போது... நான் ஏன் மறக்கப் போகிறேன்?"

"திரும்பவும் 'நீயே'ன்னு 'க்' கன்னா வைத்துச் சொல்கிறீங்க . அத்தான் நான் பாரின் போய் படிப்பது என் அப்பாவின் ஆசையை நிறைவேற்ற..."

"உன் அப்பாவின் ஆசை எதுவாக இருந்தாலும் நிறைவேற்றுவாயா?"

"வாட் டு யூ மீன்...?"

"ஏன் அதைத் தமிழில் கேட்க மாட்டாயா?"

"எதிரியிடம் பேசுவது போல் என்னிடம் பேசுகிறீங்களே."

"நீ எனக்கு எதிரிதான்... என்றைக்கு உன் மேல் ஆசை வைத்தேனோ... அன்றைக்கே என் தூக்கம் போய்விட்டது. என் நிம்மதி போய் விட்டது. 'பெண் என்னும் மாய்ப்பிசாசு'ன்னு சும்மாவா சொல்லி வைத்தாங்க?"

"நான் என்ன தவறு செய்தேன்? படிக்கப் போனது தவறா?"

"அதை என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும்ன்னு உனக்கு தோன்றாமல் போனதுதான் தவறு."

"அத்தான்... அப்பாவுக்கு ஏனோ.. நான் உங்களிடம் பேசிப் பழகுவது பிடிக்கவில்லை."

"இதுதான் காரணமா? நீ பாரின் போன பின்னால் என்னிடம் போனில் பேசியிருக்கலாம்... லெட்டர் போட்டிருக்கலாம்."

"எதுவாக இருந்தாலும்... இப்போது நம்மைப் பற்றி அப்பாவுக்கு எதுவும் தெரிய வேண்டாம்ன்னு நினைத்தேன் அத்தான்..."

"ஏன் ?"

"தெரிந்தோ தெரியாமலோ அப்பாவின் மனதில் மாமாவின் மேல் ஒரு போட்டி மனப்பாண்மை உருவாகியிருக்கிறது. அதனால் அவர் ஆவேசமாய் உழைத்து முன்னேறிக் கொண்டிருக்கிறார். இந்த நேரம் நான் நம்மைப் பற்றிச் சொன்னால் தாங்க மாட்டார். உடைந்து விடுவார். எனக்கு என் அப்பாவும் வேண்டும் அத்தான்."

அன்றுதான் முதன் முதலாக ஜெயராமனின் மனதில் இருந்த போட்டி உணர்வை அளிந்தான் பாலமுருகன்.

அப்படியும் இருக்குமா? அவனது தாய்மாமன்.. அவனது அம்மாவின் அண்ணன்.. அவனுடைய தந்தையைப் போட்டியாக நினைக்கிறாரா?

எல்லோரையும் மிகச் சரியாய் எடைபோடும் கோதாவரி அவரை 'வந்தனாவின் அப்பா' என்றே சொல்வது அவனுக்கு நினைவு வந்தது. அவள் 'மாமா' என்று ஜெயராமனைச் சொல்லி அவன் கேட்டதே இல்லை.

யோசனையுடன் அசையாமல் நின்றிருந்தவனை நெருங்கி அவன் கரத்தைப் பிடித்து அதில் இதழ் பதித்தாள் வந்தனா.

"போய் வருகிறேன் அத்தான்..."

விலகி நகர முயன்றவளின் கரம் பிடித்து இழுத்து ஆவேசமாய் அனைத்து முத்தங்களைப் பதித்தான் பாலா.

விம்மலுடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள் வந்தனா.

சரிந்து அமர்ந்து தென்னை மரத்தில் சாய்ந்து கொண்டவன் அவள் கரம் பிடித்துச் சுண்டியிழுத்தான். அவனது மடியில் விழுந்தாள் வந்தனா. நெற்றியிலிருந்து விரல்களால் கோலம் போட்டவனின் விரல்களோடு விரல் கோர்த்துக் கொண்டாள் வந்தனா.

"அத்தான்."

"ம்ம்ம்..."

"அத்தான்..."

"சொல்லுடி..."

வந்தனா அழுது விட்டாள். அவள் கன்னத்தில் கண்ணீர்க் கோடுகள் வழிய பாலா அவற்றைத் துடைத்து விட்டு ஆதரவாய் அணைத்துக் கொண்டான்.

"என்னை உரிமையாய் 'டீ' போட்டுக் கூப்பிட இவ்வளவு நேரமா?"

"என்னைத் தேடி வர நீ நான்கு வருடங்கள் எடுத்துக் கொள்ளும் போது உன்னுடன் பேச நான் இவ்வளவு நேரம்கூட எடுத்துக் கொள்ளக் கூடாதா?"

"வேண்டாம் அத்தான். திரும்பவும் ஆர்க்யூ பண்ண வேண்டாம்."

"சரிடி.. விட்டு விட்டேன்."

"எதை விட்டு விட்டீர்கள் அத்தான். என்னையா?"

"உன்னை விடுவதா? உன் அப்பாவின் கண் முன்னாலேயே தூக்கிக் கொண்டு வந்து விட மாட்டேன்?"

"எப்படி... அன்று கிணற்றில் விழுந்தபோது தூக்கி வந்தீர்களே அப்படியா?"

"நினைவு இருக்கிறதா?"

"மறந்தா போகும்...?"

"அதை நினைவில் வைத்திருப்பவள் மொட்டை மாடியை ஏன் மறந்தாய்...?"

வந்தனா கிளர்ந்து அவனோடு ஒட்டிக் கொண்டாள். பாலா சரிந்து அவளையும் சரிய வைத்து அவள் மேல் படர்ந்தான். முகத்தோடு முகம் வைத்த அவனது கழுத்தைச் சுற்றி வளைத்தன வந்தனாவின் கரங்கள். பாலாவின் சூடான மூச்சு அவளின் கன்னத்தில் படிந்து அவளையும் சூடேற்றியது.

அது மௌனமான நிலாக்காலம்... அவனை மட்டும் அவளும்.. அவளை மட்டும் அவனும் நினைவில் கொண்டு மற்ற எல்லாவறையும் மறந்து பிணைந்த நிலாக்காலம்... பிரியப் போவதை நினைக்காமல் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு மணித் துளியையும் விடாமல் சுவைக்கும் நிலாக்காலம்...

## 7

'நீயே எனக்கு எல்லாமும்... நீ முழுதாய் எனக்கு வேண்டும்' என்ற உணர்வோடு வந்தனா அவனை தஞ்சமடைந்திருந்ததும்.. ஏன் பாலா அவளை முழுமையாய் ஆட்கொள்ளாமல் விலகி அமர்ந்தான்? மொட்டை மாடியில்

அவன் வசம் அவளிருந்தபோது அவளுக்கு பதினாறு வயது.. அறிந்தும் அறியாத பருவம். இன்றோ இருபது வயதுப் பெண். நாடு விட்டு நாடு போய் படித்துக் கொண்டிருப்பவள். இன்று அவளை முழுமையாய் எடுத்துக் கொள்ளத் தயங்கியது ஏன்?

ஏனென்றால் அவன் விசுவநாதனின் மகன். சிவகாமி பெற்ற பிள்ளை... காதலெனும் மோகத்தீயில் பற்றி எரிந்தபோதும்.. அதைத் தணிக்க குளிர்நீராய் வந்த வந்தனாவுடன் முழுமையாகக் கலக்காமல் விலகிக் கொண்டான்.

பெண்மை என்பது தான் காதலிக்கும் ஆடவனுக்கு முழு மனதுடன் முழுமையாய் தன்னை அர்ப்பணிப்பது.

ஆண்மை என்பது... 'நீயே எனக்கு எல்லாம்' என்று தன்னிடம் தஞ்சமடையும் பெண்மையை கௌரவப் படுத்துவது.

பாலா வந்தனாவை கௌரவப்படுத்தினான். அவனை நம்பி அந்த இருள் வேளையில் நிலா வெளிச்சத்தில் சந்திக்க வந்தவளை 'காதலி' என்ற உரிமையோடு கட்டி அணைத்துக் கொண்டான். இன்னும் அவனது மனைவியாக ஆகாதவளிடம் மனைவிக்குரிய உரிமைகளை எடுத்துக் கொள்ளாமல் விலகிக் கொண்டான்.

வந்தனா நகைத்தாள். அவன் மார்பில் தலை வைத்துப் படுத்திருந்தவளின் முகம் நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டவன்,

"ஏண்டி சிரிக்கிறாய்?" என்று கேட்டான்.

"என் வீர அத்தானுக்கு கோபமெல்லாம் சில நொடிகள்தான்."

"உனக்குத்தான் கோபம் தணிக்கும் வித்தை தெரிந்திருக்கிறதே.."

"தெரிந்திருந்து என்ன பிரயோஜனம்? என் அத்தான் மலை இறங்க இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே."

"வந்தனா.. இப்போதே போய் விடுவாயா?"

"போவதைப் பற்றி இப்போது என்ன பேச்சு? இருக்கும் நேரத்தில் வேறு எதையாவது பேசலாமே.."

"இல்லைடி... நம் எதிர்காலம் பற்றி நாம் முடிவு செய்ய வேண்டும்."

"இதில் முடிவு செய்ய என்ன இருக்கிறது அத்தான்... என் வாழ்வு உங்களோடுதான்..."

தென்னந்தோப்பில் அவ்வாறு சொல்லி அவனது கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தவள்... அவளுடைய அப்பா பெண் கொடுக்க மாட்டேன் என்று சொன்ன போது பேசாமல் இருந்தது ஏன்?

எத்தனையோ பௌர்ணமி இரவுகளில் தென்னந்தோப்பில் அவர்கள் அமர்ந்திருந்த தென்னை மரத்தில் சாய்ந்து அமர்ந்து கொண்டு பித்துப் பிடித்தவன் போல் அவன் நினைத்துப் புலம்பியிருக்கிறான்.

கோதாவரி அவனுக்கு எவ்வளவோ ஆறுதல் சொல்லுவாள்.

"அண்ணா... பொறு.. எனக்கு என்னவோ வந்தனாவை ஏமாற்றுக்காரின்னு நினைக்கத் தோன்றவில்லை. அவளது மௌனத்திற்கு ஏதாவது காரணம் இருக்கும். நான் உன்னை அறிந்தவள். அதுபோல் அவளையும் அறிந்தவள்."

எல்லோரையும் மிகச் சரியாக எடைபோடும் கோதாவரி இப்படிக் கூறியும் அவனது மனம் சமாதானமடையவில்லை.

எப்படிச் சமாதானம் அடையும்?

தென்னந்தோப்பிலிருந்து பிரிந்து சென்றவள் அவன் வீடு திரும்பு முன் ஊருக்குப் போய் விட்டிருந்தாள். ஏமாற்றத்தோடு தங்கையின் முகம் பார்த்தான். அவள் சமாதானப் படுத்தினாள்... அப்போது சமாதானம் ஆனவன். அடுத்த ஒரு வருடத்தில் அவள் படிப்பு முடிந்து திரும்பி வந்து ஜெயராமனின் கம்பெனியில் முக்கிய பதவியை ஏற்றுக் கொண்டதை பத்திரிகைகள் வாயிலாக மட்டுமே தெரிந்து கொள்ள நேர்ந்தபோது எப்படிச் சமாதானம் அடைவான்?

திருமணத்தை தள்ளிப் போட்டுக் கொண்டு வந்த கோதாவரி ஒரு கட்டத்தில் விசுவநாதனிடம் பாலமுருகனின் காதல் விவகாரத்தை உடைத்து விட்டாள்.

"அப்பா... அண்ணன் கல்யாணத்தை முதலில் முடித்து வந்தனாவை என் அண்ணியாக கொண்டு வாங்க. அதன் பின்னால் என் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்."

"வந்தனாவையா..? ஏம்மா...? அவள் உன் மாமன் மகளாக இருந்தாலும் வெளிநாட்டில் போய் படித்து வந்திருக்கிறாள்... அவளுடைய அப்பாவின் கம்பெனிப் பொறுப்பை எடுத்திருக்கிறாள். அவள் நம் கிராமத்து வீட்டிற்கு மருமகளாக வரச் சம்மதிப்பாளா...?"

விசுவநாதன் யோசனையுடன் பேசினார்.. சிவகாமிக்கும் அதே எண்ணம்தான். வந்தனா குணமான பெண்ணாக இருந்தாலும் அவள் ஜெயராமனின் மகள். ஆண்டாளின் வயிற்றில் பிறந்தவள். வெகு காலத்திற்கு முன்னால் மாதச் சம்பளம் வாங்கும்போதே சூளுரைத்த ஜெயராமன்.. இப்போது அவர் போட்ட சபதத்தின்படி கோடீஸ்வரராய் ஆகிவிட்டார். தங்கையைப் பெரிதாக எண்ணாத அண்ணனின் குணம் அறிந்த அண்ணி வசதி இல்லாத காலத்திலேயே சிவகாமியை மதித்ததில்லை. இன்றோ... அவள் கோடீஸ்வரனின் மனைவி. கோடீஸ்வரி. சிவகாமியை மதித்து அவள் வீட்டில் பெண் கொடுப்பாள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

ஆனால் கோதாவரி அவர்களது வைராக்கியத்தை அசைத்து விட்டாள்.

"வந்தனா சம்மதிப்பாள்ம்மா.. அண்ணனைத் தவிர வேறு ஒருவன் மனைவியாக போகத்தான் சம்மதிக்க மாட்டாள்."

"என்னம்மா சொல்கிறாய்" விசுவநாதன் புருவம் உயர்த்தினார்.

"அண்ணனும் வந்தனாவும் காதலிக்கிறார்கள் அப்பா."

விசுவநாதனும் காதலித்து மணம் செய்து கொண்டவர்தானே. மகனின் ஆசையை நிறைவேற்றுவதை

தன் கடமையாக நினைத்தார். அவர் ஒன்றும் ஆண்டியில்லையே.. கிராமத்தின் பெரிய பண்ணையார். பாலமுருகனும் விவசாயத்தில் உயர் படிப்பு படித்தவன்.. சிவகாமியை அழைத்துக் கொண்டு காரில் சென்னையை நோக்கிப் பயணமானார் விசுவநாதன்.

ஜெயராமன் அலுவலகம் கிளம்பும் அவசரத்தில் இருந்தாலும் தங்கையையும்... அவனது கணவரையும் வரவேற்று குறைவில்லாமல் உபசரித்தார்.

"அப்புறம்.. வராதவங்க வந்திருக்கீங்க.. நான் கூட என் கம்ப்யூட்டர் கம்பெனியை விட்டு நகர்ந்திடுவேன்.. மச்சான் அவருடைய தோப்புத் துரவை விட்டு நகர மாட்டார். என்ன விஷயம் சிவகாமி..?."

மாடி ஹாலில் சோபாவில் அமர்ந்து கொண்டு எதிரே அமர்ந்திருந்த தங்கையிடமும்... தங்கை கணவரிடமும் கேட்டார் ஜெயராமன். அவர் அருகில் வந்தனா அமர்ந்திருந்தாள். ஆண்டாள் அதே ஹாலில் சற்றுத் தள்ளி அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"ஜெயராமா. நம்ம பிள்ளைகளுக்குக் கல்யாண வயசாயிடுச்சு... காலா காலத்தில் அதுகளுக்கு கல்யாணத்தை நடத்தி வைச்சுட்டா.. நமக்கும் கடமையைச் செய்து முடித்து விட்ட திருப்தி இருக்குமில்ல."

"ஆமாம் மச்சான்."

"அதனால் தான் கிளம்பி வந்தேன்..."

"அதுக்கு சென்னைக்கு ஏன் நீங்கள் வரனும் மச்சான்? பாலாவுக்கும்... கோதாவரிக்கும் நல்ல இடத்தில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்த்து நிச்சயம் பண்ணி விட்டு என்னிடம் சொல்ல வந்தால்தானே சரியாக இருக்கும்? நானும் என் தகுதிக்குத் தகுந்தது போல தாய்மாமன் சீர் செய்வேன் மச்சான்."

'என் தகுதி...' விசுவநாதன் சிவகாமியைப் பார்த்தார். அவள் ஜெயராமனைப் பார்த்துப் பேசினாள்.

"அண்ணா.. தாய்மாமன் சீரைப் பற்றி புதிதாய் ஏன் பேசுகிறாய்? என் கல்யாணத்தின்போது நீ கொடுத்த சீர்வரிசையை எதிர்பார்த்து என் கணவர் என் கழுத்தில் தாலிகட்டவில்லை. என் பிள்ளைகள் இரண்டும் பிறந்த போதும் பிரசவத்திற்குக் கூட உன் வீட்டிற்கு அவர் அனுப்பவில்லை... இரண்டு பேருக்கும் காது குத்த ஊரையே அழைத்து காதணி விழா நடத்தியபோது நீ வெறுங்கையுடன்தான் சபையில் வந்து நின்றாய்... நாங்கள் எடுத்த தங்கச் சங்கிலிகளை உன் கையில் கொடுத்து குழந்தைகள் கழுத்தில் போடச் சொன்னோமேயொழிய உன்னை குறைவாய் ஓர் வார்த்தை சொல்லவில்லை... கோதாவரி வயதுக்கு வந்த போதும் ஊரையே அழைத்து பூப்புனித நீராட்டு விழா நடத்தினோம். அப்போது நீ கோடிஸ்வரனாகியிருந்தாய்..அப்படியிருந்தும் நீ வெறுங்கையாய் தான் வந்து நின்றாய்.. என் மகளுக்கு ஒரு முழம் பூ கூட வாங்கி வரவில்லை. அதையும் நாங்கள் பெரிதாய் நினைக்கவில்லை. இனி மேல் எங்களுக்கு எதற்கு அண்ணா உன் தாய்மாமன் சீர்? நாங்கள் அதற்காக இங்கு வரவில்லை... வந்தனாவை பெண் கேட்டு வந்திருக்கிறோம்..."

சிவகாமி கொடுத்த குடுப்பில் ஜெயராமனின் முகம் இருண்டது. ஆண்டாளோ கொந்தளித்துக் கொண்டிருந்தாள். பதிலுக்கு பதில் தங்கையின் மனத்தைப் புண்படுத்த ஆசை கொண்ட ஜெயராமன்,

"வந்தனாவை பெண் கேட்டு வந்திருக்கிறீங்களா...? யாருக்கு...? ஏன் கேட்கிறேன்னா என் மகளைப் பெண் கேட்கும் அளவுக்கு உங்கள் ஊர் பக்கம் யாரும் தகுதியான மாப்பிள்ளை இல்லையே..." என்று அமர்த்தலாகக் கூறிக் கொண்டே கால் மேல் கால் போட்டுக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தார்.

விசுவநாதனின் விழிகளில் கோபக்கனல் வீசியது. சிவகாமி பதறிப் போனாள். எது நடக்கக்கூடாது என்று இத்தனை நாளாக அவள் பயந்து வந்தாளோ... அது நடந்தே விட்டது.

"அண்ணா..." என்று பேச்சை மாற்ற விரும்பி பேச்சை ஆரம்பித்த சிவகாமியைப் பார்த்து,

"வாயை மூடு.." என்று கர்ஜித்தார் விசுவநாதன்.

"ஜெயராமா..! நானும் வந்ததிலிருந்து பார்க்கிறேன்... தகுதி.. தகுதின்னு தகுதியைப் பற்றியே பேசுகிறாயே... உன் தகுதி என்ன... தரம் என்னன்னு எனக்குத் தெரியாதா? யாரிடம் பேசுகிறோம் என்பதை யோசித்துப் பேசு... பரம்பரைச் சொத்தை விற்று பஞ்சம் பிழைக்க பட்டணம் வந்தவன்தானேடா நீ.. பரம்பரையாய் ஊர் பண்ணையாராய் இருக்கும் எங்கள் பரம்பரையின் கால் தூசி பெறுவாயாடா நீ...? பெரிதாய் தகுதி பற்றிப் பேச வந்து விட்டான். தகுதியைப் பற்றி நான் நினைத்திருந்தால் இதோ நிற்கிறாளே.. உன் தங்கை... இவள் கழுத்தில் தாலிகட்டி குடும்பம் நடத்தியும் இருக்க மாட்டேன்... உன்னையெல்லாம் மச்சினன் முறை வைத்து உறவு கொண்டாடிக் கொண்டு உன் வீட்டு வாசல்படியை மிதித்தும் இருக்க மாட்டேன். ஜெயராமா... நீ பணத்தால் கார் பங்களாவை வாங்கலாம். பரம்பரைப் பெருமையை வாங்க முடியாது. ஆயிரம்தான் இருந்தாலும் பரம்பரையாய் பணக்காரனாய் பிழைக்கும் எனக்கு புதுப் பணக்காரனான நீ நிகராக முடியாது... என் மகன் ஆசைப்பட்டான் என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் உன் வீட்டில் பெண் கேட்டு வந்தேன். உன் பணத்தையும்... பகட்டையும் பார்த்து மயங்கிப் பெண் கேட்டு வரவில்லை. என் மகனுக்கு நான் விழியசைத்தால் சுற்றுப் பட்டியில் இருக்கும் பெரியதனக்காரர்களின் குடும்பங்களில் இருந்து பெண் கொடுக்க நீ.. நான்னு போட்டி போட்டு கொண்டு வருவார்கள். அதுதான் எனக்கும் கௌரவமாக இருக்கும். உன்னைப் பற்றி இந்தச் சிங்காரச் சென்னையில் தெரிந்திருக்கும்... என் ஊரில் என்ன சொல்வார்கள்? பரம்பரைச் சொத்தைக் கூட விற்ற ஜெயராமனின் மகளையா உன் மகனுக்கு கட்டி வைக்கப் போகிறாய்ன்னு ஏளனமாய் பேசுவார்கள். என் ஊரில் உனக்கு இருக்கும் மதிப்பு இவ்வளவுதான். தெரிந்து கொள்...அது கிராமத்து மண் ஜெயராமா... பரம்பரையை மதிக்கும் மண்."

ஜெயராமனின் சர்வாங்கமும் ஒடுங்கி விட்டது. எந்த பணப் பெருமையை ஜெயிக்க அவரது இளமைக் காலம் முழுவதும் ஒரு விநாடி கூட ஓய்வெடுக்காமல் வெறி பிடித்தது போல் உழைத்தாரோ.. அந்தப் பெருமையை அவரால் ஜெயிக்க முடியாமல் போய் விடுமோ என்று அஞ்கினார். யாரைத் தன் போட்டியாக நினைத்து வன்மம் வைத்தாரோ... அந்த விசுவநாதன் விஸ்வரூபம் எடுத்து கேள்வி கேட்டு தன்னை அவமானப்படுத்த தான் வாளாயிருப்பதா என்ற ஆக்ரோஷம் பொங்கி எழ அவர் வார்த்தைகளைச் சிதற விட ஆரம்பித்தார்.

"இதெல்லாம் பிழைக்க மாட்டாதவன் பேசுகிற பேச்சு.. இவ்வளவு பேசுகிறாயே.. நான்.. இந்த ஜெயராமன்... உன் மகனுக்கு பெண் கொடுக்க மாட்டேன்னு சொல்கிறேன். இதையும் போய் உன் ஊரில் சொல்லு. பரம்பரைப் பெருமையைக் கட்டிக் கொண்டு உன்னைப் போல் பட்டிக் காட்டைக் கட்டிக் கொண்டு அழுக நான் உன்னைப் போல் அரை குறையாய் படித்தவனில்லை. கம்ப்யூட்டர் என்ஜினியர். இன்றைக்கு சாப்ட்வேர் பிஸினஸில் கொடிகட்டிப் பறக்கிறேன். என் பரம்பரையே கோடீஸ்வரப் பரம்பரையாய் மாறப் போகிறது. எனக்கெதற்கு உன் பட்டிக்காட்டு பரம்வரையின் பெருமை? வேண்டாம்ய்யா.. உன் பரம்பரைப் பெருமை என் குடும்பத்திற்கு வேண்டாம்... எனக்கு நீ சமம் கிடையாது. உன் சொத்தின் மதிப்பைப் போல் கோடி மடங்கு அதிகமாய் பண வசதி கொண்டவன் நான். என் மகளை.. உன் மகனுக்கு கட்டித் தர வேண்டுமா? அதற்கு வேறு ஆளைப்பார்..."

அந்தப் பக்கம் வந்தனாவும்.. இந்தப் பக்கம் சிவகாமியும் பதறப்பதற அந்தக் கல்யாணப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும்போதே முறிந்து விட்டது.

## 8

'உடம்பெல்லாம் எண்ணெய் பூசிக்கொண்டு

உருண்டு புரண்டாலும் ஒட்டுகிற மண்தான் ஒட்டும்'

கிராமத்து மக்கள் அடிக்கடி பேச்சு வாக்கில் சொல்லிக் கொள்ளும் வார்த்தை இது. அது எவ்வளவு உண்மை!

ஜெயராமன் சிவகாமியின் கூடப் பிறந்த அண்ணன் தான்... அவனுக்கு ஒரே தங்கையான சிவகாமியை விட்டால் தாய்வழி சொந்தம் என்று யாரும் கிடையாது. சிவகாமியோ... பெரிய வீட்டு மருமகள். அவள் மகனோ குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களை ஆரம்பித்து கோடிக் கணக்கில் பணம் சம்பாதிக்கும் இளம் முதலாளி... வலை போட்டுத் தேடினாலும் அவனைப் போன்ற ஓர் மாப்பிள்ளை வந்தனாவிற்கு கிடைக்க மாட்டான். விசுவநாதனே வலிய வந்து பெண் கேட்டும்... கூடப் பிறந்த தங்கையின் மகனாக பாலமுருகன் இருந்தும் ஜெயராமன் பெண் கொடுக்க மறுத்து விட்டார். அதுவும் சும்மா மறுக்கவில்லை. அவமதித்து மறுத்தார் .

"யார் வந்து யாரைப் பெண் கேட்பது? என் மகளைப் பெண் கேட்க உன் மகனுக்கு என்ன தகுதி இருக்கிறது? படிப்பென்றால் எல்லாம் படிப்பாகி விடுமா? தொழிலென்றால் எல்லாமும் தொழிலாகி விடுமா ? ஊருன்னா எல்லா ஊரும் ஊராகி விடுமா? பாரினுக்கு போய் கம்ப்யூட்டர் படித்து என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்றிருக்கும் என் மகளெங்கே... விவசாயத்தைப் படித்து பட்டிக்காட்டில் தொழில் செய்யும் உன் மகனெங்கே... எறும்பு.. கரும்பின் மேல் ஆசைப்பட்டு பெண் கேட்டு வந்த கதையாய் இல்லை உன் கதை இருக்கு..என் மகள் சென்னையில் பிறந்து வளர்ந்தவள். உன் பட்டிக்காட்டில் வந்து ஒரு நாள் தங்குவாளா? ஆசைக்கும் ஓர் அளவு இருக்க வேண்டும் விசுவநாதா... அன்றைக்கு நீ சிவகாமியின் மேல் ஆசைப்பட்டபோது.. சிவகாமி... அவளே சொன்னது போல் வெறுங்கையுடன் நின்ற ஜெயராமனின் தங்கை... இன்றைக்கும் அதே நிலை இருக்கும் என்று எந்த முட்டாள்தனமான நம்பிக்கையோடு புறப்பட்டு வந்தாய்? வந்தனா... கோடீஸ்வரன் ஜெயராமனின் ஒரே மகள். அவள்

மேல் ஆசைப் பட உன் மகனுக்குத் தகுதியும் கிடையாது... உரிமையும் கிடையாது...வெளியே போ..."

"அடப்பாவி.. சண்டாளா.. என் கூடப் பிறந்த பிறப்பாடா நீ... ஏதோ அண்ணன் மனவேதனையில் சொல்கிறான்னுதான் இத்தனை நாளும் நினைச்சேன். ஆனால் உண்மையிலேயே மனசுக்குள் இவ்வளவு வஞ்சகத்தையும் சூதையும் வைத்துக் கொண்டு இருப்பாய்ன்னு நான் கனவிலும் நினைக்கவில்லையே. உன் மனதில் எந்த அளவுக்கு விசமிருந்தால் இந்த அளவுக்கு நீ பேசுவாய். சொந்தம் பெரிசுன்னு நினைச்சு உன் வீட்டிப் படியேறி வந்ததற்கு நீ மடி நிறைய அள்ளிக் கொடுத்து விட்டாய். இதுவரைக்கும் அண்ணன் வீடுன்னு ஒருநாள் ஒரு பொழுது வந்து தங்கியிருப்பேனா... வருசா வருசம் உன் குடும்பத்தைத் தானே என் வீட்டிற்கு வரவழைத்து சீராட்டுவேன்? இருந்திருந்து உன் வீடு தேடி வந்ததற்கு நல்ல பரிசு கொடுத்து விட்டாய். போதும்பா... போதும்... உன்னைப் போல ஒரு அண்ணன் கூட பிறந்ததற்கு நான் எத்தனை பாவம் செய்தேனோ... மகமாயி... இதை எங்கே போய் கழிப்பேனோ... தெரியவில்லையே..." சிவகாமி பொங்கிப் பொறுமினாள்.

விசுவநாதன் "உஷ்" என்று வாயில் விரலை வைத்து மனைவியை அடக்கினார்.

"சிவகாமி. கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்தாலும் மதியாதவர் வீட்டு வாசலை இந்த விசுவநாதன் மிதிக்க மாட்டான். உனக்குத் தெரியும் தானே. கிளம்பு.. வம்பு வழக்கு வைச்சு பெண்ணைக் கட்டிப் போக நான் ஒண்ணும் எலிக்குஞ்சை பெற்று வைத்திருக்கவில்லை... சிங்கத்தை பெற்று வைத்திருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன்... என் மகனுக்கு பெண் கொடுக்கவும் தரம் வேண்டும். அது இந்த ஜெயராமனுக்குக் கிடையாது... தரம் கெட்ட சம்பந்தம் நமக்கு வேண்டாம் கிளம்பு..."

சிங்கம் போல் கர்ஜித்த விசுவநாதன் மீசையை முறுக்கியபடி விறுவிறுவென சென்று கார்க்கத்தவைத் திறந்து விட்டார்.

ஓட்டமும் நடையுமாய் கணவனைப் பின் தொடர்ந்த சிவகாமி... கண்ணீர் வழிய காரில் ஏறி அமர்ந்து கொண்டாள். கார் கிளம்பிப் போய் விட்டது.

"சீச்சி... இந்த பழம் புளிக்குதுன்னு நரி சொல்லிச்சாம். ஹாஹா... அடியே ஆண்டாளு.. அந்த விசுவநாதன் சொன்னதைக் கேட்டியா? அந்த நரிக்கதை மாதிரியே இல்லை? ஹா... ஹா.. இப்படி ஒரு நாளுக்காகத்தாண்டி இத்தனை நாள் காத்திருந்தேன். இவனை ஒரு நாள் ஒரு பொழுதாவது தோற்கடிக்கனும். நான் ஜெயிக்கணும்னு தவம் கிடந்தேண்டி. கோடிக் கணக்கில் பணத்தைக் குவிச்சாலும் அந்த ஊர்காரன்க கிட்ட எனக்குப் பெருமை கிடைக்கலடி... வருசா வருசம் ஊர் திருவிழாவிற்கு எதுக்குக் குடும்பத்தோடு போய் இறங்கினேன்? என் வெளிநாட்டுக்காரைப் பார். என் பெண்டாட்டி உடம்பில் பூட்டியிருக்கும் வைர நகைகளைப் பார். நான் செல்வச் சீமான்னு பீத்திக்கத்தான். ஆனால் ஒரு பய என்ன மதிக்கலியே... எனக்குன்னு ஒரு பெயர் இருக்குடி... கோடீஸ்வரன் ஜெயராமன்... ஆனால் அந்த ஊர்ப்பயலுகள் என்ன சொல்லிக் கூப்பிட்டானுகன்னு உனக்கே தெரியுமேடி... 'விசுவநாத ஐயாவின் மச்சினன்..' எனக்குன்னு ஒருதனி அடையாளம் கிடையாதாடி..."

ஜெயராமன் ஆண்டாளிடம் பேசப்பேச வந்தனா தன் உதட்டைக் கடித்து பொங்கி வரும் அழுகையை அடக்கினாள். கண்களை சிமிட்டி.. கண்ணீர் வழிந்து விடாமல் தடுத்தாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்த போராடிக் கொண்டிருந்தவளின் தோள் மேல் கை போட்டு பெருமையாய் தலை நிமிர்ந்து நின்ற ஜெயராமன் தன் மனைவியைப் பார்த்துக் கூறினார்.

"ஜெயிச்சுட்டேண்டி. இன்றைக்கு என் மகளால் நான் ஜெயிச்சுட்டேன். கண்ணுக்கு அழகாய் மாமன் மகளைப் பார்த்தால் அந்த விசுவநாதனின் மகன் கட்டாயம் காதலிப்பான்னு நான் போட்ட கணக்குத் தப்பலைடி ஆண்டாள். விசுவநாதன் மகனுக்காக பெண் கேட்டு வரணும். எதிலும் தோற்காத அவனை இந்த விசயத்தில்

நான் தோற்கடிக்கணும்னு நினைச்சேன். நான் நினைத்தது நடந்து விட்டது ஆண்டாள் நடந்து விட்டது. ஐ ஆம் ஸோ ஹேப்பி.. நான் இத்தனை வருசமாய் பாடு பட்டதற்கு பலன் கிடைத்து விட்டது. அந்த விசுவநாதனை தோற்கடித்து விட்டேன்."

கணவனின் ஆனந்தத்தில் பங்கு கொள்ள முடியாமல் ஆண்டாள் புருவங்கள் முடிச்சிட யோசனையுடன் மகளைப் பார்த்தாள். காலையில் நாத்தனாரும்.. நாத்தனார் கணவனும் வந்திருக்கும் செய்தி அறிந்ததும் வந்தனாவின் முகம் வழக்கத்தைவிட அதிகமாக மலர்ந்ததை கவனத்தில் கொண்ட ஆண்டாள் மகளைக் கண்காணித்துக் கொண்டு இருந்தாள்.

அவள் ஓடி ஓடி சிவகாமிக்கும்.. விசுவநாதனுக்கும் உபசரனைகள் செய்ததற்கு அத்தை குடும்பத்தின் மேலிருந்த பாசம் மட்டுமே காரணமா.. என்ற வினா அவளது நெஞ்சில் எழுந்திருந்தது. கடைசி முறை கும்பக்கரை கிராமத்திற்கு போயிருந்தபோது திடீரென்று வந்தனா மாயமானதும் இரண்டு மணி நேரம் கழித்தே திரும்பி வந்ததும் அவளை சந்தேகத்தில் ஆழ்த்தியிருந்தது... வந்தனா இல்லாத அந்த இரண்டு மணி நேரமும் பாலமுருகனும் வீட்டில் இல்லை என்பதை அவளது உள்ளுணர்வு அவளுக்கு உணர்த்தியிருந்தது.

அதனால்தான் கணவன் பேசப்பேச அவள் மகளது முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்... அவளது இதழ்கள் துடிப்பதையும்.. கண்கள் கலங்குவதையும்.. கை கால்கள் நடுங்குவதையும் பார்த்தவளின் பெற்ற வயிறு பதைத்தது. தாயறியாத சூள் இல்லை. ஆண்டாள் மகளது மனதை அறிந்து கொண்டு விட்டாள்.

அவளுக்கு என்றுமே சிவகாமியின் மேல் பாசம் இருந்ததில்லை. அதே சமயம் பகையும் இருந்ததில்லை. ஒரு வேளை பணத்தில் ஜெயராமன் உயராமல் இருந்திருந்தால் சிவகாமியின் மேல் பொறாமை வந்திருக்குமோ... என்னவோ.. ஆனால் அந்தக் குறை இல்லாமல் ஜெயராமன் பணத்தை அள்ளிக் குவிக்க...

அதில் பங்கு போட விரும்பாத நாத்தனாரின் மேல் அவள் விரோதம் பாராட்ட அவசியமே இல்லாமல் போனது. இப்போது மகளின் திருமணப் பேச்சு வந்த பின்பு... அவளின் மனம் சிவகாமியின் மகனைத் தான் முதலில் நினைத்தது.

ஆண்டாள் புத்திசாலி... சென்னையின் பகட்டு கண்ணைப் பறித்தாலும்... பாலமுருகனின் பண்பு கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்தாலும் கிடைக்காது என்பதை அவள் நன்கு அறிவாள். விசுவநாதனின் சொத்துக்கள் கோடிக்கணக்கான மதிப்புடையவை என்பதோடு அவரது பரம்பரைப் பெருமை தேடினாலும் கிடைக்காதது என்பதை உணர்ந்தே இருந்தாள்.

சிவகாமியின் மேல் அவளுக்குப் பொறாமை இருந்தது. அதே சமயம் தன்னிடம் பெருகும் வசதிகளைப் பார்த்துப் பொறாமைப்படாத அவளது குணமும் பிடித்திருந்தது. ஒற்றை மகளைப் பெற்றவள்.. அந்த மகளின் மதிப்பைத் தெரிந்து வைத்துக் காப்பாற்றக் கூடியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நினைப்பது இயற்கைதானே.

வைரத்தை வைத்துக் கொள்ளும் தகுதி படைத்தவர்கள் யார்? பரம்பரையாய் ஒரு ஊரையே ஆளும் பெரிய வீட்டுக்காரர்களை விட வேறு யாருக்கு அந்தத் தகுதி உண்டு?

ஜெயராமன் வன்மத்துடன்.'உனக்குத் தகுதி இருக்கிறதா?' என்று கேட்டுத் திருப்பி அனுப்பி வைத்த விசுவநாதன் குடும்பத்தாருக்கு மட்டுமே வந்தனாவை மருமகளாக்கிக் கொள்ளும் தகுதி இருக்கிறது என்பதைப் புரிந்தவளாய் ஆண்டாள் அங்கிருந்து கீழே செல்ல படியருகே போனாள்.

"என்ன ஆண்டாள்.. நான் பேசிக்கிட்டே இருக்கேன் ..நீ பதிலே சொல்லாமல் போகிறாய்..." ஜெயராமன் கேட்டார்.

"பேச வேண்டியதெல்லாம் நீங்களே பேசி விட்டீங்களே... இதற்கு மேல் நான் என்ன பேச?" ஆண்டாள் வெறுப்புடன் பதிலளித்தாள்.

"என் வெற்றியைப் பார்த்து உனக்கு சந்தோசம்தானே.."

"இது வெற்றியா.. இல்லை தோல்வியான்னு எனக்குத் தெரியவில்லை."

"என்னடி சொல்கிறாய்?"

"பின்னே என்னங்க? மகளின் வாழ்வை பகடைக்காயாய் வைத்து வெற்றியைத் தேட நினைக்கும் உங்களை நான் என்னன்னு சொல்வது?"

"என்ன உளருகிற?"

"உளறல் இல்லை... உண்மை. பெரிய சாப்ட்வேர் நிறுவனம் நடத்துகிறேன் என்கிறீங்களே. உங்கள் மூளையை வியாபாரத்தில் மட்டும் தான் பயன்படுத்து வீங்களா? வீட்டு விஷயத்தில் பயன்படுத்த மாட்டீங்களா?"

ஜெயராமன் மனைவியை கூர்ந்து பார்த்தார். அவளின் முகம் கோபத்தில் சிவந்திருந்தது. மனைவியின் அருகே நெருங்கியவர்,

"நேரடியாய் சொல்லு. என்ன விஷயம்?" என்று வினவினார்.

ஜெயராமனுக்கு அவளுடைய மனைவி புத்திசாலி என்று மிக நன்றாகத் தெரியும். காரணமில்லாமல் அவள் கடிந்து கொள்ள மாட்டாள்.

"கண்ணுக்கு அழகான மாமன் மகளைப் பார்த்தால் அவன் காதலிப்பான்னு கணக்குப் போட்டு உங்கள் மகளை அவன் கண்முன் நடமாட விட்டீங்களே.. கண்ணுக்கு அழகாய் நம் மகள் மட்டும்தான் இருக்கிறாளா?அவன் இல்லையா? அத்தை மகன் மாமன் மகளைக் காதலிக்கும் போது மாமன் மகளும் அத்தை மகனைக் காதலித்திருக்க மாட்டாளா?"

"ஆண்டாள்... நீ என்ன சொல்கிற.."

ஜெயராமன் அதிர்ந்து போய் மகளைப் பார்த்தார். கலங்கிச் சிவந்திருந்த விழிகளை அவள் திருப்பிக் கொண்டாள்.

"கம்ப்யூட்டரோடு பழகிப் பழகி மனிதர்களைப் பற்றி உங்களுக்கு மறந்தே போய் விட்டது. நீங்கள் ஆசைப்

பட்டதை மட்டும் செய்து முடித்து விட்டு சட்டவுன் பண்ணியதும் அமைதியாகி விடுவதற்கு உங்கள் மகள் என்ன கம்ப்யூட்டரா? மனுஷிங்க... அவளுக்கும் உணர்வுகள் உண்டு. அது ஏன் உங்க புத்தியில் உறைக்கலை? ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை.. அவளுக்கு உங்க தங்கை மகனைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு கேட்டிங்களா? அவள் என்ன உங்கள் அடிமையா?"

ஆண்டாள் கண்களில் அனல் பொறி பறக்க கணவனை வாங்கு வாங்கென்று வாங்கித் தள்ள... ஒரு கட்டத்தில்,

"போதும்..." என்று சத்தம் போட்டார் ஜெயராமன்.

"அவள் என் மகளாக இருந்தால்.. என் வெற்றி தோல்வியில் அவளுக்கும் பங்கிருக்குன்னு நினைப்பாள். அந்த விசுவநாதனை நான் ஜெயிக்க வேண்டுமானால் இவள் அவனுக்கு மருமகளாகக் கூடாது... எனக்கு இது தான் தெரியும். இதுதான் வேண்டும். வேறு ஆசைகள் அவள் மனதில் இருந்தால் அதை வெட்டியெறிந்து விடச் சொல்லு... நான் பார்க்கும் மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சந்தோசமாய் இருக்கச் சொல்லு..."

ஜெயராமன் தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கிப் போய் விட்டார். தாயும்.. மகளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மகளின் வாழ்க்கையில் அலையடிக்க ஆரம்பித்து விட்டதை உணர்ந்து கொண்டாள் ஆண்டாள்.

## 9

"தப்புப் பண்ணிட்டேன் பாலா.. தப்புப் பண்ணிட்டேன். என் அண்ணன் மனசில் இவ்வளவு வன்மத்தை வைத்திருக்கிறான்னு உன்னிடம் கூடச் சொல்லாமல் மறைத்து உனக்குத் துரோகம் பண்ணிட்டேன். என்னை மன்னிச்சிருடா பாலா... மன்னிச்சிரு..."

சென்னையிலிருந்து திரும்பி வந்தவுடன் பெற்ற மகனைப் பார்த்து கரம் குவித்து தாய் அழுதபோது பாலமுருகன் பதறி விட்டான். சிவகாமியின் கரத்தை தன் இரு கரங்களுக்குள் அடக்கிக் கொண்டவன்,

"அம்மா.. என்ன இது? ஏன் இப்படி நடந்து கொள்கிறீங்க ? இப்ப என்ன ஆச்சு? உங்க அண்ணன் மகளைப் பெண் கேட்டுப் போனீங்க . அவங்க தலையில் கொம்பு முறைத்திருப்பது போல் பேசி திருப்பி அனுப்பிட்டாங்க . இது ஊர் உலகத்தில் நடக்கக் கூடியது தானே அம்மா? இதற்குப் போய் பெற்ற மகனிடம் மன்னிப்புக் கேட்ட அழுகிறீங்களே... கண்ணைத் துடைச்சுக்கங்க அம்மா" என்று அதட்டினான்.

கோதாவரி நடந்ததைக் கேட்டு சிந்தனையுடன் தூண் மேல் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். விசுவநாதன் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தார். அவர் முகம் கல்லைப் போல் இறுகியிருந்தது.

"இல்லைடா பாலா.. நான் மன்னிப்புக் கேட்டுத்தான் ஆகனும் . என் கூடப் பிறந்த பாவி அன்றைக்கே சொன்னானே பாலா. உன் புருசனை ஜெயிப்பதுதான் என் குறிக்கோள்ன்னு. அப்போதே நான் உன் அப்பாவிடம் அவன் குணத்தைப் பற்றிச் சொல்லியிருந்தால் உன் அப்பா சுதாரித்திருப்பாரேடா. அண்ணன் ஏதோ மன வருத்தத்தில் சொல்கிறான். அதைப் பெரிது பண்ணக் கூடாது. வீணாய் இரு குடும்பங்களுக்கு இடையே வேற்றுமை வந்து விடக் கூடாதுன்னு என் மனசில் போட்டுப் பூட்டிக்கிட்டேனே பாலா. அது கட்டின புருசனுக்கு நான் செய்த அநியாயம் இல்லையா? செய்கிற அநியாயத்தையும் செய்துவிட்டு அந்தப் பாவியை ஜெயிக்க வைக்க உன் அப்பாவையும் அழைத்துக் கொண்டு போய் பெண் கேட்டேனே பாலா... நான் தனியாகத் தானே போயிருக்கனும் ? உன் அப்பா ராஜாடா.. இந்த மன்னாதி மன்னனின் தலை அந்த நீசனின் முன்னால் குனிவதற்கு நானே காரணமாகி விட்டேனே பாலா..."

சிவகாமி பதறித் துடித்தாள் ..விசுவநாதனால் மனைவியின் பரிதவிப்பை தாங்கிக் கொள்ள முடியவில்லை .. மனைவியின் முகத்தைக் கைகளில் ஏந்தி பிரியத்துடன் பார்த்துக் கூறினார்

"சிவகாமி.. உன்னால் எனக்கும் நம் பிள்ளைகளுக்கும் அநியாயம் செய்ய முடியாது. கொட்டுவது தேளின் குணம்... காப்பது மகாத்மாக்களின் குணம் ..உன் அண்ணன் தேளாய் கொட்டினாலும் நீ மகாத்மாவாய் அவனைக் காப்பாற்றத் துடித்திருக்கிறாய்... விட்டு விடு... உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சம் தாங்காது... அவன் உன் அண்ணன்னு ஏன் நினைக்கிறாய்? அவன் உன் அண்ணனில்லை... என் எதிரியாக என்றோ மாறி விட்டான். என் எதிரியிடம் நான் மோதிப் பின் வாங்கியிருக்கிறேன். இன்னும் தோற்கவில்லை... இந்த விசுவநாதன் தோற்கவும் மாட்டான்..."

கோதவரி தந்தையின் முகத்தையே தீர்க்கமாய் பார்த்தாள். பின்னர் தாயைப் பார்த்துக் கேட்டாள்.

"அம்மா.. நீங்கள் பெண் கேட்டு... இத்தனை சண்டையும் போட்டுக் கொண்டிருந்தபோது வந்தனா அந்த இடத்தில் இல்லையா?"

"இருந்தாள்..." சிவகாமி வேதனையுடன் கூற,

"என்ன..? என்று ஒரே குரலில் அதிர்ச்சியுடன் கேட்டார்கள் அண்ணனும், தங்கையும்."

"ஆமாம் கோதாவரி... நாங்கள் பெண் கேட்டபோது வந்தனா எங்களுடன்தான் உட்பார்ந்திருந்தாள்..."

"அவள் ஒரு வார்த்தை கூட உங்களுக்கு ஆதரவாய் பேசவில்லையா அம்மா? நன்றாக யோசித்துச் சொல்லுங்கள்."

"இல்லை கோதாவரி.. அவள் வாயைத் திறக்கவே இல்லை..."

பாலமுருகனின் முகம் கருத்து விட்டது. கோதாவரியின் முகமோ குழப்பத்தில் ஆழ்ந்தது.

"அது எப்படிம்மா... அவள் எப்படிப் பேசாமல் இருந்தாள்.." கோதாவரி குழம்பிக் கொண்டிருக்கும்போதே,

"விடு கோதாவரி... ஜெயராமனின் மகள் வேறு எப்படி இருப்பாள்? அவளது அப்பனைப் போலத்தானே நம்பிக்கைத் துரோகியாய் இருப்பாள்? உறவாடிக் கெடுப்பது அப்பனுக்கும் மகளுக்கும் கை வந்த கலை ஆயிற்றே. அப்பனுக்காக ஒருத்தி காதலிப்பது போல் நடிக்கத் துணிந்தாள் என்றால் அவள் எவ்வளவு கேவலமான பெண்ணாக இருக்க வேண்டும்? அவளைப் பற்றி இனியொரு வார்த்தை பேசாதே."

பாலமுருகன் வெறுப்புடன் மாடிப்படியில் இறங்கிப் போய் விட்டான். அவனது புல்லட்டில் ஏறி அவன் சீறிப் பாய்வதை மாடி வராண்டா கைப்பிடிச் சுவரில் சாய்ந்து நின்று பார்த்த கோதாவரியின் கண்கள் கலங்கி விட்டன.

அவளுடைய அண்ணன் காதலில் தோற்று விட்டானா? பால் முகம் கொண்ட வந்தனா அவனைக் காதலிப்பது போல் நடித்து ஏமாற்றி விட்டாளா? பகைவருக்கும் அருளும் குணம் கொண்ட அவளுடைய தாய் சொந்தத் தமையனால் வஞ்சிக்கப்பட்டாளா? ஊரே மரியாதை செலுத்தும் அவளுடைய தந்தையை ஒருவன் அவமதித்தானா?

சிந்தித்த கோதாவரி ஓர் முடிவுடன் கண்ணைத் துடைத்தக் கொண்டாள். தாயின் பக்கம் திரும்பியாள்.

"அம்மா... நடந்தது நடந்து விட்டது. இந்த விஷயத்தை இப்போது ஆறப் போடுங்கள். பிறகு பேசிக் கொள்ளலாம். நீங்கள் மட்டும், என்னால் தானே... என்னால் தானே என்று புலம்பாமல் தைரியமாய் இருங்கள். இன்னும் எதுவும் முடிந்து விடவில்லை. அப்பா சொல்வதைக் கேட்டீர்கள்தானே. அவர் பார்த்துக் கொள்வார். விசுவநாதனை தோற்கடிக்க எவனும் பிறக்கவில்லை. போங்க போய் வேலையைப் பாருங்கள்."

"இல்லையடி கோதவரி. நான் என்ன சொல்கிறேன்னா..."

"நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். அதுதான் உன் மகள் சொல்லி விட்டாளே... விசுவநாதன் தோற்க மாட்டான். நான் பாட்டுக்கு சிவனேன்னு என் வேலையைப் பார்த்துக் கொண்டு இருந்தேன். உன் அண்ணன் சவாலுக்கு அழைக்கிறான். மோதிப் பார்த்து ஜெயிக்கா விட்டால் நான் ஆம்பிளை இல்லைடி... நீ இனிமேல் கவலையே படக்கூடாது.. உன் புருசனை மட்டும் நம்பு.. போய் வேலையைப் பார்..."

விசுவநாதன் மகளைப் பெருமையாய் பார்த்தபடி படியிறங்கிப் போய்விட்டார்.

சிவகாமி மாடி ஹாலில் இருந்த ஊஞ்சலின் கம்பியைப் பிடித்துக் கொண்டு அதில் சாய்ந்து அமர்ந்து விட்டாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது. கோதவரி தாயின் அருகே ஊஞ்சலில் அமர்ந்து அவளது கண்களைத் துடைத்து விட்டாள்.

"அழாதீங்க அம்மா. நீங்கள் அழ வேண்டிய அவசியமே இல்லை. அப்பா எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். நீங்கள் எழுந்து வந்து வேறு ஏதாவது வேலைகளைப் பாருங்க. சும்மா இருந்தால் மனம் அதையே நினைக்கும்."

கோதாவரி கெட்டிக்காரி .. சிவகாமியை வேலையில் மனதை செலுத்த வைத்தாள்... தாய் ஓய்வாக அமர்ந்து விட்டால் அருகே அமர்ந்து ஊர் கதைகளைப் பேசினாள்.. மெல்ல சிவகாமி தன் இயல்புக்குத் திரும்பினாள்.

விசுவநாதனின் மனதில் என்ன இருந்தது என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. எதுவுமே நடக்காதது போல் வீட்டிலும் வெளியிலும் சிரித்துப் பேசிக் கொண்டு காரியங்களைக் கவனித்தார்.

பாலமுருகன் மட்டுமே கொதிகலனாக இருந்தான். நிலாக்கால இரவுகளில் அவனால் நிம்மதியாய் உறங்க முடியவில்லை. வந்தனா பேசிய பேச்சுக்கள் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

'உடையும் பழக்க வழக்கங்களும் மாறினால் மனதும் மாறி விடுமா அத்தான்?'

அவள் மாறவில்லை என்பது உண்மைதான். அவள் ஒரு போதும் பாலமுருகனின் காதலியாய் மாறவில்லை. ஜெயராமனின் மகளாகவேதான் இருந்திருக்கிறாள். முட்டாள் பாலாதான் அவளது சிரிப்பில் மயங்கிக் கவிழ்ந்து விட்டான்.

'எதை விட்டு விட்டீர்கள் அத்தான்? என்னையா?'

'ஆமாம்டி' பாலா மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

'உன்னை விட்டு விட்டேன். உன் மேலிருந்த காதலை விட்டு விட்டேன். இந்த உலகிலேயே நீ ஒருத்திதான் கடைசிப் பெண்ணாக இருந்தாலும் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன்.'

அவன்  விழிகள் சிவந்தன.

'இதில் முடிவு செய்ய என்ன இருக்கிறது?' என் வாழ்வு உங்களோடுதான் அத்தான்...'

எவ்வளவு இனிமையான பொய் !

இதயத்திலிருந்து சொன்னாளே... சொன்னது அத்தனையும் பொய்... பொய்... நிலாக்கால இரவுகளில் எல்லையற்ற மோகத்தோடு அவளைக் கட்டித் தழுவினானே... அது பொய்யா? அவனது சிறு தொடுகையிலும் சிலிர்த்து அவன் தோளில் சாய்ந்தாளே அது பொய்யா? எல்லாமே பொய் எனில் மெய் எது? அவளின் துரோகம் மட்டும்தானா?

அவளுடன் தனித்திருந்த அந்த நிலவுப் பொழுதுகளில் அவன் நினைத்திருந்தால் எல்லை மீறியிருக்கலாம். உடலளவில் அவளை மனைவியாக்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் எல்லாமும் நீதான் என்று முழுமனதோடு தஞ்சம் அடைந்திருப்பவளை கொள்ளை அடிப்பது தர்மம் ஆகாது என்று விட்டு விலகினானே... அதைத் தெரிந்துதான் அவள் அவனைத் தனியே சந்திக்க

வந்தாளோ. விசுவநாதன் மகன் திருமணத்திற்கு முன்னால் தவறு செய்ய மாட்டான் என்ற நம்பிக்கையில்தான் அந்த நிலாக்கால இரவுகளில் அவன் நெஞ்சில் சாய்ந்தாளோ...

"பாலா... என்னடா இது.. தலையைக் கூடச் சரியாகத் துவட்டிக் கொள்ளாமல் என்னடா யோசனை வேண்டிக் கிடக்கு? பித்துப் பிடித்தவன் போல் நிற்கிறான் பாரு..."

சிவகாமி மகனைக் கடிந்து கொண்டே துண்டை எடுத்து வந்து அவனது தலையைத் துவட்டி விட்டாள்.

"வீட்டில் வசதியாய் குளிப்பதை விட்டு விட்டு பம்பு செட்டில் தலையைக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறானே... இவனை என்ன செய்தால் தேவலாம்" புலம்பினாள் ..

"எதுவும் செய்ய வேண்டாம். தட்டைப் போட்டு பலகாரத்தை எடுத்து வை. பிள்ளை தோட்டம் காட்டைச் சுற்றி விட்டு பசியுடன் வந்திருப்பான்..." என்றபடி அங்கே வந்தார் விசுவநாதன்.

"ஆமாம்.. ஊருக்குப் போகிறேன்னு சொல்லிவிட்டு இரண்டு நாளாய் எந்த ஊருக்குப் போனீங்க..."

"எல்லாம் ஊருக்குத்தான் போனேன்டி."

"பாருடா பாலா... நான் என்ன கேட்கிறேன். அவர் என்ன பதில் சொல்கிறார். ஏங்க எந்த ஊருக்குப் போனீங்கன்னுதான் சொல்ல மாட்டிங்க. இரண்டு நாள்கள் தங்குகிற அளவுக்கு என்ன வேலைன்னாவது சொல்வீங்களா... இல்லை மாட்டிங்களா..."

"எல்லாம் தேவையான வேலைதான். அதைத் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? வா... வந்து எனக்கும் பாலாவிற்கும் பலகாரத்தைப் போடு."

விசுவநாதன் பாலமுருகனின் தோள் மேல் கை போட்டு சாப்பாட்டு மேஜைக்கு அழைத்துச் சென்றார். வெறும் பனியனோடும் வேட்டியோடும் இருந்த மகனைப் பார்த்தவர்...

"ஏண்டா இப்படி டிரஸ் பண்ணிக்கிறே" என்று வினவினார்.

"ச்சு... எல்லாம் போதும்பா..." விட்டேற்றியாய் பதில் சொன்னான் பாலமுருகன்.

மகனின் முகத்தைக் கூர்ந்து பார்த்த விசுவநாதன்,

"சலிப்பாய் இருக்கிற வயது உன் வயதில்லை பாலா. ஆடை பாதி.. ஆள் பாதி என்பார்கள்.. நல்லா டிரஸ் பண்ணிக்கிறவன் நீ . இப்போது என்ன வந்து விட்டது?" என்று கடிந்து கொண்டார்.

"இன்ட்ரெஸ்ட் இல்லைப்பா."

"வந்தனாவைத் தோற்றுவிட்டோம்ன்னு நினைக்கிறாயா?"

"அவ பேச்சையே பேசாதீங்க "

"சரி.. சரி.. பேசவில்லை சாப்பிடு."

பாலமுருகன் மௌனமாய் சாப்பிட்டு விட்டு எழுந்து சென்று விட்டான். தமையனின் முதுகையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த கோதாவரியின் விழிகளில் நீர் அரும்பியிருந்தது.

காதல் எவ்வளவு கொடுமையானது... சிரித்துக் கொண்டே இருக்கும் பாலா. இப்போதெல்லாம் சிரிப்பதேயில்லை. அவன் சிரிப்பு தொலைந்து விட்டது.

"என்னம்மா.. உன் அண்ணனையே பார்க்கிறாய்?"

"எப்படி இருந்த அண்ணன் இப்படி ஆகிவிட்டானே அப்பா..."

"காதல் அவ்வளவு கொடிய வியாதிம்மா.. எல்லாவற்றிற்கும் வைத்தியம் இருப்பது போல் இதற்கு வைத்தியம் கிடையாது. ம்ம்... பார்க்கலாம்.. நம் பழைய பாலா மீண்டு வருவான் ..நீ சாப்பிடு ..."

விசுவநாதன் கை கழுவ எழுந்தார்.

'வந்தனா கம்ப்யூட்டர்' என்று பொன்னிற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்த அந்த பிரம்மாண்டமான கட்டிடத்தின் உள்ளே நுழைந்தாள் வந்தனா. மஞ்சள் நிற சுடிதாரில் இருந்தாள். முதுகுவரை நீண்டிருந்த வெட்டிவிடப்பட்டிருந்த கூந்தலை விரிய விட்டிருந்தாள். வழியில் அமர்ந்திருந்தவர்கள்.

"குட் மார்னிங்..." என்று சொல்லத் தலை அசைத்தவாறே நடந்தாள்.

நீண்ட ஹாலின் கடைசியில் இருந்த அவளின் அறைக் கதவைத் திறந்து கொண்டு ஆளுயுர சேரில் சென்று அமர்ந்தாள். அறையின் ஏ.ஸி.யின் அளவை அதிகப்படுத்தியவள் கம்ப்யூட்டரை உயிர்ப்பித்து மெயில்களை பார்வையிட ஆரம்பித்தாள்.

அறைக்கதவு தட்டப்பட்டது. நிமிர்ந்து பார்க்காமலே,

"யெஸ்.. கமின்..." என்றாள்.

ஜெயராமன் உள்ளே நுழைந்து அவள் எதிரே அமர்ந்தார்.

தகப்பனை அறிமுகமற்ற பார்வை பார்த்தபடி...

"சொல்லுங்கள்..." என்றாள்.

"இப்போதெல்லாம் நீ என்னுடன் பேசுவதே இல்லை."

"இப்போது பேசினேனே."

"இது ஒரு பேச்சா? வந்தனா.. நீ என்னை வாய் நிறைய அப்பான்னு கூப்பிட்டு முழுதாய் அறுபது நாட்கள் ஆகின்றன. இன்னும் சொல்லப் போனால் அந்த விசுவநாதனும் அவன் பெண்டாட்டியும் வந்து போனதிலிருந்து நீ என்னை அப்பான்னு அழைப்பதில்லை..."

"விசுவநாதனின் மனைவியை நீங்களும் தங்கைன்னு அழைக்கவில்லையே."

"அவர்கள் யாரோ.. நாம் யாரோ..."

"கூடப் பிறந்த தங்கை யாரோவாகிப் போய் விடும் போது பெற்ற மகள் யாரோவாகிப் போய்விட மாட்டேனா?"

"வந்தனா.. அந்த விசுவநாதன் என்னுடைய எதிரி..."

"எதனால்... ம்.. ம்.. எதனால் அவர் உங்கள் எதிரியானார்? நீங்கள் சாப்பிட்ட சாப்பாட்டில் மண்ணை அள்ளிப் போட்டாரா? உங்கள் சொத்துக்களைப் பிடுங்கினாரா? இல்லை... உங்களைப் போல் உறவாடித்தான் கெடுத்தாரா?"

"வந்தனா.. நீ உன் அப்பாவிடம் பேசிக் கொண்டிருக்கிறாய்.. நினைவில் வைத்துப் பேசு."

"இல்லை.. மகளின் வாழ்வு வீணாகிப் போனாலும் பரவாயில்லை. விசுவநாதனை அவமானப்படுத்த வேண்டும் என்கிற வெறி பிடித்த மனிதரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்..."

"என் பொறுமையை சோதிக்காதே..."

"என் பொறுமையை நான் இன்னும் கைவிடாமல் தான் பேசிக் கொண்டிருக்கிறேன்"

"நீ முடிவாய் என்னதான் சொல்கிறாய்?"

"எதைப் பற்றி...?"

"உன் மேரேஜ் பற்றி..."

"அதுதான் முடிந்து போன கதையாகிவிட்டதே..."

"நான் விசுவநாதனின் மகனைப் பற்றிக் கேட்கவில்லை..."

"ஆனால் நான் பாலாவைத் தவிர மற்றொருவரைப் பற்றிப் பேசுவதாக இல்லை."

"டோன்ட் பிளே வித்மி..."

"ஓ.கே. நான் வேலையைப் பார்க்கிறேன்."

வந்தனா மீண்டும் கம்ப்யூட்டரில் மூழ்கினாள் .. ஜெயராமன் எரிச்சல் கொண்டார்.

"வந்தனா..."

"யெஸ்..."

"உன் அம்மா உன்னிடம் சொல்லியிருப்பாளே..."

"எதைப் பற்றி.."

"அமெரிக்க மாப்பிள்ளையைப் பற்றி..."

"எனக்கு விருப்பமில்லை..."

"எனக்கு உன் விருப்பத்தைப் பற்றிக் கவலையில்லை..."

"அப்படியானால் என்னிடம் ஏன் வெட்டியாய் பேசுகிறீங்க ?"

"லுக் வந்தனா... உன் கல்யாணம் நான் பார்த்து வைத்துள்ள மாப்பிள்ளையுடன்தான் நடக்கும்.. நடக்க வேண்டும்."

"கனவு காணாதீங்க ..."

"நான் நடத்திக் காட்டுகிறேன்..."

"நான் நிறுத்திக் காட்டுகிறேன்..."

"அதையும் பார்த்து விடலாம்."

ஜெயராமன் புயலாய் அறையை விட்டு வெளியேறினார். அவர் திறந்து சாத்திய கதவு படாரென்ற பலத்த ஒலியுடன் மூடிக் கொண்டது.

அலட்சியமாய் தோளைக் குலுக்கிக் கொண்ட வந்தனா... தன் செல்போனை எடுத்து அதில் பதிவு பண்ணியிருந்த பாலாவின் படத்தைப் பார்த்தாள். அவன் கண்களில் சிரிப்பு இருந்தது.

'கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம்தான்

கள்வெறி கொள்ளுதடி...'

அன்று பாரதியாரின் கவிதையை சோதித்துப் பார்த்ததாய் சொன்னானே. கள்வெறி கொண்டது அவனா... இல்லை அவளா...? நிலவை சாட்சியாய் வைத்து அவன் தொட்டபொழுதுகள் நெஞ்சில் பசுமையாய்

உறைகின்றனவே.. இதில் அவனை மறக்க அவளால் முடியுமா?

அன்று மாலையில் அவள் வீடு திரும்பியபோது நன்றாக இருட்டியிருந்தது... அவளது பங்களாவின் வாசலில் நான்கு கார்கள் நின்று கொண்டிருந்தன. காரை நிறுத்தி விட்டு வீட்டுக்குள் சென்றாள். வரவேற்பறையின் சோபாக்களில் புதிதாய் சிலர் அமர்ந்திருந்தனர்.

"ஹாய் வந்தனா... ஏன் லேட்?" என்றவனை வந்தனா இதற்கு முன் பார்த்ததில்லை.

'யார் இவன்?'

யோசனையோடு அவனை ஏற இறங்கப் பார்த்தாள். ஜீன்ஸ் ..காட்டன் சர்ட் ..கூலிங் கிளாஸ்... கையில் புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்.. அனைத்தையும் அளவிட்டவள் அவனருகே அமர்ந்திருந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணியையும் அவளை விட ஒன்றிரண்டு வயது கூடுதலாகத் தோன்றும் நபரையும் பார்த்தாள்.

அந்தப் பெண்மணி கையில்லாத ரவிக்கை அணிந்திருந்தாள். தலை முடியை கொண்டையிட்டு.. கொஞ்சம் முடிக்கற்றையை இரு பக்க காதோரங்களிலும் கொத்தாக விட்டிருந்தாள். உதடுகளில் லிப்ஸ்டிக். முகத்தில் சாயம், என்று முழு ஒப்பனையுடன் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

காதோரம் சன்னமாய் நரைத்திருந்த அந்த மனிதர் மட்டும் கண்ணியமாய் தெரிந்தார். பிஸ்கட் கலர் கோட்.. சூட்டுடன் வந்தனாவை பார்த்து மென்மையாகப் புன்னகைத்தார்.

"ஹாய் ஸ்வீட்டி... ஏன் லேட் என்று கேட்டேனே..." அந்த இளைஞன் எழுந்து அவளருகில் வந்தான்.

"மை நேம் இஸ் வந்தனா.. நாட் ஸ்வீட்டி..."

"பட் ஐ லைக் திஸ் நேம்... ஸ்வீட்டி.. பை தி வே... ஐ ஆம் ஆனந்த்" அவன் கை நீட்டினான்.

பதிலுக்கு கை கொடுக்காமல் வந்தனா அந்த இடத்தை விட்டு அகல முயன்றாள். விடாமல் வழி மறித்த ஆனந்த்.

"வாட் இஸ் திஸ் ஸ்வீட்டி? உனக்காக இவ்வளவு நேரமும் வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறோம். எங்களிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் நீ போனால் எப்படி?" என்று கோபமாய் முறைத்தான்.

'இவன் யார் என்னை வழி மறித்துக் கேள்வி கேட்க..' மனதில் கோபம் பொங்கி எழ அவனைப் பதிலுக்கு முறைத்தாள் வந்தனா.

"நான் ஏன் உங்களிடம் பேச வேண்டும்?"

"உன் வருங்காலக் கணவனிடம் நீ பேசாமல் வேறு யார் பேசுவார்கள்...?"

"வாட்...?"

வந்தனா கோபமாய் ஜெயராமனை முறைத்தாள்... அவளது பார்வை ஆண்டாளிடம் சென்றது. அவளது முகத்திலிருந்து அவளுக்கும் இதில் விருப்பமில்லை என்பது பிடிபட.

"யாரிடம் யார் உறவு கொண்டாடுவது? என் வருங்காலக் கணவன் யாரென்று நான்தான் முடிவு பண்ண வேண்டும். எனக்கு உங்கள் மேல் இன்ட்ரெஸ்ட் இல்லை ஆனந்த் ..வழியை விடுங்கள்" என்று கூறியவாறு விலகி நகர்ந்தாள்.

"எனக்கு உன் மேல் இன்ட்ரெஸ்ட் இருக்கிறதே..."

"ஐ டோன்ட் கேர்..."

"இப்படிச் சொன்னால் எப்படி ஸ்வீட்டி...? நாளையிலிருந்து நான் உன் கம்பெனி பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகிறேன்... இந்த வீக் என்டில் மேரேஜ். நெக்ஸ்ட் மன்த் நாம் நம் ஹனிமூனைக் கொண்டாட வெர்ல்டு டூர் போகப் போகிறேம். எல்லாம் கரெக்டாய் போய்க் கொண்டிருக்கிறது... இதை நீ கேர் பண்ணித்தானே ஆக வேண்டும்?"

"என்னது... என் கம்பெனி பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா...? ஹூ ஆர் யூ...?"

"அதுதான் உன் வருங்காலக் கணவன் என்று சொன்னேனே டார்லிங், அதற்குள் மறந்து விட்டாயா?"

"குட்.. மிஸ்டர் ஆனந்த்.. ஒரு கம்பெனிக்கு உரிமையாளர் ஆக வேண்டுமானால் உழைத்துச் சம்பாதித்து அந்த உழைப்பினால் உரிமையாளர் ஆக வேண்டும். யு நோ.. மிஸ்டர் ஜெயராமன் அப்படித்தான் இந்தக் கம்பெனியின் உரிமையாளர் ஆனார். ஆனால் உழைக்காமலே ஒரு பெண் மூலம் வரும் கம்பெனியின் பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போவதாய் சொல்லிக் கொள்கிறீங்களே... இதற்காக நீங்கள் வெட்கப்பட வில்லையா?"

வந்தனா மிடுக்காய் வினவினாள்.. ஆனந்தின் முகம் மாறியது. ஆனால்.

"அவன் ஏன் வெட்கப்பட வேண்டும்?" என்று கேட்டாள் ஆனந்தின் அம்மா.

அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. மகனை விட்டு விட்டு அவனைப் பெற்ற தாயை திரும்பிப் பார்த்தாள் வந்தனா.

"வேட்கப்படாமல் உங்கள் மகனை வேறு என்ன செய்யச் சொல்கிறீங்க மேடம்?"

"பெருமை படச்சொல்கிறேன். என் மகன் ஒன்றும் ஜீரோ இல்லை. அமெரிக்காவில் படித்து விட்டு அங்கேயே சாப்ட்வேர் என்ஜினியராக வேலை பார்த்துக் கொண்டிருப்பவன்... அவனுக்குப் பெண் கொடுக்க எல்லோரும் நான்.. நீன்னு போட்டி போடுகிறார்கள்..."

"பெண்ணைக் கொடுக்கத்தானே போட்டி போடுகிறார்கள்...? சொத்தைக் கொடுக்க இல்லையே.?"

"சொத்தைக் கொடுக்கிறேன்னு உன் அப்பா தான் தேடி வந்து சொன்னார்... இந்தக் கம்பெனியை எனக்குப் பின்னால் பார்த்துக் கொள்ள நீங்கள்தான் தகுதியான

ஆள்ன்னு என் மகன் கையைப் பிடித்துக் கேட்டுக் கொண்டார் உன் அப்பா. என் மகனும் போனால் போகிறது... சொத்தோடு பெண் வருகிறபோது மற்றது எதற்கு என்று பழகிக் கொண்டிருந்த பெண்ணை விட்டு விட்டு சென்னைக்கு வந்திருக்கிறான். அவன் ஒன்றும் கிடைக்க எளிதானவன் கிடையாது.. புரிந்து கொள். எலிஸபெத்துடன் மூன்று வருடம் லிவிங் டு கெதராக இருந்தவன். ஒரு நொடியில் அவளை விட்டு விலகி இந்தியா வந்து விட்டான். அவனை ஈஸியாய் எடை போடாதே..."

அதற்குள் ஆண்டாள் மகளின் அருகே வந்து அவளின் கையைப் பிடித்துக் கொண்டாள். அத்தோடு நில்லாமல்.

"லிவிங் டுகெதர்ன்னா என்னம்மா?" என்று மகளிடம் சந்தேகம் வேறு கேட்டாள்.

"அதை உங்க ஹஸ்பெண்ட் கிட்ட கேளுங்கம்மா." தகப்பனை வெறுப்புடன் பார்த்தபடி சொன்னாள் வந்தனா ..

ஆண்டாள் ஜெயராமனை நோக்க அவர் சங்கடமடைந்தார்.

"அதை விடு ஆண்டாள்... அதெல்லாம் பாரினில் ஒரு மேட்டரே இல்லை."

"எதெல்லாம்...?"

"அம்மா... நான் சொல்கிறேன் கேளுங்கள்... லிவிங்டுகெதர்ன்னா கூடச் சேர்ந்து வசிக்கிறதுன்னு அர்த்தம்..."

"அப்படியென்றால்...,"

"மிஸ்டர் ஆனந்த் எலிஸபெத் என்ற பெண்ணுடன் மூன்று வருடங்களாகக் குடியும் குடித்தனமுமாய் வாழ்ந்திருக்கிறார். ஆம் ஐ கரெக்ட் மிஸ்டர் ஆனந்த்? அம்மா... உங்கள் ஹஸ்பென்ட் பிடித்துக் கொண்டு வந்திருக்கும் மாப்பிள்ளையின் சரித்திரத்தைக் கேட்டீர்களே...காதெல்லாம் குளிர்ந்திருக்குமே... இவரால் இப்படிப்பட்ட மாப்பிள்ளையைத்தான் தேட முடியும் அம்மா..

என் பாலாவைப் போல உத்தமமான மாப்பிள்ளையைக் கண்டுபிடிக்கவே முடியாது..."

அதுவரை... அவள் பேசியதை ஓர் தீவிரத்துடன் கேட்டுக் கொண்டிருந்த ஆனந்த்.

"ஹூ இஸ் தட் பாலா?" என்று வினவினான்.

"மை மேன்..."

"வாட்...?"

"யெஸ்..."

வந்தனா அங்கிருந்து நகர முற்பட,

"ஹலோ..." என்று விரல் சொடுக்கி அழைத்தான் ஆனந்த். ..வந்தனா நின்று அவன் முகம் பார்த்தாள்.

"நீ மட்டும் ஒழுங்கா... உன் அப்பா என்னவென்றால் என்னிடம் வந்து என் மகளை மேரேஜ் பண்ணிக்கோ என்கிறார். நீ என்னடாவென்றால் எவனோ ஒரு பாலாவை உன் ஆள் என்கிறாய். உனக்கு என்னைப் பற்றிய பேச என்ன தகுதி இருக்கிறது?"

'போதுமா' என்பது போல் தாயைப் பார்த்தாள் வந்தனா.

பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும். சேற்றில் விழுந்த பன்றியின் அருகில் நின்று கொண்டிருந்தால் கூட அந்த துர்வாசனையை தாங்க முடியாமல் நாம் மூக்கைப் பொத்திக் கொள்ள நேரும். அது போல்தான் ஆனந்தின் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்த ஐந்தாவது நிமிடத்திலேயே,

'நீ மட்டும் ஒழுங்கா?' என்று கேட்டு விட்டான்.

இப்போது அவனை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்த்த வந்தனா,

"மிஸ்டர் ஆனந்த்... நீங்கள் வேறு.. நான் வேறு.. நான் பாலாவைத் தவிர வேறு யாரையும் மனதால் கூட நினைக்கவில்லை. உங்களைப் போல் கூட வாழ்ந்த பெண்ணை உங்கள் அம்மா சொன்னது போல் ஓர் நொடியில் கழற்றி விட்டு விட்டு அடுத்தவர் கம்பெனியை ஆள ஓடி வரவில்லை... என்னிடம் நின்று பேசக்கூட உங்களுக்கு தகுதி கிடையாது..." என்று கூறி விட்டு அங்கிருந்து விரைவாக அகன்று விட்டாள்.

மகளைப் பின் தொடர்ந்து ஆண்டாளும் சென்றுவிட அந்த வரவேற்பறையில் கனத்த மௌனம் நிலவியது. ஜெயராமன் மன்னிப்புக் கோரும் தோரனையுடன்...

"ஐ ஆம் ஸாரி ஆனந்த்..." என்றார்.

"இட்ஸ் ஓ.கே. அங்கிள்... பட் நீங்கள் உங்கள் டாட்டரை கன்வின்ஸ் பண்ணி வைப்பது மிகவும் அவசியம்."

"கவலைப்படாதீர்கள் ஆனந்த்.. நான் பார்த்துக் கொள்கிறேன்."

"ஓகே அங்கிள்.. ஸீயு.. பை பை... மாம், டாட்.. லெட் அஸ் கோ."

அவர்கள் கிளம்பிச் சென்று விட்டனர். ஜெயராமன் ஆத்திரத்துடன் மாடியேறி வந்தனாவின் அறைக்குப் போனார். அங்கோ வந்தனாவை சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தாள் ஆண்டாள்.

"வந்தனா... நீ கவலைப்படாதே..."

"இதற்கு மேல் கவலைப்படாமல் எப்படி இருப்பது? உங்கள் ஹஸ்பெண்டின் அராஜகம் அளவுக்கு மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. என்னால் இதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை அம்மா..."

"நான் இருக்கிறேன் வந்தனா... உன்னைக் கஷ்டப்பட வைக்க விட மாட்டேன். எனனை நம்பு..."

"எனக்கு வாழ்வதற்கான நம்பிக்கையே போய் விட்டது அம்மா..."

"நான் இருக்கிறேன்னு சொல்கிறேனில்லையா? அப்புறம் ஏன் கலங்குகிறாய்? கலங்காதே..."

"எதற்கு கலங்காதேன்னு சொல்கிற?" புயல் போல் கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் வந்த ஜெயராமன் கேட்டார்.

ஆண்டாள் வெறுப்புடன் அவர் முகத்தைப் பார்த்தாள்.

"நீங்கள் எல்லாம் ஒரு மனிதரா?"

"இத்தனை நாள் என்னுடன் வாழ்ந்து ஒரு பெண்ணையும் பெற்று விட்டு இப்போது போய் இப்படி ஒரு சந்தேகமா?"

"உங்களுடன் வாழ்ந்திருக்கிறேன்னு நினைத்தாலே நெருப்பாய் இருக்கிறது... சே...! பெற்ற பெண்ணின் வாழ்க்கையோடு விளையாடுகிறீங்களே."

"நானா விளையாடுகிறேன்? உன் மகள் தான் விளையாடுகிறாள் . நான் பார்த்து வைத்திருக்கும் மாப்பிள்ளையை அவமானப்படுத்துகிறாள்."

"நீங்கள் பார்த்து வைத்திருக்கும் மாப்பிள்ளையின் லட்சணத்தைத்தான் நாங்கள் பார்த்தோமே... எவளோ

ஒருத்தியுடன் குடும்பம் நடத்தியவனை இழுத்துக் கொண்டு வந்து இவன்தான் மாப்பிள்ளை என்கிறீங்களே உங்களுக்கு மனச்சாட்சி இருக்கிறதா?"

"நான் பிஸினஸ் மேன்... மனச்சாட்சியுடன் இருந்தால் பிஸினெஸ்ஸில் வெற்றி பெற முடியாது. புத்திசாலித்தனமாக இருந்தால்தான் பிஸினெஸ்ஸில் வெற்றி பெற முடியும். ஒழுக்கமானவனாக நான் தேடிப் பிடித்து ஒருவனைக் கொண்டு வருகிறேனென்று வைத்துக் கொள்... உன் மகள் இப்போது இவனிடம் சொன்னது மாதிரி அவனிடமும் 'பாலா... மைமேன்'னு சொல்லுவாள். அவன் ஓடி விடுவான். இதுவே இவனாயிருக்கப் போய் உங்கள் டாட்டரை கன்வின்ஸ் பண்ணுங்கள்னு சொல்லிவிட்டுப் போய் விட்டான். இவனுக்கு இதெல்லாம் சகஜம்.. எனக்கு ஓடாத மாப்பிள்ளைதான் வேண்டும்..."

"நீங்கள் எப்போதிருந்து இப்படி மாறினீங்க ?"

"என்றைக்கு உன் மகள் என் எதிரியின் மகனைக் காதலிப்பதை அறிந்தேனோ... அப்போதிருந்து இப்படி மாறி விட்டேன்... எனக்கு என் வெற்றிதான் முக்கியம்... மற்றவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை..."

"அம்மா... நான் இந்த வீட்டில் இருந்தால்தானே உங்கள் ஹஸ்பென்ட் கண்டவனையும் அழைத்து வந்து என் முன் நிறுத்தி கேள்வி கேட்க வைப்பார்? நான் வீட்டை விட்டுப் போய் விடுவேன்..."

"போ... போய் பார்... உன்னால் இந்த வீட்டை விட்டு ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. எப்போது நீ கல்யாணத்தை நிறுத்திக் காட்டுகிறேன்னு என்னிடம் சவால் விட்டாயோ... அப்போதே உன்னை வீட்டுக்குள் அடைத்துப் போடணும்னு நானும் முடிவு பண்ணிட்டேன்... உன் பதவியைப் பறித்தும் விட்டேன்... இனிக் கம்பெனிக்குள் நீ காலடி வைக்க முடியாது... ஆனந்த் பார்த்துக் கொள்வான். வீட்டைச் சுற்றிக் காவல் போட்டிருக்கிறேன். யாரிடம் சவால் விடுகிறாய்? எனக்கு

சவால் பிடிக்காது... அப்படி சவால் வந்து விட்டால் ஜெயித்துக் காட்டாமல் நான் விட மாட்டேன்."

"நான் போலீஸில் கம்ப்ளெண்ட் கொடுப்பேன்"

"அப்படி நீ செய்தால்... உனக்கு மனநலம் சரியில்லை... பைத்தியம் பிடித்திருக்கிறதுன்னு நான் சொல்வேன். என்னிடம் பணம் குவிந்திருக்கிறது. நான் நினைத்தால் உன்னை பைத்தியம்ன்னு முத்திரை குத்தி விடவே முடியும்..."

"நோ அதர்வேன்னாலும் நான் நீங்கள் சொன்ன மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்ட மாட்டேன்... செத்துவிடுவேன்."

ஆண்டாளின் உடல் பயத்தில் சிலிர்த்தது. ஜெயராமனோ அந்த வார்த்தைகளைக் கேட்டும் உடல் பதறாமல் நின்றார்.

"செத்துப்போ... செத்துப் போய்விடு... அதுவும் எனக்கு வெற்றிதான். விசுவநாதனின் மகன் காதலித்த பெண் செத்துப் போய் விட்டால் அவன் பித்துப் பிடித்து அலைவான். நான் அதைப் பார்த்து சந்தோஷப்படுவேன். அதனால் நீ செத்தே போய் விடு. அதனால் எனக்கு ஒரு குறையும் வரப் போவதில்லை... ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள். ஒன்று நீ இந்த ஆனந்தை திருமணம் செய்து கொள்ள வேண்டும். இல்லையேன்றால் செத்து ஒழிந்துவிட வேண்டும்... எனக்கென்ன... நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொண்டு.. ஒன்றல்ல... ஆறு குழந்தைகள் கூடப் பெற்றுக் கொள்வேன். எனக்கென்ன வந்தது. இதோ... உனக்கு ஜால்ரா அடித்துக் கொண்டிருக்கிறாளே... உன் அம்மா... இவள் எனக்கு மனைவியாக இருக்கவே தகுதியில்லாதவள். எப்போது என்னை சப்போர்ட் பண்ணாமல் இவள் உன்னை சப்போர்ட் பண்ண நினைத்தாளோ.. அப்போதே நான் இவளை டைவர்ஸ் பண்ண முடிவு செய்து விட்டேன். ஆனந்தின் பெரியம்மா பெண் ஒருத்தி அமெரிக்காவில் இருக்கிறாள். அவளும் டைவர்ஸிதான். அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். ஒழுங்காய்... நீ ஆனந்தைக்

கல்யாணம் பண்ணிக் கொண்டால் இவள் பெயருக்காவது என் மனைவியென்ற கௌரவத்தோடு மீதிக் காலம் வாழலாம். இல்லையென்றால் இவளை டைவர்ஸ் பண்ணி விடுவேன். நீயே முடிவு செய்து கொள்" ஜெயராமன் வெளியேறி விட்டார்.

வந்தனா அதிர்ச்சி மேல் அதிர்ச்சி தாக்கியவளாய் மயங்கிச் சரிந்தாள். அருகில் நின்ற ஆண்டாள் மகளைத் தாங்கிப் பிடித்துப் படுக்கையில் படுக்க வைத்தாள். வந்தனாவின் மெல்லிய மனது ஜெயராமனின் வார்த்தைகளைத் தாங்க முடியாமல் துடிக்கும் துடிப்பை ஆண்டாளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. மகளின் முடியை நீவி விட்டவாறு சிந்தனையில் ஆழ்ந்தாள்.

ஆண்டாள் புத்திசாலி மட்டுமல்ல, தன்மானம் கொண்டவள். இருபது வருடங்களுக்கும் மேலாக உடன் வாழ்ந்த கணவன் ஒரே நிமிடத்தில் அந்த உறவை அறுத்துக் கொள்வதைப் பற்றிப் பேசிய பின் அவன் முகம் பார்த்துப் பேச அவள் விரும்பவில்லை. பெற்ற குழந்தை வளர்ந்து ஆளாகிக் கண் முன் நிற்கும்போது அதன் மனதுக்குப் பிடித்த வாழ்க்கையை அமைத்துத் தர முற்படாமல் தன் பகையுணர்ச்சிக்குப் பலிகடா ஆக்க முற்படும் கொடிய சிந்தனை கொண்டவனை நினைக்கும் போதே அவளுக்கு வேம்பாகக் கசந்தது.

'செத்துப் போ' என்று சொல்லிவிட்டானே.. பாவி.. நான் பெற்ற தங்கத்தை சாகச் சொல்கிறானே... இதற்கா என் பெண்ணைப் பொத்திப் பொத்தி வளர்த்தேன்.'

ஆண்டாளின் கண்களில் நீர் சுரந்தது .. மெல்ல கண் விழித்தாள் வந்தனா... தாயின் கண்ணீர் முகத்தைக் கண்டு அவளும் அழுதாள்.

"என்னால்தானே அம்மா... என்னால்தானே.. உங்களை அப்பா அப்படியெல்லாம் சொல்லி விட்டார்."

"அவனை அப்பான்னு சொல்லாதே வந்தனா."

"இல்லை அம்மா வெறுத்துப் பேசாதீங்க ... அப்பா உங்கள் மேல் எவ்வளவு அன்பாக இருந்தார் என்பதை நான் அறிவேன்."

"அந்த அன்பு நிலையானதாய் இல்லையே வந்தனா. உனக்கு இது புரியாது. கணவன் மனைவி பந்தம் என்பது இறுதிவரை தொடர்ந்து வருவது... இடையில் அறுத்துக் கொள்வேன்னு மிரட்டினால்...? அப்படி ஒரு வாழ்க்கையை வாழவே கூடாது.. அது என்னை நானே அவமானப்படுத்திக் கொள்வது ஆகும்."

"அம்மா.. அப்பா என் மேல் உள்ள கோபத்தால் அவரை விட்டு எனக்கு நீங்கள் ஆதரவாய் இருப்பதால் அப்படிப் பேசிவிட்டார்."

"படித்த பெண் தானே நீ. முட்டாள் போல எப்படி ஆனாய்? அவர் செய்வது எல்லாம் சரி என்று சொன்னால் மட்டுமே நான் அவருக்கு பெண்டாட்டியாய் இருக்க முடியும். தப்புன்னு சொன்னால் அந்த பந்தம் அறுந்து விடும் என்றால் அந்த பந்தத்திற்கு என்ன மதிப்பு? எனக்குத் தான் என்ன மதிப்பு?" மதிப்பில்லாத ஒரு வாழ்க்கையை இத்தனை நாளாய் வாழ்ந்து வந்திருக்கிறேன் என்பதை நினைக்கும்போதே அருவெறுப்பாய் இருக்கிறது வந்தனா. நீ மகள் என்ற இடத்திலிருந்து பேசுகிறாய். நான் அந்த மனிதனின் பெண்டாட்டியாய் வாழ்ந்த கொடுமையிலிருந்து பேசுகிறேன். இது என் தனிப்பட்ட காயம். உன்னால் இதற்கு மருந்து போட முடியாது."

"அம்மா... அப்பா என்னைப் பணிய வைக்க வேண்டுமென்பதற்காக சொன்ன மிரட்டல் வார்த்தைகள் அவை."

"ஒருவேளை நீ அவர் சொல்வதை கேட்டு அந்த கேடு கெட்டவனை கல்யாணம் செய்து கொண்டாலும் கூட நான் இந்த வீட்டை விட்டு வெளியேறி விடுவேன்... வந்தனா. நீ போனால் இன்னொரு பெண்டாட்டி என்று மனைவியைப் பார்த்துச் சொல்லும் மனிதனோடு குடும்பம் நடத்த இனியும் என்னால் முடியாது. நீ செத்தால் ஒன்றுக்கு ஆறு

குழந்தைகள் பெற்றுக் கொள்வேன் என்று பெற்ற மகளைப் பார்த்துப் பேசும் பேயுடன் குடும்பம் நடத்த எந்த மனுஷியால் முடியும்? மனைவி என்பவள் குழந்தை பெற்றுத் தரும் மெஷினா? குழந்தை என்பது ஒன்று போனால் மற்றொன்று என்ற அளவில் மட்டும்தானா? மெஷினோடு பழகிப் பழகி இந்த மனிதனுக்கு மனித உணர்வே இல்லாமல் போய் விட்டது. நானும் , போகட்டும் இளம் வயதில் பணம் இல்லாததால் தாழ்வுணர்ச்சி வந்து விட்டது... அதுவும் நன்மைக்குத்தானே... தங்கை புருசனைத் தோற்கடிக்க வேண்டுமென்ற துடிப்பு இருந்தால் முன்னேறி விடுவார். அதனால் அதை வளர்ப்போமென்று அவருக்கு ஒத்துப்பாடி துணையாய் நின்றேன். இவர்தான் பணத்தால் அவர்களை ஜெயித்து விட்டாரே... இன்னும் என்ன பழி வாங்கும் பகையுணர்ச்சி?"

"ஒருவேளை... மாமா அன்று பரம்பரைப் பெருமையைப் பற்றிப் பேசியிருக்கக் கூடாதோ... அதனால் அப்பாவின் மனம் காயப்பட்டு விட்டதோ..."

"பரம்பரைப் பெருமையைப் பற்றி இதற்கு முன்னால் அந்த மனுசன் பேசியிருக்கிறாரா வந்தனா? இல்லை... நம்மைவிடப் பணக்காரன் என்ற தலைக்கனமாவது அவரிடம் இருந்திருக்கிறதா? அவர் நிறை குடம். உன் அப்பா குறை குடம். குறை குடம் கூத்தாடத்தானே செய்யும்? நான் தெரியாமல்த்தான் கேட்கிறேன். ஒரு ஊரில் பெரிய வீட்டாருக்கு மட்டும்தான் பரம்பரைப் பெருமை உண்டா? அன்றாடம் கூலி வேலை செய்யும் விவசாயத் தொழிலாளியைப் போய் கேட்டுப் பார்.. அவனும் அவனது பரம்பரைப் பெருமையைக் கூறுவான்... அவனுடைய முன்னோர்கள் வைத்துச் சென்றிருக்கும் ஓட்டைக் குடிசையையும்... கையளவு நிலத்தையும் பெரிதாக எண்ணுவான். அது கிராமத்தின் கலாச்சாரம். யாரும் யாரையும் விடக் குறைந்தவர்கள் இல்லை. உன் அப்பா உன் அத்தை புருசனைக் கேவலப்படுத்திப் பேசிய பின்புதான் உன் மாமா வாயைத் திறந்தார். மறந்து விடாதே..."

"ஆனாலும்... அப்பாவும் பாவம் தானே அம்மா?"

"பாவம்தான்.. வசதியான இடத்தில் வாழ்க்கைப் பட்டும் கூட அண்ணன் மேல் உயிராய் இருந்தாளே சிவகாமி... அவளுடைய பாசத்தை உணராதவர் உன் அப்பா.. பாவம்தான் அவர். ஊருக்கே பெரிய பண்ணையாராய் இருந்தாலும் மனைவிக்கு மதிப்புக் கொடுத்து அவளுடன் கூடப் பிறந்தவனை கௌரவித்தாரே விசுவநாதன். அவருடைய சொந்தத்தை தூக்கி எறிந்தாரே... பாவம்தான் உன் அப்பா. இத்தனை கொடுமைகள் அவர் செய்தும்... நீ செத்துப்போ என்று கூறியும் அவர் மேல் பரிதாபப்படும் உன் அருமையை உணராமல் போனாரே அவர் பாவம்தான்" ஆண்டாளின் முகம் வேதனையால் சுருங்கியது.

12

"வந்தனா... கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்தாலும் உண்மையான அன்பும் பாசமும் கிடைத்து விடாது. பணத்தால் எதையும் வாங்கலாம். அன்பையும்... பாசத்தையும் வாங்கிவிட முடியாது. இதை உணராத உன் அப்பா பாவம்தான்... அதனால் பாவங்களைச் செய்யத் துணிந்து விட்ட பாவியாகி விட்டார்... இனி அவரைச் சொல்லித் திருத்த முடியாது வந்தனா... அவர் தானாகத் தான் திருந்த வேண்டும்..."

"அம்மா... நீங்கள் ஆரம்பத்திலேயே அப்பாவிடம் இதையெல்லாம் எடுத்துச் சொல்லி அவரைத் திருத்த முயற்சி பண்ணியிருக்கலாமே."

"இதோ பார் வந்தனா.. பணத்தின் மேலும் ஆடம்பர வாழ்க்கையின் மேலும் ஆசையில்லாத மனிதர்களே கிடையாது.. அப்படி இருந்தால் அவர்கள் துறவிகளாக இருப்பார்கள்... பணத்தேவை என்பது உலகில் எல்லோருக்குமே அவரவர் எண்ணப்படி இருக்கிறது... உன் அத்தை வைர நகைகளை அன்றாடம் போடும் நகைகளாக இயல்பாக மாற்றி... மாற்றி அணிந்து கொண்டு சுகபோக வாழ்க்கையை வாழும் போது எனக்கு ஏக்கம் வருவது

இயற்கை. அவள் மேல் பொறாமை வருவதும் இயல்பானது. நான் ஒன்றும் புத்தர்... ஏசு... காந்தி இல்லை. எளிமையான வாழ்க்கையிலேயே இருந்து விடலாம்ன்னு சொல்வதற்கு.. உன் அப்பாவுக்கு கம்ப்யூட்டர் தொழிலில் திறமை அதிகம். கம்ப்யூட்டர் என்ஜினியரிங் படித்தவர்... வாழ்க்கையில் முன்னேறட்டுமே என்றுதான் அவரது போட்டி உணர்வை தூண்டி விட்டேன்... பில்கேட்ஸை போட்டியாளராக நினைப்பதை விட்டு விட்டு எதிரியாக நினைத்து எதிரியைப் பழி வாங்குகிறேன் பேர்வழின்னு எந்தக் கீழ்நிலைக்கும் இறங்கத் தயாராகக் கூடாது."

ஆண்டாள் கண் மூடி அங்கிருந்த சோபாவில் சாய்ந்து படுத்து விட்டாள்... வந்தனா அமைதியின்றி விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தாள். அறையின் அழைப்பு மணி ஒலித்தது. வந்தனா எழ முயல.

"நீ போக வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்." என்ற ஆண்டாள்... எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

வீட்டு வேலை செய்யும் பாஞ்சாலி நின்று கொண்டிருந்தாள்.

"என்ன...?"

"ஐயா... உங்களையும் சின்னம்மாவையும் சாப்பிட வரச் சொன்னாரும்மா."

"நாங்கள் சாப்பிட கீழே வரவில்லை... எனக்கும் வந்தனாவிற்கும் இங்கேயே சாப்பாடு கொண்டு வந்து விடு... இப்போது மட்டுமில்லை... இனி எப்போதுமே இப்படித்தான்... புரிந்ததா...?"

"சரிங்கம்மா..." அவள் போய் விட்டாள்.

அறைக்கதவைத் தாழிட்டு விட்டுத் திரும்பி வந்தாள் ஆண்டாள். வந்தனாவின் விழிகளில் ஒரு விடுதலை உணர்வு தெரிந்தது.

"தேங்க்ஸ்ம்மா..."

"எதற்குத் தேங்க்ஸ்.. இனி நாம் இந்த ரூமை விட்டு வெளியேற வேண்டாம்... அப்படி வெளியேற வேண்டிய நேரம் வரும்போது நானே உன்னை அழைத்துப் போகிறேன்."

சற்று நேரத்தில் பாஞ்சாலி சாப்பாடு கொண்டு வந்தாள். மகளை அழைத்துச் சாப்பிட வைத்து விட்டுத் தானும் சாப்பிட்டு முடிந்தாள் ஆண்டாள். பாஞ்சாலி பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கிளம்பும்போது "பாஞ்சாலி..." என்று அழைத்து ஆண்டாள் அவளிடம் தாழ்ந்த குரலில் ஏதோ கூறினாள்.

"சரிங்கம்மா" என்று தலையாட்டிய பாஞ்சாலி அங்கிருந்து சென்று விட்டாள்.

ஆண்டாள் கதவைத் தாழிட முயன்றபோது அதைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்தார் ஜெயராமன்.

"சாப்பிட ஏன் கீழே வரவில்லை..." கோபத்துடன் கேட்டார்.

"உங்கள் முகத்தைப் பார்த்தால் சாப்பாடு என் தொண்டையில் இறங்காது..." அலட்சியமாக பதில் சொன்னாள் ஆண்டாள்.

"ஓகோ... அப்போது நீ எங்கே தூங்கப் போகிறாய்?"

"உங்களைப் பார்த்தால் சாப்பாடே தொண்டையில் இறங்காது என்கிறபோது தூக்கம் மட்டும் எங்கிருந்து வரும்?"

"ஸோ.. இனி நீ உன் மகளோடுதான்...?"

"ஆமாம்..."

பேச வார்த்தைகளற்றுப் போனது போல் அவர்கள் இருவரின் இடையிலும் கனத்த மௌனத்திரை விழுந்தது. ஆண்டாள் அவரது முகத்தைப் பார்ப்பதை தவிர்த்து அவருக்கு முதுகு காட்டித் திரும்பி நின்று கொண்டிருந்தாள். கோபத்துடன் அவளை முறைத்த ஜெயராமன் செய்வதறியாது வெளியேறி விட்டார்.

அறைக் கதவை தாழிட்டு விட்டு விளக்கை அணைத்து விட்டு மகளின் அருகே வந்து படுத்த ஆண்டாளின் விழிகளில் நீர் வடிந்தது. மகள் அறியாமல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

அவள் பெற்ற தாய். எப்போது வந்தனாவின் வாயிலிருந்து 'நான் செத்து விடுவேன்' என்ற வார்த்தைகள் வந்ததோ... அப்போதே மகளை தனித்து விடுவது ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டாள். போதாக் குறைக்கு ஜெயராமனும் 'நீ செத்து விடு' என்று சொல்லி வைத்து விட்டார். இனி மகளை விட்டு ஒரு கணம் கூட நகரக் கூடாது என்ற முடிவுக்கு அப்போதே வந்து விட்டாள் ..

வந்தனா மென்மையான மனம் கொண்டவள். தகப்பனின் உணர்வுகளில் பரிதாபம் கொண்டபள். அவர் பக்கமும் சிறிய நியாயம் இருக்கிறதோ என்று எண்ணும் தன்மை கொண்டவள். இப்போது புதிதாக தன்னால் தன் தாயும், தந்தையும் மனதால் பிரிந்து விட்டனர் என்ற குற்ற உணர்ச்சியும் சேர்ந்து விட்டது. எந்த நேரம்... அவள் மனம் பலவீனப்பட்டு ஏதேனும் தவறான முடிவுக்குப் போய் விடுவாளோ என்ற பயம் ஆண்டாளின் மனதில் எழுந்து விட்டது.

தனிமை.. சில நேரம் இனிமையானது. சில நேரம் கொடுமையானது. பலவீனப்பட்ட அந்த ஓர் நொடியில் மனம் தளர்ந்து விட்டால் அவள் தவறான முடிவுக்குப் போய் தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது?

ஆண்டாள் மகளை விட்டு இமைப்பொழுதும் விலகாமல் அடை காக்க ஆரம்பித்து விட்டாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் காபி கொண்டு வந்த பாஞ்சாலி... ரகசியமாய் ஆண்டாளிடம் ஒரு கவரைக் கொடுத்தாள்... ஆண்டாள் அதை வாங்கிக் கொண்டு வேறு எதையோ தாழ்ந்த குரலில் கூற... பாஞ்சாலியும் தாழ்ந்தகுரலில் பேசினாள். காபி தம்ளர்களை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

வந்தனா குளித்து உடை மாற்றி வந்தபோது பாஞ்சாலி காலை டிபனைக் கொண்டு வந்திருந்தாள். ஆண்டாள் குளியலறையில் இருந்து அப்போதுதான் வெளியே வந்தாள்.

"அம்மா.. ஐயா ஒரு விஷயம் சொல்லச் சொன்னாரு..."

"என்ன பாஞ்சாலி."

"சின்னம்மா இன்னையிலிருந்து கம்பெனிக்கு வர வேண்டாமாம். யாரோ.. ஆனந்தாம்... அவரு இன்னையிலிருந்து கம்பெனியைப் பார்த்துக் கொள்வாராம்..."

முதல் நாளே... ஜெயராமன் கூறியதுதான்... மீண்டும் அதை உறுதிப்படுத்துகிறார்.

வந்தனா துக்கத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவள் வளர்த்த கம்பெனி அது. அவளுக்கென்று ஓர் அடையாளத்தை தந்த கம்பெனி அது. ஆனால் அவளுக்கு இன்று அதில் உரிமையில்லை. அவளது உழைப்பிற்கு மதிப்பில்லை. உரிமை கிடைக்க வேண்டுமானால் தன் மனதுக்குப் பிடித்தவனைத்தான் மணப்பேன் என்ற அவளது உறுதியை விட்டுவிட வேண்டும். நிலாக்கால இரவுகளின் நினைவுகளை கொன்று மனதில் புதைத்து விடவேண்டும்.

'போராடும் வாழ்க்கையிலே

போரிடவே நான் சளைக்கவில்லை

இருந்தபோதும் என் இறைவா..

இறுதிவரை எனக்குப் போர்தானா?'

மனம் கதறியது. வந்தனா பேச்சின்றி சோர்ந்து அமர்ந்தாள். ஆண்டாள் மகளின் முகத்தை நிமிர்த்தி அவளது கண்களுக்குள் உற்றுப் பார்த்தாள். மகளின் மனவேதனையை அவளது கண்கள் பிரதிபலித்தது.

"எதற்கு மனம் உடைகிறாய்? உன் ஆசைப்படி பாலாவை கல்யாணம் பண்ணிக் கொண்டால் நீ இங்கு இருக்க முடியுமா? சென்னையை விட்டு... இந்தக் கம்பெனியை விட்டுப் போய்த்தானே ஆக வேண்டும்?"

"அம்மா... அப்போது அப்பாவிடம் தான் பொறுப்பை ஒப்படைத்து விட்டுப் போவேன்.. இது அவரது உழைப்பில் உருவான கம்பெனி. நான் பொறுப்பேற்றுக் கொண்ட பின் வளர்ந்திருக்கிறது. என் உழைப்பில் வளர்ந்த கம்பெனியை அதை உருவாக்கியவரிடம் தான் ஒப்படைத்து விட்டுப் போவேன்.. அது சரியான செயல் அம்மா. இப்போது யாரோ ஒரு படித்த பொறுக்கியிடம் கம்பெனி கை மாறியிருக்கிறது... விதைத்தது அப்பா... வளர்த்தது நான்... உரிமை கொண்டாடுவது தெருவில் போகும் எவனோ ஒருவன்... அப்பா.. யாரையோ பழி வாங்குவதாய் நினைத்துக் கொண்டு தானே பலியாகிக் கொண்டிருக்கிறார் அம்மா."

"அதற்கு நாம் என்ன செய்ய முடியும் வந்தனா ?. அவன் கெட்டிக்காரன். குறுக்கு வழிகளை அறிந்தவன். கீழ் புத்தி கொண்டவன்.. உன் அப்பாவிற்கு பெண்ணாசையை உண்டு பண்ணியிருக்கிறான். நேற்று இரவு உன் அப்பா சொன்னதைக் கேட்டுக் கொண்டு தானே இருந்தாய்?"

"ஆமாம்.. ஆனந்தின் பெரியப்பா மகள்ன்னு ஏதோ சொன்னார்..."

"இனி நாம் செய்ய எதுவுமே இல்லை வந்தனா... உன் அப்பா அவனிடம் மாட்டிக் கொண்டார். அவர் தானாய்த் தான் விடுபட்டு வர வேண்டும். நம்மால் அவரை விடுவிக்க முடியாது... முதலில் நாம் நம் விடுதலையைப் பற்றிப் யோசிப்போம்..."

"நம்மால் தப்ப முடியுமா அம்மா..."

"ம்ம்.. அதை நான் யோசிக்கிறேன். நீ சாப்பிட்டு விட்டுத் தூங்கு.. அம்மா இருக்கிறேன். கவலைப்படாதே..."

ஆண்டாள் மகளை சாப்பிட வைத்தாள். பின்னர் தானும் சாப்பிட்டு விட்டு கதவைத் திறந்து வெளியே சென்று பார்த்தாள்.

பாஞ்சாலி விரைந்து வந்தாள்.

"போய் விட்டாரா...?"

"போய் விட்டார்..."

"சரி... நீ போ..."

உள்ளே வந்து அறைக்கதவை தாழிட்டாள். பாஞ்சாலி கொடுத்த கவரைப் பிரித்தாள். அதில் புது சிம் கார்டு இருந்தது. எடுத்து அவளுடைய போனில் இருந்த பழைய சிம் கார்டை அகற்றிவிட்டு புது சிம்கார்டை போட்டாள் .

"என்னம்மா செய்கிறீங்க ?"

வந்தனாவின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். வந்தனா கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

"நீ இன்னும் தூங்கவில்லையா?"

"இது என்ன இரவா... தூங்குவதற்கு... நீங்கள் என்ன செய்கிறீங்க ?"

"பார்த்தால் தெரியவில்லையா? சிம் கார்டை மாற்றுகிறேன்."

"எதற்காக?"

"என் புத்திசாலிப் பெண் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறாளே... என் பழைய சிம் கார்டில் போனை ஒட்டுக் கேட்க உன் அப்பா ஏற்பாடு பண்ணியிருந்தால் என்ன செய்வது?"

வந்தனாவிற்கு தாயின் செய்கை ஆச்சர்யத்தை அளித்தது. ஆண்டாள் புத்திசாலி என்பது அவளுக்குத் தெரியும். இவ்வளவு புத்திசாலியா?

"வெல்டன் மம்மி... யாருக்குப் போன் பண்ணப் போகிறீங்க ?"

"யாருக்கோ..."

ஆண்டாள் எழுந்து பாத்ரூமுக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டாள். சற்று நேரம் கழித்து வெளியே வந்தவள்... அறையில் இருந்த டி.வி.யைப் போட்டுப் பார்க்க ஆரம்பித்தாள்.

வந்தனாவால் ஆண்டாளின் முகத்திலிருந்து எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போதும் சரி.. அடுத்த வந்த இரண்டு நாட்களிலும் சரி... அவள் அமைதியாகவே இருந்தாள். அவ்வப்போது சிம்கார்ட் மாற்றி பாத்ரூமிற்குள் சென்று பேசி வருவாள்.

"ஏன்ம்மா... மாற்றிய சிம் கார்டிலேயே போன் இருந்தால் என்ன?"

"உன் அப்பா ஊடே கூப்பிட்டு ' ஸ்விட்ச் ஆப்' என்று வந்து விட்டால் நான் சிம்கார்டை மாற்றியிருப்பதைக் கண்டுபிடித்து விடுவார்..."

ஆண்டாளிடம் எல்லாவற்றிலும் தெளிவு இருந்தது. அவள் ஏதோ முயற்சியில் இறங்கியிருக்கிறாள்.

அது எது என்பது வந்தனாவிற்குப் புரிந்தபோதோ தாயின் கெட்டிக்காரத் தனத்தை நினைத்து அவளுக்கு ஆச்சர்யம் தாளவில்லை.

## 13

ஆண்டாள் ஆங்கிலத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவள். ஜெயராமன் பணிபுரிந்த கம்பெனியில் கூட வேலை பார்த்தவள். அவளது சுறுசுறுப்பையும் புத்திசாலித் தனத்தையும் கவனித்த ஜெயராமனுக்கு அதனாலேயே அவள் மேல் ஓர் வித ஈர்ப்பு ஏற்பட்டு நாளடைவில் காதலாக மாறிப் போனது. தன் புத்திசாலித்தனத்தால் ஒருவனை காதலிக்கவே வைத்த ஆண்டாள். தன் மகளின் வாழ்க்கை பட்டுப் போவதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருந்து விடுவாளா?

இரண்டு நாட்கள் கழிந்த பின்னர் ஓர் நாள் காலை ஆண்டாள் வந்தனாவிடம்,

"உன் துணிகளை பேக் பண்ணிக்கோ வந்தனா... உன் செர்டிபிகேட்டை எடுத்து வை..."என்று கூறினாள்.

"எதற்கும்மா..." வந்தனா புரியாமல் கேட்டாள்.

"சொன்னதைச் செய்.. உன் நகைப் பெட்டி எங்கே?"

வந்தனா எடுத்துக் கொடுத்ததை வாங்கி தன் நகைப் பெட்டியுடன் சேர்த்து வைத்துக் கொண்டவள் தன்னுடைய துணிகளின் அடியில் நகைப் பெட்டியை வைத்து மூடினாள். கைப்பையை எடுத்து தயாராக வைத்துக் கொண்டாள். வந்தனாவின் மூன்று பெட்டிகளையும் எடுத்து அடுக்கி வைத்துக் கொண்டவள் அவளுடைய கைப்பையையும் எடுத்து வந்தனாவின் கையில் கொடுத்தாள்.

"வைத்துக் கொள். எந்த நேரமும் நாம் வெளியேற வேண்டியிருக்கும்."

"ஆனால்... அப்பா வீட்டைச் சுற்றிக் காவல் வைத்திருக்கிறாரே..."

"காவலை உடைக்க காவலே வரப் போகிறது."

"புரியவில்லையே..."

"இப்போது போலீஸ் இங்கே வரப்போகிறது..."

ஆண்டாள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே.. அவர்களது அறைக் கதவு தட்டப்பட்டது. ஆண்டாள் ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

வெளியே பெண் போலீஸார் நின்று கொண்டிருந்தனர்.

"நீங்கள்தானே மிஸஸ் ஜெயராமன் ?..."

"நான் மிஸஸ் ஆண்டாள்..."

"ஸாரி.. நீங்கள்தானே ஆண்டாள்?"

"ஆமாம்..."

"வந்தனா என்பது யார்?"

"இதோ இருக்கிறாளே... இவள்தான்... என் மகள்..."

"கீழே வாங்க."

ஆண்டாள் மகளுடன் கீழே இறங்கினாள். அங்கே அஸிஸ்டென்ட் போலீஸ் கமிஷனர் அமர்ந்திருந்தார். அவர் அருகே இன்னும் இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஜெயராமன் அவர்கள் முன்னால் எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க அமர்ந்திருந்தார்.

"மிஸ்டர் ஜெயராமன்... நீங்கள் உங்கள் மகளின் விருப்பமில்லாமல் அவங்களுக்கு திருமண ஏற்பாடுகள் செய்வதாகவும் வீட்டுக் காவலில் வைத்திருப்பதாகவும் எனக்கு உங்கள் மனைவி புகார் கொடுத்திருக்கிறார்கள். அது உண்மைதான் என்பது இங்கு வந்தவுடன் எங்களுக்குப் புரிந்து விட்டது. இதற்கு நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்?"

"என் மனைவியும்... மகளும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்."

"இரண்டு பேருமேவா.. குட்..."

ஏ.ஸி. ஆண்டாளைப் பார்க்க அவள் தன் கைப்பையிலிருந்து இரண்டு பேப்பர்களை எடுத்து அவரிடம் கொடுத்தாள். அதைப் படித்துப் பார்த்தவர் ஜெயராமனிடம் அவற்றைக் காண்பித்தார்.

"பாருங்கள் மிஸ்டர் ஜெயராமன்... டாக்டர் கைலாசம்.. தி கிரேட் சைக்கியாட்ரிஸ்ட் இன் தி சென்னை... இந்த செர்டிபிகேட்களை கொடுத்து இருக்கிறார்... உங்கள் மகள்... மனைவி இருவரின் மனநிலையும் மிகச் சரியாக இருக்கிறது என்று இந்த செர்டிபிகேட்கள் சொல்கின்றன"

ஜெயராமன் திணறினார்.

"நான் ஏன் உங்களை உங்கள் மனைவி கொடுத்த கம்ப்ளைண்ட்டின் பெயரில் அரெஸ்ட் பண்ணக் கூடாது மிஸ்டர் ஜெயராமன்."

"தேவையில்லை சார்..." ஆண்டாள் மறுத்துப் பேசினாள்.

"நானும் என் மகளும் இந்த வீட்டை விட்டு வெளியேறிவிட விரும்புகிறோம். எங்களை பாதுகாப்பாய் வெளியே அழைத்துக் கொண்டு போனால் போதும்."

"தவறு செய்தவர்களுக்கு தண்டனை வேண்டாமா?"

"அவரைத் தண்டித்து எங்களுக்கு என்ன ஆகப் போகிறது?"

"ஓ.கே. உங்கள் விருப்பம்."

"சார்... நானும் என் மகளும் எங்களுடைய உடைமைகளாக எங்களிருவரின் துணிகளையும்... நகைகளையும் எடுத்துப் போகப் போகிறோம். என் மகள் அவருடைய கம்பெனியில் சம்பளம் வாங்காமல் உழைத்திருக்கிறாள். நான் இத்தனை வருடமாய் மனச்சாட்சி இல்லாத இந்த மனிதருடன் குடும்பம் நடத்தியிருக்கிறேன். எங்களது உடைமைகளை எடுத்துச் செல்ல விடுவாரா.. மாட்டாரா எனறு கேட்டுச் சொல்லுங்கள்..."

"எதை வேண்டுமானாலும் எடுத்துப் போகட்டும்."

ஜெயராமன் ஈனஸ்வரத்தில் முணுமுணுத்தார்... அவருக்கு தாங்க முடியவில்லை. கடைசியில் இவள் இப்படிச் செய்து விட்டாளே... அவரது கனவில் மண் விழுந்து விட்டதே... என்ற கடுப்போடு இருந்தார்.

ஆண்டாளும்... பாஞ்சாலியும் பெட்டிகளை எடுத்து வாசலில் அடுக்கி வைத்தனர். சாலையில் தயாராய் நின்ற கார் வீட்டு காம்பவுண்டிற்குள் நுழைந்து போர்டிகோவில் நின்றது. காரை விட்டு இறங்கி வந்த டிரைவர் பெட்டிகளை கார் டிக்கியில் அடுக்கி மூடினான்.

"கிளம்புங்கம்மா..." ஏ.ஸி. எழுந்து கொண்டார்.

ஆண்டாளும்... வந்தனாவும் காரில் ஏறிக் கொள்ள கார் கிளம்பியது. அதன் பின்னாலேயே போலீஸ் வேனும் சென்றது. சாலைப் போக்குவரத்தில் கலந்து சென்ற கார் பீச் ரோட்டில் சென்று வளைந்து திரும்பி நின்றது. அங்கே நின்று கொண்டிருந்த காரின் அருகே விஸ்வநாதன் நின்று

கொண்டிருந்தார். பின்னாலேயே வந்த போலீஸ் வேனும் அவர் அருகே வந்து நிற்க ஏ.ஸி. இறங்கினார்.

"நன்றி சார்" விசுவநாதன் கை கூப்பினார்.

"நாங்கள் எங்கள் கடமையைச் செய்தோம் சார். உங்கள் வீட்டுப் பெண்களை உங்களிடம் பத்திரமாய் ஒப்படைத்து விட்டோம். இனி நீங்கள் பார்த்துக் கொள்வீர்களா.. இல்லை உங்கள் ஊர் வரை பாதுகாப்பாய் கொண்டு வந்து விட்டு விட்டு வர வேண்டுமா?"

"அது எதுக்கு சார்? இனிமேல் நான் பார்த்துக் கொள்வேன். இந்த விசுவநாதனிடம் மோத யாருக்குத் துணிவு வரும்..." மீசையை முறுக்கிக் கொண்டு கடகடவென்று சிரித்தார் விசுவநாதன்.

'ஓ.ஏ.கே. தேவர் சிரிப்பு...' சிவகாமி அடிக்கடி சொல்வது நினைவுக்கு வர வந்தனாவின் முகத்தில் புன்னகை அரும்பியது.

உயிரற்ற பொம்மை போல் நடமாடியவளின் முகத்தில் சிரிப்பைக் கண்டதும் ஆண்டாளின் மனம் நிறைந்து விட்டது. ஆசை மகளின் மகிழ்வைக் கண்ட நிம்மதியுடன் ஏ.ஸி.யைப் பார்த்து,

"தேங்க்யூ சார்... தேங்க்யூ வெரிமச்..." என்றாள்.

"இட்ஸ் ஆல்ரைட். மேடம்... விசுவநாதன் சார் கமிஷனருக்கு நண்பர்... உங்கள் நிலைமையைக் கூறி உதவி கேட்டார். நீங்களும் உங்கள் வேலைக்காரியிடம் கம்ப்ளெயின்ட் லெட்டர்ஸ் கொடுத்து விட்டீங்க . நாங்கள் ஆக்க்ஷன் எடுத்து விட்டோம்."

ஏ.ஸி. விடைபெற்றுக் கொண்டு போய் விட்டார். விசுவநாதன் ஆண்டாளின் அருகில் வந்தார். வந்தனாவின் முகம் பார்த்தார்.

"என்ன மருமகளே.. உங்கப்பன் வீட்டுக்குள் போட்டு பூட்டி வைத்தால் இந்த மாமன் விட்டு விடுவேனா? வெளியில் கொண்டு வந்து விட்டேனில்ல... யாரு மருமகளை யாரு

வீட்டுக்குள் போட்டு பூட்டுறது? சரிசரி... போனதெல்லாம் போகட்டும். சட்டுபுட்டுன்னு காரில் ஏறுங்க. ஊருக்குப் போய் சேரலாம்..."

"அண்ணா.. போலீஸ் புரொடக்ஷன் வேறு வேணாம்ன்னு சொல்லிட்டிங்க.. விழியில் ஏதாவது வம்பு வழக்கு வந்து விட்டால் என்ன செய்வது?" ஆண்டாள் பயந்தாள்.

"ஏம்மா தங்கச்சி... அதையெல்லாம் யோசிக்காமலா கிளம்பி வந்திருப்பேன்? அதோ... அங்கே இருக்கற டாடா சுமோவில் ஏழெட்டு பேர்... வீச்சரிவாளோடு இருக்கிறானுங்க. நான் துப்பாக்கி லைசன்ஸ் வைத்திருக்கிறேன். முன்னாடி காரில் துப்பாக்கியோடு நானும்... என் டிரைவரும் போவோம் அதற்கடுத்து நீ வருகிற கார் வரும்... நம்ம வண்டிகளுக்குப் பின்னால் டாடா சுமோவில் நம்ம பயலுகள் வருவானுங்க... எல்லாம் சரியாய்தான் பிளான் பண்ணியிருக்கேன். வாங்க போகலாம். உங்க ரெண்டு பேரையும் பார்த்தால் சிவகாமி சந்தோசத்தில் ஒரு சுற்று பெருத்து விடுவாள்" விசுவநாதன் பாசமாய் வந்தனாவின் தலையை வருடினார்.

"இல்லைங்க அண்ணா. நாங்க நேராய் தாழையூத்து வீட்டிற்குப் போகப் போகிறோம்..." ஆண்டாள் கூறினாள்.

"ஏன் தங்கச்சி...? நாளை மறுநாள் கல்யாணம். உடந்தைப் பட்டவங்க நாங்க இருக்கிறோம். நீ ஏன் அநாதை போல் தனியாகப் போய் தங்க வேண்டும்?"

"இல்லை அண்ணா... அது வந்தனாவின் அப்பாவுடைய பூர்வீக வீடு... நிலம் இருக்கிறது. நாங்கள் அங்கு தங்குவதுதான் எங்களுக்கு மரியாதை. வந்தனாவிற்கு தாய் வீடு என்று ஒன்று இருக்க வேண்டாமா? 'தனி' என்ன அண்ணா? நீங்கள் காவலுக்கு ஆள் போடாமல் இருப்பீங்களா? எனக்குப் பயமில்லை."

விசுவநாதன் யோசனையுடன் போனை எடுத்துப் பேசினார்.

"சரிம்மா தங்கச்சி. உன் விருப்பம் போல நீ உன் வீட்டிலேயே போய் தங்கலாம். இப்போ கிளம்பலாமா...?"

ஆங்காங்கே வழியில் பசியாறி இரவைத் தொடும் நேரத்தில் தாழையூத்திற்குள் நுழைந்தார்கள் அவர்கள்.

**கா**லையில் கண் விழிக்கும்போதே கோதாவரி படபடப்பாய் இருந்தாள். அவளது செல்போன் அடிக்கடி ஒலிக்க தனியாய் சென்று பேசி விட்டு வந்தாள்.

"யாருகிட்டடி தனியாய் இரகசியம் பேசுகிற?" சிவகாமி சந்தேகமாய் வினவினாள்.

"என் லவ்வர் கிட்ட..." கோதாவரி ஊஞ்சலில் அமர்ந்து ஆடியபடி பதில் சொன்னாள்.

"சேட்டையைப் பாரேன். கேள்வி கேட்டால் ஒழுங்காய் பதில் சொல்வதை விட்டுவிட்டு இது என்னடி பேச்சுன்னு அசிங்கமாய் பேசுகிற?" சிவகாமி மகளைக் கடிந்து கொண்டாள்.

"அசிங்கமாய் பேசுகிறேனா? உங்கள் மகன் காதலித்தால் மட்டும் அது சரியானது.. நான் காதலித்தால் மட்டும் அசிங்கமா? என்ன நியாயம் அம்மா இது?"

மீண்டும் போன் மணியொலிக்க எழுந்து சென்று பேசிவிட்டு வந்தவள் முகமலர்ச்சியுடன் வந்தாள்.

"அம்மா... உங்களுடைய பிறந்த வீடு இப்போது என்ன நிலைமையில் இருக்கிறது?"

"தாழையூத்து வீட்டையா கேட்கிறாய்?"

"ஆமாம்.. சொல்லுங்களேன்."

"ஏண்டி.. நன்றாகத்தான் இருக்கிறது?"

"அதை இடித்துக் கட்டினீங்க இல்லையா?"

"ஆமாம். கிணற்றிலும் பம்ப் செட் போட்டு வருசா வருசம் வெள்ளாமை எடுக்கிறேனே..."

"ஆஹா.. பிறந்த வீட்டுப் பெருமை பேசுவதுன்னா என் அம்மாவிற்கு வெல்லம் சாப்பிடுவது மாதிரி..." கோதாவரி கிண்டல் பண்ணினாள்.

"வெல்லமா? என்ன வெல்லம்?" என்று கேட்டபடி அங்கு வந்தான் பாலா.

"ம்ம்... பனை வெல்லம் இல்லை அண்ணா... பாச வெல்லம்..." கோதாவரி சிரித்தாள்.

"பாசம் எல்லாம் இல்லைடி... ரோசம். சிவகாமியின் பிறந்த வீடும்... தோட்டமும் இன்னொருவர் கைக்குப் போகக் கூடாதுன்னு வாங்கினேன். வீடு மண் வீடு. இடிந்து கிடந்தது. சுத்தமாய் இடித்து அழகாய் கட்டினேன். தோட்டத்திற்கு மோட்டார் பம்பு செட் போட்டேன். இரண்டு வருட விளைச்சலில் கடனை அடைத்து விட்டேன்" சிவகாமி கூற.

"யாருகிட்ட கடனைக் கொடுத்தீங்க ? அப்பாகிட்டயா?" கோதாவரி வினவினாள்.

"ஆமாம்..."

கோதாவரி பலமாய் சிரித்தாள். அவள் சிரிப்பில் என்றும் இல்லாத குதூகலம் இருந்தது. சிவகாமியும் பாலமுருகனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 14

"என்னடி சிரிப்பு இது? பெண் பிள்ளையாய் லட்சணமாய் அடக்க ஒடுக்கமாய் சிரிக்க மாட்டாயா? அப்படியே அப்பா மாதிரியே வீடு அதிரச் சிரிக்கிறாயே... பெண்பிள்ளை இப்படிச் சிரிக்கலாமாடி?"

"எல்லாம் சிரிக்கலாம். நீங்கள் அப்பாவிடம் கொடுக்கல் வாங்கல் பண்ணியது என்னவோ தமாஷ்தான். ஆனால்... அது இப்போது எவ்வளவு நன்மையாகப் போய் விட்டது பார்த்தீங்களா?"

"என்னடி புதிர் போடுகிறாய்?" சிவகாமி புரியாமல் வினவிக் கொண்டிருக்கும் போது வாசலில் யாரோஅழைப்பதாய் வேலையாள் வந்து கூற பாலமுருகன் படியிறங்கிச் சென்று விட்டான்.

"அண்ணன் போயாகி விட்டது. அம்மா கிட்ட வாங்க... ஒரு ரகசியம் சொல்கிறேன்" கோதாவரி கைநீட்டி தாயை தன் அருகே அமர்த்திக் கொண்டாள்.

"அப்பா எங்கே அம்மா?"

"அவர் எங்கே இப்போதெல்லாம் வீடு தங்கறார்? நினைத்தால் வருகிறார். திரும்பவும் நாள் கணக்கில் வேலையிருக்குன்னு ஓடிப்போய் விடுகிறார். வீட்டிலிருந்த இரண்டு கார்களையும் கொண்டு போய் விட்டார் இவருக்குத்தான் வேலை இருக்கு... காருக்கு என்ன வேலையிருக்கு?"

"கடத்தல் வேலை இருக்காதா?"

"பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன். யாரைப் பார்த்து கடத்தல் மன்னன் என்கிறாய்? உன் அப்பாவைப் பார்த்தா அப்படிச் சொல்கிறாய்?"

"மாதர் குல மாணிக்கமே... நான் அப்பாவை வெறும் கடத்தல் வேலை செய்கிறார்ன்னு மட்டும்தான் சொன்னேன். 'மன்னன்' என்கிற பட்டப் பெயரை உடன் இணைத்துக் கொண்டது தாங்கள்தான். என்ன ஒரு பதிபக்தி... இல்லை காதலா?"

"அடிவாங்கப் போகிற ..காலையில் இருந்து காதல் காதல்ன்னு புலம்பிக் கொண்டிருக்கிறாயே.. உன் அண்ணனின் காதுகளில் விழுந்தால் அவன் வருத்தப் படமாட்டானா?"

"ஆமாம்... ஆமாம்.. வருத்தம்தான் படுவான். அதற்காக 'என்னைக் காணவில்லையே காற்றோடு'ன்னு பாடிக் கொண்டிருக்க முடியுமா? அம்மா.. அப்பா இதற்கெல்லாம் ஒரு தீர்வைக் கண்டுபிடித்து விட்டார். இனி மேல் நம்

அண்ணன் 'காதலிலே தோல்வியுற்றான் காளை ஒருவன்'னு பாடிக்கிட்டு நடமாட மாட்டான்."

"அவனேங்கேடி அப்படி அலைகிறான்? என் பிள்ளை பித்துப் பிடித்தாற் போல் வேலை வேலையின்னு தன்னைத்தானே வருத்திக்கிட்டு இல்ல அலைகிறான். வந்தனாவின் பேச்சை எடுக்கக் கூடாதாம்"

“ வந்தனாவின் பேச்சை எடுக்கக் கூடாதாக்கும் ?"

"என்னடி பைத்தியம் போல் பேசுகிற. ?"

"உண்மையைத்தான் சொல்கிறேன்... நாளை மறுநாள் நம் அண்ணனுக்கும்.. வந்தனாவிற்கும் கல்யாணம்... இன்விடேசன் அடித்து வெளியூரெல்லாம் கொடுத்துட்டு வந்து விட்டார் அப்பா... இன்னும் நம் ஊரும். சுத்துப் பட்டி கிராமங்களும் தான் பாக்கி. அதையும் நாளை மதியத்திற்குள் செய்து விடுவார்."

"என்னடி... விட்டலாச்சார்யா கதை போல் கதை சொல்கிறே."

"விட்டலாச்சார்யா கதையெல்லாம் உங்க பாட்டி காலம்.. இப்போது எல்லாம் 'மர்ம தேசம்'ன்னுதான் சொல்லனும்."

"சரி.. மர்ம தேசம் போல் இல்ல உன் கதை இருக்கு?"

"அது அப்படித்தான். ஓடுங்க ஓடுங்க... உங்க பிறந்த வீட்டுச் சாவியை எடுத்துக்கிட்டு வாங்க.. நாம் தாழையூத்திற்குப் போகனும். "

"அங்கே நமக்கு என்னடி வேலை?"

"வேலையாட்களையும் அழைத்துக் கொண்டு போகலாம் அம்மா... சாப்பாட்டை அங்கேயே கொடுத்துவிடச் சொல்லி விடுங்கள். ஒட்டடை அடித்துக் கூட்டிப் பெருக்கிக் கழுவி.. கோலம் போட்டு... பர்னிச்சர்... கேஸ் எல்லாம் வாங்கிப் போட்டு... உஷ்.. அப்பாடா சொல்லும்போதே கண்ணைக் கட்டுதே..." கோதாவரி அலட்டிக் கொண்டாள்.

"யாருக்கு.. உனக்குக் கண்ணைக் கட்டுகிறதா..? கேட்டுக் கொண்டிருக்கும் எனக்குத்தான் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருக்கிறது.. என்னதான் ஆச்சுடி கோதாவரி.. எதுவோ நல்லது நடந்திருக்கிறது போல் தெரிகிறது.. அது என்னவென்றுதான் விளக்கமாய் சொல்லக் கூடாதா..?" சிவகாமி ஆவலாய் மகளின் அருகே வந்து உட்கார்ந்து விட்டாள்..

என்றுமில்லாமல் ஒளி விட்டுப் பிரகாசித்த அன்னையின் முகத்தை அன்புடன் பார்த்த கோதாவரி.. தாயின் கழுத்தைக் கட்டித் தோளில் சாய்ந்து கொண்டாள்..

"என் பட்டு அம்மா.. என் தங்க அம்மா.."

"என்னைக் கொஞ்சினது போதும். விஷயத்துக்கு வா..."

"அப்பா எங்கே போகறார்ன்னு தெரியலைன்னு சொல்வீகளே... அப்பா சென்னையில் இருக்கும் நம் வீட்டில் தான் தங்கி இருந்தார்."

"அங்கே என்னடி அவருக்கு வேலை?"

"உங்கள் அண்ணன் குடும்பத்தைப் கண்காணிக்கிற வேலை..."

"அப்படிப் போகிறதா விஷயம்? அப்புறம்...?"

"அப்புறம் என்ன ஆச்சுன்னா. ஒரு நாள் நம் அப்பா எதிர்பார்த்து போலவே ஆண்டாளத்தை கிட்ட இருந்து போன் வந்திருக்குது."

"அண்ணி பேசினாங்களா?எப்படிடீ?"

"ஏன்... இதிலென்ன சந்தேகம்? வாயால் பேசியிருக்கிறாங்க... எல்லோரும் அப்படித்தானே பேசுகிறோம்."

"அந்த வாயிலேயே ஒன்னு போடப் போகிறேன்."

"போடுவது போடுகிறீங்க . அண்ணனின் கல்யாணச் சாப்பாட்டையே போட்டு விடுங்கள் அம்மா..."

"கோதாவரி.. நீ சொல்வது நிஜமாகவே நடக்குமாடி...?"

"நடந்தே விட்டது.. இதில் நடக்குமான்னு சந்தேகம் எதற்கு? அத்தையையும்... வந்தனாவையும் அப்பா அழைத்துக் கொண்டு வருகிறார். சும்மா இல்லை. கட்டுக் காவலுடன் அழைத்து வருகிறார்."

"ஐயையோ... உன் அப்பா கடத்திக் கொண்டு வருகிறாரா?"

"அதெல்லாம் என் அப்பாவிற்கு சுட்டுப் போட்டாலும் வராது... சிறை மீட்டுக் கொண்டு வருகிறாராக்கும்..."

"சிறை மீட்டு வருகிறாரா? யார் சிறை வைத்தது?"

"வேறு யார்? உங்கள் அருமை அண்ணன்தான். கட்டிய மனைவியையும், பெற்ற மகளையும் வீட்டில் சிறை வைத்திருந்திருக்கிறார்."

"அடப்பாவி.. இப்படி ஒரு கொடுமையும் உண்டா...?"

"இன்னும் கேளுங்கள். எவ்னோ ஒரு அமெரிக்காவில் வேலை செய்த பொறுக்கியைக் கொண்டு வந்து இவனைத்தான் கட்டனும்னு வந்தனாவை வற்புறுத்தினாராம்.."

"வந்தனா சம்மதித்தாளா..?"

"எப்படிச் சம்மதிப்பாள்? மாட்டேன்னு சொல்லிட்டாளாம். அதற்கு அவளுடைய பதவியைப் பிடுங்கிக் கொண்டு வீட்டில் சிறை வைத்து விட்டாராம்."

"அண்ணி என்ன சொன்னாங்களாம்..."

"அத்தை வந்தனாவிற்கு சப்போர்ட். அதனால் மாமாவிற்கு அத்தையின் மேலும் கோபமாம். வீட்டைச் சுற்றி அவர் காவல் போட்டு விட்டாராம். நீயென்ன என்னை வீட்டுக்குள் சிறை வைப்பது? நாங்களே சிறையிருந்துக்கிறோம்னு ரூமிலேயே தங்கி விட்டார்களாம். ரூமை விட்டு வெளியில் வருவதில்லையாம்"

"இதுவும் எங்களின் போதாத காலமா? அண்ணனுக்கு ஏன் புத்தி இப்படி பேதலித்து விட்டது?"

"அது பேதலித்து எத்தனையோ வருடங்களாகிறது... நீங்கள் என்னவோ இன்றைக்குத்தான் புதிதாய் பேதலித்து போல் சொல்கிறீங்களே."

"அண்ணியின் நிலைமை உன் அப்பாவிற்கு எப்படித் தெரிந்ததாம்?"

"அப்பா.. இதை எதிர்பார்த்திருக்கிறார் அம்மா. அன்றைக்கு மாமா பேசும்போது மௌனமாக இருந்தது வந்தனா மட்டுமில்லையாமே... அத்தையும்தானாமே... வந்தனாவின் மௌனத்திற்கு அர்த்தம் இருக்கிறது. தகப்பனா... காதலா.. என்கிற போராட்டத்தில் அவள் மௌனமாகி இருக்கலாம்.. ஆனால் அத்தை...? அவங்க கணவன் பக்கம் சார்ந்து ஏன் பேசவில்லை? இது அப்பாவின் மனதில் பதிந்திருக்கிறது."

"ஆமாம் கோதாவரி... எப்போதுமே அண்ணனைத் தூண்டி விடுவது போல் பேசும் அண்ணி அன்றைக்கு ஓர் வார்த்தைகூடப் பேசவில்லை."

"இதை இப்போது சொல்லுங்கள். எப்படித்தான் என் அறிவான அப்பா உங்களைப் போய் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டாரோ தெரியவில்லை."

"வேண்டுமானால் நீ புதிதாய் ஒரு புத்திசாலிப் பெண்ணைப் பார்த்து உங்க அப்பாவிற்கு கட்டி வை..."

"அதற்கு முதலில்.. என் அண்ணனுக்கு வந்தனாவைக் கல்யாணம் பண்ணிவைத்து விடுகிறேன்."

"நீ எப்போது கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற?"

"அதற்கு என்ன அவசரம்?"

"ஆமாமாம்... உன் அப்பவிற்குத் தான் மறு கல்யாணத்திற்கு அவசரம்..."

"அடடா.. என் அம்மாவிற்கு கோபம் வந்து விட்டதே... என் தங்க அம்மாவே.. அப்பாவைப் போல் ஒரு ஏகபத்தின் விரதனை கல்யாணம் பண்ணிக் கொண்டு இவ்வளவு கலக்கமா...?"

"போடி.. வாயாடி.. என் புருசனின் குணத்தைப் பற்றி எனக்குச் சொல்கிறாயா?"

"பாரப்பா.. உங்கள் புருசனாக்கும்.. அவர் என் அப்பா.."

"உனக்கு அப்பாவாகிறதுக்கு முன்னாடியே எனக்குப் புருசனாகி விட்டார். நீ விஷயத்துக்கு வா..."

"அப்பா... ஒரு துப்பறியும் நிறுவனத்திடம் உங்கள் அண்ணனைக் கண்காணிக்க கேட்டுக் கொண்டிருந்தாராம். அவர்களின் ரிப்போர்ட்படி... உங்கள் அண்ணன் செய்தது எல்லாம் அப்பாவிற்கு தெரிந்து விட்டது. அந்தச் சமயம் பார்த்து அத்தையும் போன் பண்ணிட்டாங்க . அப்பா பிளான் போட்டுக் கொடுத்திருக்கிறார். அதன்படி அத்தை வீட்டிலிருந்து அவங்களுக்கு நம்பிக்கையான வேலைக்காரி மூலமாக எல்லா வேலைகளையும் செய்து வைத்துக் கொண்டாங்க . அப்பாவுக்கும் வேலைக்காரி மூலமாக போலீஸிற்கு கம்ப்ளெயின்ட் எழுதி அனுப்பி வைத்து இருக்கிறாங்க . அப்பா அத்தையின் கம்ப்ளெயின்ட் லெட்டருடன் கமிசனரை மீட் பண்ணியிருக்கிறார். கமிஷ்னர் நம் அப்பாவிற்கு ப்ரெண்ட் ஆயிற்றே... முழு ஒத்துழைப்பு கிடைத்து விட்டது.. அப்பாவும் அண்ணன் - வந்தனாவின் கல்யாணத்திற்கு நாள் குறித்து இன்விடேசன் அடித்து எல்லோருக்கும் கொடுத்து விட்டார்..."

"எப்படி.. அண்ணியையும்..வந்தனாவையும் வீட்டை விட்டு வெளியே கொண்டு வந்தார்?"

"போலீஸின் உதவியுடன் தான்.. இன்று காலையில் தான் போலீஸ் உங்கள் அண்ணன் வீட்டிற்குப் போய் அத்தையையும் வந்தனாவையும் மீட்டிருக்கிறது. போலீஸார் அப்பாவிடம் அவர்கள் இருவரையும் ஒப்படைத்து விட்டார்கள். அப்பா அவர்களை அழைத்துக் கொண்டு கிளம்பி வந்து கொண்டிருக்கிறார் அம்மா..."

"ஏண்டி.. என் அண்ணியும், மருமகளும் வரப் போகிறாங்க . நம் வீட்டில் அவர்களை வரவேற்க ரெடியாய் இருப்பதை விட்டு விட்டு தாழையூத்து வீட்டிற்கு ஏன் போக வேண்டும்."

கோதாவரி யோசனையுடன் காரணம் சொன்னாள். சிவகாமிக்கு ஆண்டாளின் மன ஓட்டம் உடனே விளங்கி விட்டது. பெண்ணறியும் பெண்மனதை. சிவகாமியும் அறிந்து கொண்டாள்.

15

'தாய் வீடு என்றாலும் தன் வீடு போல் ஆகாது' என்பது பெரியவர்களின் வாய் மொழி. இதில் உள்ள உண்மை அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். தன் வீடு தரும் உரிமை உணர்வையும் சுதந்திரத்தையும் தாய் வீட்டில் கூடப் பெற முடியாது. அத்தோடு பெண்களுக்கு பிறந்த வீடு என்ற ஒன்று இன்றியமையாதது.

ஆண்டாள் அதைத்தானே யோசித்தாள். ஆயிரம்தான் இருந்தாலும் அவள் ஒரு கோடீஸ்வரனின் மனiவி. ஆள் படையோடு வாழ்ந்தவள். மகளைத் திருமணம் செய்து கொடுக்கும் வீட்டில் அவளும் தங்குவது அவளது தன்மானத்திற்கு இழுக்கு... ஆண்டாள் தன்மானம் பார்ப்பவள். மகள் வீட்டில் தங்க மாட்டாள்... அத்தோடு திருமணம் நடக்கப் போகும்போது பெண் வீட்டில் இருந்துதான் பெண்ணை அழைத்துப் போக வேண்டும்... அடுத்து மறு வீடு... தலை தீபாவளி... பொங்கல்... ஆடி... தலைப்பிரசவம்... என்று மகள் வந்து போக தாய் வீடு என்ற ஒன்று தனியாக இருக்க வேண்டும்.

ஆண்டாள் எல்லாவற்றையும் நினைத்துத்தான் தாழையூத்திற்குப் போக முடிவெடுத்தாள். வந்தனா ஜெயராமனின் மகள்... அவரது வாரிசு... பரம்பரையாய் இருந்த பூர்வீக வீட்டில் ஆண்டாள் போய் இருப்பதுதான் ஆண்டாளுக்கும் மரியாதை.. வந்தனாவிற்கும் மரியாதை.

கோதாவரிக்கு இதெல்லாம் தெரியாது. அவளுக்குத் தெரிந்தது ஆண்டாள் சுயமரியாதை பார்ப்பவள். தனித்திருக்க விரும்புகிறாள் என்பது மட்டும்தான்.

"அம்மா... என்னவென்று தெரியவில்லையாம். அத்தை தாழையூத்துதான் வந்தனாவிற்கு அப்பா பிறந்த ஊர். அவருடைய பூர்விக வீட்டில் இருப்பதுதான் எனக்கு மரியாதை. வந்தனாவிற்குத் தாய் வீடு என்று ஒன்று வேண்டும்ன்னு சொல்லிட்டாங்களாம்."

சிவகாமி உடனே புரிந்து கொண்டாள். அண்ணன் மனைவியின் அறிவை மெச்சியபடி வேலையாட்களை கூவி அழைத்தாள். வந்து நின்றவர்களிடம்,

"ஏ புள்ள சிகப்பாயி.. ராக்கம்மா... கூட வாங்க" என்றாள்.

"எங்கேம்மா கூட வரனும்..." சிகப்பாயி கேட்டாள்.

"தாழையூத்திற்குப் போகனும்.. எங்க அண்ணன் வீட்டைக் கூட்டிக் கழுவி கோலம் போட்டு வைக்கணும்..."

சிவகாமி பரபரப்புடன் இங்கும் அங்கும் நடந்து கொண்டே பேசினாள் .

"காட்டு வேலை.. கழனி வேலைன்னா கைவாக்கில் செஞ்சு முடிச்சிரலாம். நீங்க வீட்டு வேலைக்கு இல்ல கூப்பிடுறீங்க.. அதுக்குத்தான் எனக்கு உடம்பு வணங்கமாட்டேங்குது..." சிகப்பாயி நழுவப் பார்த்தாள்.

"அம்மா.. எம்மா வேலையாயிருந்தாலும் இவள் பக்கத்தில் இருந்தால் ஈஸியா முடிஞ்சிரும். இவ இல்லாமல் நான் எப்படி வர்றது...?" ராக்கம்மா சிகப்பாயின் மேல் பழியைப் போட்டாள்.

"ஏண்டி ராங்கி ராக்கம்மா. நான் என்ன நடமாடுற ரேடியோ பொட்டியா.? நீ பொழுதைப் போக்க நான் பகடி பேசனுமாக்கும். அவ அவளுக்கு கூலி வேணும்ன்னா வேலைக்குப் போங்க. இல்லாட்டி குப்புறப்படுத்துத் தூங்குங்க... என் மண்டையை ஏண்டி போட்டு உருட்டறீங்க..." சிகப்பாயி சண்டைக் கோழியாய் சிலிர்த்துக் கொண்டாள்.

"எனக்கு மனசில ஒன்ன வாக்குல ஒன்னுன்னு மறைச்சுப் பேசத் தெரியாதுடி ஆத்தா... நான் சூது வாதில்லாத

ஜென்மம். என் மனசில பட்டதைச் சொன்னால்... நீ ஏண்டி சண்டைக்கு வர்றே..." ராக்கம்மா சேலையை வரிந்து கட்டிக் கொண்டாள்.

"நீ சூது வாதில்லாதவன்னா... நான் சூது வாதோடு திரியறவளா? என்னைப் பார்த்தால் எப்படிடீ இருக்கு. பசப்பாதே. அவள் என்னன்னா சிகப்பாயி மனசில் இருக்கிறது அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும் என்கிறாள்..." சிகப்பாயி சத்தமாய் பேச ராக்கம்மா இடைமறித்தாள்.

"எவள் அப்படிச் சொன்னாள்?"

"அவதான் அந்த சீமைச் சித்ராங்கி... வித்தாரக் கள்ளி வள்ளியம்மா.. அவள் தான் சொன்னாள்."

"ஏண்டி அவள் சொன்னதற்கு என்னைக் கட்டி ஏறுகிறயா? எங்கிட்டோ போன மாரியாத்தா என்னைக் கொஞ்சம் ஏறாத்தான்னு நான் உங்கிட்டே கேட்டேனா? அவ பேசினா அவளைக் கட்டி ஏறு. என்னை ஏண்டி ஒன் வாயில் வெத்தல பாக்காப் போட்டுக் கடிச்சுத் துப்பறே?"

சண்டை சூடு பிடிக்க கோதாவரி உற்சாகமாய் வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்து விட்டாள். சிகப்பாயியையும் ராக்கம்மாவையும் ஊடே... ஊடே உற்சாகப் படுத்த வேறு செய்தாள்.

"ஆஹா... அம்மா.. நம்ம வீட்டில் இப்போதே கல்யாணக் களை கட்ட ஆரம்பித்து விட்டது. வெல்டன் சிகப்பாயி...விடாதே.. தூள்... ராக்கம்மா... அப்படித்தான் பதிலடி கொடுக்கனும்... கீப் இட் அப்..."

"இங்கே என்ன கலாட்டா...?" பாலமுருகன் கேட்டபடி அங்கு வந்து சேர சிகப்பாயி உடனே அமைதியின் சிகரமானாள்.

பவ்யமாய் நின்று கொண்டு ராக்கம்மாளை கருணையாய் பார்க்க.. ராக்கம்மா அவளை விட பொறுமையில் சிறந்த பூமாதேவி போல் மாறிப் போனாள். வெகு அடக்கமாக ஒதுங்கி நின்று 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்பது போல் சாதுப் பார்வை பார்த்தாள்.

"அட அண்ணா! யாருக்கும் கட்டுப்படாத காட்டாறு இரண்டும் அமைதியான நதியாய் மாறின அதிசயம் உன்னால்தான் நடந்ததா? ம்ம்... சிகப்பாயி... ராக்கம்மா... சூப்பராய் சைட் அடிக்கிறீங்க போல..." கோதாவரி அவர்கள் இருவரையும் பார்த்துக் கேட்டாள்.

சிகப்பாயியா அசறுவாள்? உடனடியாய் பதில் கொடுத்தாள்.

"ஏதோ. எங்களால் ஆனது இது மட்டும்தானேம்மா... பார்க்கத்தான் முடியும்... பேசத்தான் ஆசை.. ஆனா பேசக்கூட முடிய மாட்டேங்குதே..."

"பாருடா... இதுகள் இந்தப் போடு போடுறதை... அம்மா ஐடியா வந்து விட்டது.. இப்போது சிகப்பாயியையும்.. ராக்கம்மாவையும் போட்டி போட்டுக் கொண்டு நம்முடன் வீட்டு வேலை செய்ய வரவைக்கவா...?" கோதாவரி விரல் சொடுக்கினாள்.

"இவளுக வருவாளுக... ஆனால் மூஞ்சியை தூக்கி வைத்துக் கொண்டில்ல வேலை செய்வாளுக..." சிவகாமி அலுத்துக் கொண்டாள்.

"சிரித்த முகமாய் இவர்களை வரவைக்க நானாச்சு."

"உன்னால் எப்படிடீ முடியும்?"

"இக்கட சூடு."

"என்னடி? சூடு கீடுங்கிற?"

"இப்பப் பாருங்கண்ணேன்... அண்ணா... அம்பாசிடரை எடு..." கோதாவரி பாலமுருகனை அழைத்தாள்.

"எங்கே போகணும்?" பாலமுருகன் வினவினான்.

"தாழையூத்திற்குப் போகனும்..."

"அங்கே என்ன வேலை...?"

"யாரோ முக்கியமான கெஸ்டுகள் வருகிறார்களாம். அங்கேதான் தங்கப் போகிறார்களாம். அதனால் அம்மாவும்

நானும் வீட்டை ரெடி பண்ணப் போகிறோம். நீயும் வர வேண்டியிருக்கும்."

"எதுக்கு உங்களுக்கு கார் ஓட்டும் டிரைவராகவா?"

"அதுவும் தான்... வீட்டிற்குத் தேவையான பர்னிச்சர்... கேஸ் சிலிண்டர் எல்லாம் வாங்க வேண்டுமே..."

"கோதாவரி.. வீட்டில் எக்ஸ்டிரா சிலிண்டரும் கேஸ் அடுப்பும் இருக்கிறது...இப்போதைக்கு அதை எடுத்துக் கொள்வோம். கேஸ் கனெக்ஷன் என் பெயரில் இருக்கிறது. தேவையான பாத்திரங்களை எடுத்து அடுக்கி வைக்கிறேன். அதைக் கட்டி எடுத்துக் கொள்வோம். பர்னிச்சர் மட்டும் வாங்க வேண்டும்."

"பேனெல்லாம் அங்கு இருக்கிறதா அம்மா...?"

"அதெல்லாம் அப்போதே ரூம் ரூமிற்கு மாட்டி விட்டிருக்கிறேன்.. ஏ.ஸி. தான் இல்லை..."

"ஒன்றை இன்றைக்கே வாங்கிப் பொருத்தி விட்டால் போகிறது." தாயும் மகளும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருக்க,

'ஏ.ஸி. வாங்கி உடனே மாட்ட வேண்டுமா? வரப் போகும் அந்த முக்கியமான விருந்தாளிகள் யாராயிருக்கும்' என்று யோசித்தான் பாலமுருகன்.

"யாரும்மா வரப்போவது?"

"எல்லாம் உன் அப்பாவிற்கு வேண்டப்பட்டவங்களாம்டா."

"அவங்க ஏம்மா.. அந்த ஊரில் தங்கணும்? நம்ம வீட்டில் தங்கலாமே."

"பெரிய மனுசன். நீ யோசனை சொல்கிறாய்.. அவங்க கேட்டுக்கனுமே... அவங்களுக்கு என்னவோ அந்த ஊர்தான் பிடிச்சிருக்காம்... அந்த வீட்டில்தான் தங்குவாங்களாம்..."

"அந்த வீட்டிலா? அதில் மனிதர்கள் தங்குவார்களா?"

"ஏண்டா...? அந்த வீட்டில் என்ன குறைச்சல்? அதை இடித்துப் புதிதாய் கட்டிய பின்பு நீ பார்த்ததில்லையே... அதனால்தான் இப்படிச் சொல்கிறாய்... இன்றைக்கு வந்து பார்... அசந்து விடுவாய்..."

சிவகாமி கோதாவரியைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

"ஏன் அண்ணா.. நானும் அம்மாவும் இன்றைக்கு முழுவதும் அங்கேதான் இருந்தாக வேண்டும். நாங்கள் தனியாக அங்கே இருக்க வேண்டுமா?" கோதாவரி கெஞ்சலாய் கேட்டாள்.

"சரி.. சரி.. நானும் வருகிறேன். கிளம்புங்க."

பாலமுருகன் சொன்னதுதான் தாமதம். சிகப்பாயி பாய்ந்து வந்து சிவகாமியின் கையிலிருந்த அட்டைப் பெட்டியை பிடுங்கிக் கொண்டாள்.

"ஏம்மா.. இந்த வேலையெல்லாம் நீங்க எதுக்குச் செய்கிறீங்க? நான் எதுக்கு இருக்கிறேன்? சிகப்பாயி... இதைச் செய்யுன்னு ஒத்தை வார்த்தை சொன்னா செய்துட்டுப் போறேன். கொண்டாங்கம்மா பண்ட பாத்திரங்களை... நொடியில் அடுக்கிக் கட்டித் தர்றேன்."

"ஏண்டி.. நீதான் காடுகரை வேலைன்னா சுளுவாச் செய்வேன்.. வீட்டு வேலை செய்ய உடம்பு வணங்காதுன்னு சொன்னயே?"

"ஏம்மா உடம்பு வணங்காது? நம்ம வீட்டு வேலய நான் பார்க்காமல் யாரு பார்ப்பா?"

சிகப்பாயி பாலமுருகனைப் பார்த்துப் பார்வையில் வலை வீசியபடி சொல்ல ராக்கம்மாள் உஷாரானாள்.

"அதென்னடி அப்படி ஒரு வார்த்தைய போட்டுப்பிட்ட.. யாரு பார்ப்பான்னு கேட்கறியே... ஏன் நான் பார்க்க மாட்டேனா? நான் எதுக்கு இருக்கேன்... நீ நகரு சொல்றேன்."

ராக்கம்மா சேலையை இழுத்துச் செருகிக் கொண்டு சிவகாமி கொடுத்தவைகளை வாங்கி அடுக்க ஆரம்பித்தாள்.

"பரவாயில்லையே... பிரண்டுன்னா இப்படியில்ல இருக்கணும். சிகப்பாயி வருகிறாள்ன்னு சொன்னவுடனே ராக்கம்மாவும் கிளம்பிட்டாளே.."

சிவகாமி பாராட்டுதலாய் கூற கோதாவரி சிரித்தாள்..

"அம்மா.. சிகப்பாயி வருகிறாள்ன்னு ஒன்றும் ராக்கம்மா வரவில்லை.. அது போல சிகப்பாயியும் சும்மா வரவில்லை..."

"சும்மா வராமல் ஆடிக்கிட்டு வருகிறாள். போடி..."

சிவகாமி உள்ளே சென்று பைகளைத் தூக்கி வர சிகப்பாயி அதை நளினமாக வாங்கிக் கொண்டு ஓரக் கண்ணால் பாலமுருகனைப் பார்த்தபடி இடுப்பை அசைத்து நடந்தாள்.

"அம்மா... சிகப்பாயி ஆடிக்கிட்டு வரலை. ஆடிக்கிட்டுப் போகிறாள்..." கோதாவரி சிகப்பாயி நடந்து போவதைக் காண்பித்துக் கூறினாள்.

"ஆமாம்.. இவ ஏண்டி இப்படி நடந்து போகிறா? இதுவரைக்கும் ஒழுங்காகத்தானே நடந்து கொண்டிருந்தா..." சிவகாமி மோவாயில் கை வைத்தாள்.

"விடுங்கம்மா... அவள் நடை அவளுக்கு.. நாம் நம் வேலையைப் பார்ப்போம்."

இதுவரை தாழையூத்து வீட்டிற்கு சிவகாமி மட்டுமே போய் வந்திருக்கிறாள். விசுவநாதன் அவள் கேட்கும் பணத்தைக் கொடுப்பதோடு சரி. மற்றபடி அவர் அங்கே போனதில்லை. அவரே போனதில்லை என்கிறபோது பிள்ளைகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அந்த வீட்டிற்கு இன்று அவர்களி போனார்கள்.

தாழையூத்து வீடு மிக அழகாக இருந்தது. சுற்றுக் காம்பவுண்டு சுவரெடுத்து வீட்டிற்கு முன்னால் போர்டிகோ இருந்தது. வீட்டிற்குள் நீண்ட ஹாலும் பூஜையறையும் இரண்டும் பெட்ரூம்கள் அட்டாச்சுடு பாத்ரூம்களுடன் இருந்தன. சமையலறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு டைனிங் டேபிள் போட வசதியாக இருந்தது.. போர் போட்டிருந்தாள். தரைக்கு டைல்ஸ் போட்டிருந்தாள். குழாயைத் திறந்தால் அருவி போல் தண்ணீர் கொட்டியது.

"வாவ்.. எவ்வளவு அழகாய் இருக்கிறது அம்மா.." கோதாவரி வியப்புடன் வீட்டைச் சுற்றிப் பார்த்தாள் .

"நான் கூட இவ்வளவு வசதியாய் இருக்கும்ன்னு நினைக்கவே இல்லை..." பாலமுருகன் விழிகளிலும் ஆச்சர்யம் மின்னியது.

சிவகாமி பெருமையுடன் பிள்ளைகளைப் பார்த்தாள்.

"இது வெறும் மண் வீடாகத்தான் இருந்தது. உங்கள் அப்பாதான் நான் பிறந்து வளர்ந்த வீடு இது என்பதால் அழகாய் கட்ட வேண்டும்ன்னு இடித்துக் கட்டினார்..."

"அவரெங்கே கட்டினார்? கொத்தனார்தானே கட்டினார்..." கோதாவரி ஜன்னல்களைத் திறந்து வைத்துக் கொண்டே கூறினாள்.

"ஆனால் உன் அப்பாவே இன்னும் இந்த வீட்டைப் பார்த்ததில்லை. பார்த்தால் அசந்து போவார்..." சிவகாமி சமையலறைக்குள் போனாள்.

அடுத்த சில மணி நேரங்களில் அங்கே வேலை விரைவாக நடக்க ஆரம்பித்தது.

"பாலா... ஏ.ஸி. மட்டும் வாங்கி வந்து விடுடா."

"அம்மா.. மெஷின் கனக்குமோ என்னவோ.. நான் வேணுமின்னா ஐயா கூடப் போய் தூக்கி வரட்டுமா?"

"வேண்டாம் சிகப்பாயி வேலையைப் பார்..."

"அவ வேணுமுன்னா இங்கேயே வேலையப் பார்த்துக்கிட்டு இருக்கட்டும்... நான் ஐயாகூடப் போனா அவருக்கு ஒத்தாசையா இருக்குதமில்ல..? அதனால நான் போறேன் அம்மா..."

"ராக்கம்மா. உனக்கு வேற தனியாச் சொல்லணுமா... நீங்க இரண்டு பேரும் எனக்கு ஒத்தாசையாய் இருங்க போதும் அவனுக்கு ஒத்தாசை செய்யத் தேவையில்லை..."

எதிரும் புதிருமாக இருந்த சிகப்பாயியும், ராக்கம்மாளும் திடீரென்று ஒன்று பட்டார்கள். இருவரும் தங்களுக்குள் எதையோ கிசுகிசுத்துச் சிரித்துக் கொண்டார்கள்.. பாலமுருகன் அவர்களைத் திரும்பிப் பார்த்தான்.

"என்ன அண்ணா பார்க்கிற?"

"இவங்க திடீர்ன்னு அடிச்சுக்கிறாங்க... திடீர்ன்னு கூடிக்கிறாங்க ஒன்னும் புரியவே மாட்டேங்குது."

"புரியாத வரைக்கும் நல்லது.. நீ நடையைக் கட்டு.. இரு நானும் வருகிறேன்... அம்மா பணம் கொடுங்க..."

"நீயும் பாலா கூடப் போகிறாயா.. ரொம்ப நல்லதாப் போச்சு. பர்னிச்சர் அயிட்டங்களை வாங்கிக்கிட்டு...ஏஸி மெஷினை வாங்கி விடு..."

"எனக்கென்னவோ.. இங்கே யாரும் தங்கிப் போக வருவது போலத் தெரியவில்லை. குடியிருக்க வரப் போவது போல் தோன்றுகிறது..."

"அம்மா அண்ணன் சொல்வதைக் கேட்டீங்களா?"

"அவன் சரியாத்தான் சொல்கிறான்..."

"என்னவோ... நீங்க இரண்டு பேரும் பேசிக் கொள்வது புரியவே இல்லை. ஒரே மர்மமாய் இருக்கு..."

"மர்மம்தான் அண்ணா... மர்மதேசம் தான்."

"சின்னய்யாவுக்கு என்ன புரியலையாம். நான் வேணுமுன்னா சொல்லித்தரவா... சின்னம்மா?"

"வேண்டவே வேண்டாம் சிகப்பாயி... நீ 'வேணுமின்னா'ன்னு ராகம் போடுவதை நிறுத்தி விட்டு வேலையைப் பார்."

"பார்க்கத்தானே வந்துருக்கிறோம்."

பாலமுருகனும் கோதாவரியும் சென்றுவிட சிவகாமி.. வீட்டை ஒட்டடை அடிக்க வைத்து கூட்டிப் பெருக்கி கழுவி விடச் சொன்னாள். அதற்குள்... அண்ணனும் தங்கையும் திரும்பி வந்து விட்டார்கள்.

"சாமான்கள் டெப்போ வேனில் வருகிறது அம்மா..."

கையோடு கொண்டு வந்திருந்த மதிய உணவைச் சாப்பிட்டார்கள். பரிமாறுகிறேன் பேர்வழியென்று பாலமுருகனுக்கு பரிமாற சிகப்பாயியும் ராக்கம்மாளும் அடித்துக் கொள்ள ஒரு வழியாய் எல்லோரும் சாப்பிட்டு முடித்தனர்.

அதற்குள் சாமான்கள் வந்துவிட... பாலமுருகன் ஏஸி மெஷினை பொருத்துவதை மேற்பார்வையிடச் சென்றான். கோதாவரியும் சிவகாமியும் பர்னிச்சர்களை அழகுறப் போட்டனர். ஹாலில் சிறிய அளவிலான சோபா செட். சமையலறையில் டைனிங் டேபிள். படுக்கையறைகள் இரண்டிலும் கட்டில் மெத்தை தலையணைகள். சமையலறை கேஸ் வசதியுடன்... பாத்திரங்கள் அடுக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது.

"கோதாவரி.. நான் சொன்ன சாமி படங்ளையும் குத்து விளக்குகளையும் வாங்கி வந்து விட்டாயா?"

"இதோ அம்மா..."

சிவகாமி... பூஜையறையில் கடவுள் படங்களை ஷெல்பில் வரிசையாய் வைத்தாள். குத்துவிளக்குகளில் எண்ணெய் ஊற்றி திரியிட்டு தயாராய் வைத்தாள்.

"வீடே மங்களகரமாய் இருக்கிறது அம்மா..."

"என் அண்ணி வசதியாய் வாழ்ந்தவங்க கோதாவரி... இங்கே அவங்க ஒரு குறையுமில்லாமல் இருக்கனும்."

"இருப்பாங்க அம்மா... இருக்கனும் . ரத்தசம்பந்தம் உடைய உங்களுடைய கூடப் பிறந்த அண்ணனே குணம் மாறிப் போய் விட்டபோது.. இவங்க மாறாமல் வந்தனாவுடன்... அத்தனை சொத்துக்களையும் ஆடம்பர வாழ்க்கையையும் விட்டு விட்டு வீட்டை விட்டு வெளியேறி வருகிறாங்க . அவங்களை சௌக்கியமாய் வைத்துக் கொள்வது நம் கடமை அம்மா."

சிவகாமி கண்ணீர் மல்க கோதாவரியின் தலையைக் கோதிச் சிரித்தாள். மகளின் புரிந்து கொள்ளுதல் அவளுக்கு இதமளித்தது. வீட்டைச் சுற்றி சுத்தம் பண்ணி விட்டு தண்ணீர் தெளித்து இருந்தார்கள். ராக்கம்மாளும் சிகப்பாயியும். வாசலுக்கு பூக்கோலம் இட்டு... அதைச் சுற்றி புள்ளிக் கோலம் போட்டார்கள்.

மாலை நெருங்கியது... இரவு வந்தது... அந்த வீட்டின் முன் வரிசையாய் இரண்டு கார்களும் டாடா சுமோவும் வந்து நின்றன. வந்திருப்பது யார் என்று அறிய ஆவலுடன் பாலமுருகன் வாசலில் வந்து நின்று பார்த்தான். முதல் காரிலிருந்து விசுவநாதன் இறங்கி இரண்டாவது காரின் கதவைத் திறந்து விட ஆண்டாளும்... வந்தனாவும் இறங்கினார்கள் .

17

பாலமுருகன் தன் கண்களை இமைக்கவும் மறந்து பார்த்தான்.

'இவளா...? இவள் எப்படி இங்கு வந்தாள்?'

அதற்குள் சிவகாமி ஆலத்தித் தட்டுடன் வந்து விட்டாள். ஆலத்தி எடுத்து அவர்கள் இருவரையும் வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். விசுவநாதன் டாடா சுமோவையும்... ஆண்டாள் வந்த காரையும் அனுப்பி விட்டு மகனின் அருகே வந்தார்.

"என்னடா மகனே... மலைச்சுப் போய் நிற்கிற ?"

"அவள் எப்படிப்பா இங்கே வந்தாள்? ஏன் வந்தாள்?"

"எப்படி வந்தாள்ன்னா... நான் சிறை மீட்டுக் கூட்டி வந்தேன்..."

"சிறை மீட்டா?"

"ஆமாண்டா பாலா... அவளோட அப்பன் அவளையும் ஆண்டாளையும் வீட்டுக்குள் போட்டுப் பூட்டி வச்சிட்டான். போலீஸின் உதவியோடு வெளியே அழைத்துக் கொண்டு வந்தேன். ஏன் வந்தாள்ன்னா நாளை மறுநாள் உனக்கும் அவளுக்கும் கல்யாணம்... அதற்காக வந்திருக்கிறாள். இங்கே ஏன் வந்திருக்கிறாள்ன்னா... இது அவளோட பிறந்த ஊர்.. பிறந்த வீடு.. அதனால் வந்திருக்கிறாள்."

"கல்யாணமா? நாளை மறுநாளா?"

"ஆமாம்டா."

விசுவநாதன் ஒரு பத்திரிக்கையை எடுத்து நீட்டினார். வாங்கிப் படித்துப் பார்த்த பாலமுருகனின் முகம் கல்லாக மாறினது. விசுவநாதன் மகனின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"அப்பாவை என்னன்னு நினைத்தாய் பாலா? நீ காதலித்த பெண்ணை இன்னொருவனுக்கு மணம் முடித்துக் கொடுக்க நான் விட்டு விடுவேனா? இதற்காகத்தான் நம் சென்னை வீட்டில் குடியிருந்தவர்களை காலி பண்ண வைத்துவிட்டு அங்கேயே போய் தங்கி விட்டேன். நான் ஒருவன் மட்டுமென்றால் ஹோட்டல் ரூம் போதும்... ஆட்களோடு இருக்க வேண்டுமென்றால் வீடு தேவைப்பட்டது... இப்போது சந்தோசம்தானே..."

பாலா பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அதற்குள் வீட்டுக்குள்ளே இருந்து சிவகாமி அழைக்கவும் விசுவநாதன் சென்று விட்டார்.

ஆண்டாளைத் தோள் பிடித்து அணைத்துச் சென்று சிவகாமி சோபாவில் அமர வைத்துத் தானும் அமர்ந்து

கொண்டாள். சிவகாமி ஆண்டாளைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"அண்ணனுக்கு இப்படி புத்தி கெட்டுப் போச்சே அண்ணி... நீ தங்கம்.. உன் அருமை அதுக்குத் தெரியாமல் போகலாமா? ஆயிரமாயிரம் கோடி பணம் சம்பாதித்தாலும் பெண்டாட்டி பிள்ளைகள் இல்லாமல் வாழ்வது ஓர் வாழ்வா?"

"விடு சிவகாமி.. பட்டுத் திருந்தட்டும்.. இல்லாவிட்டால் திருந்தாமலே கூடப் போகட்டும்... உன் மருமகளைக் காப்பாற்றிக் கூட்டிக் கொண்டு வந்து விட்டேன். அவளாவது நல்ல வாழ்க்கையை வாழட்டும்."

வந்தனா எதுவும் பேசாமல் கோதாவரியின் தோள் மேல் சாய்ந்து கொண்டாள். தோழியை அணைத்துக் கொண்டு படுக்கையறைக்குள் சென்ற கோதாவரி அவளைக் கட்டிலில் அமர வைத்து அருகே அமர்ந்து கொண்டாள்.

"ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டாயா வந்தனா?"

"வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்கு கஷ்டப்பட்டு விட்டேன். அப்பாவின் இன்னொரு முகம் இவ்வளவு கீழ்த்தரமானதுன்னு தெரிந்ததில் அதிர்ந்து போய் விட்டேன் கோதாவரி. அம்மா மட்டும் இல்லைன்னா என்ன ஆகியிருக்குமோ.. எனக்கே தெரியாது... செத்தால் நிம்மதின்னு பார்த்தால் சாகக்கூட விடவில்லை அப்பா... நீ செத்தால் இன்னொரு கல்யாணம் பண்ணி வேறு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வேன்னு மிரட்டினார். என்னால் அம்மாவின் வாழ்க்கை பாழாகி விடுமோன்னு பயந்து விட்டேன். அம்மாதான் துணிந்து நின்று என்னைக் காப்பாற்றி வீட்டை விட்டு வெளியே வந்தாங்க ..."

வந்தனா சொன்னதை அப்படியே பாலமுருகனிடம் கோதாவரி சொல்லியபோது... அவன் கேட்டான்.

"அப்போதும் துணிவு இவளுக்கு வரவில்லை... இவளது அம்மாவிற்குத்தான் வந்திருக்கிறது... இவளுக்கு என்னிடம் உதவி கேட்க வேண்டும்ன்னு தோன்றவில்லை... இவளது அம்மாவிற்குத்தான் நம் அப்பாவிடம் உதவி

கேட்கலாம்ன்னு தோன்றியிருக்கிறது. அவளது அம்மா மட்டும் துணிந்து நின்றிருக்கா விட்டால் இவள் அவளுடைய அம்மாவைக் காப்பாற்றுகிறேன் பேர்வழின்னு அந்த அமெரிக்கா மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள சம்மதித்திருப்பா..."

"குயுக்தியாகவே பேசாதே அண்ணா. வந்தனாவின் மேல் குறை கண்டிபிடிப்பதிலேயே குறியாய் இருக்காதே. நாளை மறுநாள் நீ அவள் கழுத்தில் தாலியைக் கட்டி உன் மனைவியாக்கிக் கொள்ளப் போகிறாய்..."

கோதாவரி கண்டிப்புடன் கூறினாள். அழுது முடித்த சிவகாமி ஆண்டாளை பூஜையறைக்கு அழைத்துச் சென்று விளக்கேற்றச் சொன்னாள்.

"இது உன் வீடு அண்ணி. உன் தோட்டத்தில் தென்னை நட்டிருக்கிறேன். அதை குத்தகைக்கு விட்டு விட்டு நிம்மதியாய் நீ வாழ்நாள் பூராவும் இங்கு வாழலாம். மீதி இரண்டு ஏக்கரில் நெல் நட்டிருக்கிறேன். விவசாயத்திற்கு உதவி செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். நீ நிம்மதியாய் இரு. தென்னந் தோப்பை நாளைக்குப் போய் பார்க்கலாம். நீ இப்போது விளக்கேற்று அண்ணி."

ஆண்டாள் கண்ணீர் மல்க விளக்கேற்றினாள். வீடு இவ்வளவு அழகாகவும் வசதியாகவும் இருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. கிராமத்து வீடு என்று நினைத்தாள். ஆனால் கதவைத் திறந்து காம்பவுண்டைத் தாண்டி வெளியே கால் வைத்தால்தான் அது கிராமம் என்று தெரியுமளவிற்கு நவநாகரிகமான வீட்டை அவள் நினைத்தும் பார்க்கவில்லை. வசதிகளைத் தியாகம் செய்து மகளுக்காகத்தான் அவள் கிராமத்திற்கு வந்தாள். இங்கோ அவளுக்கு ஏ.ஸி. அறையுடன் கூடிய நவீனமான வீடு காத்திருந்தது.

"பர்னிச்சர் எல்லாம் எனக்குத் தெரிந்ததை வாங்கிப் போட்டிருக்கிறேன் அண்ணி... சமையல்கட்டில், கேஸ்...ப்ரிட்ஜ் .. மிக்ஸி, கிரைண்டர் எல்லாம் இருக்கிறது. வேலைக்கு ஆள் போட்டிருக்கிறேன். இந்தா இருக்கிற

சிகப்பாயி... ராக்கம்மா... இரண்டு பேரில் யாராவது ஒருத்தி காலையில் வேலைக்கு வந்து விட்டு சாயங்காலம் வீட்டுக்கு போய் விடுவாள். வேறு உனக்கு என்ன வசதி வேணுமோ கேள் அண்ணி.. உடனே செய்து தருகிறேன்... நீ மகாராணி போல் வாழ்ந்த மனுஷி. உனக்கு ஒரு குறையும் வரக்கூடாது..."

"எனக்கு என்ன குறை சிவகாமி..? வீடு எப்படி இருந்தாலும் பரவாயில்லைன்னுதான் கிளம்பி வந்தேன். வீடு.. நகை.. பணம்... இதையெல்லாம் வேண்டுமென்ற அளவிற்கு அனுபவித்து முடித்து விட்டேன்... உயிரற்ற அவற்றின் மேல் இருந்த பிடிமானத்தை விட்டு விட்டு உயிருள்ள மனிதர்களின் அன்பைத் தேடி வந்திருக்கிறேன். எனக்கு அது போதும் சிவகாமி... நீதான் ஒரு குட்டி மாளிகையை எனக்குச் சொந்தமாகி இருக்கிறாயே... இந்த வீட்டில் என்ன வசதிக் குறைவு இருக்கிறது? எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறாய்... எனக்கு ஒன்றும் குறைவில்லை சிவகாமி..."

சிவகாமி கிளம்பும் போது கோதாவரியையும்.. சிவகாமியையும் தனியே அழைத்துச் சென்று தங்களின் நகைப் பெட்டிகளை ஒப்படைத்தாள் ஆண்டாள்.

"இது என்ன அண்ணி?"

"நகைகள் சிவகாமி. உன் மேல் பொறாமைப்பட்டு எனக்கும் வந்தனாவிற்கு நான் வாங்கிக் குவித்த வைர நகைகள். இதை எடுத்து வருவதில் வந்தனாவிற்கு விருப்பமில்லை... நகைகள் மேல் இருக்கும் ஆசையினால் நான் இவற்றை எடுத்து வரவில்லை சிவகாமி. இவையெல்லாம் உன் அண்ணனும் வந்தனாவும் இரவு பகல் பாராமல் உழைத்துச் சம்பாதித்த பணத்தில் வாங்கியவை.. இது மற்றவர்கள் கைகளுக்குப் போய் விடக்கூடாது. உன் அண்ணனைச் சுற்றியிருக்கும் மனிதர்கள் நல்லவர்கள் இல்லை... கம்பெனியையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். நாளைக்கு மறு நாள் வந்தனாவின் கல்யாணம் முடிந்த பின்னால் நல்ல லாயரைப் பார்த்துப் பேசி கேஸ் போட்டு விட வேண்டும் சிவகாமி. கம்பெனியின்

ஷேர்களில் மெஜாரிட்டி ஷேர் என் பெயரிலும் வந்தனா பெயரிலும் இருக்கிறது. நாங்கள் இருவரும் ஒன் ஆப் தி டைரக்டர்ஸ்..."

"ஆகட்டும் அண்ணி...இப்போது நகைகளை பாதுகாப்பாய் என் வீட்டிற்கு எடுத்துப் போகிறேன்... கல்யாணம் முடிந்ததும் பெரியகுளத்தில் பேங்கில் லாக்கர் ஏற்பாடு பண்ணித் தருகிறோம் அதில் வைத்து விடு..."

சிவகாமி நகைப் பெட்டிகளுடன் கிளம்பினாள். வீட்டைச் சுற்றி ஆட்கள் காவல் இருக்க.. ஆண்டாள் கை அசைத்து விடை கொடுத்தாள்.

## 18

கோதாவரி வந்தனாவுடன் தங்கி விட்டாள். இரவு வெகு நேரம் வரை தோழிகள் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். பாதுகாப்பான கூட்டிற்குள் வந்து சேர்ந்து விட்ட நிம்மதியுடன் எதிர்காலத்தில் இனி என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டபடி தூங்கி விட்டாள் ஆண்டாள்.

மறுநாள் விடியும் போது... சிகப்பாயி வந்து கதவைத் தட்டினாள். ஆண்டாள் தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறந்தாள். இடுப்பில் பால் கிண்ணத்துடன் நின்று கொண்டிருந்த சிகப்பாயி சுவாதீனமாய் உள்ளே நுழைந்து வீட்டுக் காரியங்களைப் பார்க்க ஆரம்பித்தாள். வாசல் தெளித்துக் கோலம் போட்டு... காபி கலந்து முடித்தபோது போதாவரியும்... வந்தனாவும் கொட்டாவி விட்டபடி எழுந்து ஹாலுக்கு வந்தனர்.

"பல்லுத் தேச்சாச்சாம்மா... காபி கொண்டாரவா...?" சிகப்பாயி குரல் கொடுக்க.

"அது ஒரு வேலையிருக்கில்ல. வா.. போய் வேலையை முடித்து விட்டு வரலாம்" என்றபடி கோதாவரி வந்தனாவை அழைத்துக் கொண்டு போனாள்.

"பாத்ரூம் ஹீட்டர் வசதியோடு இருக்கிறது.. நான் இவ்வளவு வசதிகளை எதிர்பார்க்கவில்லை... அம்மா எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து செய்திருக்கிறாங்க . உங்கள் நிலத்தைப் போய் பார்க்க வேண்டும். தென்னந்தோப்பு... வயல்ன்னு அம்மா சொல்லும் போதே ஆசையாய் இருக்கிறது."

இருவரும் காபி பருகிக் கொண்டிருக்கும் போது சிகப்பாயி வந்தனாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். கோதாவரி காபித் தம்ளரின் மேலாக மேல் பார்வை பார்த்தபடி வினவினாள்.

"என்ன சிகப்பாயி.. இவளை இப்படிப் பார்க்கிற?"

"இவங்க தானா அவங்க?"

"எவங்க..."

"உங்க அண்ணாச்சியைக் கட்டிக்கப் போகிறவங்க..."

"ஆமாம்."

சிகப்பாயி சோகமாய் வந்தனாவைப் பார்த்தபடி காபித் தம்ளர்களை எடுத்துக் கொண்டு போனாள்.

"ஏன் இவள் இப்படிப் போகிறாள்...?" வந்தனா புரியாமல் கேட்டாள்.

"மனசுக்குள் சோகப் பாட்டு பாடிக் கொண்டே போகிறாள்."

"என்ன பாட்டு..?"

"ம்ம்... இப்படி பாடுவாளாய் இருக்கும்."

"சூடிக் கொடுத்தவள் நான் தோழி...

சூடிக் கொண்டவளே நீ வாழி..."

வந்தனாவின் முகம் வெளுத்தது. விட்டால் அழுது விடுபவள் போல் முகத்தை வைத்துக் கொண்டு,

"என்னடி இப்படிச் சொல்கிற?" என்று கேட்டாள்.

"நீ ஏன் கவலைப்படுகிறாய்... அண்ணன் தான் வானத்தில் நிலாவைப் பார்த்து விட்டாலே

அன்றொருநாள் இதேநிலவில்...

அவள் இருந்தாள் என் அருகில்...

நான் அடைக்கலம் கொண்டேன் அவள் அழகை...

நீ அறிவாயே.. வெந்நிலவே...

அப்படின்னு பாடிக் கொண்டிருக்கிறானே.. அப்புறம் என்ன?" என்று கோதாவரி இலகவாய் சொல்லவும் வந்தனாவின் முகம் சிவந்து விட்டது.

"உன்னை...ச்சீ.. ."

“என்ன ...பாருடா... ம்ம்... எங்கே என் முகததைப் பார்த்துச் சொல்... நான் பொய்யாய் பாடினேனா? நிலாக் காலங்களில் நீங்கள் சந்தித்துக் கொள்ளவே இல்லையா?"

"ச்சீ... போடி..."

வந்தனா உள்ளே ஓடி விட்டாள். முகம் மலர வெட்கத்துடன் ஓடி வந்த மகளைப் பார்த்த ஆண்டாளின் மனம் நிறைந்தது.

'எவ்வளவு நாள்களாகி விட்டன.. மகள் இப்படி மனம் விட்டுச் சிரித்து...'

சிகப்பாயி காலையில் இடியாப்பம் செய்து தேங்காய் பால்.. குருமாவுடன் பரிமாறினாள்.

"சூப்பர்..." என்றாள் வந்தனா.

"பரவாயில்லையே... எங்கள் வந்தனாவே பாராட்டுகிறாளே... உண்மையிலேயே உன் கைச்சமையல் பிரமாதம் சிகப்பாயி..." என்றாள் கோதாவரி.

"என்னத்தைச் சமையல் பண்ணி என்ன பிரயோசனம்? மனசு போல் வாழ்க்கை அமையணுமே... ஆசையிருக்கு தாசில் பண்ண... அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க என்பது போலில்ல என் பிழைப்பு இருக்கிறது... ம்ஹூம்..." சிகப்பாயி பெருமூச்சு விட்டாள்.

"உனக்கு என்ன மனக்குறை சிகப்பாயி.. என்னிடம் சொல்.. நான் தீர்த்து வைக்கிறேன்..." என்றாள் வந்தனா உண்மையான பரிதாபத்துடன்.

"நீ கொஞ்சம் சும்மாயிரு வந்தனா.. நீ பாட்டுக்கு வாக்கு கொடுத்து வைக்காதே. பின்னால் நீ தான் கஷ்டப்படுவாய்.." புதிராய் புன்னகைத்தாள் கோதாவரி.

"ஏண்டி..?" புரியாதவளாய் கேட்டாள் வந்தனா..

இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் சிகப்பாயி சோகச் சித்திரம் போல் சமையலறைக்குள் சென்று விட்டாள்.. வந்தனா அவளை கருணை ததும்ப பார்த்து,

"ச்..ச்..ச்.." என்றாள்..

"ஏண்டி.. பல்லி மாதிரி சவுண்டு கொடுக்கிற.."

"சிகப்பாயியைப் பார்த்தால் பாவமாய் இருக்கிறது..."

"அன்னை தெரஸா அவதாரம் எடுக்காதே... வேண்டாம்... அவள் எதற்கு சோகமாய் அலைகிறாள் தெரியுமா?"

"எதற்கு?"

"இவள் மட்டும் இல்லை. ஊரில் நிறைய ரசிகைகள் இப்படித்தான் ஒரு மார்க்கமாய் இருக்கிறார்கள்."

"ரசிகைகளா?"

"ஆமாம்"

"யாருடைய ரசிகைகள்?"

"எல்லாம் உன் வுட்பியுடைய ரசிகைகள்?"

"என்னடி சொல்கிற?"

"ஆமாம் வந்தனா. அண்ணனை சைட் அடித்தவர்கள் ஏராளம்."

"உன் அண்ணன் யார் யாரை சைட் அடித்தார்.."

"அவர் முதலில் வந்தனாவை சைட் அடித்தார். அப்புறமாய் வந்தனாவை காதலித்தார். நாளைக்கு வந்தனாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறார்..."

வாசலில் பந்தல் போட ஆள்கள் வந்து விட்டனர். கோதாவரி வாசலுக்குச் சென்று பந்தல் போடுவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது விசுவநாதனும்.. சிவகாமியும் வந்து விட்டனர்.

"வாங்கண்ணா.. வா சிவகாமி..." ஆண்டாள் வரவேற்றாள்.

"என்னம்மா தங்கச்சி.. எல்லாம் சௌகர்யமாய் இருக்கிறதா?"

"எந்தக் குறையும் இல்லை அண்ணா.."

"சாய்காலம் நான்கு மணிக்கெல்லாம் நாங்கள் வந்து விடுவோம் அண்ணி... இன்றைக்கு சாயங்காலமே இங்கு நிச்சயதார்த்தத்தை முடித்து விட்டு பரிசம் போட்ட கையோடு பெண்ணை அழைத்துக் கொண்டு போய் விடலாம்ன்னு இருக்கிறோம். நீ என்ன சொல்றே அண்ணி..."

"நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது சிவகாமி. நீயும் அண்ணனும் செய்தால் சரியாகத்தானே இருக்கும்?"

"அப்புறம் தங்கச்சி... நம்ப வீட்டிலேயே கல்யாணம் பண்ணி விடுவதாக இருக்கிறேன்... அதுதான் பாதுகாப்பு... நம்ப ஊரில் நம்மை மீறி ஒரு ஈ எறும்பு கூட நுழைய முடியாது... பெரியகுளம் டவுன்.. எதையும் நிச்சயமாய் சொல்ல முடியாது..."

"அதுதான் சரி அண்ணா... நமக்கு பாதுகாப்பு தான் முக்கியம்..."

"அப்போ.. நாங்க கிளம்புகிறோம் அண்ணி... இந்தா.. நீ கொடுத்த நகை பெட்டிகள் இருக்கு.. கல்யாணத்திற்கு நீயும் அர்ச்சனாவும் போட்டுக் கொள்ள வேண்டுமே..."

"ஆனால் சிவகாமி.. பாதுகாப்பு..."

"பயம் வேண்டாம் அண்ணி... கல்யாணம் முடிந்து மூன்றாவது நாள் தான் மறு வீட்டுக்கு பொண்ணும் மாப்பிள்ளையும் வரப் போகிறாங்க.. அதுவரை நீயும் எங்கள் வீட்டில்தான் இருக்கப்போகிறாய். கல்யாணம் முடிந்த மறுநாளே... லாக்கரில் நகைகளை வைத்து விடலாம்.. நீ சொன்னபடி லாயரையும் வீட்டுக்கு வரச் சொல்லிப் பேசிவிடலாம்.."

"நீ சொல்வதும் சரிதான் சிவகாமி..."

"இந்தாடி... கோதாவரி.. உன்னுடைய நகைகளும் பட்டுப் புடவையும் இதில் இருக்கு. பெண்ணாய்.. லட்சணமாய் உடுத்திக்கொண்டு இரு. கல்யாண வீடு.. நூறு பெரிய மனிதர்கள் வந்து போகிற இடம்.. எனக்கு நகை போட பிடிக்கவில்லைன்னு சொல்லி துடைத்து வைத்தது போல் நிற்காதே..."

"நான் பார்த்துக் கொள்கிறேன் சிவகாமி..."

ஆண்டாள் சிரித்துக் கொண்டே கோதாவரியை அணைத்துக் கொண்டாள். வீட்டில் கல்யாணக்களை தோன்றிவிட்டது.

19

மதியம் இரண்டு மணிக்கெல்லாம் வீட்டிற்கு பியுட்டி பார்லரில் இருந்து பெண்கள் வந்துவிட்டனர்.

ஆண்டாள் வந்தனாவையும் கோதாவரியையும் விரட்டினாள்.

"ம்ம்... சீக்கிரம்.. இரண்டு பேரும் குளித்து விட்டு ஓடிவாங்க..."

"அத்தை ஈரக்காலுடன் டைல்ஸ் தரையில் ஓடி வந்தால் விழுந்து விட மாட்டோமா.."

"கால் தரையில் பாவினால்தானே தரை வழுக்கும்.. நீங்க இரண்டு பேரும் தரையில் கால் ஊன்றாமல்தானே அலைகிறீங்க ?"

"வந்தனாதானே கல்யாணப் பெண் அத்தை.. அவளுக்கு அலங்காரம் பண்ண வேண்டும் என்றால் ஓகே .. எனக்கு எதற்கு?"

"நீ கல்யாணப் பெண்ணின் தோழி ஆயிற்றே..."

ஒரு வழியாய் கெஞ்சிக் கொஞ்சி இருவரையும் குளிக்க வைத்து அலங்காரம் பண்ண அமர்த்தி விட்டாள் ஆண்டாள். அவளும் குளித்து முடித்து ஒப்பனை செய்து கொண்டு தன்னுடைய நகைகளை அணிந்து கொண்டு... வந்தனாவும்.. கோதாவரியும் இருந்த அறைக்குச் சென்றாள்.

வந்தனா... திருமணப் பெண்ணின் அலங்காரத்துடன் தாயைத் திரும்பிப் பார்த்தாள்... ஆண்டாளின் கண்கள் நிறைந்து விட்டன... மணப்பெண் கோலத்துடன் கால்களில் விழுந்து எழுந்த வந்தனாவின் நெற்றியில் முத்தமிட்டவள்... நகைகளை அணிவித்து விட்டாள்.

தங்கப் பதுமைபோல் நின்ற வந்தனாவை கண் குளிர ஆண்டாள் பார்த்துக் கொண்டிந்த போது விசுவநாதனும் சிவகாமியும்.. அவர்களது ஊர் பெரியவர்களோடு முக்கியமான உறவினர்களும் நிச்சயம் பண்ண வந்துவிட்டனர்.. வாசலில் வரிசையாய் கார்கள் வந்து நின்றன.

ஹாலில் கொண்டு வந்த சீர்வரிசைத் தட்டுக்களை பரப்பி விட்டு வந்தவர்கள் அமர்ந்தனர். ஆண்கள் எல்லோரும் நாற்காலிகளிலும்.. சோபாக்களிலும் அமர... பெண்கள் தரையில் விரிக்கப்பட்டிருந்த புது ஜமுக்காளங்களில் அமர்ந்தனர்.

அறைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்த வந்தனா... கண்களில் ஏமாற்றத்துடன் கோதாவரியைப் பார்த்தாள்.

"உன் அண்ணனைப் பார்க்கவே இல்லையே கோதாவரி... இப்போதும் அவர் வரக்காணோமே..."

கோதாவரி வியப்புடன் வந்தனாவைப் பார்த்தாள்.

"நேற்று நீ வரும்போது அண்ணன் இங்குதானே இருந்தான்? உனக்கு அது தெரியாதா?"

"தெரியாதே... நான் பார்க்கவில்லையே..."

"ஓகே.. போனால் போகிறது.. இப்போது கும்பக்கரைக்குத்தானே போகப் போகிறோம்... அங்கே போய் பார்த்துக் கொள்..."

வந்தனாவால் அங்கே போன பின்னும் பாலமுருகனைப் பார்க்க முடியவில்லை.

நிச்சயதார்த்தம் முடிந்து தாம்பூலத் தட்டை மாற்றிக் கொள்ள விசுவநாதனின் தங்கையும், தங்கை கணவரும் வந்தனாவின் தாய் தந்தையர் ஸ்தானத்தில் அமர்ந்து தாம்பூலத்தட்டை வாங்கிக் கொண்டனர்.

"எவ்வளவு செய்து என்ன செய்ய? பெற்ற பெண்ணை தாரை வார்த்துக் கொடுக்க தகப்பனிருந்தும்... தாயிருந்தும்... என் மகளுக்கு அடுத்தவர்கள் அம்மா.. அப்பாவாய் மணவறையில் நிற்க வேண்டி வந்துவிட்டதே..." ஆண்டாள் கண்கலங்கினாள்.

"இதுவும் நம்ம நேரம் தான் அண்ணி... கலங்காதே... இப்போது நம்ம பிள்ளைகள் கல்யாணம் நல்லபடி நடந்து முடியணும்... அது மட்டும்தான் முக்கியம்.. வேறு எதையும் நாம் நினைக்கக் கூடாது..." சிவகாமி ஆறுதல் கூறினாள்.

ஆண்டாள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். பெண்ணை அழைத்துக் கொண்டு கிளம்பும்போது ஆண்டாள் பூஜையறையில் விளக்கேற்றி பெருமாளை வணங்கி விட்டு வந்தனாவின் நெற்றியில் குங்குமம் வைத்துவிட்டாள்.

கும்பக்கரையில் உள்ள விசுவநாதனின் வீட்டிற்குள் வரிசையாய் கார்கள் நுழைந்தன. அந்தத் தெருவையே

அடைத்துப் பந்தல் போடப்பட்டிருக்க ஒலி பெருக்கியில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

"மணமகளே.. மருமகளே வா வா - உன்

வலது காலை எடுத்து வைத்து வா வா...

குணமிருக்கும் குலமகளே வா வா - தமிழ்

கோவில் வாசல் திறந்திருக்கு வா வா..."

வீடியோ கேமிராவின் ஒளி வெள்ளத்தில் விசுவநாதனின் இல்லத்திற்குள் மணமகளாக நுழைந்த வந்தனாவின் விழிகள் பாலமுருகனைத் தேடின. அவன் தென்படவில்லை. விருந்தினர்கள் சூழ்ந்து கொண்டு... அவளை நலங்கு வைக்க அழைத்துச் சென்றனர். நலங்கு முடிந்ததும் இரவு விருந்து ஆரம்பமாகி விட்டது. நள்ளிரவிற்கு மேல் கண்கள் சொக்கிய வந்தனாவிடம்,

"கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திரும்மா..." என்று தூங்கச் சொன்னாள் ஆண்டாள்.

வந்தனாவும் தூங்கிவிட்டாள்... சற்று நேரத்திலேயே அவளை எழுப்பி குளிக்க வைத்து அலங்கரிக்க ஆரம்பித்து விட்டார்கள். சற்று நேரத்தில் மணமேடைக்கு அவளை அழைத்துச் சென்று பாலமுருகனின் அருகில் அமர வைத்தார்கள்.

சுபயோக நேரத்தில் வந்தனாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான் பாலமுருகன். அவன் கை பிடித்து அக்கினியை வலம் வந்தபோது வந்தனாவின் கண்கள் நிறைந்து விட்டது. கடைசியில் அவள் நினைத்தவனையே கரம் பிடித்து விட்டாள். மணமேடையை விட்டுக் கீழே இறங்கி வந்து பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிய போதும்... அதற்கு அப்புறமும்... பாலமுருகனின் பார்வை சிறிதளவு கூட வந்தனாவின் பக்கம் திரும்பவில்லை. அவளும் ஆர்வத்தோடு அவனருகே ஒட்டி நிற்க.. அவன் விலகி நின்றான்.. அவனது ஒதுக்கத்தை உணராத வந்தனா வெட்கம் முகத்தில் சேர அவன் பின்னாலே நடந்தாள்.

மாலை மயங்கி இரவு வந்தது. வந்தனாவிற்கு தலையில் பூவை வைத்து விட்ட ஆண்டாள் புத்திமதி கூறினாள்.

"உன் மனதுக்குப் பிடித்த வாழ்க்கை கிடைத்திருக்கிறது. இதுவரை பாலா... உனக்கு அத்தை மகன். இன்றிலிருந்து உன் கணவன். பார்த்து புத்திசாலித்தனமாய் நடந்து கொள்.. உன் அப்பாவை எதிர்த்து வெளியே வந்திருக்கிறோம். அவர் கண் முன்னால் நீ நன்றாக வாழ்ந்து காட்ட வேண்டும்... உன் இஷ்டப்படி பெண்ணைக் கூட்டிக் கொண்டு போய் கல்யாணம் பண்ணி வைத்தே.. இப்பப் பார். அவள் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதுன்னு உங்க அப்பா என்னைப் பார்த்து ஒரு சொல் சொல்லி விடக் கூடாது.. புரிகிறதா?"

வந்தனா அறைக்குள் சென்ற போது பாலமுருகன் அங்கு இல்லை. வந்தனா யோசனையுடன் கட்டிலில் அமர்ந்தாள். கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.. பாலமுருகன் அவளை எவளோ ஒருத்தியைப் பார்ப்பது போல் அறிமுகமற்ற பார்வை பார்த்தபடி வந்தான். வந்தனா அவனது பார்வையைக் கண்டு திகைத்தாள்.

'இவன் ஏன் இப்படிப் பார்க்கிறான்?'

அவள் எழுந்து நின்றாள். அவன் அவள் அறையிலேயே இல்லாதது போல் பாவித்தவனாய் கட்டிலில் படுத்து கண்களை மூடிக் கொண்டான்.

வந்தனா புரியாதவளாய்... "அத்தான்..." என்று அழைத்தாள். அவனிடமிருந்து பதில் இல்லை.. மெல்ல அவனது கரம் தொட்டாள்.

"தொடாதே.." அவன் சீறி எழுந்தான்.

"அத்தான்..."

"அத்தானாம் அத்தான்.. யாருடி உனக்கு அத்தான்? நான் அத்தான் என்பது உன் அப்பா என் அம்மாவையும்... அப்பாவையும் துச்சமாய் பேசி அவமானப்படுத்திய போது உனக்குத் தெரியவில்லையோ... இத்தனை நாளும் என்ன செய்தாள்? உன் அம்மாவிற்கு துணிவு வந்து உன்னோடு

வீட்டை விட்டு வெளியில் வந்ததால்.. இப்போது நீ எனக்கு மனைவியாகி இருக்கிறாய்... இல்லாவிட்டால்... நீ அந்த அமெரிக்காக்காரனுக்குத் தானே மனைவியாக இருப்பாய்?"

"அத்தான்.. ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீங்க ?"

"நீ நம் காதலை மதித்திருந்தால் அன்றைக்கு என் அப்பா அம்மாவிற்கு முன்னாலேயே வாய் திறந்து சொல்லியிருப்பாய். நீ அதையும் செய்யவில்லை. என்னை மதித்திருந்தால் என்னிடம் ஓடி வந்திருப்பாய். நீ அதையும் செய்யவில்லை. என் ஆண்மையை மதித்திருந்தால் என்னிடம் உதவி கேட்டிருப்பாய்.. நீ அதையும் செய்யவில்லை. இந்த முயற்சியை எல்லாம் செய்தது உன் அம்மா.. என் கேள்வி என்னவென்றால் உன் அம்மா முயற்சி எடுக்கப் போய் நீ எனக்கு பெண்டாட்டியாகி இருக்கிறாய்? இல்லாவிட்டால்..?"

"அப்பா அவருடைய மனதில் உள்ளதைக் கொட்டிக் கொண்டிருக்கும் போது நான் என் காதலைச் சொன்னால் அவர் நிலைமை என்னவாகும்? தோற்று விட்ட சோகத்தில் தவறான முடிவை எடுத்து விட மாட்டாரா?" வந்தனா தன் பக்க நியாயத்தைக் கேட்டாள்.

# 20

இரைக்காக மானைத் துரத்தி ஓடுகின்ற புலியின் பக்கமும் ஒரு நியாயம் உண்டு. அதனிடம் இருந்து தப்ப ஓடிக் கொண்டிருக்கும் மானின் பக்கமும் ஒரு நியாயம் உண்டு. நியாயங்கள் மாறுபடலாம்.. ஆனால் ஒவ்வொருவரின் அந்தச் சூழ்நிலையில் நின்று பார்த்தால் தான் அவர்கள் பக்க நியாயம் விளங்கும். மாறுபட்ட நியாயங்கள் வேறு வேறாக இருந்தாலும்.. நியாயம்.. நியாயம் தானே?

காதலித்த பாலமுருகனின் ஆண்மை எழுப்பிய கேள்வியிலும் நியாயம் உண்டு. தகப்பனின் மனப் போராட்டமா இல்லை காதலா.. என்ற போராட்டத்தில் சிக்குண்ட வந்தனாவின் பெண்மை சாதித்த மௌனத்திலும் நியாயம் உண்டு... மாறுபட்ட நியாயங்கள் மோதிக் கொண்டன ..

"இப்போது மட்டும் உன் அப்பா சரியான முடிவை எடுத்தாரா...?"

"எடுக்கவில்லைதான்.. நான் போராடி சரி பண்ணி விடலாம்ன்னு நினைத்தேன். அப்பாவுடன் போராடினேன்... அவரிடம் பேசுவதை நிறுத்தினேன். அவர் ஏற்பாடு பண்ணிய மேரேஜிற்கு கடைசி வரை நான் சம்மதம் சொல்லவில்லை.."

"என்னிடம் ஏன் பேசவில்லை? இப்போது இல்லை எப்போதுமே நீயாய் வரும் போது நான் பேசித் தெரிந்து கொண்டால் தான் உண்டு... என்னிடம் செல்போனில் பேசும் உத்தேசமே உனக்கு இருந்ததில்லை..."

"செல்போனில் என்ன பேச? வீட்டை விட்டு வெளியேறும் உத்தேசம் எனக்கு இல்லையே..."

வந்தனா வாய் விட்டாள்.. பாலமுருகனின் விழிகள் சிவந்தன.

"என்னடி சொன்னாய்?"

"ஆமாம்.. வீட்டை விட்டு வெளியேற நினைத்திருந்தால் நான் கம்பெனிக்குப் போகும் வழியிலேயே காரைத்திருப்பி இங்கு வந்திருப்பேனே.. என் அப்பாவுடன் கடைசி வரை போராடி என் காதலில் உறுதியாய் நிற்கவே நினைத்தேன்..."

"காதல்... அதை உன் வாயால் சொல்லாதே.. உனக்கு அந்தத் தகுதி இல்லை..."

வந்தனா பொறுமை இழந்தாள். போராடி ஓய்ந்து போய் வந்திருக்கிறாள். இதில் அவளைக் குற்றவாளியாக்கிக்

கேள்வி கேட்கிறான். அவளை என்னவென்று நினைத்து விட்டான்?

"எனக்குத்தான் தகுதி இல்லை. உங்களுக்கு அந்த தகுதி இருக்கிறதா?"

"என்னடி சொல்கிறாய்...?"

"நேற்று எங்கள் வீட்டில் வேலை பார்க்க வந்த பெண் ஒருத்தி... உங்களுக்கு கல்யாணமென்றதும் சோக ரசம் பிழிகிறாள். ஊர் முழுவதும் உங்களுக்கு ரசிகைகள் இருக்கிறார்களாமே.. கோதாவரி சொன்னாள். உங்களுக்கு.. நான் ஒன்றும் குறைவு இல்லை..."

"ஓ.." பாலமுருகனின் விழிகள் மின்னின.

அதற்கு மேல் பேசாமல் கட்டில்களைப் பிரித்துப் போட்டான். அவன் ஒரு கட்டிலில் படுத்து கொண்டான். வந்தனா கேள்வியே கேட்கவில்லை. இன்னொரு கட்டிலில் படுத்துத் தூங்கிவிட்டாள். இரண்டு நாள்களாக தொடர்ந்த பயணங்கள்.. திருமண வீட்டு பரபரப்பினால் வந்த அலுப்பு எல்லாமும் சேர்ந்து அவளைத் தூங்க வைத்து விட்டன.

'எப்படி நிம்மதியாக உறங்குகிறாள்?' பாலமுருகன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் அறைக்கதவு தட்டப்பட்டதும்... வந்தனா எழுந்து கதவைத் திறக்கப் போனாள்.

"ஏய்... நில்லுடி..."

அவசரமாய் எழுந்த பாலமுருகன் கட்டில்களை இணைத்துப் போட்டான்.

"இப்பப் போய் கதவைத் திற..."

வந்தனா கதவைத் திறந்தாள். சிவகாமி காபித் தம்ளர்களுடன் நின்றாள்.

"நீயும்.. பாலாவும் காபி சாப்பிடுங்கம்மா.. குளித்து விட்டு கீழே வாங்க..."

காபி டிரேயை கொடுத்துவிட்டு அவள் போய் விட்டாள். கதவை சாத்திய வந்தனா.. அறையிலிருந்த டீப்பாயை இழுத்து அதன் மேல் ஒரு காபித் தம்ளரை வைத்து விட்டுத் தான் மட்டும் குடிக்க ஆரம்பித்தாள்.

"திமிராடி..?"

"ஆமாம்.."

"என் வீட்டில் இருந்து கொண்டே என்னை டீஸ் பண்ணுகிறாயா?"

"ஹலோ.. இது இனிமேல் என் வீடு.. போய் உங்க அப்பாவையும் அம்மாவையும் கேட்டுப் பாருங்க..."

"அவர்கள் இரண்டு பேரையும் கைக்குள் போட்டுக் கொண்ட கொழுப்புத்தான் உன்னை இவ்வளவு தூரம் பேச வைக்கிறது..."

"ஆமாம்... இப்போது என்ன செய்யப் போகிறீங்க ?"

"உன் கொட்டத்தை அடக்குகிறேன்டி..."

பாலமுருகன் காபித் தம்ளரை எடுத்துக் காபியை பருகியவாறு ஜன்னல் கதவைத் திறந்து தோட்டத்தைப் பார்த்தான். சிவகாமி யாருடனோ உற்சாகமாய் பேசிக் கொண்டிருந்தாள். சற்று நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் மனம் கனிந்தது.

'அம்மாவின் முகத்தில் எவ்வளவு சந்தோசம்...

அறைக்குள் திரும்பிப் பார்த்தான். வந்தனாவைக் காணோம்.. குளியலறைக்குள் நீர் கொட்டும் சத்தம் கேட்டது. மீண்டும் தோட்டத்தைப் பார்த்தான் இப்போது ஆண்டாள் சிவகாமியை நோக்கிப் போய் கொண்டிருந்தாள்.

ஆண்டாளைப் பார்க்கும் போது அவனுக்குள் ஆச்சரியமாய் இருந்தது. அலட்சியப் பார்வையுடன்.. ஆணவப் பேச்சுடன் இருந்த பெண்மணி அவனது காதலை மதித்திருக்கிறாள்... கட்டிய கணவனுக்கு எதிராக போராட்டம் நடத்தி வீட்டை

விட்டு வெளியேறி இருக்கிறாள். மகளுக்கு திருமணத்தையும் நடத்தி விட்டாளே..

ஆண்டாளின் மீது அவனுக்குள் மதிப்பு உருவானது. இவள் போல் ஏன் வந்தனா இல்லை?

குளியலறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். ஈரத்தலையைச் சுற்றித் துண்டை இறுகக் கட்டி... சேலையை போர்த்திக் கொண்டு வெளியே வந்தாள் வந்தனா.

"நான் டிரெஸ் சேன்ஜ் பண்ணனும்..."

"பண்ணு.."

"ஹலோ.. இடத்தைக் காலி பண்ணுகிறீங்களா?"

"காலி பண்ணாமல் உன் முன்னால் நின்று நீ உடை மாற்றும் அழகை ரசிக்கப் போகிறேன்னு நினைத்தாயா? உன்னிடம் நான் மயங்கிக் கிடந்த காலமெல்லாம் மலையேறி விட்டது..."

"குட்... அது அப்படியே மலை மீதே இருக்கட்டும்.. மலையிறங்க வேண்டாம்.. இப்போது போகிறீங்களா?"

"நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் குளிக்கப் போகிறேன்..."

பாலமுருகன் குளியலறைக்குள் புகுந்து கொண்டான். வந்தனா தன்னுடைய பெட்டியைத் திறந்து கிரேப் வண்ணத்தில் சரிகை பார்டருடன் உடலெங்கும் ஜரிகைப் புள்ளிகளிட்ட காஷ்மீர் பட்டுப் புடவையை எடுத்துக் கொண்டாள்.

பாலமுருகன் வெளியே வரும்போது அவள் உடை மாற்றி ஒப்பனையை முடித்திருந்தாள். பெட்டியை ஆராய்ந்து கொண்டிருந்தவளின் தோற்றத்தை அவள் பாராதபோது இவன் பார்த்தான்.

காஷ்மீர் பட்டுப்புடவையில் அவள் தேவதை போல் இருந்தால். முதுகு வரை வெட்டி விடப் பட்ட கூந்தலை

இரண்டு பின்னல்கள் போட்டு ரப்பர் பேண்டில் அடக்கியிருந்தாள். நெற்றி வகிட்டில் குங்குமம் இட்டிருந்தாள். பெண்மையின் முழுப்பொழிவோடு நின்று கொண்டிருந்தவளை பார்க்கப் பார்க்கத் தெவிட்டவேயில்லை பாலமுருகனுக்கு.

'எவ்வளவு அழகாக இருக்கிறாள்...' அவன் மனம் வியந்தது.

நிலாக்கால இரவுகளில் அவனது கைப்பிடிக்குள் அவளிருந்த தருணங்கள் அவனுக்கு நினைவு வந்தன. முதல் முறை அவளைத் தொட்டபோது அவள் வயது பதினாறு... அறிந்தும் அறியாத வயது... மீண்டும் அவன் தொட்டபோது அவள் இருபது வயதுப் பெண். உலகம் அறிந்தவள்... உலகம் சுற்றி வந்தவள்.. இரண்டு தருணங்களிலும் அவள் அவனுடைய கைகளுக்குள் அடங்கியிருந்த போது அவள் அவனுக்கு சொந்தமானவளாக இல்லை... ஆனால் எல்லாச் சொந்தங்களையும் விட இன்றியமையாதவளாக இருந்தாள். இன்றோ அவள் கழுத்தில் அவன் கட்டிய தாலி இருக்கிறது. அது அவள் அவனுக்கு மட்டும் சொந்தமானவள் என்பதைக் கூறியது. ஆனால் மனதளவில் அவள் வெகுதூரத்தில் இருக்கிறாளே...



கிட்டத்தில் இருந்தும் எட்டாத தொலைவிற்குப் போய் விட்ட தன் காதல் மனைவியை துளிக்கூட காதல் இல்லாமல் பார்த்தான் பாலமுருகன்.

தற்செயலாய் நிமிர்ந்து பார்த்த வந்தனாவின் பார்வை அவனது பார்வையைச் சந்தித்தது.. சொந்தமில்லாத பார்வை...

'எப்படி.. இப்படி ஓர் பார்வை பார்க்க கற்றுக் கொண்டான்...'

பாலமுருகனின் பார்வைகளை நினைத்துப் பார்த்தாள் வந்தனா. அவனது பார்வையைச் சந்தித்தால் என்றுமே தலைகுனிந்து கொள்வாள். அந்த நினைவு வர உதட்டை மடித்துக் கடித்தாள்.

பாலமுருகனுக்கும் பழைய நினைவு வந்து விட்டது. முகம் கடுத்தான்.

"இங்கே என்னடி பார்வை?"

"நான் முதலில் பார்க்கவில்லை..."

"என்றுமே நீ அப்படித்தானேடி..."

"இன்றும் அப்படித்தான்..."

"அப்படின்னா என்னை ஏன் பார்த்த?"

"ஏன் என்னைப் பார்க்கிறீங்கன்னு பார்த்தேன்."

"மமதை... இதுதாண்டி நீ.. இது தெரியாமல் உன் பின்னால் சுற்றினேனே... நான் புத்தி கெட்டவன்தான்..."

"நல்லவேளை.. புதிதாய் கெட்டுப் போகவில்லை... ஏற்கெனவே புத்தி கெட்டவர்தானா?"

"என்னடி சொன்ன..?"

பாலமுருகன் ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான். வலியின் வேதனை முகத்தில் தெரிய கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அவள் அசையாமல் நின்றாள். அவளது அந்தத் தோற்றத்தைக் கண்டவன் என்ன நினைத்தானோ முகத்தைத் திருப்பிக் கொண்டு,

"வெளியே போ.. நான் உடைமாற்றனும் " என்றான்.

வந்தனா விர்ரென்று வெளியே போய்விட்டாள்.. பாலமுருகன் கீழே சென்றபோது ஹாலில் விசுவநாதனும் சிவகாமியும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு அருகில் ஆண்டாள் இருந்தாள். 'வந்தனா எங்கே' என்று பாலமுருகனின் பார்வை தேடியது... அவள் வாசலில் கோதாவரியுடன் நின்று பேசிக் கொண்டிருந்தாள்.

"இதோ.. பாலா வந்துவிட்டான்... சாப்பிடுவதற்குள் போய் வந்து விடலாம்..." சிவகாமி எழுந்து அவசரமாய் உள்ளே சென்றாள்.

"எங்கேப்பா...?"

"நம் குலதெய்வம் கோவிலுக்குப்பா... சாப்பாட்டிற்கு முன் போய் வந்து விடலாம்.."

சிவகாமி பூஜை சாமான்களை எடுத்து பூஜைக் கூடையில் வைத்துக் கொண்டு வந்தாள்.

"மாலை..?"

"கோவில் வாசலில் வாங்கிக் கொள்ளலாம் சிவகாமி..."

அவர்கள் நால்வரும் வாசலுக்கு வந்தார்கள்.

"கோதாவரி... வந்தனா... வாங்க.."

"எங்கேம்மா?"

"கோவிலுக்கு..."

பார்ச்சுனர் காரைக் கிளப்பினார் டிரைவர். விசுவநாதன் டிரைவரின் அருகே அமர்ந்து கொண்டார். அடுத்து ஆண்டாளும் சிவகாமியும் அமர்ந்து கொள்ள கோதாவரி வந்தனாவின் அருகே வந்து,

"நகர்ந்துக்கோ..." என்றபடி அமர்ந்து கொண்டாள்.

"ஏய்.. முன்னால் வாடி...."

"மாட்டேன்.. நான் வந்தனாவுடன் பேசிக் கொண்டு வருவேன்."

"ஏண்டி.... நேற்று பூராவும் பேசினீங்களே.. போதாதா..."

"போதாது.. போங்கம்மா..."

கோதாவரி வந்தனாவின் அருகே அமர்ந்து கொள்ள நடுவில் அமர்ந்திருந்த அவள் நகர்ந்து கொள்ள வேண்டியிருந்தது. பாலமுருகனை இடித்துக் கொண்டு அவள் உட்கார.

"இன்னும் கொஞ்சம் நகரேண்டி..." என்று கோதாவரி பாலமுருகனின் பக்கம் அவளைத் தள்ளிவிட்டாள். கோதாவரி தள்ளிய வேகத்தில் பாலமுருகனின் மடியில் விழுந்து எழுந்த வந்தனா தன் முகச் சிவப்பை மறைத்துக் கொண்டு கோதாவரியை முறைத்தாள்.

"ஏண்டி தள்ளி விடுகிற?" தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"யார் மேல் தள்ளிவிட்டேன்... உன் ஆள் மேல் தானே..."

"அடச்சீ... அவர் உன் அண்ணன்.."

" உனக்கு யார்?"

"நீ..! பேசாமல் வாடி.. பெரியவங்க இருக்கிறாங்க .."

"அவர்கள் உலகமே வேறு... அங்கே பார்.. நாட்டு நடப்பை விடத் தீவிரமாக வீட்டு நடப்பை அவர்கள் பேசிக் கொண்டிருப்பதை...."

வந்தனா முன்பக்கம் பார்த்தாள். டிரைவர் சாலையில் கவனமாய் ஓட்டிக் கொண்டிருக்க விசுவநாதன் ஒரு புறமாய் சாய்ந்து திரும்பி அடுத்த சீட்டிலிருந்த ஆண்டாளிடமும் சிவகாமியிடமும் விவாதித்துக் கொண்டிருந்தார். அவருக்கு இருவரும் மாறி மாறிப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"என்னடி பேசிக்கிறாங்க?"

"என்னவோ பேசிக்கிறாங்க... நமக்கு எதற்கு அது? முதலில் நான் கேட்பதற்கு பதில் சொல்லு.."

"என்ன...?"

கோதாவரி மெல்லிய குரலில் பாடினாள்.

"கன்னத்தில் என்னடி காயம்?"

பாலமுருகன் துணுக்குற்று வந்தனாவின் அடிபட்ட கன்னத்தைப் பார்த்தான். அவன் அடித்த இடம் கன்றிச் சிவந்திருந்தது.

"ஒன்றுமில்லையே..." வந்தனா அடிபட்ட கன்னத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

"ஊம்.. அப்படியா.. சரி.. வந்தனா ஹனிமூனுக்கு எங்கே போகப் போகிறீங்க ?" கோதாவரி கேட்டாள்.

"உன் அண்ணனைக் கேள் .." வந்தனா எரிச்சலுடன் கூறினாள்.

"ஏன் நீ சொல்லமாட்டாயா?"

"தெரிந்தால்தானே சொல்வதற்கு..."

"ஏண்டி.. நேற்று இரவு இதைப் பற்றிப் பேசவில்லையா?"

"பேசவில்லை..."

"சரி விடு.. பேச வேறு விசயம் நிறைய இருந்திருக்கும்..."

கோதாவரி இயல்பாய் கூற வந்தனா சங்கடமுற்றாள். இவள் மட்டுமில்லை எல்லோருமே அவள் சந்தோசமான மணவாழ்வில் இருக்கிறாள் என்றுதானே நினைப்பார்கள். அப்படியே நினைக்கட்டும்... வந்தனாவின் நல்வாழ்விற்காக பாடுபட்டவர்கள் மனம் வருந்தக்கூடாது .

"அத்தான்... கோதாவரி சொன்னதைக் கேட்டீங்களா? நாம் எங்கு ஹனிமூன் போகலாம்?" வந்தனா பாலமுருகனின் தோளில் ஒயிலாக சாய்ந்து கொண்டு கேட்டாள்.

ஏற்கனவே அவள் நெருக்கமாக அமர்ந்திருந்தால் கிளர்ச்சியடைந்திருந்தவன் அவள் தோள் மேலேயே சாய்ந்து விடவும் திணறிவிட்டான். மெதுவாக வந்தனாவின் காதருகே குனிந்து,

"நமக்கு ஹனிமூன் ஒன்றுதான் குறைச்சல்... நகர்ந்து உட்காருடி..." என்று கூறினான்.

"என்ன சொன்னீங்க... காதில் விழுகவில்லையே... சத்தமாய் சொல்லுங்க அத்தான்..." வந்தனா கொஞ்சலாகக் கூறினாள்.

பாலமுருகன் அவளை முறைத்தான். வந்தனாவின் கண்களில் சிரிப்பு இருந்தது . இந்தச் சூழ்நிலையில் பாலமுருகன் வாயைத் திறக்க முடியாது என்பதை அறிந்து வைத்துக் கொண்டு வம்புக்கு இழுக்கிறாள்.

அவன் கோபத்துடன் ஜன்னல் புறமாய் திரும்பிக் கொண்டான். வந்தனாவின் கூந்தலில் இருந்த மல்லிகையின் மணம் அவனது நாசியை வருடியது. அவளுடன் சேர்ந்திருந்த நிலாப் பொழுதுகள் தேவையில்லாமல் இந்நேரம் பார்த்து அவன் நினைவில் வந்து தொலைத்து இம்சித்தன.

வந்தனா வேண்டுமென்றே அவன் பக்கம் நன்றாக நகர்ந்து அமர்ந்து கொண்டாள். காரின் இதமான ஏஸியில் புது மனைவியின் நெருக்கம் போதையை உண்டு பண்ண பாலமுருகன் அவளது விலாவில் முழங்கையால் இடித்துக் குனிந்து கூறினான்.

"இந்த மயக்கும் வேலைகளை என்னிடம் வைத்துக் கொள்ளாதே..."

அதற்கு அந்த மயக்கும் மோகினி உல்லாசமாய் சிரித்தாள்.

## 22

காலையில்தான் அவளது கன்னம் தொட்டு அடித்தான். அவன் மேல் கோபம் வராமல் மோகம் வரும் காரணத்தை வந்தனாவால் அறிந்து கொள்ள முடியவில்லை. கோதாவரிக்காக நகர்ந்து அமர்வதாய் பாவனை பண்ணிக் கொண்டு அவன் மீது சாய்ந்து கொண்டாள். அவனோ.. அவனது முழங்கையால் இடித்தான்... அவன் முழங்கை பட்ட இடம் இனிக்க அவள் கிறங்கிப் போய் அவனைப் பார்த்தாள்... அவனோ...

'இந்த மயக்கும் வேலைகளை என்னிடம் வைத்துக் கொள்ளாதே...' என்று முறைத்தான்.

வந்தனா உல்லாசமாய் சிரித்தாள். இப்போது அவனால் வெளிப்படையாய் சண்டை போட முடியாது...

இந்த நிலைமையை பயன்படுத்திக் கொள்ள விரும்பியவள் கண்களை படபடவென்று கொட்டினாள் ஒன்றும் அறியாதவள் போல் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு,

"வேறு யாரிடம் வைத்துக் கொள்வது அத்தான்.." என்று கேட்டாள்.

அவனுக்கு மெய்யாகவே கோபம் வந்துவிட்டது.

'என்ன கேள்வி கேட்கிறாள்?' பல்லைக் கடித்தவன்,

"வேறு யாரிடமாவது பேசிப் பார்.. உன் தோலை உரித்து விடுவேன்..." என்றான்.

"நீங்கதானே அத்தான் அப்படிப் சொன்னீங்க ."

"நான் சொன்னால் நீயும் பதிலுக்குப் பதில் பேசுவாயா? பல்லைக் கழட்டி விடுவேன்..."

"எங்கே கழட்டுங்கள் பார்ப்போம்..." என்ற வந்தனா பற்களை 'ஈ' யென்று காண்பித்தாள்.

"என்னடி அண்ணனைப் பார்த்து இப்படிச் சிரிக்கிற?" கோதாவரி கேட்டாள்.

"எல்லாம் ஆசையால்தான்..." வந்தனா பாலமுருகனை பார்த்துக் கொண்டே கூறினாள்.

"நான் ஒருத்தி பக்கத்தில் இருப்பதை நினைவில் வைத்துக் கொள் தாயே... கொஞ்சம் என் பக்கமும் திரும்பி ஏதாவது இரண்டு வார்த்தை பேசுடி... அண்ணனிடமே ரகசியம் பேசிக் கொண்டு வந்தால் எப்படி?" கோதாவரி சலித்துக் கொண்டாள்.

"உனக்குக் கேட்கும்படி எப்படி பேசுவது?" வந்தனா உல்லாசமாய் கணவனைப் பார்த்துக் கொண்டே கூறினாள்.

அதற்குள் கோவில் வந்துவிட அவர்கள் இறங்கி கோவிலுக்குள் சென்றனர். விசுவநாதன் மாலையை வாங்கிக் கொண்டிருக்க சிவகாமியும் ஆண்டாளும் ஏதோ பேசிக் கொண்டு நின்றிருந்தனர். கோதாவரி அவர்கள் அருகே சென்றுவிட பாலமுருகனுடன் வந்தனா கோவிலுக்குள் சென்றாள்.

கோவிலின் ஆன்மிகம் கலந்த தெய்வீகச் சூழல் அலையடித்த அவர்களது மனதை அமைதிப்படுத்தியது. அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோவிலின் உள்ளே சென்றவர்கள் மௌனமாய் நின்று மற்றவர்களுக்காக காத்திருந்தனர்.

மௌனத்தை முதலில் கலைத்தான் பாலமுருகன்.

"இதோ பார்.. இந்த கல்யாணத்தில் எனக்கு விருப்பமில்லை. அப்பா என்னிடம் சொல்லாமலே உன்னையும்.. உன் அம்மாவையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டார்..."

"மாமா... நாங்கள் இருந்த மோசமான சூழ்நிலையைக் கேள்விப்பட்டு உடனே எங்களைக் காப்பாற்றினார்...அது தவறு என்கிறீர்களா?"

"அது தவறு இல்லை... என்னைக் கேட்காமல் உன்னை என் தலையில் கட்டியது தவறு..."

"வலுக்கட்டாயமாய் ஒருவர் தலையில் கட்டுமளவிற்கு வந்தனா எளிதானவள் கிடையாது. என்னை சீஃபாக நினைக்கவோ... பேசவோ வேண்டாம்... மைன்ட் இட்..."

"வலிக்கிறது இல்லையா? உன் மனம் வலிக்கிறது இல்லையா? இதுபோல் தானே எனக்கும் இருக்கும்? நீ உன் அப்பாவிற்காக வாய் மூடி நிற்பாய்.. உன் அப்பாவைக் காப்பாற்ற இன்னொருவனுக்கு கழுத்தை நீட்ட ரெடியாகி விடுவாய்... உன் அம்மாவும்... என் அப்பாவும் காப்பாற்றிக்

கூட்டிக் கொண்டு வந்தவுடன் எனக்குக் கழுத்தை நீட்டுவாய்... நான் தாலிகட்ட வேண்டும். நான் உனக்கு அவ்வளவு சீஃப்பாக போய் விட்டேனாடி... நானும் ஒன்றும் கிடைக்க எளிதானவன் கிடையாது. அதை நீ உணரும்வரை உனக்கும் எனக்கும் எந்த விதமான சொந்தமோ.. பந்தமோ கிடையாது..."

வந்தனாவின் கண்கள் கலங்கின. அதை அவன் பார்ப்பதை அவளது சுயமரியாதை விரும்பவில்லை.

முகம் திருப்பிக் கொண்டாள். பாலமுருகனின் முகம் கருத்துவிட்டது.

'இவள் பெரிய மகாராணி.. என் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாளாம்...'

அவளைக் காயப்படுத்தும் வெறி அவனது மனதில் மூண்டது.

"எனக்கு உன்னைப் பார்க்கவே பிடிக்கவில்லை. கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஒருமுறை நடக்கும் நிகழ்வு... அது எனக்கு இவ்வளவு பெரிய துன்பமாக அமைந்துவிட்டது. என்னை நினைத்து எத்தனையோ பெண்கள் ஏங்கிக் கொண்டிருக்க.. எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்காத உன் கழுத்தில் தாலிகட்ட வேண்டிய துர்பாக்கியம் எனக்கு வந்து விட்டது. என்ன செய்வது... என் வாழ்க்கையே வீணாகப் போய்விட்டது..."

வந்தனா உதட்டைக் கடித்து தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு பதில் சொன்னாள்.

"இதற்குப் பதில் இந்தக் கோவிலில் நான் சொல்வதாக இல்லை... வீட்டில் வந்து சொல்கிறேன்..."

மற்றவர்கள் முன்னிலையில் 'அத்தான்' என்று அழைப்பவள் தனிமையில் அப்படி அழைப்பதை தவிர்ப்பதை அவன் கவனத்தில் எடுத்துக் கொண்டான். அவளது இந்த ஒதுக்கமும் அவனுக்குள் கோபத்தை உண்டு பண்ணியது.

'திமிர்.. உடல் முழுக்கத் திமிர்... ஜெயராமன் பெற்ற பெண் என்பதைக் காட்டுகிறாள்...'

மாலையுடன் மற்றவர்கள் வந்துவிட அவர்கள் கோவில் சந்நிதானத்திற்குள் சென்றார்கள். அபிஷேகம்... அர்ச்சனை எல்லாம் பண்ணிவிட்டு தீபாராதனை காட்டிய குருக்கள்... அவர்களிடம் வந்து தீபாராதனைத் தட்டை நீட்டியவாறு,

"பொண்ணும்.. மாப்பிள்ளையும் ஒருத்தருக்காக ஒருத்தர் பிறந்து வந்திருக்கிறாபுல இருக்காங்க.. ஜோடிப் பொருத்தம் பிரமாதம்.. குழந்தைகள் ஷேமமா இருக்கணும்... என்று வாழ்த்தினார்."

மனநிறைவுடன் அனைவரும் தீபாராதனை ஒளியைத் தொட்டுக் கண்ணில் வைத்துக் கொண்டனர்.

"இவங்க ரெண்டு பேரும் ஒருவருக்காக ஒருவர் பிறந்தவர்கள்தான் குருக்களே..." என்றார் விசுவநாதன்.

கோவிலை விட்டு வெளியே வந்தபோது வந்தனாவின் மனதில் புயல் அடித்துக் கொண்டிருந்தது. அவன் மனதிலிருப்பதை அவன் சொல்லிவிட்டான். அவள் மனதிலிருப்பதை அவள் சொல்ல வேண்டாமா? இது அதற்கான நேரமில்லை என்பதால் மௌனமாக காரில் ஏறினாள்.

இம்முறை வக்கீலை கலந்து ஆலோசிப்பது சம்பந்தமாய் பெரியவர்கள் பேச ஆரம்பிக்க கோதாவரி அதில் கலந்து கொள்வதற்காக முன்பக்கம் சென்று சிவகாமியின் அருகே அமர்ந்து கொண்டாள்.

கோதாவரிக்காக இடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவர்கள் இப்போது விலகி ஆளுக்கு ஒரு முனையில் அமர்ந்து கொண்டு வந்தார்கள். வந்தனா ஒடுங்கிக் கொண்டு வர பாலமுருகன் அதற்கும் பல்லைக் கடித்தான்.

"ஏண்டி ஓரமாய் போய் உட்காருகிற? அப்பா, அம்மா பார்த்துவிட்டு என்னைக் குடையவா?"

வந்தனா காது கேட்காதது போல் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள். பக்கத்தில் நெருங்கி அமர்ந்தால் 'என்னை மயக்குகிறாயா?' என்று கேட்பான். விலகி அமர்ந்தால் இப்படிப் பேசுவான். வேண்டாத மனைவி கை பட்டாலும் குற்றம்... கால் பட்டாலும் குற்றம்.

பாலமுருகன் அவளை முறைத்துக் கொண்டே நகர்ந்து அவளோடு ஒட்டி அமர்ந்தான். அவள் லேசாக ஒதுங்கிக் கொண்டாள். கார் திடீரென்று சடன் பிரேக் போட்டு நிற்க வந்தனா குலுங்கி பாலமுருகனின் மடியில் விழுந்தாள்.

"எருமை மாடு.."என்றான் பாலமுருகன்.

வந்தனா பதறி எழுந்தாள்.

"உன்னைச் சொல்லவில்லைடி... அதைச் சொன்னேன்..."

பாலமுருகன்  கை காட்டிய திசையில் நடு ரோட்டில் ஒரு எருமை மாடு அசையாமல் அசை போட்டுக் கொண்டு நின்றிருந்தது.

வந்தனாவிற்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. அந்த எருமைமாடு கூட நிம்மதியாய் இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. மற்றவர்கள் என்ன சொன்னாலும் அதைக் கண்டு கொள்ளாமல் நிற்பதற்கும் ஓர் சக்தி வேண்டும். அலட்டிக் கொள்ளாமல் அந்த எருமை மாடு நிற்பது போல் ஏன் அவளால் பாலமுருகனின் வார்த்தைகளை அலட்சியம் செய்ய முடியவில்லை? 'எருமைத் தோல்' என்கிறார்களே... அந்த எருமையின் சகிப்புத்தன்னை வந்துவிட்டால் உலகில் எதையும் ஜெயித்து விடலாம்.

டிரைவர் இறங்கி எருமை மாட்டை விரட்டிவிட்டு காரை எடுத்தார்.

"என்னா தெனாவெட்டாய் நிற்குது பார்..." விசுவநாதன் கூறினார்.

"நம்ம ஊர் எருமையில்ல.. தெனாவெட்டு இருக்கத்தானே செய்யும்..." டிரைவர் பெருமையாய் கூறிக் கொண்டார்.

"எருமையில் கூட ஊர் பெருமை காக்கும் எருமையா?" கோதாவரி கிண்டலாய் வினவினாள்.

"பின்னே இல்லையா... எல்லோரும் அதட்டுகிறோம் ..நகர்ந்துச்சா.. டிரைவரை காரை விட்டு இறங்கி அதுகிட்ட வர வைத்திருச்சு இல்ல" சிவகாமி மகளிடம் கூறினாள்.

பாலமுருகன் மனைவியைப் பார்த்தான். இப்போதும் அவள் ஓரமாய் தள்ளித்தான் அமர்ந்திருந்தாள்.

'அதிகமாய் பேசிவிட்டோமோ.. ஒரு வார்த்தையைக் கூடத் தாங்கிக் கொள்ளாத தொட்டால் சிணுங்கியாயிற்றே இவள்...'

காரை விட்டிறங்கி வீட்டிற்குள் போன பின் பாலமுருகன் அவளைச் சீண்டவில்லை... சாப்பிட்டு விட்டு கரும்பு ஆலைக்குப் போய்விட்டான். விசுவநாதன் யாருக்கோ

போன் போட்டு வரச்சொல்லிக் கொண்டிருந்தார். வந்தனா மாடியில் இருந்த அவளுடைய அறைக்குப் போய் கட்டிலில் படுத்தவள்.. சோர்ந்து போய் தூங்கி விட்டாள்.

மதிய உணவிற்கு பாலமுருகன் வீட்டிற்கு வந்த போது யாரோ ஒரு மனிதருடன் விசுவநாதனும்... ஆண்டாளும் தீவிரமாய் பேசிக் கொண்டிருந்தனர். பாலமுருகனைக் கண்டதும்,

"பாலா.. இவர்தான் லாயர் ஜெகந்நாதன்... சென்னையில் பேமஸ் லாயர். சிவில் கேஸ்களில் எக்ஸ்பர்ட்..." என்றார்.

பாலமுருகன் அவருடன் கை குலுக்கி விட்டு அமர்ந்தான்.

"ஓமே.. மேடம். நம்ம பக்கம் ஸ்ட்ராங்காய் இருக்கு. மெஜாரிட்டி ஷேர்ஸ் நம் கையில் இருக்கிற போது அவர்களால் எதுவும் செய்ய முடியாது. நீங்க சைன் பண்ணிடுங்க... நான் கோர்ட்டில் கேஸை ஃபைல் பண்ணிவிடுகிறேன். நெக்ஸ்ட் மூவை ஆரம்பித்து விடலாம்" என்றார் லாயர்.

ஆண்டாள் அவர் நீட்டிய பேப்பர்களில் எல்லாம் கையெழுத்துப் போட்டாள்.

"வந்தனா மேடம் சைன் பண்ண வேண்டுமே."

லாயர் கூறவும் விசுவநாதன் பாலமுருகனைப் பார்த்து

"வந்தனாவை வரச் சொல் பாலா," என்றார்.

பாலமுருகன் எழுந்து மாடிக்குச் சென்றான். அவனது அறைக்குள் நுழைந்தான். வந்தனா கட்டிலில் சுருண்டு படுத்திருந்தாள். அவளை எழுப்ப அருகில் சென்றவன் எழுப்ப மனமில்லாமல் அப்படியே பார்த்துக் கொண்டு நின்றான்.

நிர்மலமான முகம்... அதில் விழுந்து மறைக்கும் குழல் கற்றைகள்... காலையில் அவன் அடித்த அடியில் இன்னும் கன்றிச் சிவந்திருந்த கன்னம்.. கைகளை தலையணை மேல் போட்டு அவள் குறுகிப் படுத்திருந்த தோற்றம்

நிராதரவான அவளது நிலைமையை உணர்த்துவது போலிருக்க அவன் மனம் வலித்தது.

இவள் ஏன் அப்படிச் செய்தாள்? மற்ற பெண்கள் போல் இல்லாமல் ஏன் மௌனம் சாதித்தாள்...? காதலிக்கு ஓர் துன்பம் வந்தால் காதலனைத்தானே தேட வேண்டும்? இவள் ஏன் அதைச் செய்யவில்லை? ஆறுதல் தேடி அவனது தோள் சாய ஏன் இவள் வர வில்லை..? ஒரு போன்.. ஒரேயொரு போன் அவள் பண்ணியிருந்தாலும் போய் தூக்கிக் கொண்டு வந்திருப்பானே.. ஏன் இவள் அதைச் செய்யவில்லை..?

'வந்தனா.. என் காதலியை அவளுடைய அம்மா துணையுடன் என் அப்பா சிறை மீட்டு அழைத்து வர நான் கல்யாணம் பண்ணிக் கொள்வது எனக்கு எவ்வளவு அவமானத்தைத் தரும் என்பதை உணராமலே போனாயே...'

பாலமுருகன் பெருமூச்சோடு அவள் தோள் தொட்டு அசைத்து எழுப்பினான்... கண் விழித்த வந்தனாவின் கவனத்தில் அவன் தோள் தொட்டு எழுப்பிக் கொண்டிருப்பது பதிய அவசரமாய் அவனது கரம் விலக்கியவாறு எழுந்து அமர்ந்தாள்.

பாலமுருகனுக்கு சற்று முன் அவள் மேலிருந்த பரிதாபம் பறந்து போய்விட்டது. கோபம் வந்துவிட்டது.

"ஏய்... உன்னைத் தொட எனக்கு என்ன தலையெழுத்தா? உன் அம்மா... உன் அப்பா கம்பெனி மேல் கேஸ் போட லாயரை வரச் சொல்லியிருக்கிறாங்க. அந்த லாயர் ஏதோ பேப்பர்களில் நீ கையெழுத்துப் போடணும்னு சொல்லி வரச் சொன்னார்.. அப்பா அவர்கள் முன்னால் உன்னை கூட்டிக் கொண்டு வரச் சொல்லி என்னிடம் சொல்லிவிட்டார். நோ அதர் வே... நான் உன்னைத் தொட்டு எழுப்ப வேண்டியதாகப் போய் விட்டது. என்னமோ பெரிய உலக அழகி போல் அலட்டிக் கொள்கிறாயே... எனக்குத்தான் உன்னைக் கண்டாலே பிடிக்கவில்லைன்னு சொல்லி விட்டேனே... அப்புறமும் ஏண்டி அலட்டிக்கறே?"

"நான் ஒன்றும் அலட்டவில்லை... தூக்கத்தில் எழுப்பியதும் ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை அவ்வளவுதான்..."

"ஆமாம்... இது என்ன காலையில் இப்படி ஒரு தூக்கம்? மதியச் சாப்பாட்டிற்கு பின் கொஞ்ச நேரம் தூங்குவார்கள்.. கேட்டிருக்கிறேன்... பார்த்திருக்கிறேன்.. காலையில் சாப்பிட்டதும்... மதியச் சாப்பாட்டு நேரம் வரை தூங்குகிறவளை இப்போது தான் பார்க்கிறேன்.. சாப்பிட மட்டும் கண் விழித்து சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தால் வீடு விளங்கிவிடும். என்னவோ... உன் அப்பாவுடைய கம்பெனியில்தான் உழைப்பாயா? நாங்கள் எல்லாம் கேனைக் கிறுக்கன்களா? எங்கள் வீட்டில் வந்து படுத்துக் தூங்குவாயா? சாப்பிட்ட சாப்பாடு செரிமானம் ஆக வேண்டாமா?"

வந்தனாவிற்கு துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. இங்கே அவள் என்ன வேலைகளைச் செய்வது? வீட்டு வேலை செய்ய அவளுக்குத் தெரியாது. சென்னையில் இரவு பகல் பாராமல் அவள் உழைத்தது கம்ப்யூட்டர் கம்பெனியில்... இதை ஏன் இவன் உணர்ந்து கொள்ள மாட்டேன் என்கிறான் என்று எண்ணும்போதே அவளது மனம் அவளைப் பார்த்துச் சிரித்தது.

'போடி பைத்தியக்காரி.. இவனுக்கா எதுவும் தெரியாது? இவனா உன்னை உணர்ந்து கொள்ள மறுக்கிறான்? இவனுக்கு எல்லாமும் தெரியும்.. இவன் உன்னை உணர்ந்தவன் தான்... நீ தான் இவனுக்கு வேண்டாத பெண்டாட்டி ஆயிற்றே... உன்னைக் கண்டாலே இவனுக்குப் பிடிக்கவில்லை.. நீ எதைச் செய்தாலும் அதைக் குற்றமென்றுதான் இவன் சொல்லுவான்.. நீ விளக்கமளித்து என்ன பயன்...?

"ஏண்டி.. நான் ஒருத்தன் பேசிக் கொண்டே இருக்கிறேன்... நீ என்னடாவென்றால் செதுக்கி வைத்த சிலை போல அசையாமல் நிற்கிற? இவன் என்ன கேட்பது.. நாமென்ன பதில் சொல்வது என்ற அலட்சியமா? வாயைத் திறந்து பதில் சொல்லு..."

"நான் சொன்னால் உடனே கேட்டுக் கொள்ளப் போகிறீங்களா..? உங்கள் மனதில் என்ன தோன்றுகிறதோ.. அதைத் தானே பேசப் போகிறீங்க ..? அப்புறம் ஏன் என்னைப் பேசச் சொல்லுகிறீங்க ..?"

"அப்போ.. நான் கேட்டால் பதில் சொல்ல மாட்ட..?"

"பதில் சொல்ல என்ன இருக்கிறது..?"

"அப்படியா..? உன் கழுத்தில் நான் கட்டிய தாலி இல்லையா..?"

பாலமுருகன் அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே வினவினான்.. வந்தனாவிற்கு அழ வேண்டும் போல் இருந்தது.. அடக்கி கொண்டாள்..

'அழக்கூடாது.. என்னைக் கண்ணீர் விட வைப்பது தான் இவன் நோக்கம்.. இவன் முன்னால் கண்ணீர் விட்டு விடக் கூடாது.. பொறு மனமே.. பொறுத்துக் கொள்..'

24

கவிதை ஒன்று வந்தனாவின் நினைவில் எழுந்தது..

'தாய் அடித்தால் தந்தை முகம் தெரியும்
தந்தை அடித்தால் தாயின் கரம் அணைக்கு
தாயும் நீயாக... தந்தையும் நீயாக
உன்னையே வரித்தேன் - என் காதலனே..!
நீயே என்னையடித்தால்
நீதி கேட்டு நான் எங்கு செல்ல?
நீதிபதி உன் மீது
குற்றம் கூற யார் முகம் தேட?

நதி வற்றிப் போனாலே

ஓடப் செல்ல வழியேது...?

நீ விலகிப் போனாலே

நான் வாழ நிழலேது...?

அனைத்தும் அவனாக அவனைத் தேடி வந்தாள் வந்தனா. அவனோ 'உன்னைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை' என்று கூறுகிறான். வாள் கொண்டு அவளது எதிரிகளை வரைவதற்குப் பதில் தேளாய் தினம் தினம் அவளது மனம் மீது கொட்டுகிறான்... மனம் வலிக்க, மனம் சலிக்க ஓய்ந்து போய் நின்றாள் வந்தனா. எவனது தோளில் சாய்ந்து இளைப்பாற அவள் ஓடி வந்தாளோ... அவனே எதிரியாய் மாறி எதிரே நிற்க... செய்வதறியாது சிலையாய் சமைந்தாள்.. அதற்கும் அவன் அதட்ட அவள் மனம் துடித்தது... கண்ணீர் விட்டு அழுதால் துயரம் தீர்ந்து விடும்.. அதற்கும் வழியில்லாமல் விழி நீரை அணை போட்டாள்.

ஒரு திரைப்படப் பாடலில் கண்ணதாசன் எழுதியிருப்பார்.

'சொல்லி அழுதால் தீர்ந்து விடும்

சொல்லத்தானே வார்த்தையில்லை...'

வார்த்தைகளின்றி... அதைச் சொல்ல வழியுமின்றி திகைத்து நின்றாள் வந்தனா. காலையில் நடு ரோட்டில் அசையாமல் நின்ற எருமை மாட்டின் நினைவு வந்தது.

'எருமை மாடு...' என்று இழிவாக.. எளிதாகப் பேசுகிறோமே.. அதற்கு இருக்கிற தைரியமும்.. அலட்சியமும்.. திமிரும்... தெனாவெட்டும்... மனிதப் பிறவிகளுக்கு இருக்கிறதா?

வந்தனா வாய் திறந்தாள்.

"அந்தத் தாலிக்குக் கட்டுப்பட்டுத்தான் நீங்கள் சொல்வதையெல்லாம் நான் கேட்டுக் கொண்டும்... சகித்துக் கொண்டும் இருக்கிறேன்.."

"என் பேச்சை சகித்துக் கொண்டிருக்கிறாயா? இல்லை என்னையே சகித்துக் கொண்டிருக்கிறாயா...?"

எவ்வளவுதான் பொறுமை காப்பது? பொறுத்துப் பொறுத்துப் போக வந்தனா ஒன்றும் பூமாதேவி இல்லையே.. சாதாரண மனிதப் பிறவி தானே... அவள் வெடித்தாள்.

"இரண்டும்தான்..."

"என்னடி சொன்னாய்? என்னைச் சகித்தக் கொண்டிருக்கிறாயா? சகிக்க மாட்டாதவன் ஆகிவிட்டேனா?"

"ஆமாம்... ஆமாம்.. ஆமாம்... உங்கள் மனதில் நீங்கள் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறீங்க ? நீங்கள் பெரிய மன்மதனா? உங்கள் அழகைப் பார்த்து இந்த ஊரில் உள்ள பெண்கள் ஏங்கலாம்... நான் ஏங்கலை... ஏங்கவும் மாட்டேன்... காதலித்து தொலைத்து விட்ட கடமைக்காக கழுத்தை நீட்டினேன். கழுத்தை நீட்டித் தொலைத்து விட்ட கடமைக்காக உங்களையும்... உங்கள் பேச்சையும் சகித்துக் கொண்டிருக்கிறேன்... விட்டால் பேசிக் கொண்டே போகிறீங்களே... உங்களுக்குத்தான் பேசத் தெரியுமா? இல்லை உங்களுக்குத் தான் மானம்... மரியாதை ரோசம் இருக்கிறதா? எனக்கு இல்லையா?"

"ஏன் இல்லை... நிறைய இருக்கிறது... அது தான் வாயைத் திறந்து பேச ஆரம்பித்து விட்டாயே... இன்னும் என்ன தயக்கம்? பேசு.. பேசித் தீர்த்து விடு... உனக்காடி பேசத் தெரியாது? உன்னை 'அப்பாவி' 'தொட்டால் சிணுங்கி'ன்னு நான் நினைத்த காலம் எல்லாம் மலையேறி விட்டது. எவ்வளவு கெட்டிக்காரி நீ.. எவ்வளவு சாலக்காரி நீ.. ஊர் மேயும் அமெரிக்க மாப்பிள்ளை என்றதும் ஓடி வந்துவிட்டாய்... அதுவே ஒழுங்கான மாப்பிள்ளை அமைந்திருந்தால்...? இந்நேரம் அவனுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருந்திருப்பாய்...”

கடலில் மூழ்கும்போது பற்றுக்கோலாய் பிடித்திருக்கும் மரக்கட்டை முதலையாக மாறிப் போனால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருந்தது வந்தனாவிற்கு. தந்தை செய்த துரோகச் செயல்களில் இருந்து தப்பிக்க காதலனின்

மடிதேடி வந்தால்... அவன் இடியாக அவள் தலை மீது இறங்கினான்.

"நீங்க மட்டும் என்ன..? என்னைப் பிடிக்காமல் கல்யாணம் செய்து கொண்ட தியாகிதானே நீங்க? நான் வராமல் போயிருந்தால்.. நீங்களும் எவள் கழுத்திலாவது தாலியைக் கட்டிக் குடும்பம் நடத்த ஆரம்பித்திருப்பீங்கதானே...?"

"ஏய்ய்... என்னைப் பற்றி பேச உனக்குத் தகுதி இல்லைடி... உன் அப்பா தோற்று விடக்கூடாது என்பதற்காக காதலை மறைத்துக் கொண்டு ஊமைக் கோட்டான் போல உட்கார்ந்து இருந்தவள்தானே நீ... உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா?"

"ஹலோ.. நீங்கள் மட்டும் என்ன மகானா? உங்கள் அப்பா தோற்று விடக்கூடாது என்பதற்காகத்தானே பிடிக்காதவளாய் இருந்தும் என் கழுத்தில் தாலிகட்டினீங்க ? என்னைப் பேச உங்களுக்கு மட்டும் தகுதி இருக்கிறதா?"

பாலமுருகன் முறைப்புடன் அடுத்துப் பேச வாய் திறந்த போது அறைக்கதவு படபடவென்று தட்டப்பட்டது. அவசரமாய் கதவைத் திறந்தான் பாலமுருகன். கோதாவரி நின்றிருந்தாள்.

"உன் புதுப் பொண்டாட்டியைக் கொஞ்ச நல்ல நேரம் பார்த்தாய் அண்ணா... கீழே எல்லோரும் வந்தனா சைன் போட வருவதற்காக காத்திருக்கிறார்கள். கூப்பிட வந்தவன்... வந்த வேலையை மறந்து விட்டு உன் கொஞ்சும் வேலையை ஆரம்பித்து விட்டாயா? வா..வா.. அதை அப்புறம் கன்டினியூ பண்ணிக் கொள்ளலாம்... கீழே வந்து வந்தனாவை சைன் பண்ணிவிட்டு வரச்சொல்..."

வந்தனாவிற்கு 'ஐயோ' என்றிருந்தது.

'இவள் வேறு.. நேரம் காலம் தெரியாமல் கேலி பேசுவாள்...

"கோதாவரி... எதற்கு இந்த கேஸ் போடும் வேலையெல்லாம்... என் அப்பாவின் சொத்து எனக்கு வேண்டாம்.." வந்தனா எரிச்சலுடன் கூறினாள்.

"நீ கொண்டு வந்தாலும்... இங்கே யாரும் வாங்கிக் கொள்ள மாட்டோம். உன் அப்பாவின் சொத்திற்காக பல்லைத் தேய்த்துக் கொண்டு யாரும் இங்கே காத்திருக்கவில்லை. அதையெல்லாம் அதற்காக நாக்கைத் தொங்க போட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்க மாப்பிள்ளை எவனுக்காவது கொடுக்கச் சொல்லு... இது விசுவநாதனின் குடும்பம். எங்கள் வீட்டுச் சொத்தே அழியாத சொத்தாக... அள்ள அள்ளக் குறையாத சொத்தாக இருக்கிறது. உங்கள் வீட்டுச் சொத்து எங்களுக்கு வேண்டாம்" கடுகடுத்தான் பாலமுருகன்.

"அண்ணா.. இப்போது அவள் என்ன சொல்லிவிட்டாள்ன்னு நீ இவ்வளவு பேச்சு பேசுகிற? அவள் மனதில் பட்டதைத்தானே அவள் சொன்னாள்? அவளுக்கு அந்த உரிமையில்லையா? நீ பேசுவது கொஞ்சம் கூட நன்றாக இல்லை அண்ணா... அவள் உன்னை நம்பி வந்தவள்..." கோதாவரி தமையனைக் கடிந்து கொண்டாள்.

"அவள் ஒன்றும் என்னை நம்பி வரவில்லை கோதாவரி. அவளுடைய அம்மாவையும்.. நம் அப்பாவையும் நம்பி வந்தாள்."

பாலமுருகன் விரைவுடன் அறைக் கதவைத் திறந்து கொண்டு கீழே சென்று விட்டான். கோதாவரிக்கு எதுவோ சரியில்லை என்பது புரிந்து விட்டது.வந்தனாவின் அருகில் வந்து அவளது தோள் மேல் கை வைத்தாள்.அவ்வளவுதான். மடை திறந்த வெள்ளம் போல தோழியின் மேல் சாய்ந்து வந்தனா கதறிக் தீர்த்து விட்டாள். எதுவும் கேட்காமல் தோழியின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி அணைவாய் நின்றாள் கோதாவரி.

## 25

கோதாவரி புத்திசாலி. பாலமுருகனின் மனநிலையை மிக எளிதாகப் புரிந்து கொண்டு விட்டாள். உயிருக்குயிராய்

வந்தனாவை அவன் காதலித்ததை கோதாவரி நன்கு அறிவாள். பின் ஏன் அவன் அவளை இவ்வாறு துன்புறுத்துகிறான்?

அது அவனது ஆண்மையின் முறையீடு. அவனைக் காதலித்தவளை அவன்தானே காப்பாற்றி கைப்பிடித்திருக்க வேண்டும்? தகப்பன் அழைத்துக் கொண்டு வர அவன் தாலி கட்டுவது அவனது ஆண்மைக்கு இழுக்கு அல்லவா?

கோதாவரி வந்தனாவிடம் இதைத்தான் கூறினாள்.

"நீ அமைதியாய் இருந்தது தவறு வந்தனா. நீ அண்ணனிடம் உன் நிலைமையைக் கூறிக் கதறியிருக்க வேண்டும். உன்னைக் காப்பாற்றி அழைத்துச் செல்லச் சொல்லியிருக்க வேண்டும். நீயேன் மௌனமா இருந்த வந்தனா..?."

"அப்பா... அப்பாவிற்காக மௌனமா இருந்தேன் கோதாவரி. அவர் இப்போதுதான் புத்தி மாறிப் போனார். நான் பிறந்ததில் இருந்து எனக்கு ஒரு நல்ல அப்பாவாகத் தானே இருந்திருக்கிறார்? இப்போது உன் அண்ணனின் மனதில் ஒரு காயம் ஏற்பட்டுள்ளதே. அதே போல் அவர் மனதில் காயம் இருந்ததா. இல்லையா? என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கி... எனக்கென்று ஒரு அடையாளத்தை உருவாக்கித் தந்த மனிதர் இல்லையா அவர்? அந்த நன்றிக் கடனுக்காக மௌனமாக இருந்தேன். ஆனால் மௌனமாக மட்டும்தான் இருந்தேன் கோதாவரி. கனவிலும் உன் அண்ணனுக்கு துரோகம் நினைக்கவில்லை. என் அப்பா கொண்டு வந்து நிறுத்தின மாப்பிள்ளைகளில் எவனையும் கை பிடித்திருக்க மாட்டேன். அந்த நிமிடம் என் உயிரை விட்டிருப்பேன். இது ஏன் உன் அண்ணனுக்குப் புரியவில்லை?"

"அவனுக்கு உன்னைப் புரிய வைக்க முயற்சி செய்வதை விட அவனை நீ புரிந்து கொள்ள முயற்சி செய் வந்தனா. அதுதான் உன் வாழ்விற்கு நல்லது. ஏனென்றால் இந்த

விசயத்தில் இப்போது குற்றவாளி நீதான்... அவனில்லை...."

"என்ன கோதாவரி இப்படிச் சொல்கிற?"

"அவன் உன் மேல் உயிரையே வைத்திருந்தான்..."

"நான் அவர் மேல் உயிரை வைக்கவில்லையா...?"

"அதை அவன் உனக்கு உணர்த்தியது போல்.. நீ அவனுக்கு உணர்த்தினாயா? சொல் வந்தனா உணர்த்தினாயா?"

"நான் என்ன செய்திருக்கனும் கோதாவரி?"

"நீ அவனுக்கு எப்போதாவது போன் பண்ணி பேசியிருக்கிறாயா?"

"இதுவரை இல்லை.?"

"ஏன் இல்லை?"

"அப்பாவிற்கு தெரிந்து விடும்... அதனால் பேசவில்லை."

"அதுதான் ஏன்? உன் அப்பாவிற்குத் தெரிந்தால் என்ன?"

"வீணாய்... அவர் மனதை நோகடிக்க வேண்டாம்ன்னு ..."

"என் அண்ணனின் மனதை நோகடித்தாய்..."

"கோதாவரி... கனவிலும் உன் அண்ணனை நான் மறந்ததில்லை..."

"நிஜத்தில் என்ன பண்ணினாய்? மற்றவர்கள் முன்னால் அவனை அலட்சியப் பார்வை பார்த்தாய். தனிமையில் அவனிடம் உருகினாய். ஒரு போன் பேசக்கூட பயந்து ஜாக்கிரதையாய் இருந்தாய்... நிலாக்கால இரவுகளில் மட்டும் யாருக்கும் தெரியாமல் அவனைச் சந்தித்தாய். இதெல்லாம் என்ன வந்தனா."

"கோதாவரி.. உன் அண்ணன்தான் முதன் முதலில் நிலா வெளிச்சத்தில் தனிமையில் சந்திக்க என்னை அழைத்தார்..."

"அதையும் நீ செய்யவில்லை..."

"கோதாவரி அவரை நான் காதலிக்கிறேன்."

"அதை நீ அவனிடம் தெரியப்படுத்தினாயா? இல்லை பெண் கேட்டு வந்த என் அம்மா... அப்பாவின் முன்னிலையில் உன் அப்பாவிடம் தெரியப் படுத்தினாயா?"

"நான்தான் நிலைமையைச் சொன்னேனே..."

"அதை அவனிடம் சொன்னாயா...?"

வந்தனா தலை குனிந்தாள். உண்மை அவளைச் சுட்டது.

"இல்லை... சொல்லவில்லை..."

"சொல்ல உனக்குத் தோன்றவில்லை. இதை அவன் எப்படித் தாங்கிக் கொள்வான்? அவன் கோபத்தில் நியாயம் உள்ளது..."

"கோதாவரி.. நான் என் அப்பாவிடம்.. அதற்குப் பின்னால் என் காதலைச் சொன்னேன்... போராடினேன்."

"எங்களைப் பெற்றவர்கள் அவமானப்படுவதை பார்த்துக் கொண்டிருந்து விட்டு... அதற்குப் பின்னால் தனியாக உன் அப்பாவிடம் உன் காதலைச் சொல்லி என்ன பிரயோஜனம் வந்தனா? உன் போராட்டம் எங்களைப் பெற்றவர்கள் முன்னிலையில் இருந்திருக்க வேண்டும். தனியாக நீ போராடி எங்களுக்கு ஆகப் போவதென்ன?"

"கோதாவரி. அத்தை மாமாவின் முன்னால் வாய் திறந்து என் காதலைச் சொல்லி அவர்களுடன் நான் வெளியேற ஒரு நிமிடம் கூட ஆகியிருக்காது. அதனால் என் அப்பா அவமானப்படுவாரே கோதாவரி. என்னால் அது முடியுமா?"

"எங்களால் முடிந்ததே வந்தனா... உன் அப்பாவின் குணம் தெரிந்திருந்தும் என் அம்மா ஏன் உன்னைப் பெண் கேட்டு உன் வீட்டு வாசல் படியை மிதித்தாங்க? அண்ணா கல்யாணத்தை மறுத்தான் வந்தனா... வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்க அவன் தயாராக இல்லை..."

"கோதாவரி. நான் மட்டும் அங்கு சந்தோசமாக இருந்தேனா? அப்பா என்னை வீட்டுச் சிறையில் வைத்தார் கோதாவரி..."

"அதையாவது என் அண்ணனிடம் சொல்லி அழுதாயா? என்னைக் காப்பாற்றிக் கூட்டிக் கொண்டு போன்னு கேட்டாயா? உன் அம்மாதான் அதைச் செய்திருக்கிறாங்க . அதையும் அவங்க அண்ணனிடம் கேட்டிருக்கலாம். அப்பாவிடம் கேட்டுட்டாங்க .. அதுவும் இப்போது தவறாகி விட்டது..."

"அவர் வீட்டுக்குப் பெரியவர் இல்லையா?"

"அவர் வீட்டுக்குப் பெரியவர்தான் . ஆனா உனக்குக் காதலன் அண்ணன்...அவன்தான் உனக்குப் பெரியவனா தோணனும் "

வந்தனா சிந்தனையுடன் கட்டிலில் அமர்ந்து விட்டாள். கோதாவரி அவள் தோள் தொட்டு எழுப்பினாள்.

"இதையெல்லாம் பேசவும்... யோசிக்கவும் இப்போது நேரம் இல்லை வந்தனா... கீழே லாயர் வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறார்... எழுந்து வா."

வந்தனா எழுந்தாள். இருவரும் கீழே வந்தனர்.

"ஏம்மா.. வந்தனாவைக் கூப்பிட்டு வர இவ்வளவு நேரமா? உன் அண்ணனை அனுப்பினால் அவன் கதை பேசிக் கொண்டிருந்தான். உன்னை அனுப்பினால்... நீயும் இப்படி லேட் பண்ணுகிறாயே... என்ன பெண்ணம்மா நீ...” விசுவநாதன் கடிந்து கொண்டார்.

"வந்தனாவிற்கு அவளது அப்பாவின் சொத்து வேண்டாமாம். அப்பா... எதற்கு கேஸ் போட வேண்டும்ன்னு கேட்கிறாள்."

"அவள் சொத்து இங்கே யாருக்கம்மா வேண்டும்? கட்டின பெண்டாட்டி கல் போல் இருக்க எவளையோ கட்டிக்கணும்னு இந்த வயதில் சொல்லியிருக்கிறான். அவன் அழகைப் பார்த்து விட்டா அந்த அமெரிக்காக்காரி அவனைக் கட்ட சம்மதம் சொன்னாள்? சொத்தைப் பார்த்து

விட்டுத்தானே சொன்னாள். பணமில்லா மனிதன் செல்லாக்காசு. காசிருந்தாலும் காசில்லா விட்டாலும் கட்டின பெண்டாட்டி குடும்பம் நடத்துவாள். கஞ்சி ஊற்றுவாள் கண்டவளும் அதைச் செய்வாளா? அதை அவனுக்கு உணர்த்தத்தான் இந்த வேலை செய்கிறோம். வந்தனா.. நீ கையெழுத்துப் போடும்மா.."

வந்தனா பேனாவை வாங்கிக் கொண்டாள். வக்கீல் நீட்டிய பேப்பரை படித்துப் பார்த்தாள். அதன் பின் பாலமுருகனைப் பார்த்துக் கேட்டாள்.

"அத்தான்... நான் இதில் சைன் பண்ணவா? "

26

பெண்கள் எப்போதும் சூட்சுமமானவர்கள்.. உணராமல் இருக்கும் வரையில்தான் கண்ணீரில் தங்களைக் கரைத்துக் கொள்வார்கள். உணர்ந்து விட்டால் அந்தக் கண்ணீர்க் கடலைத் தாண்ட வழியைக் கண்டுபிடித்து விடுவார்கள். வந்தனாவும் அப்படித்தான்... தன்னைக் கேட்காமல் தன் தந்தையின் உதவியைக் கேட்டு விட்டாளென்ற கோபத்துடன் இருப்பவனிடம்... அவனது தந்தை கையெழுத்துப் போடச் சொன்ன பின்னும் போடாமல் 'நான் சைன் பண்ணவா?' என்று உத்தரவு வேண்டி நின்றாள் வந்தனா.

பாலமுருகனின் ஆண்மை பெருமிதம் அடைந்தது. இருந்த போதும் அவன் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டு,

"அப்பாவே சொல்லிட்டாரே... அதன் பின்னும் என்னிடம் என்ன பெர்மிசன் வாங்க வேண்டியிருக்கிறது... போடு..." என்றான்.

வந்தனா கோதாவரியைப் பார்த்தாள். அவள் கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் இணைத்து

வளையமாக்கி 'சூப்பர்' என்று சைகை செய்தாள். வந்தனா புன்னகையுடன் கையெழுத்துப் போட்டாள்.

"இது போதும் விசுவநாதன் சார். இனி நான் பார்த்துக் கொள்கிறேன். வெற்றி நமக்குத்தான்" என்ற ஜெகந்நாதன் எழுந்து விசுவநாதனிடமும் பாலமுருகனிடமும் கை குலுக்கி விடைபெற்றார்.

"ஆமாம்.. சிவகாமி.. பெரியகுளம் பேங்கிற்குப் போக வேண்டும்ன்னு சொன்னாயே... என்ன விஷயம்?" விசுவநாதன் வினவினார் .

"அண்ணியுடைய நகைகளையும்.. வந்தனாவின் நகைகளையும் லாக்கரில் வைக்கனும்..." என்று சிவகாமி கூறினாள்.

"அத்தை... அம்மாவின் நகைகளை மட்டும் லாக்கரில் வைத்துக் கொள்ளட்டும்.. என்னுடைய நகைகளை நீங்கள் நம் குடும்ப நகைகளுடன் சேர்த்து நம் லாக்கரில் வைத்து விடுங்கள்" என்றாள் வந்தனா .

"அதுதான் சரி.. வந்தனா இனி உங்கள் வீட்டுப் பெண் சிவகாமி. அவளுடைய நகைகளை என்ன செய்யனும் என்பது இனி உங்கள் கவலை..." ஆண்டாள் சிரித்தாள்.

அவளது சிரிப்பில் ஒரு தனிமை உணர்வு இருப்பது அனைவருக்கும் புரிந்தது. பாலமுருகனின் மனம் வருந்தியது.

"அத்தை... நீங்களும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். என்னை மருமகன்னு நினைக்க வேண்டாம்.. மகனாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய உரிமை உங்களிடமே இருக்க வேண்டும் ... நீங்கள் விரும்பியதால்தான் தனி வீடு. தனி லாக்கர்.. தோப்பு வயல் எல்லாமும்... நீங்கள் விரும்பினால் அங்கே போங்க... இல்லாவிட்டால் இங்கேயே இருங்க. இது உங்க வீடு அத்தை..." பாலமுருகன் ஆதரவாகக் கூறினான்.

"கேட்டாயா தங்கச்சி.. உன் மருமகன் சொல்வதை மனசில் போட்டுக்க.. அவன் உன் மகன். பரிதவிக்காம இருக்கணும்.

நாங்கள்ளாம் எதுக்கு இருக்கோம்? உன்னைத் தாங்கத்தான் இருக்கிறோம். மகளோடு வீட்டை விட்டு வெளியேறி வந்த.. இப்போது மகளையும் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விட்டு தனித்து நிற்கிற... கவலை வேணாம் தங்கச்சி... இதை உன் மகள் வீடுன்னு நினைத்துக் கொள். உரிமையாய் தங்கு..." விசுவநாதன் எடுத்துக் கூறினார்.

"இல்லேங்க அண்ணா. ஆயிரம்தான் நீங்கள் சொன்னாலும் நான் சொன்னது சொன்னதுதான். வந்தானவிற்கு தாய் வீடு என்று ஒன்று இருக்க வேண்டும். என் சிறுவயதிலேயே என்னைப் பெற்றவர்கள் இறந்து போனார்கள். எனக்குத் தாய் வீடுன்னு ஒன்று இல்லாமலேயே போய் விட்டது. சிவகாமிக்கு அவளது அண்ணனின் குணம் சரியில்லை. அதனால் அவளுக்கும் தாய் வீடு கிடைக்காமலே போய் விட்டது. என் மகளுக்கும் அப்படி ஆகி விடக்கூடாது. நாளைக்கு கோதாவரிக்கு கல்யாணம் ஆகி அவள் பிறந்த வீட்டில் வந்து சீராடும்போது என் மகள் ஏங்கிப் போய் விடக்கூடாது. சாப்பிட்டு விட்டு பெரியகுளம் பேங்கிற்குப் போய் லாக்கரில் என் நகைகளை வைத்துவிட்டு.. சாயங்காலமே.. நான் தாழையூத்து வீட்டிற்குப் போய் விடுவதாக இருக்கிறேன். நாளைக்கு வந்தனாவும். மாப்பிள்ளையும் அங்கே மறு வீடு வரவேண்டுமே..."

எல்லோரும் அவள் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டனர்.

சொன்னதைப்போலவே ஆண்டாள் அன்று மாலையே தாழையூத்து வீட்டுக்குப் போய்விட்டாள் ..மறுநாள் பாலமுருகனும் வந்தனாவும் மறுவீட்டு விருந்துக்கு வந்தார்கள் ..

வாசலில் கார் வந்து நிற்கும் ஒலி கேட்டதும் ஆண்டாள் வெளியே வந்து கேட்டைத் திறந்து விட்டாள். பாலமுருகனும் வந்தனாவும் இறங்கி நிற்க அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போனாள்.

சிகப்பாயி, உதவி செய்ய ஆண்டாள் அருமையாய் விருந்து சமைத்திருந்தாள்.

"போதும் அத்தை... இதுவே அதிகம்."

"நல்லாச் சாப்பிடுங்க மாப்பிள்ளை. நான் சமையலில் எக்ஸ்பர்ட்."

"என்னை எப்போதும் போல் பாலான்னே கூப்பிடுங்க அத்தை. மாப்பிள்ளைன்னு கூப்பிட வேண்டாம்."

"அது சரி வராது மாப்பிள்ளை.. மகளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டு மரியாதையில்லாமல் பெயர் சொல்லிக் கூப்பிடுவது சரியாய் இருக்காது..."

பாலமுருகன் எழுந்து கை கழுவி விட்டு வர அவசரமாய் அவன் கை துடைக்க துண்டை எடுத்துக் கொண்டு போய் கொடுத்தாள் சிகப்பாயி. அவன் சிரித்துக் கொண்டே ஏதோ கேட்க நாணிக் கோணிக் கொண்டு பதில் வேறு சொன்னாள் அவள். வந்தனாவிற்கு 'பக்' கென்று இருந்தது.

'என்ன பேசிக் கொண்டு இருக்கிறார்கள்?'

சிகப்பாயியுடன் பேசிக் கொண்டே தற்செயலாய் வந்தனாவின் முகத்தைப் பார்த்து விட்ட பாலமுருகனின் விழிகள் மின்னின.

'ஆஹா... பார்வை பார்க்கிறாயாடி... இதோ பார்த்துக் கொள்...' அவன் வேண்டுமென்றே சிகப்பாயி உடன் வார்த்தை வளர்த்தான். அவனுடன் பேச சந்தர்ப்பம் கிடைத்து விட்ட சந்தோசத்தில் அவள் பூரிப்புடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். தாங்க முடியாத வந்தனா அவசரமாய் எழுந்து கை கழுவும் இடத்திற்கு விரைந்தாள். ஆண்டாள் திகைத்தாள்.

"ஏண்டி பாதிச் சாப்பாட்டில் எழுந்து ஓடுகிற?"

"பசியில்லை அம்மா..."

வந்தனா கை கழுவிக் கொண்டிருக்கும்போது பாலமுருகன்,

"ம்ம்... அப்படிப் போடு...சிகப்பாயியா... கொக்கா... நடத்து நடத்து..." என்றபடி அவளின் தோள் மேல் கையிலிருந்த துண்டைப் போட்டான்.

சிகப்பாயி மகிழ்ந்து போக... வந்தனா கொதித்துப் போனாள். பாலமுருகன் பெட்ரூமிற்கு நுழைய... பின்னாடியே நுழைந்தவள்,

"அவளோடு என்ன கொஞ்சல் வேண்டியிருக்கிறது? என்று கேட்டாள்."

"அது உனக்குத் தேவையில்லாதது.." பாலமுருகன் அலட்சியமாய் கட்டிலில் படுத்து ஒரு நாவலை கையில் எடுத்தான்.

வந்தனா அவன் கையிலிருந்த நாவலைப் பிடுங்கினாள்.

"ஏய்... ஏண்டி நான் படித்துக் கொண்டிருப்பதை பிடுங்குகிறே?"

"எனக்கொரு பதிலைச் சொல்லுங்க."

"நான்தான் சொல்லிட்டேனே..."

"நீங்கள் எப்படி அவளுடன் பேசலாம்."

"நான் அப்படித்தான் பேசுவேன்."

"பேசக்கூடாது..."

"பேசுவேன்..."

"அத்தான்..."

வந்தனா ஏறக்குறைய அலறினாள். பாலமுருகனின் முகத்தில் இறுக்கம் வந்தது. அவளைத் தீர்க்கமாய் பார்த்தான்.

"அத்தான்...! என்னைத்தான் நாம் தனிமையில் இருக்கும்போது அத்தான்னு கூப்பிட மாட்டாயே... இப்போது என்ன காதல் பொங்கி வழிகின்றதா? போடி ..நீ என்னை இப்படிக் கூப்பிடாதே... மற்றவர்கள் முன்னால் வேஷம் போட அப்படிக் கூப்பிடுபவள் நீ... தனியாய் இருக்கும்போதும் ஏன் வேஷம் போடுகிற? உன் வேஷத்தைக் கலைத்து நீ நீயாய் இரு..."

அவன் முகத்தில் எல்லையற்ற வெறுப்பு மண்டிக் கிடந்தது. அவன் வெறுக்கிறான் என்பதால் ஒதுங்கிப் போகலாம். அவனை விட்டுக் கொடுக்க முடியுமா? வந்தனா துடித்தாள்.

27

அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்பது மட்டும் தெரிய வந்தால் வந்தனா அப்படித் துடித்திருக்க மாட்டாள். பாலமுருகன் பெண்களிடம் வித்தியாசமாய் பேசிப் பழகுகிறவன் கிடையாது. சிகப்பாயி முதல் பல பெண்கள் தன்னிடம் மயங்குவதை அறிந்திருந்தாலும் சிறு பார்வை வித்தியாசம் கூடக் காட்டாமல் அவர்களிடம் பேசுகிறவன்.

சிகப்பாயி அவன் கை துடைக்கத் துண்டைக் கொண்டு வந்து கொடுத்தபோது,

"ஏன் சிகப்பாயி... நீயேன் அலட்டிக்கிற. உன்னை அத்தையைக் கவனித்துக் கொள்ளச் சொல்லித்தான் இங்கே அனுப்பி வைத்திருக்கிறோம். என்னைக் கவனித்துக் கொள்ளத்தான் எனக்கென்று ஒருத்தி வந்து விட்டாளே... அவள் பார்த்துக் கொள்வாள்" என்று சிரித்துக் கொண்டே கூறியவாறு துண்டை வாங்கிக் கொண்டான்.

அவன் தன்னுடன் பேசுவதில் புளகாங்கிதமடைந்த சிகப்பாயி நாணிக் கோணியவாறு.

"அவுகதான் சாப்பாடே கதின்னு சாப்பிட்டுக்கிட்டு இருக்காகளே... அவுக வந்து துண்டைக் கொடுக்கிற வரைக்கும் ஈரக் கையோடவேயா இருப்பீக. அதான்... நான் ஓடியாந்தேன்" என்று கூறினாள்.

"அவள் ஒல்லிக் குச்சி உடம்புக்காரி. சாப்பிடாமல் கம்ப்யூட்டரே கதின்னு கிடந்தவள். சாப்பிட்டு உடம்பைத் தேத்துன்னு நான்தான் அதட்டி மிரட்டி சாப்பிட வைத்திருக்கிறேன். எனக்குப் பயந்து சாப்பாட்டை உள்ளே

தள்ளிக்கிட்டு இருக்கிறாள். அவள் துண்டை எடுத்துத் தராவிட்டால் என்ன...? நான் அவள் முந்தானையில் கை துடைத்துக்கப் போகிறேன். நீ போய் உன் வேலையைப் பாரு..." என்று சொல்லிக் கொண்டே வந்தனாவைப் பார்த்தவனின் கண்கள் மின்னின.

அவளது சந்தேகத்தையும் பொறாமையையும் கண்டு கொண்டவன் 'ஆஹா' என்று மனதில் சொல்லிக் கொண்டு சிகப்பாயி உடன் பேச்சை வளர்த்தான்.

"பாரு சிகப்பாயி. நீ நல்ல பெண். நம்பிக்கையான ஆள். என்பதால்தான் அத்தைக்கு துணையாய் உன்னை இங்கே அனப்பியிருக்கிறோம். அத்தையை பத்திரமாய் பார்த்துக்க ..பார்த்துக்குவதான ?" கண்கள் வந்தனாவிடம் நிலைத்திருக்கக் கூறினான் பாலமுருகன்.

சிகப்பாயி வெட்கத்துடன், "என்னங்க ஐயா... இப்படி ஒரு வார்த்தையை சொல்லிப்புட்டிக... யாரு சொன்னாலும் கேட்காத இந்த சிகப்பாயி நீங்க சொன்னா உடனே கேட்டுக்குவா. அது இந்த ஊருக்கே தெரியுமே..." என்றாள்.

'தேவுடா.. இது வேறயா..' என்று நொந்து கொண்டவன் வந்தனா எழுந்து வருவதைக் கண்டதும் பலமாய் சிரித்து,

"நல்லாச் சொன்னே போ. உன்னைப் போலவே எல்லா வேலையாள்களும் விசுவாசமா இருந்த விட்டால் எங்கள் பாடு கொண்டாட்டம்தான்..." என்றான்.

"யாரு எப்படியோ ஐயா... இந்த சிகப்பாயி உசிரு இருக்கிற வரை உங்களை மீற மாட்டாள்..." என்றாள் அவள்.

'நான் என்ன சொல்கிறேன். இவள் என்ன சொல்கிறாள்..' என்று நினைத்துக் கொண்ட பாலமுருகன்... சிகப்பாயி பேசியதை கேட்டுக் கொண்டே வந்த வந்தனா எரிமலையாய் முறைப்பதைக் கண்டு மனதிற்குள் குதூகலம் கொண்டான்.

"சிகப்பாயி.. இங்கே உனக்கு என்ன வேலை.. போ.."என்றாள் வந்தனா.

"ஐயா கூடப் பேசிக்கிட்டு இருந்தேன்ம்மா..."

"அதுதான் பார்த்தேனே..."

"பார்த்தீங்களா...கேட்டீங்களா?" சிகப்பாயி கூற பாலமுருகன் தேவையில்லாமல் சிரித்து மகிழ்ந்து,

"அப்படிப் போடு. சிகப்பாயியா கொக்கா..." என்றபடி கையிலிருந்த டவலை தூக்கி அவளது தோளில் போட்டான்.

அவ்வளவுதான் வந்தனா எரிதணலாய் மாற அவன் கண்டு கொள்ளாமல் அவர்களது ரூமிற்குள் போய் விட்டான்.

வந்தனா நகம் கடித்தவாறு யோசித்துக் கொண்டிருக்க பாலமுருகன் அவளுக்கு முதுகு காட்டித் திரும்பிப்படுத்துத் தூங்கி விட்டான். அறைக் கதவு தட்டப் பட்டது. வந்தனா எழுந்து கதவைத் திறந்தாள். சிகப்பாயி நின்றிருந்தாள்.

"சாயந்திரம் ஆச்சு. காபிப் பலகாரம் சாப்பிட வரலையா?"

"எனக்குத் தெரியும்.. வருகிறோம்..போ."

"நீங்க எப்ப வேணும்னாலும் சாப்பிடுங்க. ஐயாவை எழுப்பி விட்டால் தேவலை. இன்னைக்கு அவருக்கு பிடிச்ச பலகாரம் செஞ்சிருக்கேன். சூடு ஆறு முன்னே அவரு வந்து சாப்பிட்டுப்புட்டா நிம்மதியா இருப்பேன்."

'அதற்காக என் நிம்மதியை ஏண்டி குறைக்கிறாய்' வந்தனா பல்லைக் கடித்தபடி சிகப்பாயியை முறைத்தாள்.

"ஆறினாலும் அவர் சாப்பிடுவார். நீ போ. நாங்கள் வருகிறோம்" சிகப்பாயி வெளியில் நிற்க அவளது முகத்தில் அடிப்பது போல் கதவை ஓங்கிச் சாத்தினாள் வந்தனா.

"அங்கேயென்ன கலாட்டா?" பாலமுருகன் விழித்துக் கொண்டு வினவினான்.

"ஒன்றுமில்லை தூங்குங்க..."

"தூங்குவதா... மணியைப் பார்த்தாயா? மனுசனுக்கு சாயங்கால காபி டிபன் கொடுக்க வேண்டுமென்ற

நினைப்பே உனக்கில்லையா?"

"சரி சரி முகம் கழுவிவிட்டு வாங்க."

பாலமுருகன் பனியனும்... கைலியும் அணிந்து கொண்டு டைனிங் டேபிளுக்கு வந்தான். சிகப்பாயி அவனைக் கண்டதும் தன் முப்பத்தியிரண்டு பற்களையும் காட்டிச் சிரித்தாள்.

"இப்பத்தான் கரவைத் தட்டி அம்மாவிடம் சொன்னேன். எங்க ஐயாவுக்குப் பிடிச்ச பலகாரம். சூடு ஆறு முன்னால சாப்பிடட்டும்ன்னு சொன்னேன்."

பாலமுருகன் விழிகளால் வந்தனாவிடம் வினவ அவளோ அதைக் கவனிக்காதவள் போல் அவன் முன்னால் தட்டை வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள். சிகப்பாயி அவசரமாய் ஓடி வந்தாள்.

"நீங்களும் உட்காருங்கம்மா. நான் போடுகிறேன்."

"நீ எதையும் என் தலையில் தூக்கிப் போட வேண்டாம். கிச்சனுக்குப் போய் அம்மாவுக்கு ஹெல்ப் பண்ணு."

"கிச்சன்னு சொன்னால் சமையல்கட்டுன்னு அர்த்தம் சிகப்பாயி..." பாலமுருகன் விளக்கம் சொன்னான்.

"நீங்க என்ன டிரான்ஸ்லேட்டரா? அவள் உங்க கிட்ட விளக்கம் கேட்டாளா?" வந்தனா சீறிச் சினந்தாள்.

"சும்மாயிருடி... அவள் தெரியாமல் விழிக்கிறாள். அர்த்தம் கூடச் சொல்லக்கூடாதா? சிகப்பாயி... பலகாரம் யார் செய்தது?"

"நான்தான்ய்யா..." சிகப்பாயி முன்னால் பாய்ந்து கூறினாள்.

"சூப்பர்..." வந்தனாவைப் பார்த்துக் கொண்டே கூறினான் அவன்.

"எது அவளா... இல்லை பலகாரமா?" வந்தனா முறைத்தாள்.

"இரண்டும் தான்..." பாலமுருகன் சிகப்பாயி காதில் விழாத வண்ணம் தாழ்ந்த குரலில் கூறினாள்.

"இன்னும் கொஞ்சம் போட்டுக்கங்க ஐயா..." சிகப்பாயி வந்தனாவை சட்டை செய்யாமல் அவள் கையிலிருந்த பாத்திரத்தை வாங்க முற்பட வந்தனா சத்தமாய் ஆண்டாளை அழைத்தாள்.

"அம்மா..."

"என்ன வந்தனா..." ஆண்டாள் சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

"இவளைக் கொஞ்சம் உள்ளே கூப்பிட்டுக்கங்க."

"ஏன் என்ன பண்ணுகிறா."

"டிஸ்டர்ப் பண்ணுகிறா."

"சிகப்பாயி.. உள்ளே போய் காபி கலக்கும் வேலையைப் பாரு"

சிகப்பாயி முகத்தைத் தூக்கிக் கொண்டு உள்ளே போக ஆண்டாள் வந்தனாவின் அருகே வந்து அவளின் தோளைத் தொட்டாள்.

"வேலையாள்களிடம் போய் ஈக்குவலாய் நின்று இப்படியா சண்டை போடுவது? இன்னும் சின்னக் குழந்தையாய் இருக்கிறாயே. நீயும் உட்கார். நான் பரிமாறுகிறேன்."

"வேண்டாம் அம்மா..." வந்தனா மறுத்து விட்டாள்.

அவளுடைய கவலை அவளுக்குத்தானே தெரியும்? ஆண்டாளுக்கு எப்படித் தெரியும்?



அவரவர்க்கு அவரவரின் கவலைகள். ஆண்டாள் சொல்கிறாள் என்று சூடாய் சாப்பிடும் ஆசையில் வந்தனா

சாப்பிட அமர்ந்து விட்டால் வந்தனாவுக்குத் தான் கஷ்டம். அவளுக்கு சீக்கிரம் சாப்பிடத் தெரியாது. உணவை ருசித்து... ரசித்துச் சாப்படுவாள். பாலமுருகன் அதற்குள் எழுந்து கைகழுவப் போவான். சிகப்பாயி கை துடைக்கத் துண்டைக் கொண்டு வந்து தருவாள். இரண்டும் பேரும் பேச்சு வார்த்தை நடத்துவார்கள். கடைசியில் செல்லமாய் சிகப்பாயியை கொஞ்சியவாறு அவளின் தோள் மீது இவன் கை துடைத்த துண்டைத் தூக்கிப் போடுவான். தேவையா அவளுக்கு?

பாலமுருகன் கை கழுவ எழுந்து சென்றபோது வந்தனா கை துடைக்கும் துண்டுடன் அவனைப் பின் தொடர்ந்தாள். பாலமுருகனுக்கு சிரிப்பு வந்தாலும் அது பிடிக்கவும் செய்தது. கை கழுவியவாறு வாஷ் பேஷனின் மேல் மாட்டப்பட்ட கண்ணாடியின் வழியே அவளை ரசனையாய் பார்த்தான்.

'பொறாமை! இவளெங்கே. சிகப்பாயி எங்கே.. புருசன் என்று வந்து விட்டால் இந்தப் பெண்கள் தான் எப்படிப் போராளிகளாக மாறி விடுகிறார்கள்...'

சிகப்பாயி தானும் ஒரு துண்டுடன் அங்கே ஓடி வர... பாலமுருகன் நிதானித்தான். இனியும் இந்த விளையாட்டைத் தொடரக்கூடாது. ஆயிரம்தான் இருந்தாலும் வந்தனா அவனது மனைவி. சிகப்பாயி பார்த்துக் கொண்டிருக்கும் போதே வந்தனாவின் சேலை முந்தானையில் கை துடைத்தவன்.

"சீக்கரம் காபி டிபனை முடித்துக் கொண்டு கிளம்பு... பெரியகுளம் டவுனுக்குப் போய் சினிமா பார்த்து விட்டு வரலாம்" என்றான்.

வந்தனாவின் முகம் மலர்ந்து விட்டது.

"ஒன் மினிட் அத்தான்... வந்து விடுகிறேன்.."

சொன்னது போலவே அதி விரைவாய் அவள் கிளம்பி வர பாலமுருகனும் அவளும் ஆண்டாளிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள்.

உற்சாகமாய் அருகில் அமர்ந்து வருகிறவளை ஓரக் கண்ணால் பார்த்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான் பாலமுருகன். அவள் எதுவும் பேசாமல் வெளியே வேடிக்கை பார்த்தபடி வந்து கொண்டிருந்தாள். பிங்க் கலரில் பிரிண்டட் சில்க் உடுத்தியிருந்தாள். கழுத்தில் அவன் கட்டிய தாலிக் கயிறு முரட்டு மஞ்சளில் முடி போடப்பட்டிருக்க ஒரு செயினை மட்டும் போட்டிருந்தாள். காதிலும் உள்ளங்கழுத்திலும் மூன்று இதழ்களைக் கொண்ட பூவின் டிசைனில் ஒன்று போல் காதணியும்... அட்டிகையும் அணிந்திருந்தாள். குட்டையான முடியில் சிறு பின்னல் போட்டு மல்லிகைப் பூவின் மணம் அவனது மனத்தை மயக்கியது.

ஏனோ அவளிடம் பேச வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால் இயல்பாய் பேசவும் அவனால் முடிய வில்லை. எனவே வம்புக்கு இழுப்பது போல் பேசினான்.

"எப்பவும் முடியை விரிச்சு விட்டுக்கிட்டு ஒரு ஜீன்ஸையும் சட்டையையும் மாட்டிக்கிட்டு இருப்ப... இப்ப என்ன பூ வைத்து பொட்டு வைத்து.. குட்டை முடியை பின்னல் போட்டு சேலை கட்டிக்கிட்டு உலா வர்ற .. என்ன விசயம்?"

அவள் 'ஆரம்பித்து விட்டாயா?' என்று நினைத்துக் கொண்டாள்.

"ஏன்.. நான் முடியை விரித்துவிட்டு ஜீன்ஸும் டிசர்ட்டும் போடனும்கிறதுதான் உங்கள் ஆசைன்னா ... அதைப் போலவே இனி டிரஸ் பண்ணிக் கொள்கிறேனே..."

"அததானே பார்த்தேன்... ஜெயராமனின் மகளுக்கு விசுவநாதனின் மருமகளாய் மாறும் உத்தேசம் எப்படி வரும்? யார் எப்போது இதைச் சொல்வாங்க . பழைய கோலத்திற்கு மாறலாம்ன்னு காத்துக் கொண்டிருந்தாயா?"

"கேட்டது நீங்கள்தான். நான் பதிலைச் சொன்னேன்."

"உன் மனதிலிருக்கும் ஆசையைச் சொன்னாய்..."

"என் மனதில் எதுவும் இல்லை..."

"அப்போ...என் மனதில்தான் சூதும் வாதும் இருக்கிறதா?"

"சண்டை போடத்தான் சினிமாவுக்கு கூப்பிட்டீங்களா?"

"நீ வேலையாளோடு சண்டை போட்டு விடக் கூடாதுன்னுதான் சினிமாவுக்கு கூப்பிட்டேன்."

"நீங்க வேலைக்காரியோடு சல்லாபமாய் பேசாமலிருந்தால் நான் ஏன் அவளோடெல்லாம் மல்லுக்கு நிற்கப் போகிறேன்?"

"உன் குடும்பத்திற்கே அடுத்தவர்கள் மேல் வீண்பழி போடும் குணம் ரத்தத்தில் ஊறியிருக்கிறது போல. உன் அப்பா என்னடாவென்றால் 'தேமே'ன்னு இருந்த என் அப்பாவுடன் போட்டிக்கு வந்தார். நீ என்னடாவென்றால் மாமியார் வீட்டிற்கு மறுவீடு விருந்து சாப்பிட வந்தவனைப் பார்த்து வேலைக்காரியை சைட் அடிக்கிறாயான்னு கேட்கிற... ஏண்டி.. நான் அவளோடு சரசமாய் பேசியதை நீ கேட்டாயா?"

"பார்த்தேன்..."

"பார்த்தால் காட்சிதான் தெரியும். கேட்டால்தானே பேச்சு புரியும்... கேட்காமல் நீயே கெஸ் பண்ணிக் கொண்டால் எப்படி?"

"அவள் வழிகின்ற வழிசலில்தான் வீட்டையே கழுவி விடலாமே... இப்படித்தான் உங்கள் வயல் வேலை நடக்கிறது போல..."

"இதோ பார்.. ஐந்து விரல்களும் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஒன்று அப்படித்தான்.. ஒன்று இப்படித்தான்."

"தத்துவம்..? எல்லாம் என் நேரம்.. சென்னையிலிருந்து வந்து நன்றாய் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்..."

"பேசாமல் அந்த அமெரிக்க மாப்பிள்ளையையே கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறதா?"

"இப்போது நீங்கள் மட்டும் ஏன் தப்புத் தப்பாய் கெஸ் பண்ணுகிறீங்க . ரோட்டைப் பார்த்து காரை ஓட்டுங்க"

தியேட்டர் வந்து விட்டது. காரை பார்க் பண்ணிவிட்டு அவளை அழைத்துக் கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தான்.

"டிக்கெட்..."

"போன் பண்ணி விட்டேன்.."

"போனிலேயே டிக்கட் ரிசர்வ் பண்ணிட்டிங்களா?"

"மக்கு.. இந்த தியேட்டர் ஓனர் என் அப்பாவின் நண்பர். அவர் மகனும்.. நானும் பிரண்ட்ஸ்."

அவன் இயல்பாய் 'மக்கு' என்று அழைத்ததில் மனம் சிறகடிக்க அவள் பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தாள். தியேட்டர் உரிமையாளரின் மகன் சினேகன் அவர்களுக்காக காத்திருந்தான்.

"வாடா பாலா... ஹலோ சிஸ்டர் எப்படியிருக்கீங்க?"

"பைன்..."

"எங்க ஊர் பிடித்திருக்கிறதா?"

"ம்ம்..."

"எங்க பாலாவை....?"

வந்தனா முகம் சிவந்தாள். சினேகன் மாடி பால்கனிக்கு அவர்களை அழைத்துச் சென்று அமர வைத்தான்.

"வசதியாய் இருக்கிறதா?"

"நோ பிராப்ளம்டா."

அந்த பால்கனியில் மிகக் குறைவான ஆட்களே அமர்ந்திருந்தனர்... விளக்குகள் அணைக்கப்பட்டு திரைப்படம் ஆரம்பித்தது. வந்தனா படத்துடன் ஒன்றிப் போனாள். சென்னையில் அவள் தியேட்டருக்குப் போய் படம் பார்த்தது மிகக் குறைவு. எப்போதும் வேலை...

வேலையென்று இருப்பவள். இன்று எந்தவிதமான வேலைப்பளுவும் இல்லாமல் சிறகைப் போல் லேசான மனத்துடன் படம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அது காதல் திரைப்படம். படத்தின் காதல் காட்சிகளைப் பார்க்கும்போது இருவருக்குமே நிலாக்காலநினைவுகள் நெஞ்சில் எழுந்தன. ஒருவரிடமிருந்து ஒருவர் அதை மறைத்துக் கொண்டு வீடு திரும்பினர்...

அன்றைய இரவில் பாலமுருகன் அலையாய் எழுந்த உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் அவளை நெருங்கினான்.

29

இரவில் தியேட்டரில் இருந்து திரும்பி வரும்போது முழு நிலவு வானில் நன்றாக ஏறியிருந்தது. நிலவின் ஒளி படர்ந்த சாலைகளில் காரை நிதானமான ஓட்டினான் பாலமுருகன்.

'இன்று பௌர்ணமி..' அவன் மனதில் தாகம் எழுந்தது.

'எத்தனையோ பௌணர்மிகளில் ஏங்கித் தவித்தேனே... இன்று கைக்கெட்டும் தொலைவில் கையருகே அவள் அமர்ந்திருக்கிறாளே தொட எனக்கு மனதில்லாமல் போய் விட்டதே...'

வரும்போது அவனை இம்சிக்காத மல்லிகையின் மணம் இப்போது அவனை இம்சை செய்தது. அவளைத் தொட விழைந்த கரங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு காரிலிருந்த டேப்பில் பாடலைப் போட்டான். சிவகாமிக்குப் பிடித்த பழைய பாடல்களின் சி.டி.

'வெந்நிலா நேரத்தில் வேணுகானம்

மேல்மாடி முற்றத்திவே நீயும் நானும்.'

பி. சுசீலாவின் இனிமையான குரல் கேட்டதும் வந்தனாவின் உடலில் அதிர்வு ஏற்பட்டது. முதன் முதலாய் அவர்கள் சந்தித்த மொட்டை மாடியின் நிலாக்கால நினைவு அவள் நெஞ்சில் பொங்கி எழுந்தன. உடலில் ஓர் புரியாத உணர்வு உற்பத்தியாக அவள் நகர்ந்து பாலமுருகனுடன் ஒட்டி அமர்ந்தாள். அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது. அவளின் நெருக்கத்தை ஆட்சேபிக்காமல் காரை ஓட்டினான். பாடல் தொடர்ந்து ஒலித்தது.

'கட்டிலில் ஆடலாம்

கைகளில் பாடலாம்

தொட்டுத் தொட்டு ஆடினால்

தொட்டில் வரை போகலாம்.'

இப்போது நன்றாக அவன் மீது சாய்ந்து கொண்டாள் வந்தனா. அவன் கைகள் ஸ்டீரிங்கில் இறுகின. வீடு வந்துவிட்டது. விலக மனமின்றி இருவரும் விலகி இறங்கி வீட்டுக்குள் சென்றனர். ஆண்டாள் விழித்திருந்தாள்.

"ஸாரிம்மா... உங்களைக் காக்க வைத்து விட்டோம்."

"அசடு.. காத்திருந்தால் என்ன? மாப்பிள்ளையும் நீயும் சாப்பிட வாங்க..."

பாலமுருகன் உடை மாற்றாமல் அப்படியே கை கழுவிவிட்டு சாப்பிட உட்கார்ந்தான். வந்தனாவும் அவனைப் பின் பற்றினாள்.

"இரண்டு பேரும் டிரஸ் சேன்ஜ் பண்ணிக்கவில்லையா..."

"லேட்டாகி விடும் அம்மா. நாங்கள் சாப்பிட்டு விட்டுப் போய் டிரஸ் சேன்ஜ் பண்ணிக் கொள்கிறோம்."

சாப்பிட்டு முடித்து இருவரும் கை கழுவ எழுந்தார்கள். அப்போது வந்தனா கேட்டாள்.

"ஆமாம் அம்மா. இந்த சிகப்பாயி எங்கே?"

"அவள் நைட் அவளுடைய வீட்டுக்குப் போய் விடுவாள்."

பதில் சொன்னது ஆண்டாள் அல்ல. பாலமுருகன்.

வந்தனா அவனை முறைத்தவாறு கை கழுவி விட்டு தாய்க்கு உதவியாய் பாத்திரங்களைச் சரி பண்ணிக் கொடுத்துவிட்டு படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

பாலமுருகன் பாத்ரூமில் இருந்தான். அவன் களைந்து போட்டிருந்த பேன்ட் சட்டையை எடுத்து சுவரில் இருந்த ஹேங்கரில் வந்தனா மாட்டி விட்டுக் கொண்டிருந்தபோது பாத்ரூம் கதவு திறந்தது. குளித்து முடித்து ஈரஉடம்போடு.. வெற்று மார்போடு கைலியை மட்டும் கட்டிக் கொண்டு அவன் வெளிப்பட்டான்.

வந்தனா பேச்சிழந்தவளாய் முகம் திருப்பிக் கொண்டாள். அவனது துணிகளை அவள் எடுத்து வைத்துக் கொண்டிருப்பதை பார்த்தவாறே அவன் கட்டிலில் போய் அமர்ந்தான். வந்தனா ஒரு நைட்டியை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குள் மறைந்தாள். சற்று நேரம் கழித்து திரும்பி வந்தவள் சிகப்பு நிற நைட்டியில் இருந்தாள். அவளது சேலையை அவனது துணிகளுக்கு அருகேயே போட்டவள் உள்ளங்கழுத்தில் இருந்த அட்டிகையை கழற்றி பீரோவில் பத்திரப்படுத்தினாள்.

அவளது நடமாட்டத்தைக் கண்காணித்தவாறு படுத்திருந்த பாலமுருகன்.... அவளுடன் வம்பிழுக்க ஆரம்பித்தான்.

"ஏண்டி என்னை முறைத்த...?"

"எப்போது...?"

"சிகப்பாயியைப் பற்றிப் பேசும்போது..."

வந்தனா அவனை முறைத்தவாறு விளக்கை அணைத்து விட்டு கட்டிலுக்கு வந்தாள். இது பிரிக்க முடியாத ஒரே பெரிய கட்டில். எனவே பிரித்துப் போட முடியாமல் அருகே படுத்திருந்த கணவனின் அருகே நெருங்கிப் படுத்தவாறு.

"இது பெட்ரூம். இங்கும் அவள் பேச்சா?" என்று கேட்டாள்.

அவளது அருகாமை அவனுக்கு போதையை உண்டு பண்ணியது. அவள் வேண்டும் என்ற தாபம் மனதில்

மூண்டது. ஆனாலும் அவனது இயல்பான கோபமும் பிடிவாதமும் ஒன்று சேர்ந்து கொள்ள அவன் எரிந்து விழுந்தான்.

"இங்கே வந்து அவளைப் பேசவில்லை. வெளியே டைனிங் ஹாலில்தான் பேசினேன்."

"ஆஹா... அங்கேயும் ஏன் பேசனும்...?"

"ஏய்ய்.. பெரிய இவள்போல் என்னை அதிகாரம் பண்ணும் வேலையை விட்டுவிடு."

"விட்டு விட்டால் கோவில் மாடு மாதிரி ஊரி சுற்றலாம் என்கிற ஐடியாவா? அதெல்லாம் என்னிடம் நடக்காது."

"என்னடி செய்வாய்..."

"எதுவும் செய்வேன்..."

"கட்டிப் போட்டு விடுவாயா?"

"அதுதான் நீங்கள் ஒரு தாலியை என் கழுத்தில் கட்டி உங்களோடு கட்டிப் போட்டு விட்டிங்களே..."

வந்தனா அவன் மேல் கை போட்டு கட்டிக் கொண்டாள். அவன் விலக்க நினைத்தான்... அதனால் அவளைத் தொட்டான். விலக்குவதற்கு பதில் அவனது கரம் அவளை அணைத்தது. முரட்டுத்தனமாய் அவனைக் கட்டித் தழுவியவாறு அவள் காதருகே கூறினான்.

"ஆமாம்டி. உன்னைக் கட்டிப் போட்டுத்தான் வைத்திருக்கிறேன். இனி நீ உன் அப்பாவின் வீட்டிற்குள் காலடி வைக்க முடியாது... இது அடக்குகிற பரம்பரைடி. அடங்குகிற பரம்பரை இல்லை..."

"பார்க்கலாம்?" வந்தனா சவால் விட்டாள்.

"என்ன பார்க்கப் போகிறாய்?"

"என் மகன் என் பேச்சைத்தானே கேட்பான். நான் என்னைப் போல் வளர்ப்பேன். உங்களைப் போல முசுட்டு மூஞ்சியாக அவன் வளர விட மாட்டேன்..." சம்பந்தமில்லாமல்...

அவனோடு சம்பந்தப்பட்டு விடும் நோக்கத்தோடு வந்தனா கொக்கி போட்டாள்.

அவனோ சண்டைக்காரன். சண்டை போடக் காரணம் தேடி அலைபவன். அவனோடு இயல்பாய் வாழ்ந்துவிட மாட்டான். அவனை அவளோடு வாழ வைக்க வேண்டுமானால் சவாலுக்கு அழைக்க வேண்டும்... சண்டைச் சேவல் சிலிர்த்துக் கொண்டது. அவளது யுக்தி பலித்தது.

"ஏய்... என் மகன் உன்னைப் போல் வளர மாட்டான். அவன் விசுவநாதனின் பேரன். என் மகன்... எங்கள் ரத்தம்டி... அவன் என்னைப் போல்தான் இருப்பான்..."

"இதெல்லாம் வெட்டிப் பேச்சு... வெறும் வாய் ஜாலம்."

"இல்லைன்னு நிரூபித்தால்....?"

"நிரூபியுங்க..."

அவன் திகைத்தான் இன்னும் பிறக்காத பிள்ளையைப் பற்றி இருவரும் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"எப்படிடீ...?"

"ம்ம்... எல்லாம் அப்படித்தான். தில் இருந்தால் என் சவாலை ஏற்றுக் கொள்ளுங்கள். என் மகன் என்னைப் போல்தான் இருப்பான்..."

"அவன் என் மகன். என்னைப் போல் தான் இருப்பான். தில்லைப் பற்றி யாரிடம் பேசுகிறாய். ஜல்லிக்கட்டுக் காளையை ஒரே பிடியில் அடக்குகிறவன்டி நான்... என்னிடமா சவால் விடுகிறாய்?"

"வீராப்பில் ஒன்றும் குறைச்சல் இல்லை. இன்னும் மகன் பிறக்கவில்லையென்ற தைரியத்தில் சவால் விடுகிறீர்களா... அவன் பிறந்து வந்தால்தானே தெரியும். நான் ஜெயிக்கிறேனா... இல்லை நீங்கள் ஜெயிக்கிறீர்களான்னு .. சரி.. சரி தள்ளிப் படுங்க."

அவனா தள்ளிப் படுப்பவன்? காரணம் தேடி அலைந்தவனுக்கு தான் காரணம் கிடைத்து விட்டதே...

"அது சரி... உன்னை ஜெயிக்க விடுவேன்னு நினைத்தாயா? நான் ஜெயிக்கப் பிறந்தவன்டி... என் மகன் பிறப்பான். அவன் என்னைப்போல்தான் இருப்பான். யாரிடம் சவால் விடுகிறாய்?"

அவன் அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான். சண்டைக் கோழியும் சேவலும் போர்க்களத்தில் இறங்கின.

30

வந்தனாவும் சரி... பாலமுருகனும் சரி.. இருவருமே ஒருவரை ஒருவர் வென்றார்கள். பிடிக்கவில்லையென்று வெறுத்து ஒதுக்கினாலும் அவளை அவனது உடலும் உள்ளமும் நாடின. வந்தனாவிற்கோ அவனைக் கனவிலும் வெறுக்க முடியாது. அவள் அவனுடன் வாழ ஆசைப்பட்டாள். கலந்துவிட தாகம் கொண்டாள். அவனது மனத் தடையை விலக்க சவாலுக்கு அழைத்தாள்.

அவனது ஆண்மை சிலிர்த்துக் கொண்டது. பிடிக்காதவளைத் தொட்டு ஆள அவனுக்குக் காரணம் கிடைத்து விட்டது. அவளை ஜெயிக்க விரும்பி.. அவன் ஜெயித்தான். எத்தனையோ நிலாக்கால இரவுகளில் கட்டுப் படுத்தி விலகி எழ நேர்ந்த பொழுதுகள் அவன் நினைவில் வந்தன. இப்போது கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லாமல் அந்த உணர்வுகள் கட்டவழ்ந்தன.

அவன் அவளோடு பின்னிப் பிணைந்தான். அவளது இதழ் தேடிக் கவிழ்ந்தான். அன்றைய இரவு முழுவதும் தூங்காது போர் புரிந்த களைப்பில் விடியலில் கண் அயர்ந்து விட்டான். அறைக் கதவு தட்டப்பட அவனது முரட்டு அணைப்பில் சிக்கியிருந்த வந்தனா அவனது கரம் விலக்கி எழ முயன்றாள். அவன் விழித்துக் கொண்டான். அவளை இழுத்து இறுக்கிக் கொண்டான்.

"எங்கேடி... தப்பித்துப் போகிற...?"

'உன்னை விட்டு எங்கே போவேன்...' என்று நினைத்தபடி அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்ட வந்தனா,

"ரூம் கதவைத் தட்டுகிறாங்களே அத்தான்" என்றாள்.

"அத்தானா... நாம் தனிமையில் இருக்கும் போது அப்படி அழைக்க மாட்டாயே..." அவனது கரம் அவளது கன்னம் தொட்டுத் தடவியது.

"உங்களை யார் அப்படி அழைத்தது..." அவனது விரல் தொட்ட இடங்கள் சிலிர்க்க அவனது மார்பில் தலை வைத்து முகம் உயர்த்தி அவனைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

"வேறு யாரைடி அழைத்தாய்..." அவனுக்குக் கோபமாம். அவளைக் கோபத்தோடு இறுக்கிக் கொள்கிறானாம்.

"அப்பா.. என் எலும்புகள் நொறுங்கி விடப் போகின்றன. என் மகனின் அப்பாவைத்தான் அத்தான்னு அழைத்தேன் போதுமா..."

அவளது வார்த்தைகள் அவனைக் கட்டி இழுக்க அவன் அவளைக் கட்டியிழுத்து தன் கைச் சிறைக்குள் வைத்துக் கொண்டான். கதவு இன்னும் பலமாகத் தட்டப்பட்டது. இருவருமே எரிச்சலுடன் கதவைப் பார்த்தார்கள். அவளை விடுவித்த பாலமுருகன் எழுந்து அமர்ந்தான். வந்தனா கதவைத் திறந்தாள். வெளியே சிகப்பாயி நின்றிருந்தாள்.

"என்ன...?" என்றாள் வந்தனா கோபத்துடன்.

"இவ்வளவு நேரமாக கதவைத் திறக்கவில்லையா.. அதான்... எழுப்பலாம்ன்னு கதவைத் தட்டினேன்" சிகப்பாயி வந்தனாவின் முதுகிற்குப் பின்னால் பார்வையை வீசினாள். வெற்று மார்போடு அமர்ந்திருந்த பாலமுருகன் அவசரமாய் துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டான்.

அதைக் கவனித்து விட்ட வந்தனாவின் முகம் கோபத்தில் சிவந்தது. அறையை விட்டு வெளியே வந்து படுக்கையறைக் கதவை இழுத்து மூடினாள்.

"அம்மா..." என்று பலமாய் அழைத்தாள்.

"என்ன வந்தனா..." ஆண்டாள் பரபரப்பாய் வந்தாள்.

"இவளை எங்களை எழுப்பச் சொல்லி பெட்ரூம் கதவைத் தட்டச் சொன்னீங்களா?" வந்தனா சிகப்பாயியின் மேல் கோபப் பார்வையை வீசியபடி கேட்டாள்.

"இல்லையே... அம்மாவும் ஐயாவும் இன்னும் எழுந்திருக்கவில்லையான்னு கேட்டாள். நேற்று சினிமா பார்த்துவிட்டு லேட் நைட்டில்தான் வந்தார்கள். தூங்கட்டும்ன்னுதானே சொன்னேன்."

வந்தனா சிகப்பாயியை ஓர் அனல் பார்வை பார்த்தாள். ஆண்டாள் நொடியில் நிலைமையைப் புரிந்து கொண்டாள்.

"சிகப்பாயி.. நீ உனக்குச் சொன்ன வேலையை மட்டும் பார். தேவையில்லாமல் அவர்களை ஏன் டிஸ்டர்ப் பண்ணின?. இது சரி வராது. நீ இன்றுடன் இங்கு வேலைக்கு வருவதை நிறுத்திக் கொள்... நாளையில் இருந்து நீ வரவேண்டாம்..." கண்டிப்புடன் கூறினாள் ஆண்டாள்.

அத்தோடு நிற்காமல் சிகப்பாயி முன்னாலேயே சிவகாமிக்கு போன் போட்டு வேறு ஒரு வேலையாளை அனுப்பச் சொல்லி விட்டாள்.

“அப்படியெல்லாமில்லை. நன்றாகத்தான் வேலை செய்கிறாள். ஆனால் எனக்கு வேண்டாம். சரி.. நாளையிலிருந்து வேறு ஆளை அனுப்பி விடுகிறாயா? நானும் அவளை இன்றைக்கே அனுப்பி விடுகிறேன்."

பேசி முடித்துவிட்டு வந்தனாவைப் பார்த்தாள் ஆண்டாள்.

"இனி இந்த வீட்டிற்கோ... உன் வீட்டிற்கோ வீட்டு வேலைக்கு வரமாட்டாள். போதும்தானே..."

வந்தனா மனநிம்மதியுடன் தலையசைத்தாள். அன்றே சிகப்பாயி உருவாக்கும் சதி வலையில் அவள் மாட்டப் போவதை அறியாதவளாய்... காபி கலக்கச் சென்றாள்.

'கிட்டாதாயின் வெட்டென மற' என்பார்கள் பெரியவர்கள். இதை எல்லோரும் அறிந்து நடந்து கொள்கிறார்களா என்ன? சிகப்பாயி சிறு வயதிலிருந்தே பாலமுருகன் மேல் ஒருவித மோகத்துடன் வளர்ந்தவள். 'எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விடக்கூடாது' என்று கூட வேலை செய்யும் பெரியாத்தா முதலிய பலர் சொல்லியும் காதில் வாங்கிக் கொள்ளாமல் பாலமுருகனை கள்ளப் பார்வை பார்த்துக் கொண்டே அலைந்தவள்.

இன்று கண் முன் அவன் இன்னொருத்திக்கு சொந்தமாவதை அவளது ஏழை மனத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனைக் கண்ணால் பார்ப்பதையும் நிறுத்திவிட்ட வந்தனாவின் மேல் அவளுக்கு வன்மம் பிறந்தது. அவளது ஆசை ஐயாவையும் அவளிடமிருந்து பிரித்து, அவரைப் பார்க்கக் கூடவிடாமல் துரத்துகிறாளே இந்தப் பாவி என்று அவளது மனம் வெஞ்சினம் கொண்டது.

போதா குறைக்கு அவள் வீட்டின் பக்கவாட்டுப் பகுதியைச் சுத்தம் செய்யும் சாக்கில் போய் பாலமுருகனின் முகம் பார்க்க ஆசைப்பட்டு அவர்களது பெட்ரூமின் ஜன்னல் வழி ஒளிந்திருந்து பார்க்கையில் குளித்து முடித்து வந்த வந்தனாவை பாலமுருகன் பின்னாலிருந்து அனைத்ததைப் பார்த்து விட்டாள். அவள் மனம் கொதித்தது.

இது அதையும் அறியாத வந்தனா பாலமுருகனின் மேல் இழைந்தவாறு கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

"ஏன் என்னை தொடுகிறீங்க ..."

"உன்னை யாருடி தொட்டது?"

"வேறு யாரைத் தொட்டீர்களாம்...?"

"என் மகனின் அம்மாவைத் தொட்டேன்."

அவளது பாணியிலேயே அவன் பதில் சொன்னான். இருவருக்கும் அது பிடித்தமான எளிதான விளையாட்டாகத் தோன்றிவிட்டது. இருவரும் எதிரிகளாம்... ஒருவருக்கு மற்றவரைப் பிடிக்காதாம்.. ஆனால் பிறக்கப் போகிற

மகனுக்கு இருவரும் அம்மா... அப்பா ஆகப் போகிறார்களாம். அதனால் தொட்டுத் தழுவிக் கொள்கிறார்களாம். கூடிக் குழாவுகிறார்களாம்...

பாலமுருகன் வந்தனாவை வாசம் பிடித்தான்.

"நீ அன்றைக்கும் சரி.. இன்றைக்கும் சரி.. மயக்கும் மோகினி தாண்டி... என்னை மயக்கத் திட்டம் போட்டுப் பிறந்தவள் தாண்டி..."

"ஆமாம்.. மாஸ்டர் பிளான் போட்டுப் பிறந்திருக்கிறேன்...."

"பின்னே இல்லையா?"

"இல்லைன்னு சொன்னால் கேட்டுக் கொள்கிற ஆளா நீங்க?"

"ஏண்டி.. என் மகனின் அம்மா சொன்னால் கேட்டுக் கொள்ளமாட்டேனா? சொல்லிப் பாரேன்... இப்போது என்ன செய்ய வேண்டும்? ஹனிமூனுக்குப் போக வேண்டுமா? எங்கே போகலாம்?"

"எங்கே வேண்டுமானாலும்..."

"நீ உலகைச் சுற்றியவள்.."

"இன்னும் இந்தியாவைச் சுற்றவில்லை."

"கோவா போகலாமா?"

“ நீங்க சொன்னா சரிதான் ..”

"பயங்கரமான ஜால்ராடி நீ... பிழைத்துக் கொள்வாய்."

"உங்கள் மகனை வளர்க்க பிழைத்துத்தானே இருக்க வேண்டும்?"

எந்த நேரத்தில் அவள் அந்த வார்த்தைகளைச் சொன்னாளோ... அவளது உயிர் பிழைத்திருக்குமா என்ற கேள்வியை எழுப்ப ஒரு வெளிநாட்டுக் கார் ஊர் எல்லையில் வந்து நின்றது. சுற்று முற்றும் பார்த்தபடி அந்தக் காரை நெருங்கினாள் சிகப்பாயி. அதற்குள் அமர்ந்திருந்தவனிடம் எதையோ பேசி முடித்தாள். அவன்

அவளது கரத்தைத் தொட்டு அழுத்தி ஆயிரம் ரூபாய் நோட்டுக் கற்றை ஒன்றை எடுத்து வைத்தான்.

கரத்தை உறுவிக் கொண்டு அந்த நோட்டுக் கற்றையை காரில் அமர்ந்திருந்தவனின் முகத்தில் எறிந்த சிகப்பாயி சீறினாள் .

"இந்த தொட்டுப் பேசுகிற வேலையை வேறு எவளிடமாவது வைத்துக் கொள். உன் பணம் எனக்கு எதற்கு? நான் பணத்திற்காக இந்த வேலையைச் செய்யவில்லை. சிகப்பாயி விலை போக மாட்டாள்."

"ஆப்டர் ஆல் ஒரு வேலைக்காரி நீ? உனக்குச் சம்பளம் கொடுக்கும் எஜமானின் வீட்டையே காட்டிக் கொடுக்கிறாய். உனக்கு இத்தனை வீறாப்பா?"

"வேலைக்காரின்னு மட்டமாய் பேசின. பல்லைத் தட்டி விடுவேன். நான் என் எஜமானனின் வீட்டிற்காக என் உயிரையே கொடுப்பேன்... இது வேறு விசயம்..."

"ஓ. கே. ஓ. கே... உன் பிரச்சனை எனக்கு எதுக்கு? எனக்கு என் காரியம் முடியனும்... அவ்வளவுதான்..."

சிகப்பாயி ஆக்ரோசத்துடன் திரும்பி வந்து விட்டாள். அவள் வீட்டிற்குள் நுழைந்தபோது பாலமுருகன் காரில் ஏறிக் கொண்டிருந்தான். ஆண்டாளும் வந்தனாவும் அருகில் நின்று கொண்டிருந்தனர்.

"இன்னைக்கும் வேலைதானா? என்ன மாப்பிள்ளை இது...?"

"சின்ன வேலைதான் அத்தை... கரும்பு ஆலையிலிருந்து சுகர் மூட்டைகளை லாரியில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் மேற்பார்வையிட வேண்டும் மதியச் சாப்பாட்டிற்கு வந்துவிடுகிறேன்" பாலமுருகன் கையசைத்து விட்டுக் கிளம்பிப் போக வந்தனா 'ஹம்' பண்ணியவாறு வீட்டிற்குள் வந்தாள்.

சற்று நேரத்தில் ஆண்டாளுக்கு விசுவநாதனிடம் இருந்து போன் வந்தது..

"லாயர் போன் பண்ணினாரும்மா தங்கச்சி.. கம்பெனியை நடத்த முடியாமல் ஸ்டே ஆர்டர் வாங்கி விட்டாராம்.. கம்பெனிக் கணக்குகளையும் முடக்கியாகி விட்டது.. இனி உன் கம்பெனிக்கோ பணத்திற்கோ எந்த ஆபத்தும் வந்துவிடாது.. நீ இப்போது கிளம்பி வந்தாயானால் இன்னும் இரண்டு மூன்று விசயங்களைப் பேசி முடித்து விடலாம்.. பாலாவின் காரில் புறப்பட்டு வா.."

"மாப்பிள்ளை இங்கு இல்லையே அண்ணா.. சுகர்மில்லுக்குப் போயிருக்கிறார்.."

"அப்படியா.. அப்போ நான் கார் அனுப்புகிறேன் கிளம்பி வந்துவிடு.. வந்தனாவையும் கூப்பிட்டுக் கொண்டு வருகிறாயா..?"

"அவள் எதற்கு அண்ணா..? மாப்பிள்ளைக்கு விருந்து சமைத்து வைத்திருக்கிறோம்.. அவர் வந்தால் சாப்பாடு போட அவள் இருக்கட்டுமே, நான் மட்டும் வந்துவிட்டு வருகிறேன்.."

சற்று நேரத்தில் விசுவநாதனின் கார் வந்துவிட ஆண்டாள்,

"வந்தனா... நான் உன் வீடு வரைக்கும் போய் விட்டு வந்து விடுகிறேன். நீ மாப்பிள்ளை வந்ததும் சாப்பாடு பரிமாறிச் சாப்பிட வை. நான் எவ்வளவு சீக்கரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் வந்து விடுகிறேன்..." என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

வந்தனா கதவை அடைத்து விட்டு பெட்ரூமிற்குள் நுழைந்தாள். முதல் நாள் இரவை நினைத்துக் கொண்டாள். முகம் சிவக்க... 'ராஸ்கல்..' என்று கணவனை செல்லமாய் மனதிற்குள் திட்டிக் கொண்டாள். அவனுடன் பேச வேண்டும் போலிருக்க போனை எடுத்து அவன் நம்பரை அழுத்தினாள். மறு முனையில் அவன் குரல் கேட்கவும்.

"நான்தான்..." என்றாள்.

அவள் போனில் அழைத்தபோது பாலமுருகன் லாரிகளை அனுப்பிவிட்டு ஓய்வாக அமர்ந்திருந்தான். போன் வரவும் எடுத்து நம்பரைப் பார்த்தான்... வந்தனா அழைத்தாள்..

முதல் நாள் அவள் சவாலுக்கு அழைத்ததும்... அதன் பின் நிகழ்ந்ததும் நினைவில் வர உடல் சூடேறியது. போனை எடுத்து யாரென்று அறியாதவன் போல்,

"ஹலோ..." என்றான்.

"நான்தான்..." என்றாள் அவள்.

"நான்தான்னா...?" புரியாதது போல் வினவினான்.

"ம்ம்... உங்கள் மகனின் அம்மா..." என்றாள் வந்தனா.

பாலமுருகனின் மனம் கனிந்தது. இத்தனை நாளாய் அவள் மீது கொண்டிருந்த துவேசம் மறைந்தே விட்டது.

"என்னடி...?"

"எப்போது சாப்பிட வருகிறீங்க ? அம்மா வேறு வீட்டில் இல்லை..."

"எங்கே போய் விட்டாங்க?"

"மாமா போன் பண்ணினார். கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கியாகி விட்டது போல... கம்பெனியையும் அதன் கணக்கு வழக்குகளையும் ரண் பண்ண விடாமல் முடக்கி விட்டார்களாம். அது விஷயமாய் பேச மாமா வரச் சொன்னதால் அம்மா நம் வீட்டிற்கு போயிருக்கிறாங்க ..."

'நம் வீடு...' இவள்தான் எவ்வளவு இனியவளாக இருக்கிறாள். இவள் செய்த பிழையை மட்டும் மறக்க முடிந்தால்... மன்னிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

"எனக்கும் வேலை முடிந்து விட்டது. இதோ கிளம்பி வந்து விடுகிறேன். நீ எதற்கும் பத்திரமாய் இரு... சிகப்பாயி துணைக்கு இருக்கிறாளா ?" பாலமுருகன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மறுமுனையில் வந்தனா.

"யார்.... நீ எப்படி இங்கு வந்தாய்...?" என்று யாரிடமோ வினவுவது கேட்டது.

பதட்டத்துடன் நாற்காலியை விட்டு எழுந்தவன் அவசரமாய் கார் கதவைத் திறந்து ஏறிக் கொண்டே.

"வந்தனா... யார் அது? நீ பத்திரமாய் இருக்கிறாயா?" என்று கேட்டான். மறுமுனையில் வந்தனாவின் கதறல் கேட்டது.

"அத்தான்... காப்பாற்றுங்கள்... இந்த ஆனந்த் என்னைத் தூக்கிப் போக வந்திருக்கிறான். ஐயோ அத்தான்... எனக்குப் பயமாய் இருக்கிறதே... காப்பாற்றுங்கள் அத்தான். ஆனந்த்... கிட்ட வராதே.. நான் செத்து விடுவேன்... சிகப்பாயி... சிகப்பாயி.. எங்கே போய் தொலைந்தாய்.?"

## 32

அன்று காலையில் தான் வந்தனா பாலமுருகனிடம் கூறினாள்.'உங்கள் மகனை வளர்க்க பிழைத்து இருக்க வேண்டாமா?' என்று இப்போது... 'செத்து விடுவேன்' என்று அலறுகிறாள்.

பாலமுருகன் "ஹலோ... ஹலோ..." என்று அலறினாள். மறுமுனை நிசப்தமாய் இருந்தது. வெறி பிடித்தது போல் காரை வீட்டிற்கு விரட்டினான். வீட்டின் முன்னாலிருந்த காவல் ஆட்கள் அவசரமாய் அவர்கள் புகைத்துக் கொண்டிருந்த பீடியைக் கீழே போட்டு மிதித்து விட்டு எழுந்து நின்று வணக்கம் சொன்னார்கள். வீட்டிற்கு வெளியே காவலாளர்கள் எந்தவித பாதிப்பும் இல்லாமல் நிற்கிறார்களே.

பாலமுருகன் சந்தேகத்துடன் அவசரமாய் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவு திறந்து கொண்டது. உள்ளே போய் பார்த்தான். ஒரு போராட்டம் நடந்த அறிகுறி தென்பட்டது. சோபாக்கள் கவிழ்ந்து கிடந்தன. பெட்ரூமிற்குள் தலையணைகள் தாறுமாறாய் வீசப்பட்டுக் கிடந்தன.

பாலமுருகன் வெளியே வந்து காவலாளிகளை அழைத்தான். நிதானமாய் பதட்டத்தை வெளிக் காட்டாமல் விசாரித்தான்.

"ராமையா... அத்தை எங்கே போயிருக்காங்க...?"

"ஐயாவோட கார் வந்துச்சுங்க ஐயா... முதலில் அம்மா அதில் போனாங்க... திரும்பவும் ஐயா கார் அனுப்பினாராம். நம்ம சின்னம்மாவும் சிகப்பாயியும் அதில் ஏறிப் போனாங்க..."

"அப்பா கூப்பிட்டு விட்டதால் போகிறேன்னு வந்தனா உங்க கிட்ட சொன்னாளா?"

"இல்லைங்க ஐயா... சின்னம்மாவைக் கூப்பிட ஐயா கார் அனுப்புவார். அவங்க சொந்தக்காரங்க மெட்ராஸில இருந்து சின்னம்மாவைப் பார்க்க வந்திருக்காங்க. அவங்கதான் காரை ஓட்டிக்கிட்டு வருவாங்க... அவரை கேள்வி கேட்காமல் வீட்டுக்குள் அனுப்புன்னு சிகப்பாயி தான் வந்து சொல்லுச்சு."

"அப்புறம்..."

"ஒரு ஐயா காரை ஓட்டிக் கொண்டு வந்தார். கோட் சூட்டெல்லாம் போட்டு பார்க்க பெரிய மனிதன் மாதிரி இருந்தார். சிகப்பாயி அவசரமாய் வந்து அம்மா உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டு இருக்காங்கன்னு சொல்லி வீட்டுக்குள்ளார கூப்பிட்டுப் போயிருச்சு. கொஞ்ச நேரம் கழித்து சின்னம்மாவும் சிகப்பாயியும் பின் சீட்டில் உட்கார்ந்திருக்க.. அந்த ஐயா காரை ஓட்டிக்கிட்டுப் போனார்..."

பாலமுருகனுக்கு எல்லாம் விளங்கி விட்டது. சிகப்பாயி ஆபத்தானவளாக இருந்திருக்கிறாள். வந்தனாவை திட்டம் போட்டு கடத்த வைத்திருக்கிறாள். "பாவி!”

பாலமுருகன் பல் கடித்தான்.

"சரி... வேலையைப் பாருங்கள்..."

காரை எடுத்து மின்னல் வேகத்தில் பெரியகுளம் நோக்கிச் செலுத்தியவாறு அவனது நண்பனும் போலீஸ் எஸ்.பி. யுமான சரனுக்குப் போன் போட்டான் .. சரண் உடனடியாய் நடவடிக்கையில் இறங்கினான். பெரியகுளத்தின் அனைத்து ரோடுகளிலும் போக்குவரத்து கண்காணிப்பை ஏற்படுத்தினார்கள். எல்லா வாகனங்களும் சோதனை செய்யப்பட்டு அனுப்பப்பட்டன.

சற்று நேரத்தில் சரண் போன் பண்ணினான்.

"இதுவரை யாரும் பிடிபடவில்லை பாலா... எனக்கு என்னவோ அவர்கள் பெரியகுளம் பக்கம் வராமல் பதுங்கியிருப்பார்கள்ன்னே தோன்றுகிறது. உனக்கு எதுவும் சந்தேகம் இருக்கிறதா" என்று கேட்டான்.

"இருக்கிறது சரண்... சந்தேகமில்லை. அங்குதான் அவன் மறைந்திருக்க வேண்டும்.. நான் இடத்தைச் சொல்லிவிட்டு முன்னால் போகிறேன். நீ பின்னால் தொடர்ந்து வா" என்றான் பாலமுருகன்.

"எந்த இடம் பாலா?"

"இங்கே மலையோர கிராமம் ஒன்றில் சிகப்பாயியுடைய பெரியம்மா ஒருத்தி இருக்கிறாள். பணத்தாசை பிடித்தவள். அவன் அங்கேதான் போயிருக்கனும் ..."

"எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறாய்..."

"கூடச் சிகப்பாயி போயிருக்கிறாள். அவளுக்குத் தாய் தகப்பன் கிடையாது. அவளுடைய அப்பாவைப் பெற்ற பாட்டி வீட்டில் தான் வளர்ந்தவள். அதனாலேயே அவளது வரம்பு மீறிய பேச்சுக்களையும் பார்வைகளையும் நான் கண்டு கொள்ள மாட்டேன். இப்போது இப்படி ஒரு துரோகச் செயலைச் செய்து விட்டு இனி அவள் இந்த ஊர் பக்கம் இருக்க முடியாது. அடைக்கலம் தேடி அவள் போகக் கூடிய ஒரே இடம் இந்த கிராமம்தான்..."

சரனை வரச் சொல்லி விட்டுக் காரை விரட்டிய பாலமுருகனின் மனம் அவன் வசம் இல்லை. பதறித் தவித்தது. வந்தனாவின் கணீர் குரல் அவன் காதுகளில்

ஒலித்தது. பாவி... தேடி வந்து தாலி வாங்கிக் கொண்டவளைத் தேளாய் கொட்டித் துன்புறுத்தினானே...'காப்பாற்று' என்று என்னிடம் கேட்டடாயா... என்று அவளைக் கேள்வி கேட்டுத் துன்புறுத்தினானே... இதோ அவள் 'காப்பாற்று' என்று கதறி விட்டாள். இப்போது சந்தோசப் படாமல் ஏன் சஞ்சலப்படுகிறான் .'பாவி..' மீண்டும் தன்னைத்தானே திட்டிக் கொண்டான்.

அத்தான் என்று சுற்றிச் சுற்றி வந்தவளை ஆபத்து வந்தால் என்னையல்லவா நீ நினைத்திருக்க வேண்டும் என்று நோகடித்தானே.. அவன் சொல்லிச் சொல்லித்தான் அவளுக்கு ஆபத்து வந்து விட்டதோ.

'வந்தனா..' அவன் மனம் கலங்கியது.

'எங்கே இருக்கிறாயடி. நீ கிடைத்து விட்டால் போதும். இனி உன்னை மனம் புண்பட ஒரு சொல் சொல்ல மாட்டேன். பிறக்கப் போகும் மகனைப் பற்றி ஆயிரம் கதை சொன்னாயே... அவனைப் பெற்றுக் கொடுக்க வந்து விடு... நீ வந்து விட்டால் போதும். உன்னை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவேன். நீ எனக்கு வேண்டும். உயிரோடு ஒரு குறையுமில்லாமல் திரும்பி வந்துவிடு.. வந்தனா... வந்தனா..!'

மலையடிவாரக் கிராமம் வந்து விட்டது. ஊர் எல்லையில் காரை நிறுத்தினான். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் அவனுடைய காரைக் காட்டி தங்களுக்குள் எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவன் அவர்களை கைதட்டி அருகே அழைத்தான். அருகே வந்து அண்ணாந்து பார்த்த ஒரு சிறுவன்.

"என்னா...?" என்றான்.

"என் காரைக் காட்டி என்னவோ பேசினீங்களே... என்னடா...?"

"அதுவா... இப்பத்தான் சித்த நேரத்துக்கு முன்னால் ஒரு கார் வந்தது... இப்போ இந்தக் கார் வந்திருக்கு

..அதைத்தான் பேசினோம்..."

"அந்த கார் எங்கேடா?"

"அதோ... அந்த பாழடைஞ்ச அரண்மனைக்குள்ளார போச்சு.... ஏன் நீயும் அங்கே போறியா சார்.."

பாலமுருகன் சரணுக்கு போனில் தகவல் சொல்லி விட்டு அங்கே காரை விட்டான்.

## 33

வந்தனா இருக்குமிடம் தெரிந்ததும் ஒரு கணம் கூட தாமதிக்காமல் அந்த பாழடைந்த அரண்மனை வளாகத்திற்குள் காரைச் செலுத்தினான் பாலமுருகன். தூரத்தில் இடிபாடுகள் நிறைந்த மண்டபத்தின் அருகில் கார் நிற்பது தெரிந்ததும் காரை மறைவாய் நிறுத்திவிட்டு பேன்ட் பாக்கெட்டில் கையை விட்டுத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பாலமுருகன் ஒளிந்து ஒளிந்து அருகில் சென்றான். வயல் வேலைகள் மற்றும் மற்ற தொழில்கள் எல்லாமே நடுக்காட்டில் இருப்பவை. எனவே பாதுகாப்பிற்காக விசுவநாதனும் பாலமுருகனும் எப்போதுமே துப்பாக்கியை வைத்திருப்பார்கள்.

மண்டபத்து இருட்டு மூலையில் பேச்சுக் குரல்கள் கேட்டன. பாலமுருகன் அருகே சென்று மறைந்து நின்று பார்த்தான். வந்தனாவை தூணோடு கட்டி வைத்திருந்தார்கள். எதிரில் ஆனந்தும் சிகப்பாயியும் நின்று கொண்டிருந்தனர்.

"கடைசியாய் கேட்கிறேன். உன் அம்மாவை இங்கே வரச் சொல்ல முடியுமா... முடியாதா..." என்று ஆனந்த் கேட்டுக் கொண்டிருந்தான்.

"முடியாது.. முடியாது.." என்று வந்தனா கூறினாள்.

"ஏன்ய்யா.. இந்தம்மாவை கடத்திவிட்டு மெட்ராஸ் பக்கம் போவேன்னு பார்த்தா.. என் பின்னாடி வந்துக் கிட்டு என்

உயிரை ஏன் வாங்கறே. எனக்கு இதும் மூஞ்சியைப் பார்த்தாலே பத்திக்கிட்டு வருது. என்னவோ இது மேல ஆசைன்னு பினாத்தின. அத்தனையும் வேசமா? இது பணத்து மேலதான் உனக்கு ஆசையா? அடத்தூ...." என்றாள் சிகப்பாயி.

"இங்கே பார்... இந்தக் துப்புகிற வேலையை என்னிடம் வைத்துக் கொள்ளாதே. உன் பெரியம்மா முள்ளங்கி பத்தை மாதிரி முழுதாய் ஒரு ஆயிரம் ரூபாய் கட்டை வாங்கிக் கொண்டு போயிருக்கிறாள். நான் இவளைக் கொன்று புதைத்தாலும் நீ கேள்வியே கேட்கக் கூடாது."

"அதையாவது சீக்கரம் செய்து தொலை.. அதோட ஆத்தாக்காரியையும் ஏன் இழுத்து வரணும்னு நினைக்கிற."

"மாஸ்டர் மைன்டே அந்தப் பொம்பளைதான். இவளோட அப்பனை மயக்கி எங்க கைக்குள் வைத்திருந்தோம். அவனை வேஸ்ட் பேப்பராக்கி விட்டாள் அந்த லேடி. இவளும் இவளுடைய அம்மாவும் போய் சேர்ந்தால்தான் அந்தக் கம்பெனி எனக்குக் கிடைக்கும். இந்த நிமிடம் அந்தக் கம்பெனி ஒரு தங்கச் சுரங்கம்... டாலர்களாகக் கொட்டக் கூடிய கற்பக விருட்சம். அது எனக்கு வேண்டும்..."

"அது சரி.. இவ்வளவு பேசுறயே... நீ என்ன இந்தம்மாவோட அப்பனுக்குப் பொறந்தயா? ஊரான் சொத்துக்கு ஏய்யா இப்படிக் கிடந்து அலையறே...?"

"நீ மட்டும் இவளுடைய புருசனுக்காகத்தானே இந்தக் காரியத்தில் இறங்கின. அவன் மட்டும் ஊரான் சொத்தில்லையா?"

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே ஆனந்தின் கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது.

"ஐயோ...." என்று அலறியபடி ரத்தம் சிந்திய கையைப் பார்த்துக் கொண்டான் ஆனந்த்.

தாமதிக்காமல் அவன் மேல் பாய்ந்து புரட்டி எடுத்து விட்டான் பாலமுருகன். சரியான சமயத்தில் சரணும்

உதவிக்கு வந்துவிட ஆனந்தையும் சிகப்பாயியையும் கைது செய்தார்கள். வந்தனாவின் கட்டுக்களை அவிழ்த்து விட்டான் பாலமுருகன். அவள் கைகள் கன்றிச் சிவந்திருந்தன. அவள் விசும்பி அழுது கொண்டிருந்தாள். பாலமுருகன் அவளை அணைத்துச் சமாதானப் படுத்தினான். மெல்ல விசும்பல் அடங்கிய வந்தனா... சரனைப் பார்த்து,

"எஸ்.பி. சார்... சிகப்பாயியை அரெஸ்ட் பண்ண வேண்டாம்" என்றாள்.

"அவள் குற்றம் செய்தவள் சிஸ்டர்."

"தாய் தகப்பனில்லாதவள்.. தவறு செய்து விட்டாள்... வாழ வேண்டிய வயதில் அவள் சிறை செல்ல வேண்டாம். நீங்கள் சொல்லுங்கள் அத்தான் அவளை மன்னித்து விடச் சொல்லுங்கள்."

"ஆனாலும் வந்தனா உனக்கு ஏதாவது ஆகியிருந்தால்...?"

"எனக்கு எதுவும் ஆபத்து வராதுன்னு எனக்குத் தெரியும் அத்தான். உங்களிடம் காப்பாற்றச் சொல்லி விட்டுத்தானே இவனிடம் அகப்பட்டேன்? எப்படியும் நான் எங்கே கொண்டு செல்லப்பட்டாலும் நீங்கள் வந்து காப்பாற்றாமல் விட்டு விடுவீங்களா?"

பாலமுருகன் கண்கலங்க மனைவியை அணைத்துக் கொண்டான். சரணிடம் சிகப்பாயியை விட்டு விடும்படிக் கூறினான். அவள் தலை நிமிராமல் ஓடி விட்டாள். விசுவநாதனின் வீட்டிலிருந்து திரும்பி வந்த ஆண்டாள் நடந்ததைக் கேட்டுப் பதறி விட்டாள்.

"அது மட்டுமில்லை அத்தை. எனக்கென்னவோ அவன் மாமாவை அடைத்து வைத்திருக்க வேண்டும்ன்னு தோன்றுகிறது. சென்னை போலீஸ்ற்கு தகவல் கொடுத்திருக்கிறோம். மாமாவின் நிலைமை என்னன்னு தெரிந்து கொண்டால் நல்லது."

பாலமுருகனின் கணிப்பு சரியாக இருந்தது. ஆனந்தின் பெரியப்பா மகள் என்று சொல்லப்பட்ட அப்ஸராவின்

அபார்ட்மென்டில் இருந்து ஜெயராமனை போலீஸ் மீட்டது. அப்ரஸா கைது செய்யப்பட்டாள். ஆனந்தின் பெற்றோர் தலை மறைவாகி விட்டனர்.

ஒருநாள் அதிகாலையில் தாழையூத்து கிராமத்து வீட்டின் வாசலில் புழுதி படிந்த கார் ஒன்று வந்து நின்றது. கார் கதவைத் திறந்து கொண்டு ஜெயராமன் இறங்கினார். ஆண்டாள்.. முகம் இறுகி கண்கள் கலங்க நின்றாள்.

"என்னை மன்னித்து விடு. நீ அன்று சொன்னாய்... மெஷினோடு பழகிப் பழகி உங்களுக்கு இதயமில்லாமல் போய் விட்டதுன்னு ... அது உண்மைதான் நான் பட்டுத் திருந்தி வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்."

"உங்களை அந்த அப்ஸராவின் வீட்டிலிருந்தது மீட்டிருக்கிறார்கள்."

"தவறு செய்து விட்டேன். ஒத்துக் கொள்கிறேன் மன்னித்து விடு."

"கோவலன் காலத்தில் இருந்து எல்லா ஆண்களும் சொல்லும் டயலாக் தானே இது? பெண்கள் என்றால் கிள்ளுக் கீரையா?"

"நான் தாய் தகப்பனில்லாதவன். நீயும் வெறுத்தால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள். சொந்தமென்று சொல்லிக் கொண்டு நான் எங்கே போவேன்?"

மனம் பொறுக்காமல் ஆண்டாள் விம்மி அழுதாள். மனைவியும் சில சமயங்களில் கணவனுக்கு தாய் ஆகிறாள். இது அந்த மாதிரியான சமயம்.

ஆண்டாள் அனைவரிடமும் விடைபெற்று சென்னைக்கு கணவனுடன் கிளம்பிப் போய் விட்டாள். ஜெயராமனின் மேல் போட்டிருந்த கேஸ் திரும்பப் பெறப்பட்டது. தங்கை கணவனின் கை பிடித்து தான் கொண்டிருந்த விரோதத்திற்காக மன்னிப்புக் கேட்டார் ஜெயராமன் .. வந்தனாவின் கையைப் பிடித்து பாலமுருகனிடம்

ஒப்படைத்தார். பழையபடி சென்னை திரும்பியவர் புத்துணர்வுடன் தன் தொழிலில் ஈடுபட்டார்.

கோதாவரியை சரணின் குடும்பத்தார் பெண் கேட்டு வந்தார்கள். கோதாவரிக்கும் விருப்பமிருந்தது. அடுத்து வந்த முகூர்த்த நாளில் அவள் திருமதி சரண் ஆகிவிட்டாள் . கோதாவரியின் திருமணத்தில் தாய் மாமன் சீராக அவளது வீட்டை நிறைத்து வைர நகைகளைப் பரிசளித்தார் ஜெயராமன். தன் வாழ்நாளில் முதன் முறையாக வாய் திறந்து அவரை "மாமா..." என்று அழைத்து விட்டாள் கோதாவரி.

திருமண வேலைகளில் கவனமாய் அலைந்த பாலமுருகன் தங்கையை மாமியார் வீட்டிற்கு அனுப்பி விட்ட நிம்மதியுடன் அன்று இரவு படுக்கையறைக்குள் நுழைந்தான். வந்தனாவைக் காணோம். அவன் தேடிப் பார்க்க.. பின்னாலிருந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்ட வந்தனா.

"அந்த சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி.

என்னைச் சேரும் நாள் பார்க்கச் சொல்லடி...”

என்று பாடினாள்.

"ம்ம்.." என்று அவளை இழுத்த மார்போடு அணைத்துக் கொண்ட பாலமுருகன் அவளது காதருகே குனிந்து,

"இந்த சிவகாமி மகனுடன் சேர்ந்து நில்லடி

இன்னும் சேர நாள் பார்ப்பதென்னடி..." என்று பாடினான்.

அவர்கள் இருவரும் ஒன்றுபட்ட மனத்தோடு இணைந்து விட்டதை ஜன்னல் வழி எட்டி முழு நிலவு பார்த்தது. நிலாக்கால நினைவுகளை நனவுகளாக்கிக் கொண்டிருந்தவர்களிடமிருந்து விலகி வானில் நகர்ந்தது.

- முற்றும் -